# கண்ணனின் பாதையில் என் பயணம்......

—கேசவன்



என் சத்குருநாதர் டாக்டர் நித்தியானந்தம்

**எழுத்தும் ஆக்கமும்:** கேசவன்

**சமர்ப்பணம்:** **நித்தியானந்தம்** என்ற பெயருடன் இந்த பூமியில் வாழ்ந்து கொண்டிருக்கும் **பரம்பொருளுக்கு**.

**தொடக்கவுரை**

இதை ஒரு புத்தகமாகக் கருதவேண்டாமெனக் கேட்டுக்கொள்கிறேன். என் அனுபவச் சிதறல்களின் ஒரு தொகுப்பாகத்தான் இதை நான் பார்க்கிறேன். எனவே ஒரு புத்தகத்துக்கான சம்பிரதாய விதிகள் மீறப்பட்டிருக்கும். இங்கே முன்னுரை இல்லை, முடிவுரை இல்லை, அணிந்துரை இல்லை, புனைந்துரை இல்லை. இங்கே அனுபவத் தொகுப்பு மட்டுமே இருக்கிறது. மனதில் உதித்ததை எழுத்தில் வடித்திருக்கிறேன்.

இங்கே உயரிய வேதாந்த விஷயங்கள் விவாதிக்கப்படவில்லை. வேதங்கள், உபநிஷத்துக்கள், தத்துவ ஞானிகளை என் துணைக்கழைக்கவில்லை. ஒரு சாமானியன் இறைவனைக் காணும் ஆவலால் உந்தப்பட்டு, அவன் மேற்கொண்ட முயற்சிகளின், அதன் பயனாய்க் கிடைத்த அனுபவங்களின் தொகுப்பு இது. எனவே இதை நூல் என்று அழைப்பது பொருந்துமா என்பது என் ஐயம். என்னைப்போல் ஓர் இறைதேடிக்கு உதவும் நோக்குடன், அந்தத் தேடலின் பயனாய் எனக்குக் கிடைத்த என் குருநாதனைப் பற்றிய என் எண்ணங்கள், அவருடன் எனக்கேற்பட்ட அனுபவங்கள், உள்ளுணர்வுகள், ஆகியவற்றை மனதில் தோன்றியவாறே சொல்லியிருக்கிறேன். தனக்குக் கிடைத்த பொக்கிஷத்தை ஒளித்து, புதைத்து வைத்துத் தான் மட்டுமே அனுபவிக்க எண்ணும் லோபியைப் போலல்லாமல், ‘எல்லையற்ற பொக்கிஷக் குவியலைக் கண்டுவிட்டேன் வாருங்கள், வந்து, உங்களுக்குத் தேவையானவற்றை அள்ளிக் கொள்ளுங்கள்’ என கோபுரத்தின் மேல் ஏறிக் கூவி அழைக்கும் ஆழ்வானின் கூக்குரல் இது. நான் அருந்தும் இந்தக் கள்ளை நீங்களும் மாந்தி மயங்குங்கள் என்று பேரன்போடு அழைக்கும் அழைப்பிதழ் இது.

# கண்ணனின் பாதையில் என் பயணம்......

—கேசவன்

சித்தனைப் போல் ஒரு பித்தன் நான். நான் கண்ட சித்தனைப் பற்றிப் பேசுகிறேன். இந்தப் பேச்சு சித்த இலக்கணத்துக்கு வேண்டுமானால் பொருந்தலாம். பொருந்தாமலும் போகலாம். என் அனுபவத்தைச் சொல்கிறேன். ஏற்புடையதானால் கொள்ளுங்கள். இல்லையென்றால் தள்ளுங்கள்.

நான் இன்னும் என் இலக்கை அடையவில்லை. பயணம் தொடர்கிறது. அதற்குள் இவ்வளவு பேச்சா என்று கேட்பீர்கள். தன்னலமற்ற பிச்சைக்காரன் அரசனின் பொக்கிஷஅறையைப் பார்த்துவிட்டால் என்ன செய்வான்? அதைத்தான் நான் செய்கிறேன். நான் கண்டுபிடித்ததை மற்றவரும் கண்டு கொண்டு அனுபவித்துக் களிக்கவேண்டும் என்னும் அவாவில் பேசுகிறேன். பள்ளி, கல்லூரி, வாழ்வியல் தேர்வுகளில் வெல்ல உங்களுக்கு அறிவும் விஷய ஞானமும் தேவை. நான் எழுதும் தேர்வுக்கு அவையொன்றும் வேண்டாம். பக்தி ஒன்றே போதும் என்று எண்ணுகிறேன். அவர் சொல்லித்தந்த வாசியோகம் மட்டுமே போதும்.

எனவே, இலக்கண இலக்கிய ஆராய்ச்சியில் இறங்காமல், என் அனுபவம் உங்களையும் ஈர்க்குமானால் என்னுடன் வாருங்கள் சேர்ந்தே இறையருளைப் பெறுவோம், பருகுவோம் என்று கூவி அழைத்து இந்த அனுபவக்கோவையை எழுதத்துவங்குகிறேன்.

-கேசவன்

******************

**குரு வணக்கம்**

அன்னையின் பூரண அன்புக்குப் பாத்திரமான அபிராமிபட்டரின் வாய் மொழியாலேயே என் முதல் வணக்கத்தை, 'தாரமர் கொன்றையும் சண்பக மாலையும் சாத்தும் தில்லை ஊரர் தம் பாகத்து உமை மைந்தனுக்குச்' செலுத்தி, நான் மேற்கொள்ளும் இப்பணி எவ்விதத் தடையுமின்றி முழுமைபெற, சிறந்து விளங்க ஆசீர்வதிக்குமாறு வேண்டி என் மனமெனும் ஆழ் கடலில் மூழ்கி 'டாக்டர் நித்யானந்தம்' எனும் பெயர் தாங்கி மண்ணில் பாதம் பதித்த, ஆதியும் அந்தமும் அற்ற அந்தப் பெருவெளியுடன் எனக்கேற்பட்ட அனுபவ முத்துக்களை வெளிக்கொணர்ந்து என் சமகால ஜீவர்களும் பின்னால் வரப்போகும் சந்ததியினரும் அறிந்து உவந்து இவ்வழி நடந்து பயனுற உண்மை மட்டுமே இவ்வரிகளில் மிளிர வேண்டுமென விரும்பி இந்த நினைவுகளை தொடுத்து மாலையாக்க முயல்கிறேன். இந்த முயற்சியில் முழுமை இருக்குமானால் அது என் குருவாய் வந்த இறைவனைச் சாரும். எங்கேனும் குறை கண்டீர்களானால் அதற்கு என் அறியாமைதான் காரணம். நான் மட்டுமே பொறுப்பு.

-கேசவன்

*******************

பொருளடக்கம்


| தலைப்பு | பக்கம் எண் |
|---|---|
| தொடக்கவுரை | 2 |
| குரு வணக்கம் | 4 |
| மீண்டும் ஜனனம் | 8 |
| ஆஞ்சனேயர் என் பால்ய சினேகிதர் | 9 |
| தேடியது....கிடைத்தது | 10 |
| தேடலின் பாதையில்.. | 11 |
| டாக்டருடன் முதல் சந்திப்பு | 12 |
| டாக்டரின் முதல் கேள்வி | 14 |
| டாக்டரின் இரண்டாவது கேள்வி | 15 |
| தேடலின் பாதையில் சிலர் | 17 |
| மீண்டும் பிறந்தேன் | 20 |
| என் சிறிய தந்தை மாசிலாமணி | 20 |
| முதல் அதிசய நிகழ்வு | 22 |
| மருத்துவ மனையில் நடந்தது | 24 |
| என் வருத்தத்தில் பங்கேற்றார் | 25 |
| கூடுமலைப் பயணம் | 26 |
| கூடுமலை வினாயகர் | 27 |
| வினாயகரின் விஸ்வரூப தரிசனம் | 29 |
| டாக்டர் சொன்னால் ஸ்டார்ட் ஆகும் வண்டி | 30 |
| உயர்ந்த மனிதர் | 33 |
| இடி தாங்கி | 34 |
| ஜம்பர் உருகிய நிகழ்வு | 36 |
| விளையாட்டாக தோன்றும் அற்புத நிகழ்ச்சி | 37 |
| என் மனக்குழப்பம் | 38 |

## பொருளடக்கம்


| தலைப்பு | பக்கம் எண் |
|---|---|
| என் மகள் சுமதிக்கு நடந்த விபத்து | 39 |
| புனித அன்னையின் செய்தி | 40 |
| என் வாடிக்கையாளர் டாக்டரைப் பார்த்தார் | 44 |
| இந்தப் பயணத்தில் என் துணை | 47 |
| டாக்டரின் சீடர் நிகழ்த்திய அற்புதம் | 50 |
| செஷன்ஸ் | 54 |
| ஹரி வீட்டில் முதல் 'கூட்டு அமர்வு' | 67 |
| குழலூதும் கண்ணன் பாடல் | 67 |
| கோவிந்தராஜருடன் தனிமையில் 15 நிமிடங்கள்! | 73 |
| டாக்டரின் கண்களில் கண்ணீர் | 75 |
| விபத்து நாடகம் | 77 |
| டாக்டர் மரிக்கவில்லை | 78 |
| சில கேள்விகள் சில பதில்கள் | 81 |
| டெல்லி பயணம் | 83 |
| என் அன்னையைக் கண்டுகொண்டேன் | 84 |
| கரைபுரண்ட கங்கை | 86 |
| மதுரா பயணம் | 89 |
| வித்யா | 92 |
| அதிசயங்களின்  பின்னணி | 96 |
| மெல்ல நிகழும் மாற்றம் | 96 |
| ஹரி | 97 |
| அம்மாவுக்குக் கடிதம் | 99 |
| டாக்டருக்குக் கடிதம் | 100 |
| டாக்டரின் தீர்வு | 102 |
| பட்டினத்தார் தரிசனம் | 106 |

## பொருளடக்கம்


| தலைப்பு | பக்கம் எண் |
|---|---|
| கண்ணழகு | 114 |
| மதுரைப் பயணம் | 118 |
| முருகப்பெருமானை நேரில் பார்த்தோம் | 125 |
| அம்முவின் அனுபவம் | 128 |
| டாக்டரை சந்தித்தேன் | 131 |
| நறுமணம் | 134 |
| ஒரு யோகியின் வயிற்றில் சுடர் | 135 |
| தையற்காரர் | 136 |
| அன்பான அண்ணன் | 136 |
| சமீபத்தில் நடந்த அற்புதம் | 138 |

# 8 கண்ணனின் பாதையில் என் பயணம்......

—கேசவன்

மீண்டும் ஜனனம்

வாசனைகளாலோ அல்லது அவன் விருப்பத்தாலோ இந்த உடலுக்குள் சிறைப்பட்டு நான் இந்த உலகை முதலில் பார்த்தது தில்லையம்பதியில்தான். சிறப்பான திருத்தலத்தில் அடியார்களின் திருக்கூட்டத்திடை என்னைப் பிறப்பித்து, தவறிக்கூடத் தடம் மாறிவிடக் கூடாது என்ற காரணத்தால் எனது சிறிய தந்தை திரு.மாசிலாமணி மற்றும் என் பெரிய தந்தை திரு. ராகவன் ஆகியோரின் பாதுகாப்பில் வளரவிட்ட எந்தையின் கருணையை நான் என்னென்பேன்! என் பெரிய தந்தை திரு.ராகவன் தில்லையில் சயனக் கோலத்தில் அருள் பாலிக்கும் கோவிந்தராஜப் பெருமாளுக்கும் அன்னை புண்டரிகவல்லித் தாயாருக்கும் சேவை செய்வதிலேயே தன் வாழ்நாளைக் கழித்தவர். அவருக்கு மனைவி மக்கள் இல்லை. என்னிடம் மிகுந்த அன்பு பாராட்டியவர்.

என் தந்தை திரு.செல்வபெருமாள் அனைவரும் அறியும் வகையில் பக்தியை வெளிக் காட்டவில்லை என்றாலும், ஒரு கர்மயோகியைப் போல நெறிமுறைகளுடன் வாழ்ந்தவர். தினமும் நாளைத் தொடங்குமுன் சூரிய நமஸ்காரம் செய்யத் தவறியதை நான் கண்டதில்லை. என் தாய் திருமதி.ராஜம்மாளும் தன் பக்தியை பூஜை வழியில்தான் வெளிப்படுத்தினார். எந்த நேரமும் அவர் வாயிலிருந்து “ராமானுஜா” என்ற வார்த்தைதான் வெளிவரும். இவர்களில் யாரும் யோகப்பாதையில் ஈடுபட்டவரில்லை. என் சிறிய தந்தை மட்டும் விதிவிலக்கு. அவர் தம் கடைசிக் காலத்தில் என் குருவிடம் “வாசியோகதீட்சை” பெற்றார். என் சிறிய தந்தை என் குழந்தைப் பருவமுதற்கொண்டு அவர் இம்மண்ணை விட்டு அகலும்வரை, என்னைத் தன் உறுதியான கண்காணிப்பில் வைத்திருந்தார். இந்தத் தீவிர வைணவக் கூட்டத்திடை வளர்ந்த எனக்குத் தடம் புரளும் சந்தர்ப்பம் வெகுவாக மறுக்கப்பட்டு விட்டது. எத்தகைய பாக்கியம் என்று எண்ணி இறைவனின் கருணையை நினைத்து மனம் கசிகின்றேன்.

# கண்ணனின் பாதையில் என் பயணம்......

—கேசவன்

## ஆஞ்சனேயர் என் பால்ய சினேகிதர்

பள்ளிசெல்லும் நாட்களில் காலையிலும் மாலையிலும் தில்லை நடராஜர்கோவில் வழியே நடந்து செல்வேன். கோவிந்தராஜப்பெருமாள் சன்னதியிலிருக்கும் ஆஞ்சனேயரிடமும், த்வஜஸ்தம்பம் அருகிலிருக்கும் கருடாழ்வாரிடமும் எனக்கு ஒரு விசேஷ பக்தி, உறவு. இந்த தேவர்களை அறிமுகப்படுத்திவைத்து அவர்களைப்பற்றி நிறையப்பேசி மனதில் பதியவைத்தது என் சிறிய தந்தை மாசிலாமணிதான். அவர்கள்பால் எனக்கிருக்கும் உணர்வை பக்தி என்பதைக் காட்டிலும் நட்பு என்றால் மிகப்பொருந்தும். அவர்களை தேவர்களாகப்பார்த்து பக்தி செலுத்தியதை விட நட்பு **பா**வத்தில் பார்த்தேன் என்பதுதான் உண்மை. என்னைப் பொருத்த மட்டில் ஸ்ரீ ஆஞ்சனேயர், என் பால்ய சினேகிதர் போல. அவரை தெய்வமாகப் பார்த்ததைவிட நண்பராகத்தான் அணுகியிருக்கிறேன். பல வகையில் எனக்கு உதவியவர். கடினமான பாடங்களில் பாஸ் மார்க் வாங்கித்தருவது முதல், விருப்பப் பட்டுக் கேட்கும் பொருள் எனக்கு கிடைக்கவில்லை என்று முறையிடும்போது அதைப் பெற்றுத் தருவதுவரை எந்த ஒரு வேண்டுதலானாலும், ஒரு எலுமிச்சைப் பழத்தை காணிக்கையாகப் பெற்றுக்கொண்டு நிறைவேற்றி வைத்தப் பெருந்தகை அவர். இன்றைய நிலையில் அவரை நினைக்கும்போது அன்பில் கண்கள் பனிக்கின்றன. இந்தச் சூழலை விவரிப்பற்கான காரணம், நான் எப்படி சிறு வயது முதல், பாதையும், பிறவியின் நோக்கமும் சிதறிவிடாமல் கண்ணும் கருத்துமாகப் பாதுகாக்கப்பட்டேன் என்பதை விளக்கும் பொருட்டே. அதுமட்டுமின்றி, யோகப்பாதையில் பயணிக்க ஆரம்பித்த எந்த ஒரு ஜீவனும் தன் பயணத்தை, முற்பிறவியில் விட்ட இடத்திலிருந்தே தொடரும் என்பது ஆணித்தரமான உண்மை. அத்தகைய யோகியருக்கு இறைப் பாதுகாப்பு பிறவி முதலே உண்டு என்பதற்கும் இது சான்று. இதைக் கண்ணனும் கீதையில் சொல்லியிருக்கிறார். பல மகான்களும் சொல்லியிருக்கிறார்கள். நான் பிறந்த இடம்,

எனைச் சூழ்ந்த உறவுகள், எளிய ஆனால் தீவிரமான இறைவழிபாட்டில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருந்த என் தாய், தந்தைமார்கள், குழந்தைப் பருவம் முதற்கொண்டே எனக்கிருந்த ஆன்மிகத் தேடல் இவை அனைத்தும் நான் மேற்சொன்ன பிறவியின் தொடர்ச்சியைக் குறிக்கிறது என்பது தெளிவு.

**தேடியது....கிடைத்தது**

வைணவ அன்பர்களிடை வளர்ந்த காரணத்தாலோ அல்லது உள்ளார்ந்த உணர்வாலோ, தெரியாது, நான் கிருஷ்ண பக்தியில் திளைத்திருந்தேன். இறைநினைவு வந்தால் அது கண்ணன்தான். ஒரு தீவிர வைணவனாக வளர்க்கப்பட்ட என்னுள் மேலே குறிப்பிட்டது போல் ஒரு தேடல் இருந்திருக்கிறது. முதலில் நான் அதை உணரவில்லை; காரணம், தேடல் இருந்தது என்பது அப்போது எனக்குத் தெரியவில்லை. பிற்காலத்தில், கடந்து வந்த பாதையை திரும்பிப் பார்க்கும் நேரத்தில்தான் புரிந்தது இந்தத் தேடல் ஆரம்ப காலத்திலேயே என்னுள் புரியாத பொருளாக இருந்திருக்கிறது என்று. நான் மேற்சொன்ன ஆதியும் அந்தமும் அற்ற அந்தப் பரம்பொருள் நித்யானந்தமாக அவதரித்து என்னுடைய ஐம்பதாவது வயதில் என்னைச் சந்திக்கும் வரை தொடர்ந்தது. அவரைச் சந்தித்துக் கொஞ்சகாலம் சென்றதும், தேடலின்தீவிரம் குறைய ஆரம்பித்தது. எனக்கு வழிகாட்ட ஒருவரைத் தேடிக்கொண்டிருந்தேன். இவரைக்கண்டதும் இவர் வழிகாட்டுவார் என் மனம் உணர்ந்ததால் தேடல் முடிந்தது. ஆனால் இவர் யார் என்று புரியவில்லை. இவர்தான் என் அத்தனை ஜன்மங்களிலும் தொடர்ந்துவரும் என் குருநாதர் என்று புரிந்துகொள்ள, உணர்ந்துகொள்ள சுமார் இரண்டாண்டுகாலம் தேவைப்பட்டது. யதார்த்த உலகில் தாய்தான், தந்தையை குழந்தைக்கு அறிமுகப்படுத்திவைப்பாள். குழந்தையாகத் தெரிந்துகொள்வதில்லை. "இதோ அப்பா பாருடா கண்ணா" என்று சொல்லிக் குழந்தையைக் கொஞ்சுவது உலக இயல்பு. உடலெடுத்து மண்ணில்

இறங்கிவிட்ட என் தந்தை இறைவனுக்கும், என் தாய் இறைவிக்கும் இந்த உலகியல் 'விதி' விலக்கல்லவே! எனவே எனக்கும், என் தந்தையை என் தாய்தான் அறிமுகப்படுத்தினாள். ஆனால் சிறு வித்தியாசத்துடன். 'இதோ பார், இவர் தான் உன் தந்தை' என்று சொல்லவில்லை. பின் எப்படிச்சொன்னார்? 'இவ்வளவு நாள் புரியாமலே பார்த்துக் கொண்டிருந்தாயே, அவர் தான் நீ தேடிக்கொண்டிருந்தவர். அவர்தான் டாக்டராகவும், நித்தியானந்தம் என்ற பெயருடனும் இங்கே இருக்கிறார்' என்று சொன்னார். அவர் சொன்னபோது டாக்டர் நம்மிடமிருந்து அகன்று சென்று விட்டார். இருந்தபோது தெரியவில்லை. தெரிந்த போது அவர் அருகில் இல்லை. முகம் பார்க்கத் துடிக்கிறேன். முகவரியின்றித் தவிக்கிறேன்.

**தேடலின் பாதையில்..**

என் இளவயது அனுபவங்களை நினைவு கூறும்போது சில விஷயங்கள் கண் முன்னே வந்து நிற்கின்றன. நான் எதையும் விஞ்ஞான பூர்வமாக அணுகும் இயல்புடையவன். (அதனால்தான், திரு ரவி அவர்களின் 'வெர்ஸஸ் ஆஃப் விஸ்டம்' Verses of wisdom என்னும் புத்தகம் என்னை மிகவும் கவர்ந்தது. நீங்களும் படித்துப் பாருங்கள்.) முடிந்தால் இறைவனையும் சோதனைக்குழாயில் போட்டு அமிலத்தை விட்டுக் காய்ச்சிப் பார்த்துவிடும் மனப்பாங்கு. பகுத்தாயும் குணம் (Analytical mind). விஞ்ஞான பூர்வமாக விளக்க முடியாத அபூர்வ விஷயங்களில் (Occult science) சற்று அதிக ஈடுபாடு. ஸ்தூல உடலை விட்டு சூக்ஷ்ம உடல் மட்டும் வெளியேறி, புவியீர்ப்பு சக்தியை மீறி ஆகாயத்தில் பறந்து, மீண்டும் உடலில் புகும் சக்தியை அடைய விரும்பி, நிறைய குழந்தைத்தனமான முயற்சிகள் (Out of body experience). நிறையப் படிக்கவேண்டும் என்ற ஆவல். முறையான பள்ளிக் கல்வியில் அதிக ஈடுபாடு இல்லை. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களைப் படிப்பதில்தான் ஆர்வம் அதிகம். சிறு வயது முதற்கொண்டே இப்படிப்பட்ட மனநிலை

அமைப்புகளில் குறிப்பிடத்தக்கவை 1. ஸ்ரீ ராமகிருஷ்ண மடம், 2. ஸ்ரீ வேதாத்ரி மஹரிஷியின் அமைப்பு, 3. ஸ்ரீரங்கம் சித்தர் என்றழைக்கப்படும் சித்த யோகி, 4. ஸ்ரீ சிவானந்தாஸ்ரம் (ரிஷிகேஷ்). இங்கெல்லாம் நான் தேடியது கிடைக்காமல் பரிதவித்த போது, நண்பர் சம்பந்தம் அவர்களால் டாக்டரிடம் அழைத்து வரப்பட்டேன்.

**டாக்டருடன் முதல் சந்திப்பு**

அவரை முதலில் சந்தித்த தேதியும் கிழமையும் நினைவில்லாதது வருத்தமான விஷயம்தான். எனக்கு தேதி, முகம், எண்கள் போன்றவற்றில் அதிக நினைவாற்றல் கிடையாது. மறதி சற்று அதிகம் என்றுதான் கூறவேண்டும். ஆனால் முக்கியமாக நினைவில் வைத்திருக்க வேண்டிய நாளைக்கூட மறந்தது என் துரதிர்ஷ்டம்தான். டாக்டர் தொழில் செய்பவர் என்பதால் நாம் காணும் மற்ற யோகியர், சித்தர்கள் போல் ஜடாமுடி, காவியுடை, ருத்ராக்ஷம் போன்ற புறச் சின்னங்களுடன் இருப்பார் என்று எண்ணவில்லைதான். ஆயினும் நாம் அன்றாட வாழ்க்கையில் சந்திக்கும் ஆன்மிகவாதிகளைப் போல் சாதாரண மனிதர்களிடமிருந்து சற்று வித்தியாசமானவராகத் தோற்றமளிப்பார் என எதிர்பார்த்தேன். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், தள தளவென்று தக்காளிப்பழம் போல சிவந்த மேனியும், எல்லாம் அறிந்தவர் போன்ற ஒரு பார்வையும், மேலும் இப்படிப்பட்ட சில வெளித் தோற்றங்களை எதிர்பார்த்தது என்னவோ உண்மைதான். ஆனால் அன்று நான் கண்டதோ மிக மிகக் கருமையான நிறத்துடன், உயரமாக, உயரத்திற்கேற்ற பருமனில்லாமல், சற்று ஒல்லியாக, ‘சஃபாரி’ உடையில் சாதாரண தோற்றம் கொண்ட ஒரு மனிதரைத்தான் (‘சாதாரண தோற்றம் கொண்ட ஒரு மனிதர்’ என்ற வர்ணனைக்காக என்னை மன்னியுங்கள். அந்த நேரத்தில் என் மனதில் தோன்றிய எண்ணம் அதுதான்.) ஆனால் அவருடைய கருமையான கண்களும் அதில்

தெரிந்த அசாதாரணமான ஒளியும் அவர் வித்தியாசமானவர் என்பதற்கான அடையாளங்களாக அப்போது எனக்குத் தோன்றின. அந்தக் கண்களைப் பற்றிய ஒரு அபூர்வ செய்தி இருக்கிறது. இப்பிறவியில் எனக்குக் கிடைத்த மிக அரிய, அபூர்வ அனுபவங்களில் அது ஒன்று. இந்தத் தொடரில் அதை அவசியம் விவரிப்பேன்.

அவருடைய அந்த ஆழ்ந்த கருமை நிறம் என் எதிர்பார்ப்புக்கு மாறாக இருந்ததால் எனக்குச் சற்று ஏமாற்றத்தைத் தந்தது. என்ன ஒரு முரண்பாடு! ஏமாற்றத்திற்கு மாறாக பெரு மகிழ்ச்சியைத் தந்திருக்க வேண்டிய காட்சி. டாக்டரிடம் எனக்கேற்பட்ட ஈடுபாடு, ஈர்ப்பு, நம்பிக்கை அனைத்தும் பூ மலர்வது போல் ஒரு சீரான அனுபவத்தின்பாற்பட்ட முன்னேற்றம். என் நண்பர்கள் பலருக்கு நிகழ்ந்ததைப் போல் அவரைப் பார்த்த மாத்திரத்தில் நான் வசீகரிக்கப் படவில்லை. என் ஈடுபாடு, நண்பர் ஜானியின் 'கண்டதும் காதல்' வகைக்கு எதிர்மறையானது. கொஞ்சம் கொஞ்சமாக ஈர்க்கப்பட்டு மிச்சமில்லாமல் அவர் அன்பில் கரைந்து போனேன். இதற்கு சற்று காலவிரயம் ஏற்பட்டதென்னவோ உண்மை.

எதையும் கேள்விகேட்காமல் ஆராய்ந்தறியாமல், ஏற்றுக்கொள்வது என் பாணியல்ல என்பதை முன்னமே கூறியிருக்கிறேன். எந்த விஷயமானாலும், முதலில் என் சந்தேகங்கள் தீரவேண்டும். எனக்கு நம்பிக்கை ஏற்படவேண்டும். இப்படி நம்பிக்கைக்குப் பாத்திரமற்ற எதையும் ஆராயாமல் ஏற்றுக்கொள்ளக்கூடாது என்னும் மனப்பான்மை கொண்ட எனக்கு, முழுமையான நம்பிக்கை ஏற்படப் பல நிலைகளைக் கடக்கவேண்டியிருந்தது. நான் நிரம்ப அறிந்தவன் என்னும் அறியாமையில் உழன்ற என்னை, பொறுமையுடன் வழிநடத்தி, விலகும்போதெல்லாம் மீண்டும் சரியான பாதையில் நிலைநிறுத்தி இன்றளவும் ஒரே ஒரு கடுமையான சொல்லையும் கூட என்பால் உதிர்க்காத குருநாதனை எண்ணுகையில் கசியும் இதயம் என் கண் வழி பெருகுகிறதே! ‘Taste of the pudding is in the eating’- என்பது பேச்சு வழக்கு. அவன் பெயரைச் சொன்னால், நினைவில் திளைத்தால் கண்கள் பனிக்கின்றதே அதுதான் அவருக்கு என்பாலும், எனக்கு அவர்பாலும் உள்ள அன்புக்கு உரைகல்.

**டாக்டரின் முதல் கேள்வி**

முதல் சந்திப்பின் போது, டாக்டர், என்னிடம் கேட்ட முதல் கேள்வி, “உங்களுக்கு என்ன வேண்டும்?” என்பதுதான். (அந்தக்கேள்வியை இப்போது கேட்டால், என் பதில் “நீங்கள் வேண்டும்; நீங்கள் மட்டும்தான் வேண்டும்” என்பதாயிருக்கும். ஆனால் அவர்தான் நான் தேடியவர் என்பது அப்போது தெரியவில்லையே!) “இப்போது எனக்கு ஐம்பது வயதாகிவிட்டது. வாழ்க்கையின் பெரும் பகுதி வீணாகிவிட்டது. இன்னும் இருக்கும் சொற்ப நாட்களில் எப்படியாவது நான் ஆன்மிகத்தில் முன்னேறவேண்டும். எனக்கு வித்தையைக் கற்றுக் கொடுத்தீர்களானால் முடிந்த அளவு ஏதோ நான்கைந்து படிகளையாவது ஏறலாம் என்று நினைக்கிறேன்” என்று சொன்னேன். டாக்டர் சிரித்துவிட்டார். “பாரப்பா, இவர் நாலைந்து படிகளை ஏறப்போராறாம்”, என்று அருகில் இருந்தவர்களிடம் சொல்லிச் சிரித்தார். மற்றவர்களும் சிரித்தார்கள். எனக்குப் புரியவில்லை. வெட்கமாக இருந்தது. அந்த சிரிப்பிற்குரிய காரணம் அப்போது எனக்குப் புரியவில்லைதான். 'என்னத்துக்கு சிரிச்சாங்க, என்ன சொன்னேன் நான்? ஆன்மிகப் பயணத்தில் முடிந்த அளவு முன்னேற வேண்டும் என்ற ஆவலை வெளிப்படுத்தினேன். இதில் சிரிப்பதற்கான விஷயம் என்ன இருக்கிறது?' என்று குழம்பினேன். புரியவில்லை. யாரும் விளக்கவும் இல்லை. ஆனால் பின்னாளில், ஒரு காலத்தில் அவர் சிரிப்பிற்கான பொருள் புரிந்தது. அதை உணர்ந்தேன். படிகள் என்று யதார்த்தமாக நான் சொன்ன வார்த்தைகளுக்கு ஆன்மிக அகராதியில் மிக ஆழமான தெளிவான பொருள் இருப்பதை, பின்னாட்களில் நான் உணர்ந்தபோது, என் வார்த்தைகளை எண்ணி நானும் சிரித்தேன். அதைப் பற்றி விரிவாகத் தெரிந்துகொள்ள வேண்டுமானால் ‘தி கேட்டலிஸ்ட்’ புத்தகத்தைப் படியுங்கள். அதில் ‘பிரம்ம வித்தை’ பகுதியில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது. இங்கே ஒரு சிறு குறிப்பை மட்டும் தருகிறேன். பரம்பொருளிடமிருந்து தனிப்பட்டு ஒரு சுழற்சிப் பயணத்தை மேற்கொள்ளும் ஒவ்வொரு ஜீவனும், மீண்டும் பரம்பொருளுடன் சேருவதற்கு முன் பன்னிரண்டு படிகளைக் கடக்கவேண்டியுள்ளது என்பதும் அந்த படிகள் நம்

வீடுகளில் உள்ள படிகளைப் போல் சாதாரணப் படிகள் இல்லை என்பதையும், நம் நிலை வளர்ச்சியினைக் குறிக்கும் வகையில் ஒரு குறியீடாகச் சொல்லப்பட்டவை என்பதையும் பின்னாளில் உணர்ந்தேன்.

இதை அறிந்த பிறகு அன்று டாக்டர் சிரித்ததற்கான பொருள் புரிந்தது. அன்று அவர் சிரித்ததில் கேலியில்லை. குழந்தையின் மழலைச்சொல் கேட்டுக் களிக்கும் தந்தையின் மகிழ்ச்சியாக இருந்திருக்கலாம். என் அந்தரங்கம் புரிந்ததால் அவர் சிரித்தார் எனக் கொள்ளலாம். தன் முன்னே நிற்கும் பிள்ளையை முன்பே, அதன் ஆரம்பம் முதல் இன்றுவரை எல்லா பிறவிகளிலும் அறிந்தவர். எனவே அவர் எதை நினைத்துச் சிரித்தார் என்பது அவருக்கல்லவா தெரியும். பிள்ளையின் ஆர்வத்தைக் கண்டு மகிழ்ச்சியோடு சிரித்திருக்கலாம்.

**டாக்டரின் இரண்டாவது கேள்வி**

"இதுவரை என்ன செய்துகொண்டிருந்தீர்கள்?" என்று இரண்டாவது கேள்வியைக் கேட்டார். நான் டாக்டரிடம் வருவதற்கு முன்புவரை சித்தயோகம் பயிலும், பயிற்றுவிக்கும் ஒரு சித்தயோகியிடம் சில மாதங்கள் தொடர்பு கொண்டிருந்தேன். சித்தயோகம் கற்றுத் தருமாறு கேட்டுக்கொண்டிருந்தேன். அவரும் கற்றுத்தருவதாகச் சொல்லிக் கொண்டிருந்தார். ஒருநாள், "உன் மனைவியையும் அழைத்து வா. அவரிடமும் பேசிவிட்டு சொல்கிறேன்" என்றார். மனைவியுடன் போனேன். "நீங்கள் என்ன தொழில் செய்கிறீர்கள்" என்று கேட்டார். நான் கோழிப் பண்ணை வைத்திருப்பதையும், மேலும் மொத்த, மற்றும் சில்லரை விற்பனையில் ஈடுபட்டிருப்பதையும் சொன்னேன். "கறி விற்கிறாயா?" என்று கேட்டார். "ஆம்" என்றேன். "ஐயோ எவ்வளவு பாவமான தொழில். இப்படிப் பாவமான தொழில் செய்யும் உனக்கு எப்படி சித்த வித்தை சொல்லிக் கொடுப்பது? அந்தத் தொழிலை விட்டு விட்டு வேறு தொழில் துவங்கிய பிறகு வா. வித்தையைச் சொல்லித்

தருகிறேன்" என்றார். "குழந்தைகள் பள்ளி, கல்லூரி என்று படிக்கும் இந்த நேரத்தில், வேறு நிலையான வருமானமில்லாமல் நான் எப்படி இந்தத் தொழிலை விட முடியும்? அப்படியே விட்டாலும் நான் வேறு என்ன தொழில் செய்வேன்? வேறு தொழில் தொடங்கினாலும், தற்போதைய குடும்பச் செலவை ஈடுசெய்யும் அளவிற்கு புதிய தொழிலில் வருமானம் வருமா? அதுவரை இந்தக் குழந்தைகளுக்கு எப்படிக் கல்வி புகட்டுவேன்?" என கேட்டேன். "எனக்குத் தெரியாது. ஒவ்வொரு பாவத்திலும் ஏழு பேருக்குப் பங்கிருக்கிறது. (யாரந்த ஏழு பேர்? தெரியவில்லை! நான் அவரிடம் கேட்கவும் இல்லை.) இந்தப் பாவத்தில் என்னை பங்கு கொள்ளச் சொல்கிறாயா? முடியாது. இப்போதுதானே இங்கு வந்திருக்கிறாய். இனி வழி பிறக்கும். இந்தத் தொழிலை விட்டுவிட்டு என்னை வந்து பார். அப்போது சொல்லித் தருகிறேன்" என்றார். என் மனம் சோர்ந்து போனது. கண்கள் கலங்கிவிட்டன. என் ஆன்மிக வழிகாட்டலுக்கு ஒரு குரு கிடைக்க மாட்டாரா? என் சுயநலம் கருதி குடும்பத்தை உதாசீனம் செய்துவிட்டு ஆன்மிகப் பாதையில் முன்னேறுவது தர்மமா? இப்பிறவியில் என் பொறுப்பில் விடப்பட்டிருக்கும், என்னை நம்பியிருக்கும் மனைவி, குழந்தைகளைக் கைவிட்டு ஆன்மிக முனைதலை இறைவன் ஏற்றுக்கொள்வானா?' இப்படிப் பல கேள்விகள். விடை காணமுடியாத கேள்விகள். "ஐயா, நான் புண்ணியம் ஏதாவது செய்திருந்தால் அதை மட்டும் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்கிறேன். என் பாவத்தை யாருடனும் பங்கிட்டுக் கொள்ள விருப்பமில்லை" என்று கூறிவிட்டு மனம் சோர்ந்து, சலித்து, வீடு திரும்பினேன்.அன்று இரவு எனக்கு உறக்கம் வரவில்லை. மனமும் உடலும் சோர்ந்துவிட்டன. அழுதேன்! என் விதியை நினைத்து எனது ஐம்பதாவது வயதில் அழுதேன். என் இயலாமையின் சுமையால் துவண்டேன். வழிகாட்ட யாருமில்லையா என ஏங்கினேன். என் கேள்விக்கு பதில் சொல்ல ஒருவன் இந்த மண்ணில் இல்லையா என்று தவித்தேன். 'சித்தர்கள், யோகிகள் என்று இந்த உலகில் யாருமே இல்லையா? முன்னோர்கள் சொன்னது, புத்தகங்களில் படித்தது பெரியவர்கள் சொல்லக் கேட்டது அனைத்தும் கட்டுக்கதையா? என் சிறிய தந்தை

மூலம் கொஞ்சம் கொஞ்சமாக மனதில் பதிக்கப்பட்ட கிருஷ்ண உணர்வு, கிருஷ்ணன் என்ற ஒரு கடவுளே இல்லையா? ராமாயணம், மகாபாரதம் அனைத்தும் மனிதர்கள் புனைந்து வைத்த கதையா? உண்மையைச் சொல்ல ஒருவன் வரவே மாட்டானா?' கேள்வி மேல் கேள்விகள் என் மனவெளியில் எதிரொலித்து அடங்கின. வெறுமையும், சோகமும் என்னை வாட்ட, உடலும் மனமும் சோர்வடைந்ததால் பின்னிரவில் உறங்கிப்போனேன் என்று நினைக்கிறேன். இந்த நிகழ்வுக்குப் பிறகுதான் என் அருமை நண்பர் சம்பந்தம் என்னை டாக்டரிடம் அழைத்து வந்தார். உண்மையான வழிகாட்டுதல் கிடைக்க வேண்டுமானால், தகுதியுடன், தாகமும், தண்ணீரில் மூழ்கியவன் காற்றுக்கு ஏங்குவது போன்ற தீவிரமும் இருக்கவேண்டும் என்பது நான் அறிந்த உண்மை. இறைவனைப் பார்க்க வேண்டுமென்றால் என்ன செய்யவேண்டும் என்று ஸ்ரீ ராமகிருஷ்ணபரமஹம்ஸரிடம் கேட்டபோது, அவர் சொன்ன உதாரணம் இதுதான்.

**தேடலின் பாதையில் சிலர்**

இந்த நிகழ்ச்சிக்கு முன்பு என் நண்பர் சம்பந்தம், என் சகோதரி சீதா மற்றும் சுதாகருடன், நானும் சென்னையில் ஒரு பெரியவரைச் சந்தித்தோம். அவர் குண்டலினி யோகம் சொல்லிக் கொடுப்பதாகச் சொன்னார்கள். அவரும் கற்றுத் தந்தார். நாங்கள் நால்வரும் அதைப் பயிற்சி செய்யும்போது நண்பர் சம்பந்தத்திற்கு உடலில் பல உபாதைகள் ஏற்பட்டன. அந்தப் பெரியவரை அணுகிப், பிரச்சினைக்கு தீர்வு காண விழைந்தபோது அவரிடமிருந்து சரியான பதில் கிடைக்கவில்லை. அதே நேரத்தில் என் சகோதரி சீதாவுக்கும் ஒரு பிரச்சினை. நல்ல சிவந்த நிறமுடைய அவள் புருவங்களுக்கு இடையில் சிறு வட்டமாக தோல் கருப்பு நிறமாக மாறத் துவங்கியது. அது ஒரு தழும்பு போல் மாறிவிட்டது. அவருடைய கணவர் திரு.குஞ்சிதபாதம் ஒரு மருத்துவர். இதைப் பார்த்துவிட்டு, "இனி இந்தப் பயிற்சியை நிறுத்திவிடு" என்று

தன் மனைவியிடம் கூறிவிட்டார். இதற்கிடையில் ஒருநாள், தினமும் நடக்கும் சொற்பொழிவு நிகழ்ச்சியின் போது, அந்தப் பெரியவர் “உருவ வழிபாட்டை விட்டுவிடுங்கள். ராமன், கிருஷ்ணன் என்று ஒன்றும் இல்லை. இறைவனுக்கு உருவமே இல்லை” என்று சொன்னார். இந்தக் கருத்தில் எனக்கு உடன்பாடு இல்லை. மனதில் தோன்றியதை வெளிப்படையாக பேசிவிடும் பழக்கம் எனக்கு எப்போதும் உண்டு. டாக்டரிடமும் அப்படிப் பேசியிருக்கிறேன். அப்படிப் பேசுவதன் நோக்கம் அடுத்தவரை அவமதிக்கும் எண்ணத்தில் இல்லை. என் சந்தேகத்தைத் தீர்த்துக்கொள்ளும் நோக்கத்தில் அப்படி வெளிப்படையாகப் பேசுவேன். என் சந்தேகத்தை அந்தப் பெரியவரிடம் நேரிடையாகக் கேட்டேன். “ஐயா, ராமன், சீதை போன்ற தெய்வங்கள் இல்லை என்பது உண்மையானால், உலக மக்களில் பெரும்பாலோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு, வணக்கத்துக்கும் மரியாதைக்கும் உரியவராக வாழ்ந்த மாபெரும் யோகி, பக்திமான் ஸ்ரீ ராமகிருஷ்ணர், தான் கண்ணனையும், ஏசுவையும், காளியையும், நேராகப் பார்த்ததாகச் சொல்வது பொய்யாகிறதே. அத்தகையப் பெரியவர் பொய் சொல்வதற்கான காரணம் ஏதுமில்லையே? இப்படி ஒரு பொய் சொல்வதால் அவருக்கென்ன லாபம்?” என வினவினேன். அவர் சிறிது நேரம் அமைதியாக இருந்து விட்டு, “நீ எவ்வளவு நாட்களாக வருகிறாய்? எனக் கேட்டார்”. “இப்போதுதான் கொஞ்ச நாட்களாக வருகிறேன்” என்று பதிலளித்தேன். “நீ இப்போது தானே வந்திருக்கிறாய், தொடர்ந்து வந்தால் உனக்குப் புரியும்” என்று சொன்னார். அந்த வார்த்தைகள் என் கேள்விக்கான பதிலாக அமையவில்லை. அவரிடம் குறை காணும் முயற்சி இல்லை இது. நான் அவர் சொன்னது போல் தொடர்ந்து சென்றிருந்தால் அவருடைய பார்வையில் உண்மையை உணர முயன்றிருக்கலாம். ஆனால் என் மனம் அவர் முன் பணியவில்லை; என் குரு இவரில்லை என்று என் மனம் முனகிக் கொண்டிருந்தது. ஆக, நாங்கள் அனைவரும் அவரிடமிருந்து விலக ஒவ்வொருவருக்கும் ஒரு காரணமிருந்ததால் அவரிடமிருந்து விலகிவிட்டோம். ஆனால் சம்பந்தத்திற்கு

ஏற்பட்ட அந்த உபாதை இன்றுவரை தொடர்கிறது. டாக்டரிடம் வந்த பிறகு டாக்டரின் கருணையால் அந்தப் பிரச்சினையின் தாக்கம் சற்றுக் குறைந்தது. அது ஏன் முழுவதுமாக நீங்கவில்லை என்ற கேள்விக்கான பதிலை டாக்டர்தான் சொல்லவேண்டும்.

இந்த அனுபவங்களை சுருக்கமாக டாக்டரிடம் சொன்னேன். 'என் சுயநலம் கருதி எப்படி இந்தத் தொழிலை இந்தக் காலகட்டத்தில் விடுவேன்? 'என்று டாக்டரிடம் வினவினேன். அனைத்தையும் கேட்டுக்கொண்ட டாக்டர், “நீ கவலைப் படாதப்பா, நான் பாத்துக்கறேன்” என்றார். அந்த நேரத்தில் அங்கிருந்த நண்பர் ஜானகிராமனின் துணைவியார் நிர்மலா அவர்கள் ஒரு கதை சொன்னார். காசியில் கசாப்புத் தொழில் செய்துகொண்டிருந்த ஒருவர் எத்தனை பெரிய யோகி, ஞானி என்பதை விளக்கும் கதை. செய்யும் தொழிலுக்கும் நாம் பயிலும் யோகத்துக்கும் நேரிடையான தொடர்பு இல்லை என்பதே இந்தக் கதையின் சாரம். இந்தக் கதை பெரும்பாலானோர் அறிந்த ஒன்று என்பதால் அதை இங்கே விரிவாகச் சொல்லவில்லை. இந்தக் கதையைக் கேட்ட பின்பு, இதற்கு முன் நான் அணுகிய யோகியின் வார்த்தைகளால் புண்பட்டிருந்த என் மனம், திருமதி நிர்மலா மூலமாக டாக்டர் சொன்ன கதையால் ஆறுதலடைந்தது. புண்பட்ட மனசுக்கு மருந்தைப்போல் இதமாக இருந்தது. பின்னாளில் ஒரு விஷயம் எனக்கு விளங்கியது. டாக்டர் சொல்ல நினைப்பதை அருகிலிருக்கும் யார் மூலமாவது சொல்வார் என்பதை பல சந்தர்ப்பங்களில் நான் கண்டு, மற்றவர் மூலமும் கேட்டு, உணர்ந்திருக்கிறேன்.

இந்த இடத்தில் ஒன்றைக் குறிப்பிட வேண்டும். டாக்டரிடம் எனக்கேற்பட்ட முதல் சந்திப்பின் போது உடனிருந்த ஜானகிராமன் என் ஆன்மிகப் பயணத்தில் இன்று வரை சற்று நெருக்கமாகவே பயணித்துக்கொண்டிருக்கிறார். எனக்கு தீட்சை கொடுப்பது பற்றியும் ஜானகிராமனிடம்தான் கேட்டார் டாக்டர். "என்னப்பா, இவருக்கு இனிஷியேஷன் கொடுக்கலாமா?" என்று. அவர் என்ன சொன்னார் என்பது சரியாக நினைவில்லை. "உங்களுக்குத் தெரியாதா டாக்டர்?

நீங்க சொன்னா சரிதான்" என்பது போல் ஏதோ சொன்னதாக நினைவு. "சரிப்பா, நீ வா பார்க்கலாம்" என்றார் என்னிடம்.

**மீண்டும் பிறந்தேன்**

மறுநாள் சென்றேன். எனக்கு தீட்சை தரும் தேதியைச் (24-2-1994) சொன்னதுடன், அதற்கு நான் எப்படி ஆயத்தமாக வேண்டும் என்பதை எனக்கு சொல்லித்தருமாறு நண்பர் சம்பந்தத்தைப் பணித்தார். அந்தத் தேதியும் வந்தது. நண்பர் மணி அவர்கள் இல்லத்தில் எனக்கும் ஜானகிராமனின் மகனுக்கும் தீட்சை தரும் சடங்கு நிறைவுற்றது.

அன்று நான் மீண்டும் பிறந்தேன். 'Twice born' என்று கிருத்துவர்கள் இடையில் ஒரு பிரிவு உண்டு. அதைப்பற்றி எனக்கு முழு விவரம் தெரியாது. ஆனால் தீட்சைக்குப் பிறகு ஒருவருடைய நிலையைக் குறிக்க அது மிகப் பொருத்தமான வாக்கியமாக இருக்கும் என்பது என் கருத்து. தீட்சை வாங்கிக்கொண்ட அந்த நாள் முதல் புதுப் பிறவி என்பதை அறிவேன். அதற்கு முன்பிருந்ததை மாற்றி, புதிதாய் விதி எழுதும் என் குருநாதனின் காருண்யத்தை, பெருமையை எவ்வளவு வேண்டுமானாலும் பேசலாம். காலம்தான் போதாது.

**என் சிறிய தந்தை மாசிலாமணி**

என் சிறிய தந்தையார் மாசிலாமணி அடிக்கடி ஒன்றைக் கேட்பார்," நீ ஏன் பிறவியே வேண்டாம் என்று சொல்கிறாய்? பிறவி வேண்டும், நான் எத்தனை பிறவிகள் வேண்டுமானாலும் எடுப்பேன். மீண்டும் மீண்டும் பிறப்பேன். பிறக்கவேண்டும் என்று கண்ணனை வேண்டுவேன். பிறப்பதே அவன் புகழ் பாடத்தான். அவன் நாமம் சொல்லி ஆடுவேன், பாடுவேன், நடு வீதியில் கூத்தாடுவேன். ஊரும் உலகமும் பைத்தியம் என்று சொல்லட்டும், பரவாயில்லை.

அவன் புகழ் பாடுவதைக் காட்டிலும் சந்தோஷமோ அல்லது ஆனந்தம் தரும் விஷயமோ இவ்வுலகத்தில் இல்லை. எவ்வுலகத்திலும் இல்லை" என்பார். நான் ஆச்சரியமாகப் பார்ப்பேன். இந்த மாய உலகில் பிறப்பெடுத்து, வாழ்க்கை என்னும் பேராபத்தில் சிக்கிக்கொண்டு எத்தனை யோகிகள், சித்தர்கள், ஆன்மிகவாதிகள் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களைக் கேட்டால், "விட்டால் ஓடிவிடுவேன், இனி பிறவியே வேண்டாம்" என்பார்கள். ஆனால் இவரோ மீண்டும் வந்து பிறப்பேன் என்கிறார். 'எப்படி இவர் மனத்தை மாற்றுவது? எப்படி இவருக்கு உண்மையை உணர்த்துவது?' என்று யோசிப்பேன். "அப்பா, டாக்டர் சொல்லிக் கொடுத்த தியானத்தைப் பழகுங்கள். மீண்டும் பிறப்பதைப் பற்றி நினைக்காதீர்கள்" என்பேன். ஆனால் அவரோ, "இல்லை, இல்லை வருவேன், மீண்டும் வருவேன்." வர வேண்டும் எனப் பிடிவாதமாகப் பேசும் இவர் எத்தகைய தீவிர பக்தராக இருந்தால் இப்படிப் பேசுவார். அந்த பக்தியில் கோடியில் ஒரு பங்காவது என்னிடம் இருக்குமா என்று நான் நினைத்ததுண்டு. லேசான பொறாமைகூட வந்ததுண்மை. இந்த பக்தி காரணமாக 'இவர் இறைவனுக்கு எவ்வளவு நெருக்கமானவராக இருக்க வேண்டும்! எத்தனை அன்புக்குரியவராக இருப்பார்! இப்படிப்பட்டவரையல்லவா இறைவன் மிகவும் நேசிப்பான்' என்று நான் எண்ணியதுண்டு. அவருடைய மனோநிலை ஆரம்ப காலத்தில் எனக்குப் புரியவில்லை. இப்போது புரிகிறது. கள்ளைப் பருகியவன் மயங்காமல் இருக்க இயலுமா?

என் சிறிய தந்தையாரின் தீவிர, ஆழ்ந்த, பிடிவாதமான, ஆக்கிரமித்துக் கொள்ளும் பக்தியை எண்ணிப்பார்க்கும் வேளையில் என்னைப் பற்றியும் நினைப்பேன். என் பக்தியின் தன்மை பற்றி இன்றுகூட எனக்குச் சரியான மதிப்பீடு இல்லை. புரியவும் இல்லை. எனக்கு என் குருநாதன் வேண்டும். அது மட்டும்தான் புரிகிறது. அவரைப் பற்றி மனதில் தோன்றுவதையெல்லாம் சொல்ல வேண்டும் என்று தோன்றுகிறது. எவ்வளவு பேசினாலும் அவரைப் பற்றிச் சொல்வதற்கு இன்னும் இருக்கும். முழுமையை விமர்சிக்க, அதன் அழகை சிலாகிக்க, அதிலிருந்து வந்த ஒரு துளியால் எப்படி முடியும்? முடியாது என்று தெரிந்தாலும் அதைப் பற்றிப்

பேசாமல் இருக்க இயலவில்லையே! அந்தக் கண்கள் இருக்கின்றனவே, அது

எத்தனை அழகு! எத்தகைய ஒளி பொருந்திய கண்கள்! நேராகப் பார்ப்பதை விட, பக்கவாட்டில் கடைக்கண்ணால் பார்ப்பது இருக்கிறதே. அப்பப்பா! அதைச் சொல்லால் எப்படி விளக்க இயலும்? அதை அனுபவித்தவன் நான். அந்த அதிசயத்தைச் சொல்லியே ஆகவேண்டும்.

**முதல் அதிசய நிகழ்வு**

ஒருநாள் டாக்டரும் நானும் பரங்கிமலை ரயில் நிலையத்தை நோக்கி நடந்து கொண்டிருந்தோம். இருப்புப் பாதையைக் கடந்து நடைமேடையை நோக்கிச் சரிவான, குறுகிய வழியில் அவர் பின்னே நடந்து கொண்டிருந்தேன். அன்று ஆலந்தூர் மருத்துவமனையில் நாம் அறிந்தும் அறியாமலும் செய்யும் தவறுகள், அதன் விளைவுகள் பற்றிய உரையாடல் டாக்டருக்கும் மற்ற சீடர்களுக்குமிடையில் நடந்தது. அந்த விளக்கங்கள் என் மனதில் ஆழமான பாதிப்பை ஏற்படுத்தின. அதன் தொடர்பாக அந்த நேரத்தில் என் சிந்தனை என் கடந்தகால வாழ்க்கையின் மேல் படர்ந்தது. குறிப்பாக நான் அறியாமல் செய்த தவறுகள், மற்றும் அறிந்தே ஆசையின் பாற்பட்டு செய்த தவறுகள் போன்றவற்றை எண்ணி மனதுக்குள் வருந்திக் கொண்டிருந்தேன். 'தவறு செய்வது மனித இயல்பு என்றாலும், இந்தத் தவறுகளுக்கெல்லாம் என்ன பரிகாரம்? இவற்றையெல்லாம் நான் எப்படிச் சமன் செய்யப் போகிறேன்?' என்பன போன்ற சிந்தனை மனத்தில் ஓடிக் கொண்டிருந்தன. அந்தச் சிந்தனை என்னைச் சோர்வடையச் செய்தது. ஏறிக்கொண்டிருந்த சரிவு முடிந்து சமமான நடை மேடையை அடைந்ததும் அதுவரை அவர் பின்னால் வந்துகொண்டிருந்த நான் அவருக்கு பக்கவாட்டில் நடக்க ஆரம்பித்தேன். அதுவரை மௌனமாக வந்து கொண்டிருந்த டாக்டர், முழுவதுமாகத் தலையை திருப்பாமல் லேசாக என் பக்கம் திரும்பி, கடைக் கண்ணால் என்னை ஒரு சில நொடிகள் பார்த்தார். அந்தப் பார்வையை முழுமையாக விவரிக்கும் சொல்லாளுமை என்வசம்

இல்லை. ஆயினும் முயல்கிறேன். கடைவிழியிலிருந்து லேசர் கதிர்களைப் போன்ற ஒளி என்மேல் பாய்ந்தது. இதுவரை எத்தனையோ மனிதர்களின் பார்வைகளைச் சந்தித்திருக்கிறேன். ஆனால் இது போன்ற பார்வையை நான் சந்தித்ததில்லை. இந்த அனுபவம் என் வாழ்நாளில் முதல் அனுபவம். இது போன்ற அனுபவம் வேறு யாரிடமும் எனக்கு ஏற்பட்டதில்லை. அந்தப் பார்வையின் தீட்சண்யம் ஒரே ஒரு கணம்தான் நீடித்தது. பிறகு திரும்பிக்கொண்ட டாக்டர், நேராகப் பார்த்தபடி நடந்துகொண்டே என்னிடம் சொன்னார். “ஏன் நடந்து போனதையெல்லாம் நினைத்துக் கொண்டிருக்கிறாய்? அதையெல்லாம் மறந்துடணும். தினம் அதையே நினைத்து வருந்திக் கொண்டிருக்கக் கூடாது. தப்பு நடந்து விட்டதா. போகட்டும் விடு. இனி செய்யமாட்டேன் என்று சங்கல்பம் செய்துகொள். மறுபடியும் தவறி விட்டாயா, பரவாயில்லை. மீண்டும் செய்யாமலிருப்பதற்கு முயற்சி செய். அப்படித்தான் இருக்கணும். நடந்ததையே நினைத்துக் கவலைப்பட்டுக் கொண்டிருக்கக் கூடாது. அதனால் ஒரு பயனும் இல்லை.” என்று சொல்லிவிட்டு அமைதியாகிவிட்டார். நான் தாக்குண்டேன், அதிர்ந்து போனேன், ஆச்சரியத்தில் உறைந்து விட்டேன். இப்படி எத்தனை வார்த்தைகளால் விளக்க முயன்றாலும் என் அப்போதைய நிலையை முழுமையாக விளக்க முடியாது. உணர்ந்தால்தான் புரிந்துகொள்ளமுடியும். இதற்குமுன் என் வாழ்வில் இதுபோல் என் எண்ணங்களைப் படித்த ஒருவரைப் பற்றி அறிவேன். ஆனால் அப்போது அது என் நினைவுக்கு வரவில்லை. நீண்ட காலத்துக்கு முன் நடந்த நிகழ்வு அது. 'எப்படி இவர் என் மனதில் ஓடும் எண்ணங்களை அறிந்து கொள்கிறார்! ஒரு மனிதனுக்கு இது சாத்தியமா? இது ஒருவருக்கு சாத்தியம் என்றால் அப்படிப்பட்டவரால் எதையும் செய்ய முடியுமே. என் எண்ணங்களையெல்லாம் படிக்கும் இவரால் என் அடிப்படை சுதந்திரமே பறிபோகிறதே. எப்படி ஒரு மனிதன் அடுத்தவன் மனதில் இருப்பதைக் கண்டு பிடிக்க முடியும்? அறிவியல் சாத்தியம் எத்தனை விழுக்காடு?' என்பன போன்ற கேள்விகள் மனதில் எழ, நான் பேச்சிழந்தவனானேன். அவர் சொன்னதற்கு பதில் சொல்லவேண்டும் என்ற எண்ணம்கூடத் தோன்றவில்லை.

'யார் இவர்?'. மனதில் லேசாக பயம் கூடத் தோன்றியது. எண்ணங்களின் பத்திரத் தன்மையையும், இரகசியத் தன்மையையும் பற்றி நான் கொண்டிருந்த கருத்தும், நம்பிக்கையும் உடைந்து தவிடு பொடியாயின. 'இவருக்குத் தெரியாமல் நான் எதுவும் நினைக்கக்கூட முடியாதோ?' என்ற எண்ணம் தந்த ஒருவித பயம், சங்கடம் என்னை வெகுவாக பாதித்தது. மனம், உடல், பொருள், ஆன்மா என்று அனைத்துமாக இருக்கும் பரம்பொருள் இவர்தான் என்பதை அறியாத நேரம் அது. என் எண்ணங்களை என்னிடமிருந்தே மறைக்க இயலுமா? அது சாத்தியமென்றால், என் எண்ணங்களை டாக்டரிடமிருந்து மறைப்பதும் சாத்தியமே. நான் வேறு அவர் வேறா? மின் வண்டி வந்ததும், அவர் அதில் ஏறிப் போய்விட்டார். கையசைத்து விடை கொடுத்ததாக நினைவு.

**மருத்துவ மனையில் நடந்தது**

இந்த நிகழ்ச்சியைப் போன்ற மற்றுமொரு நிகழ்வையும் குறிப்பிடவேண்டும். ஆலந்தூர் மருத்துவ மனையில் ஒரு நாள் டாக்டர் எல்லோருடனும் பேசிக்கொண்டிருந்தார். ஆரம்ப காலத் தயக்கமும், வெட்கமும் விட்டுப்போகாத நேரம். அதனால் சகஜமாகப் பேசத் தயங்குவேன். மற்ற சீடர்களுடன் அதிக பழக்கம் இல்லை. டாக்டர் எப்படிப்பட்டவரோ? கேள்வி கேட்டால் என்ன சொல்வாரோ? என்ற ஐயம். இப்படிப்பட்ட சூழ்நிலையில் யாரோ ஒருவர் ஆன்மிக விஷயமாக சந்தேகம் கேட்க, அதற்கு டாக்டர் பதில் சொல்லிக் கொண்டிருந்தார். அவர் சொல்லிக் கொண்டிருந்த செய்தியில் எனக்கு ஒரு சந்தேகம். கேட்க வேண்டும் என்று நினைக்கிறேன், ஆனால் அதைக் கேட்பதில் ஒரு தயக்கம். கேட்கவா அல்லது பேசாதிருந்து விடலாமா என்ற குழப்பத்துடன் நின்று கொண்டிருந்தேன். அந்த நேரம் டாக்டர் எதிர்பாராவிதமாக என் பக்கம் திரும்பி, "கேளுப்பா, கேட்டால்தானே சொல்லமுடியும்?" என்றாரே பார்க்கணும். நான் ஆச்சரியத்திலும், அதிர்ச்சியிலும் உறைந்து போனேன். கேள்வி கேட்கவில்லை.

வார்த்தை எழவில்லை. ஓரிரு நிமிடங்களில் மனம் விழித்துக்கொண்டு கேள்விக்கணை தொடுக்க ஆரம்பித்தது. இயல்பாக எழக்கூடிய கேள்விகள்தான். 'யார் இவர்? நாமறிந்த விஞ்ஞான பூர்வமாகப் பார்த்தால் இது சாத்தியமற்ற செயல். இத்தகைய சக்தி படைத்த ஆன்மிக குருவா இவர்?' என்பன போன்ற கேள்விகளால் நான் பேச்சிலனானேன். ‘பார்ப்பதற்கு சாதாரணமாக இருக்கும் இவரிடம் அசாதாரண சக்தி இருக்கும்போல் தோன்றுகிறதே’ என்ற எண்ணம் மனதில் ஓடிக் கொண்டிருந்தது. குளத்தைக் குழப்பி அதில் மீன் பிடிப்பதில் வல்லவராயிற்றே. இதன் தொடர்ச்சியாக மற்றொரு நிகழ்ச்சியும் நினைவுக்கு வருகிறது. இது மேற்சொன்ன அனுபவங்களுக்குப் பிறகு சிலகாலம் சென்று ஏற்பட்ட அனுபவம்.

**என் வருத்தத்தில் பங்கேற்றார்**

டாக்டரிடம் ஒரு ‘பியட்’ (Fiat) கார் இருந்தது. அது அடிக்கடி பழுதடைந்து விடும். ஒரு முறை பழுதுபட்டபோது எனக்குத் தெரிந்த மெக்கானிக்கை அழைத்துக்கொண்டு அவர் வீட்டுக்குச் சென்றேன் பழுது நீக்குவதற்கு. மெக்கானிக் வேலை செய்துகொண்டிருக்கும் போது, டாக்டர் அங்கு வந்து அமர்ந்தார். அன்று காலை என் வீட்டில் ஒரு சம்பவம் நடந்தது. அது என் குழந்தைகள் சம்பந்தப்பட்டது. அந்த நிகழ்ச்சியால் நான் மனம் பாதிக்கப் பட்டிருந்தேன். மனம் அந்த பாதிப்பிலிருந்து விடுபடவில்லை. இருந்தாலும் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் டாக்டருடன் சாதாரணமாக உரையாடிக் கொண்டிருந்ததாக நினைவு. என் மன உளைச்சலைப் புரிந்துகொண்ட டாக்டர், பேச்சின் இடையில், “பிள்ளைகள் சரியில்லை. என்ன செய்யறது?” என்று சொன்னார். என் மனவேதனையில் பங்கெடுத்துக் கொள்வதைப்போல் இருந்தது அவர் சொன்னது. அதே நேரத்தில், எனக்கு மட்டுமே தெரிந்த நிகழ்ச்சி இவருக்கு எப்படி தெரிந்தது என்ற கேள்வியும் ஆச்சரியமும் எழுந்தது. ஆனாலும், இதற்கு முந்தைய இவருடனான இத்தகைய அனுபவங்களால் ஆச்சரியத்தின் தாக்கம் சற்றுக் குறைந்திருந்தது. நான் பதில் ஏதும் பேசவில்லை.

இப்படிப்பட்ட நேரங்களில் நான் பேச்சிழந்து நிற்பது என் இயல்பாகிப் போனது! என் வேதனை என் குருநாதனுக்குத் தெரியும் என்னும் எண்ணமே ஓர் ஆறுதலாக இருந்தது. பிற்காலத்திலும் இவரைச் சந்திப்பதற்கு முன்னும், பல புத்தகங்களைப் படித்தும், பலரது அனுபவங்களைக் கேட்டும் அறிந்த வகையில், இப்படி தூரத்தில் நடப்பதை அறிந்து கொள்வதும், பேசுவதைக் கேட்பதும் அஷ்டமா சித்திகள் என நான் அறிவேன். இப்படிப்பட்ட சித்திகள் பல குருமார்களிடம் இருந்திருக்கிறது என்பதையும் அறிவேன். இவையொன்றும் ஆன்மிக உலகுக்கு புதியவை அல்ல. ஆனால் வித்தியாசம் கல்வியறிவிற்கும், அனுபவ அறிவிற்கும் இடையிலான வேற்றுமை. படித்திருக்கிறேனே யொழிய அப்படிப்பட்டவரை அதுவரை நேரில் சந்தித்ததில்லை. அப்படியானால் இவரும் சித்திகளைப் பெற்ற ஒரு சித்தரோ அல்லது யோகியாகவோ இருக்கலாம் என்ற அனுமானம் வலுக்கிறது. வித்தியாசம் இருக்கிறது. இன்னும் பின்னால் வரும் சில அனுபவங்களைப் படியுங்கள், வித்தியாசம் உங்களுக்கே புரியும்.

**கூடுமலைப் பயணம்**

என் மனதில் மிக, மிக ஆழமாக பதிந்துபோன சம்பவமிது. என் விஞ்ஞான அறிவின் அடித்தளத்தை ஆட்டிப் பார்த்த அதிசயம். நான் மட்டுமல்லாது, என்னுடனிருந்த டாக்டரின் மற்ற சீடர்களும் பார்த்து அனுபவித்த சம்பவம். நான் தீட்சை பெற்ற சிறிது காலத்தில் குறடுமலைக்கு செல்லும் வாய்ப்பு கிட்டியது. என்னிடம் 1960ம் வருடத்தின் பழைய ஜீப் ஒன்று இருந்தது. அதை என் வியாபாரத்திற்கும் சொந்த உபயோகத்திற்கும் பயன்படுத்திவந்தேன். அது நல்ல நிலையில் இருந்தது என்று சொல்லமுடியாது. அவ்வப்போது ஏதாவது தொல்லை கொடுத்துக் கொண்டிருக்கும், டாக்டரின் ஃபியட் காரைப்போல. நானும் அதைச் சரி செய்து வைத்திருந்தேன். ஒரு முறை டாக்டரிடம் கேட்டேன், “டாக்டர், இந்த ஜீப் அடிக்கடிப் பழுதாகி விடுகிறது. இதைக் கொடுத்துவிட்டு வேறு வண்டி

வாங்கிக்கொள்ளவா?” என்று. “வேண்டாம்பா, இதையே வச்சிக்க. நீ சரி பண்ணிப்ப” என்று பதில் சொன்னார். அந்த வண்டி என்னிடம் இருந்த நாள் வரை அப்படித்தான் இருந்தது அதன் நிலைமை. அந்த வண்டியை எடுத்துக் கொண்டு, எஞ்சினியர் சுப்ரமணியம், சாந்தம்மா, வித்யா, ரமேஷ், கிருஷ்ணன், சம்பந்தம் மற்றும் நான் குறடுமலைக்குப் புறப்பட்டோம். டாக்டருடைய சீடர்களைக் குறிப்பிடுவதற்கு வசதியாக முன்னவர், பின்னவர் எனப் பிரித்துக் கொள்வோமானால், முன்னவர்களை தீட்சை பெறுவதற்கு முன்போ அல்லது பின்போ குறடுமலைக்குச் சென்று அங்கு எழுந்தருளியிருக்கும் வினாயகப் பெருமானை தரிசித்துவரச் சொல்வாராம் டாக்டர். பின்னவர் வரிசையில் வந்த நாங்கள்தான் முதலில் சென்று வந்தோமென சாந்தம்மா சொன்னார்கள். டாக்டரின் ஒவ்வொரு சொல்லுக்கும் செயலுக்கும் பின்னே ஒரு காரணமிருக்கும். எல்லா விஷயங்களிலும் அதைக் கண்டுபிடிக்க அல்லது தெரிந்துகொள்ள நான் ஆர்வம் காட்டியதில்லை. சொன்னால் செய்துவிட வேண்டும். அதுதான் என் வழி. குறடு மலைக்குச் செல்லும்படி பணித்த டாக்டரின் இந்தச் செயலுக்கும் ஒரு முக்கியத்துவம் உண்டு. அதைப்பற்றி குறிப்பிட வேண்டியது அவசியமென்று நான் நினைக்கிறேன். அதை அறியும் முன், அந்த இடத்தின் முக்கியத்துவத்தை விளக்குவதும் அவசியம்.

**கூடுமலை வினாயகர்**

குறடுமலை என்றழைக்கப்படும் அந்த இடத்தின் பெயர், ‘கூடுமலை’. பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகிய மூவரும் கூடி அங்கிருக்கும் வினாயகர் சிலையை நிறுவியதால், கூடுமலை என்ற பெயர் வந்ததாம். அந்தச் சிலையை நிறுவியது அகத்திய மாமுனி என்றும் சொல்கிறார்கள். பின்னாளில் பேச்சு வழக்கில் மருவி கூடுமலை என்பது குறடுமலையாகி விட்டது. குருடு என்பதற்கு சிறிய பாறைக் கற்கள் என்றும் கன்னடத்தில் பொருள் உண்டாம். சிறிய பாறைக் கற்களால் ஆன மலை என்றும் கொள்ளலாம். மும்மூர்த்திகளும் பிரதிஷ்டை செய்த வினாயகப் பெருமானை

வணங்கி பூஜை செய்துவிட்டு, தேவர்கள் அசுரர்களிடம் போருக்குப் போனதாகச் செய்தி. அதன் பிறகு, ராமாயண காலத்தில் அகத்திய முனிவர் ஸ்ரீராமருக்கு ஆதித்ய ஹ்ருதயத்தை உபதேசித்ததும் இந்த இடத்தில்தான் என்று சொல்லப் படுகிறது. மீண்டும் பாரத யுத்தம் நடந்த காலத்தில் ஸ்ரீகிருஷ்ணர் பஞ்ச பாண்டவர்களுடன் இங்கு வந்து, வினாயகரை வணங்கி யுத்தத்திற்குச் சென்றதாகப் பேசப்படுகிறது. இந்த மலையின் அடியில், உள்ளே ஓடும் கங்கை, அதாவது 'அந்தர் கங்கா' என்று அழைக்கப்படும், கங்கை நதி பூமிக்கடியில் ஓடுவதாக ஐதிகம். அந்த நதி இந்த மலைக்கடியில் ஓடி, கோலாருக்கருகே உள்ள 'அந்தர் கங்கா' என்னும் இடத்தில், மலையில் ஓர் இடத்தில் வெளிப்படுகிறது. இங்கிருந்து சற்றேறக்குறைய இருபது கிலோமீட்டர் தூரத்தில் ஆவணி என்று ஒரு ஊர். அங்கே ஒரு மலை இருக்கிறது. அதை அரசாங்கத்தின் தொல்பொருள் ஆராய்ச்சி மற்றும் பாதுகாப்பு இலாக்கா, தன்னுடைய பாதுகாப்பில் வைத்து பராமரித்து வருகிறது. ஏனெனில், அந்த இடத்தில் வால்மிகி முனிவரின் ஆஸ்ரமம் இருந்ததாம். அன்னை சீதாப் பிராட்டிக்கு இரு புதல்வர்கள் பிறந்ததும் அந்த ஆஸ்ரமத்தில்தான் என்றும், அன்னை பூமியில் மறைந்ததும் அந்த இடத்தில்தான் என்றும் சொல்லப் படுகிறது. அவர் பூமிக்கடியில் சென்றதாகச் சொல்லப்படும் இடத்தில் அன்னைக்கு ஒரு கோவிலும் உள்ளது. இவை அனைத்தும் தொல்பொருள் இலாக்கா வழிகாட்டி மூலமாகவும், விநாயகர் ஆலய பூஜை மற்றும் பராமரிப்புப் பொறுப்பில் பரம்பரையாக இருக்கும் அர்ச்சகர் மூலமாகவும் தெரிந்துக்கொண்ட செய்திகள். இதைப்பற்றி டாக்டர் என்ன சொன்னார் என்பதை அவரிடமிருந்து நேரடியாக நான் கேட்டதில்லை. எனவே இவ்வளவு சம்பவங்களையும் கொண்ட, முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் அருகே உள்ள இத்தலத்தில் டாக்டர் ஆஸ்ரமம் அமைக்க வேண்டு மென்று விருப்பப் பட்டார். (அந்த ஆஸ்ரமம் அமைக்கப் பட்டு, இப்போது "ஆனந்த் ஜோதி" என்ற பெயரில் இயங்கிக் கொண்டுமிருக்கிறது.)

**விநாயகரின் விஸ்வரூப தரிசனம்**

அத்தகைய கோவிலுக்கு போய் வரும்படி பணித்தார் டாக்டர். நாங்கள் அனைவரும் புறப்பட்டோம். ஆந்திர மாநிலத்தில் உள்ள பலமனேர் என்னும் ஊரை நெருங்கும் போது என் ஜீப்பின் டைனமோ பழுதடைந்து விட்டது. பேட்டரி சார்ஜ் ஆகாது. டீசல் எஞ்சின் என்பதால் எஞ்சின் இயங்க பேட்டரி தேவையில்லை. ஆனால் லைட், ஹார்ன் போன்றவற்றிற்கு பேட்டரி அவசியம் தேவை. அந்த ஊரிலேயே பழுது பார்க்க முயன்று, முடியாமல், எந்த விளக்கு வெளிச்சமுமில்லாமல் டாக்டரின் உதவியால் எந்த இடர்ப்பாடும் இன்றி இருட்டில் வண்டியை செலுத்தி, ஒருவழியாக முல்பாகல் என்ற ஊரை அடைந்தோம். அங்கிருந்து சற்றேரக்குறைய 13 கி.மீ. வலது புறமாகச் சென்றால், குறடுமலை. அங்கே சென்று தங்குவதற்கு இடம் தேடி, கிடைக்காமல், அங்கிருக்கும் விநாயகர் கோவிலிலேயே தங்கினோம். அந்தக் கோவிலில் காலை 3 மணிக்கு அகத்திய முனிவர் வந்து ஸ்னானம் முடித்து, பூஜை செய்துவிட்டு போவதாக ஐதிகம். அன்று காலை 3 மணியளவில், சாந்தம்மாவும் மற்றும் சிலரும் வேத கோஷங்களும், வாத்தியங்களின் ஓசையும் கேட்பதாகக் கூறினார்கள். எனக்கு அத்தகைய சித்திகள் எதுவும் இல்லை. எனவே நான் எதையும் உணரவில்லை. ஆனால் எனக்கு வேறொரு ஆச்சரியம் காத்திருந்தது. காலையில் அர்ச்சகர் வந்து கர்பகிருகக் கதவைத் திறந்த போது நான் அதுவரை கண்டிராத அளவு பெரிய விநாயகர் சிலையைக் கண்டேன். நான் நிமிர்ந்து தலையை பின்புறம் தள்ளி பார்க்க வேண்டிய அளவு ப்ரம்மாண்டமாக இருந்தது. ஆச்சரியத்துடன் ஆறு முறை கதி எடுத்து வணங்கினேன். நாங்கள் அனைவரும் த்யானம் செய்தோம். சாந்தம்மாவும் சிலையின் ப்ரம்மாண்ட தோற்றத்தைப் பார்த்து வியந்தார்கள். அதைப்பற்றி நாங்கள் பேசிக்கொண்டிருந்தோம். இதற்குப் பிறகு சிறிதுகாலம் சென்று நானும் சாந்தம்மாவும் மறுமுறை அங்கே சென்றோம். அப்போது எங்களுக்கு ஓர் ஆச்சரியம் காத்துக் கொண்டிருந்தது. இப்போது, விநாயகர் முன்பு நாங்கள் பார்த்ததில் பாதி அளவு உயரம்தான் இருந்தார். நான் நிமிர்ந்து தலையைப் பின்புறம் சாய்த்து

பார்க்கவேண்டிய அவசியம் ஏற்படவில்லை. நின்று நேராகவே பார்க்க முடிந்தது. மற்ற சிலைகளைவிட பெரிதாக இருந்தாலும், முதல்முறை பார்த்த அளவு பிரம்மாண்டமாக இல்லை. எனக்கு ஒரு சந்தேகம். நான் முதல் முறை பார்த்தபோது சரியாகப் பார்க்கவில்லையா? அப்போது ஏதாவது மனப்பிரமையில் இருந்தேனா? என்று என்னை நானே கேட்டுக்கொண்டேன். சாந்தம்மாவுக்கும் என் அனுபவம்தான் ஏற்பட்டது. முதல் முறை நாங்கள் சென்ற போது வினாயகர் எங்களுக்கு விஸ்வரூப தரிசனம் தந்தார் என்பதை பின்னர் ஒரு நாள் டாக்டர் மூலமாகத் தெரிந்துகொண்டோம். எவ்வளவு அற்புதமான அனுபவம் பாருங்கள்! அந்தக் கோவிலைப் பொறுத்தமட்டில் எனக்கு எப்போதும் ஒரு சிறப்பான அனுபவம் ஏற்படும். அங்கே அமர்ந்து தியானம் செய்யும்போது மிக ஆழ்ந்த அமைதியை உணர்வேன். காலத்தால் பல யுகங்கள் பின்னோக்கிச் சென்றுவிடுவது போன்ற ஓர் உணர்வு ஏற்படும். அப்போது நிலவும் அமைதி இந்த யுகத்துக்குப் பொருந்தாத ஒன்றாகத் தோன்றும். அந்த வினாயகர்சிலை நான்கு யுகங்களுக்கு முன் பிரதிஷ்டை செய்யப்பட்டது என்று சொல்கிறார்கள். அப்படியானால், வினாயக பெருமான் என்னை சில யுகங்கள் பின்னோக்கி அழைத்துச் சென்றுவிடுவதால் அந்த அமைதியை உணர்கிறேனோ என்று தோன்றுகிறது. அந்த அமைதியை என்னால் விளக்க முடியாது. சில அனுபவங்களுக்குச் சொல்வடிவம் கொடுப்பது கடினம். அனுபவித்தறிவது மட்டுமே சாத்தியம்.

**டாக்டர் சொன்னால் ஸ்டார்ட் ஆகும் வண்டி**

முதல் பயணத்துக்கு வருகிறேன். அந்தப் பயணத்தை முடித்துக்கொண்டு சென்னை திரும்பினோம். மாலை கரைந்து, இரவை நெருங்குகிறது. டாக்டரை எஸ்.ஐ.ஏ.ஏ. கிளப்பில் பார்த்துவிட்டு, கிளினிக் இருக்கும் சர்க்கரைச் செட்டி தெருவுக்குப் புறப்பட்டோம். கிளினிக்கை நெருங்கும்போது அதுவரை எப்படியோ ஓடிக்கொண்டிருந்த என் ஜீப் நின்றுவிட்டது. பேட்டரியில்

—கேசவன்

துளிக்கூட மின்சக்தி இல்லை. எவ்வளவு முயன்றும், தள்ளியும் ஸ்டார்ட் செய்ய முடியவில்லை. நாங்கள் 4-5 பேர் சிறிது தூரம் தள்ளி ஜீப்பை கிளினிக் முன்பு கொண்டு நிறுத்தினோம். அருகிலிருந்த பேட்டரி கடைகளில் வாடகைக்கு பேட்டரி கிடைக்குமா என முயன்றோம். வைப்புத் தொகையாக அதிகப் பணம் கேட்டார்கள். எங்களிடம் அந்த நேரத்தில் அவ்வளவு பணமில்லை. டாக்டரிடம் வந்து சொன்னோம். அவர், "போய் ஸ்டார்ட் பண்ணு பார்ப்போம்" என்றார். அவருக்கு நிலைமை புரியவில்லை என்று எண்ணி, அவருக்கு விளக்க எண்ணி, "டாக்டர், அந்த பேட்டரியில் சுத்தமாக கரண்ட் இல்லை. ஸ்டார்ட் ஆகாது" என்றேன். தற்காலிகமாக வேறு பேட்டரிக்கு ஏற்பாடு செய்வார் என்று எதிர்பார்த்தேன். டீசல் என்ஜின் ஸ்டார்ட் ஆக வேண்டுமானால் பேட்டரி நல்ல நிலையில் முழு சார்ஜில் இருக்கவேண்டும் என்பது சாதாரணமாக அனைவரும் அறிந்த ஒன்று. எனவே நான் டாக்டரைப் பார்த்துக்கொண்டு நின்றேன். அவரோ, "போப்பா, போய் ஸ்டார்ட் பண்ணு பாப்போம்" என்றார். ஏதோ குரு சொல்கிறார், ஒரு மரியாதைக்காக செய்வோம் என எண்ணி, சாவியை போட்டு ஸ்டார்ட் செய்தேன். என்ன ஆச்சரியம்! முழு சார்ஜில் இருக்கும் பேட்டரியானால் எஞ்சின் எப்படி ஸ்டார்ட் ஆகுமோ அப்படி ஸ்டார்ட் ஆகி ஓடியது. இதை என்னால் நம்ப முடியவில்லை. ஆனால் கண்ணெதிரே நடப்பதை நம்பாமலும் இருக்க முடியவில்லை. "சரி, நிறுத்தி விட்டு வா" என்றார் டாக்டர். எனக்கு நிறுத்த பயமாக இருந்தது. பிறகு ஸ்டார்ட் ஆகுமோ ஆகாதோ என்ற பயம். அப்போது குருவிடம் எனக்கிருந்த நம்பிக்கை அப்படி! "நிறுத்திட்டு வாப்பா, அப்புறம் போகலாம்" என்றார். வேறு வழியில்லாமல், அவர் வார்த்தையை மீற முடியாமல் நிறுத்தி விட்டு வந்தேன். எனக்குத் தாங்க முடியாத ஆச்சரியம். என் உலக அறிவுக்கு எட்டியவரை, அந்த பேட்டரியைக் கொண்டு ஒரு சிறு பல்பைக்கூட எரியவைக்க முடியாது. டீசல் எஞ்சினை ஸ்டார்ட் செய்வதென்பது நானறிந்த இயற்கை விதிகளுக்கு முரணானது. அன்று அத்தகைய அற்புதம் நிகழ்ந்தது. இயற்கை விதிகளுக்கு மீறிய செயல் ஒன்று நிகழ்த்திக்காட்டப்பட்டது. அங்கிருந்த அனைவரும் அதற்கு சாட்சி. இறைவனின் ஒரு பார்வைக்கு இயற்கை அங்கே மண்டியிட்டது.

இத்துடன் முடியவில்லை. இன்னும் இருக்கிறது. இதற்குப் பிறகு தான் உச்சக் கட்ட அதிசயம் நிகழ இருக்கிறது - படியுங்கள். சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தோம். சுமார் 9 மணியளவில் எங்களை வீட்டுக்கு கிளம்பச் சொன்னார் டாக்டர். “சாந்தம்மா, எஞ்சினியர் இருவரையும் அவர்கள் வீட்டில் விட்டுட்டு போறியா?” என்று என்னைக் கேட்டார். “சரி டாக்டர்” என்றேன். எல்லோரும் வண்டியில் ஏறிக் கொண்டார்கள். ஒரு அதிசயம் இரண்டாம் முறை நிகழப் போவதைக் காணும் ஆவலுடன் சாவியை நுழைத்து திருப்பினேன். ஒன்றும் நிகழவில்லை. என்னுடைய ஆணவம் நிமிர்ந்து உட்கார்ந்தது. ‘பார்த்தாயா, அது ஏதோ எதேச்சையாக நிகழ்ந்தது. இப்ப என்ன சொல்றே?’ என்பது போல் மனம் அவசரப் பட்டது. நான் டாக்டரைப் பார்த்தேன். முதல் முறை ஸ்டார்ட் ஆனதை நிறுத்தாமல் இருந்திருக்கலாம் என மனம் எண்ணியது. டாக்டர் வண்டியை ஊடுருவி பார்ப்பது போல் தோன்றியது. “ஸ்டார்ட் பண்ணுப்பா” என்றார் மீண்டும். சந்தேகத்துடனே மீண்டும் சாவியைத் திருப்பினேன். யாருக்கோ பயந்ததுபோல் உடனே ஸ்டார்ட் ஆனது எஞ்சின். எல்லோர் முகத்திலும் மகிழ்ச்சி. என் மனதிலும் சந்தோஷம். ‘இவர் ரொம்பப் பெரியவர்தான். நிறைய சித்தி படைத்தவர் ஒருவர் நமக்குக் குருவாகக் கிடைத்திருக்கிறார்’ என எண்ணி பெருமைப்பட்டுக்கொண்டேன்! மகிழ்ச்சியும் ஆச்சரியமும் கலந்த ஓர் உணர்வுடன் அங்கிருந்து கிளம்பி, எஞ்சினியர் சுப்ரமணியம், சாந்தம்மா இருவரையும் அடையாறில் அவர் வீட்டில் இறக்கிவிட்டு, என் வீடு நோக்கிப் பயணமானேன். என்னுடன் சம்பந்தம் மற்றும் இரண்டுபேர் இருந்தார்கள். ஜி.எஸ்.டி. ரோடிலிருந்து ஆலந்தூருக்குத் திரும்பும் இடம் மிகவும் இருட்டாகவும், மேடு பள்ளங்கள் நிறைந்த சாலையாகவும் இருந்தது அப்போது. நான் ஹெட்லைட் இல்லாமலே ஓட்டிக்கொண்டு வருகிறேன். பேட்டரியில்தான் சுத்தமாக கரண்ட் இல்லையே. சாலை விளக்கின் ஒளியிலும், மற்ற வண்டிகளின் வெளிச்சத்தைக்கொண்டே ஜீப்பை ஓட்டிக் கொண்டு வந்தேன். “சம்பந்தம், பள்ளம் இருந்தால் பார்த்துச் சொல்லுங்கள்” என்று சொல்லிக்கொண்டு வண்டியை அந்தச் சாலையில் திருப்பினேன். அப்போது மனதில் ஒரு எண்ணம். ஹெட்லைட்டை போட்டுப்பார்த்தால் என்ன என்று.

போட்டேன். பளீரென்று ஒளி வெள்ளம் என் எதிரே சாலையைப் பகலாக்கியது. மீண்டும், மீண்டும் ஆச்சரியத்தில் பேச்சிழப்பது எனக்கு வாடிக்கையாகிவிட்டது. வண்டியிலிருந்த எல்லோருக்கும் மகிழ்ச்சி. உடன் வந்தவர்களை அவர்கள் வீட்டில் இறக்கி விட்டு வண்டியை என் வீட்டில் நிறுத்தும் வரை லைட் அதே பிரகாசத்துடன் எரிந்து கொண்டிருந்தது. மறு நாள் காலையில் எழுந்ததும் முதல் வேலையாக நேராக சென்று வண்டியை ஸ்டார்ட் செய்ய முயன்றேன். லைட்டை போட்டுப் பார்த்தேன். எஞ்சினில் ஒரு முக்கல், முனகல்கூட இல்லை. பேட்டரியில் மின்சக்தி சுத்தமாக இல்லை.

**உயர்ந்த மனிதர்**

மற்றொரு விஷயம் அடிக்கடி நடக்கும். டாக்டர் சில நேரங்களில் மிக மிகக் கருமையாகத் தோற்றமளிப்பார். ஆழ்ந்த கருமை நிறத்தில் இருப்பார். சில நேரங்களில் சாதாரணமாக இருப்பார். காலை நேரத்தில் அவர் முகத்தைப் பார்த்தால் பிரகாசமாக இருக்கும். அந்த புத்துணர்ச்சி நம்மையும் தொற்றிக்கொள்வதுபோல் தோன்றும். அந்த முகத்தில் உள்ள தேஜஸ், ஒரு ப்ரகாசம், நம்மை நம் வசமிழக்கச் செய்யும். விளக்க முடியாத ஏதோ ஓர் உணர்வு அவரைப் பார்த்துக் கொண்டே இருக்கத் தூண்டும். ஒரு நாள், வேலை முடிந்து வெளியே கிளம்பினார். நாங்களும் அவரைத் தொடர்ந்து அறையிலிருந்து வெளியே வந்தவுடன், திடீரென நான் நிமிர்ந்து பார்க்கும் அளவுக்கு உயரமாகிவிட்டார். ஒல்லியாக உத்திரத்தில் தலை இடிக்குமோ என்று என்னுமளவு உயரமாகத் தென்பட்டார். எப்படி இவ்வளவு உயரமாக இருக்கிறார் என்ற சிந்தனை அப்போது எழவில்லை. உயரமாக இருக்கிறார் என்பது மட்டும் தெரிகிறது. அந்த அறையைக் கடந்து அங்கிருக்கும் வாயிற்படியருகில் குனிந்து வெளியே வருகிறார். இப்போது பார்த்தால் சாதாரணமாக இருக்கிறார். இதுபோன்ற அனுபவங்களின்போது நம் மனதில் கேள்விகள் எழுவதில்லை. அவர் அங்கிருந்து அகன்ற பின்புதான் கேள்விகள் தோன்றும். . அந்த நிகழ்ச்சி

நடைபெறும்போது சிந்திக்காமல் நம் மனதை ஸ்தம்பிக்க வைத்துவிடுவார் என்று எண்ணுகிறேன். இது ஒரு சித்து விளையாட்டு. இது போன்ற காட்சிகளை நான் மட்டுமல்ல, மற்றவர்களும் பார்த்திருக்கிறார்கள்.

இவை யாவும் காலப்போக்கில் சாதாரண நிகழ்வு போல் பழகிவிட்டது எனக்கு.

இப்படி ஏதாவதொன்று நிகழ்ந்ததாக நண்பர்கள் சொன்னால், ஆவலுடன் கேட்பேன். ஆனால் ஆரம்பகாலத்திலிருந்த ஆச்சரியம் இப்போது இருக்காது. நம்ம டாக்டரால் முடியாதது என்ன இருக்கிறது என்ற பெருமையான எண்ணம்தான் மனதில் தோன்றும்.

**இடி தாங்கி**

ஒருநாள் நல்ல மழை பெய்துகொண்டிருக்கிறது. இடியும் மின்னலும் வானைப் பிளந்து கொண்டிருக்கின்றன. நான் என் வணிக வளாகத்தில் என் இருக்கையில் அமர்ந்திருக்கிறேன். என் மகனுக்கு போன் வந்தது. நான் எழுந்து என் இருக்கைக்கு பின்னாலிருந்த குளிர்சாதனப் பெட்டியின் மீது வலது கையை வைத்துக் கொண்டு என் மகன் போனில் பேசுவதற்கு வசதியாக ஒதுங்கி நின்றேன். அங்கே தரை முழுதும் மழை சாரலினால் நனைந்து ஈரமாகியிருந்தது. என் மேஜைக்கு எதிரே உள்ள நாற்காலியில், தினமும் வரும் வாடிக்கையாளர் ஒருவர் அமர்ந்திருந்தார். என் மகன் ராஜேஷ் போனில் பேசிக்கொண்டிருந்தார். அந்த நேரத்தில் பெரும் ஒலியுடன், கண்களைக் கூசச்செய்யும் ஒளியுடன் இடி ஒன்று, நான் கை வைத்திருக்கும் குளிர்சாதன பெட்டிக்கும் அதை ஒட்டியிருந்த சுவற்றுக்கும் இடையில் இறங்கியது. ஒரு சிறிய தூண் போன்ற ப்ரகாசமான ஒளித் தண்டு. அது இறங்கிய அதே நேரத்தில் அதிக சக்திவாய்ந்த மின்சாரம் குளிர்சாதன பெட்டிமீதிருந்த என் வலது கை மூலமாக என் உடலில் பாய்ந்து நிலத்தில் இறங்குவதை நான் நன்கு உணர்ந்தேன். இந்த நிகழ்ச்சி இரண்டு – மூன்று நொடிகளுக்குள் நடந்து முடிந்துவிட்டது. அருகே தொலைபேசியில் பேசிக்கொண்டிருந்த என் மகன் “ஹா” என்ற சத்தத்துடன்

தொலைபேசியை காதிலிருந்து சடாரென தூரத்தில் விலக்கிப் பிடித்தார். என்ன என்று வினவிய போது, “போனிலிருந்து அனல் வீசியது, காது சுட்டதால் சத்தமிட்டேன்” என்றார். குளிர்சாதனப் பெட்டிமீதிருந்த என் வலதுகரம் சக்தியிழந்து வெலவெலத்துப் போயிற்று. வேறு ஏதும் நிகழவில்லை. மறுநாள் எங்கள் வீட்டு டி.வி. ஆண்டனா இற்று கீழே விழுந்திருந்ததைக் கண்டோம். மகன் பேசிக்கொண்டிருந்த தொலை பேசியில் 3-4 எண்கள் செயலிழந்துவிட்டிருந்தன. உள்ளே ஒயர் தீய்ந்து விட்டிருந்தது. எதிரே உட்கார்ந்திருந்த வாடிக்கையாளர் எங்களுக்கு ஏதும் அசம்பாவிதம் நடந்துவிடவில்லை என்பதால் மகிழ்ச்சியும், சில நொடிகளில் நடந்து முடிந்த நிகழ்வால் அதிர்ச்சியுடனும், ஆச்சரியத்துடனும் பார்த்துக் கொண்டிருந்தார். கண்ணால் கண்டதை நம்பாமல் இருக்க இயலவில்லை அவரால். இது எப்படி என்று ஆச்சரியத்துடன் வினவினார். அன்றுதான் நான் அவரிடம் டாக்டரைப்பற்றிச் சொன்னேன். பின்னொரு நாளில் அதே வாடிக்கையாளர் டாக்டரை என் மேஜைக்கு எதிரே உள்ள இருக்கையில் அமர்ந்திருக்கும் போது பார்த்தார். ஆனால் நான் பார்க்கவில்லை.

இந்த சம்பவத்தை சற்று ஆழ்ந்து சிந்திப்போமானால், பல விஷயங்கள் நமக்குப் புரியும். வீட்டில் மின்சார சாதனங்களைக் கையாளும்போது ஏற்படும் சாதாரண ஷாக்குகளே (அதிர்வுகளே) சில நேரங்களில் பலருடைய உயிருக்குக் காலனாக அமைந்துவிடும்போது, பல லட்சம் வோல்ட் சக்தியுள்ள மின்னல், இடியாக இறங்கி அதில் ஒரு பகுதி என் உடம்பிலும், என் மகன் கையில் வைத்திருந்த தொலைபேசி மூலமாகவும் பாய்கிறது. ஆனால் நாங்கள் எந்த பாதிப்புமின்றி இருக்கிறோம். பஞ்ச பூதங்களையும் தன் ஒரு பார்வையால் கட்டுப்படுத்தக்கூடிய ஒருவரால்தான் இவற்றை நிகழ்த்தமுடியும் என்பதை நாம் உணரவேண்டும். இது எனக்கு நடந்த போது என் கடைக்கு வந்த வாடிக்கையாளர்கள் பார்த்தார்கள். ஆச்சரியப்பட்டார்கள். இந்தச் சம்பவத்தை நினைத்து நினைத்து வியந்து கொண்டிருந்தேன். ஏனென்றால், நான்தான் எதையும் எளிதில் நம்பாதவனாயிற்றே. உலக நடைமுறையில் எது

நடக்காதோ, எது சாமானியர்களுக்கு சாத்தியப்படாதோ, அதை நடத்தும் போதுதானே அதைச் செய்பவர்மீது ஒரு மதிப்பும் நம்பிக்கையும் ஏற்படுகிறது. அந்த நம்பிக்கையை இப்படிப்பட்ட அற்புதச் செயல்களால் சிறிது சிறிதாக என்னுள் விதைத்தார். இது மட்டுமா? இன்னும் எத்தனையோ அற்புதங்கள் நிகழ்ந்தன.

**ஜம்பர் உருகிய நிகழ்வு**

இது தொடர்பான மற்றொரு நிகழ்சியை இங்கே விளக்கலாம் என நினைக்கிறேன். இடி மிகமிக உயர் அழுத்த மின்சாரம். நான் விளக்கப்போவது நம் வீட்டு உபயோகத்திற்கு வரும் மின்சாரத்தால் ஏற்பட்டது. ஒருநாள் என் மகள் ஒரு சிறு புகைப்படத்தை நுழைவாயிலுக்கு சற்று மேலே ஆணி அடித்து மாட்டிவைக்கச் சொன்னாள். இரும்பால் ஆன ஜம்பர் மற்றும் சுத்தியலுடன் துளைபோட ஆயத்தமானேன். நின்று துளைபோட உயரம் தேவைப்பட்டது. அப்போது அருகில் இருந்த இரும்பு நாற்காலியை இழுத்து அதன்மீது ஏறி சுவற்றில் துளை போட ஆரம்பித்தேன். ஆறு ஏழு அடிகளுக்கப்புறம் ஜம்பர் அடித்த துளையிலிருந்து ‘டப்’ என்ற சப்தத்துடன் புகை வந்தது. வீட்டில் மின்சாரம் துண்டிக்கப்பட்டது. சப்தமும், புகையும் வந்ததால் ஏதோ ஆகிவிட்டது என்று புரிந்தது. உடனே சென்று மெயின் ஸ்விட்சை அணைத்துவிட்டு வந்து ஜம்பரைப் பார்த்தேன். அது கருகியிருந்தது மட்டுமில்லாமல், ஜம்பரில் வாளால் அறுத்தது போல் ஒரு பள்ளம் இருக்கக் கண்டேன். எனக்கு ஒன்றும் புரியவில்லை. எனக்குத் தெரிந்த எலக்ட்ரிஷியனை அழைத்து பழுது பார்க்கச்சொன்னேன். அந்த இடத்தை சோதித்தவர் ஜம்பரையும் வாங்கி பார்த்தார். பிரகு அவர் என்னிடம் கேட்டார், “உங்களுக்கு ஒண்ணுமே ஆகலியா சார்? பில்லரிலிருந்து வரும் மெயின் கரண்ட் ஒயர் நீங்கள் உபயோகித்த ஜம்பர் பட்டு அறுந்து போனது மட்டுமில்லாமல், அதிக மின்னழுத்தத்தால் ஜம்பரில் மின்கம்பியின் அளவு உருகி பள்ளம் விழுந்திருக்கிறது” என்று என்னிடம் அதைக் காட்டினார். “இதை யார் செய்திருந்தாலும் அவர் பெரும்

விபத்துக்குள்ளாகியிருக்கணும். இரும்பு ஜம்பரைப் பிடித்துக்கொண்டு, இரும்பு நாற்காலிமேல் நின்றுகொண்டு........ உங்களுக்கு ஒண்ணும் ஆகலை. என்னால் நம்ப முடியலை சார். இது எப்படி?" என்று கேட்டார். எப்படி என்று என்னால் சொல்ல முடியும். ஆனால் மற்றவர்கள் நம்பணுமே! இயற்கையின் நாயகன்!

**விளையாட்டாக தோன்றும் அற்புத நிகழ்ச்சி**

ஒருநாள் நானும் என் பேத்தி வித்யாவும், இரவு படுத்துக் கொண்டிருக்கிறோம். எனக்கு மிக நன்றாக நினைவிருக்கிறது. நான் குழந்தையின் வலதுபுறம் படுத்துக் கொண்டிருக்கிறேன். குழந்தை எனக்கு இடதுபுறமாக தூங்கிக் கொண்டிருக்கிறாள். என் வீடு இருக்கும் பகுதியில் கொசுத்தொல்லை அதிகம். நான் படுத்திருக்கும் பக்கத்தில் கொசுவத்திச் சுருளைக் கொளுத்தி வைத்திருக்கிறேன். தூக்கத்தில் புரளும்போது, குழந்தை சுட்டுக் கொள்வாளே என்ற காரணத்தால், அந்தப் பக்கத்தில் நான் படுத்திருந்தேன். தூங்கி சுமார் இரண்டு மணிநேரம் கழித்து எனக்கு உறக்கம் கலைந்து விழிப்பு வந்தது. பார்த்தால் குழந்தையும் நானும் இடம் மாறி படுத்திருக்கிறோம். எனக்கு இடதுபக்கம் தூங்கிக்கொண்டிருந்த குழந்தை, எனக்கு வலதுபக்கம் தூங்கிக் கொண்டிருக்கிறாள். நான் நடுவில் எழுந்திருக்கவுமில்லை, மாறிப் படுக்கவுமில்லை. அப்படித் தூக்கத்தில் நடமாடும் பழக்கம் எனக்கில்லை. நான் ஆழ்ந்து தூங்குபவனும் அல்ல. சாதாரணமாக யாரும் மெல்லிய குரலில் அழைத்தாலும் உடனே விழித்துக் கொள்ளுமளவு மேலோட்டமான தூக்கத்தையுடையவன். விழிப்புவந்ததும் நாங்கள் படுத்திருந்த நிலையைப் பார்த்து ஆச்சரியப்பட்டேன். முதலில் இது பேய் பிசாசு வேலையாக இருக்குமோ என நினைத்து சின்ன பயம்கூட வந்தது. சேச்சே, தினமும் தியானம் செய்யும் இந்த இடத்தில் பேயாவது, பிசாசாவது என்று சமாதானமடைந்து யோசித்துப்பார்த்தால், இது யாருடைய விஷமத்தனம் என்று தெளிவாக புரிந்தது. ஒரு முறை அம்மா சொன்னார்கள்; சில சமயங்களில் டாக்டர் இப்படியெல்லாம் விளையாடுவார் என்று.

இந்த விளையாட்டை நினைத்து சற்று மகிழ்ச்சி. குழந்தையை மீண்டும் மாற்றி படுக்கவைத்து விட்டு மனதில் நிறைவுடன் மீண்டும் தூங்கிப் போனேன். இயற்கையே இவர்முன் மண்டியிடுகிறதே, இவர் யாராயிருப்பார்? ஷீரடி பாபாவா? புத்தரா? வள்ளலாரா? ஏசு நாதரா? யாராயிருப்பார் என்று யோசிப்பேன். நான் கேட்டறிந்ததை அனுபவித்தறியச் செய்துவிட்டார். இதற்குப் பிறகு தூங்கப்போகும் போதெல்லாம் இந்நிகழ்ச்சி நினைவுக்கு வரும். விழிப்பிலும் உறக்கத்திலும் எப்போதும் உடன் இருப்பார் என்ற எண்ணம் தரும் பாதுகாப்புணர்ச்சி அமைதியான உறக்கத்தைத் தரும்.

**என்மனக்குழப்பம்**

என் உறவினரொருவரின் தந்தை மாட்டு வண்டி சாய்ந்து கீழே விழுந்ததில் பல இடங்களில் எலும்பு முறிவு ஏற்பட்டு விஜயா மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டிருந்தார். சிகிச்சை நடைபெற்றுக் கொண்டிருந்தது. அவரைப் பார்த்து நலம் விசாரிக்கும் பொருட்டு அந்த மருத்துவமனைக்குச் சென்றிருந்தேன். பல இடங்களில் எலும்பு முறிவு. சிகிச்சை முடிந்து படுக்கையில் இருந்தார். பார்த்து ஆறுதல் சொல்லி விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தேன். அவர் மகன் ஒரு பெரிய நிறுவனத்தில் பணியாற்றிக் கொண்டிருந்தார். தந்தையின் மருத்துவச் செலவு முழுவதையும் மகன் வேலை செய்யும் நிறுவனம் ஏற்றுக்கொள்கிறது. எவ்வளவு செலவானாலும், நல்ல தரமான சிகிச்சை அளிக்க இயலும். அவர் குணமடைந்து வீடு திரும்பும் நேரம், அவருடைய மருத்துவச்செலவு சுமார் இரண்டு லட்சங்களைத் தாண்டிவிடும் என்று சொன்னார்கள். மருத்துவமனையிலிருந்து வீடு திரும்பும் வழி நெடுக இந்த நினைவுகளே என் மனதில் ஓடிக் கொண்டிருந்தன. மின்னல் கீற்று போல் மனதில் ஒரு கேள்வி. ‘இந்தப் பெரியவருக்கு ஏற்பட்டதுபோல் விபத்து, என் மனைவி, மக்களுக்கு ஏற்பட்டால் என் நிலை என்னவாகும்? இத்தகைய சிறந்த மருத்துவ சிகிச்சையை அளிக்க என்னால் முடியுமா? என்னிடம் சேமிப்பு ஏதும்

இல்லையே. ஒரு பத்தாயிரம் ரூபாயைக்கூடப் புரட்ட முடியாத நிலையிலல்லவா நான் இருக்கிறேன். என் வாழ்க்கையைச் சரியான முறையில் திட்டமிடாமல் நடத்திக் கொண்டிருக்கிறேனா? என்னைச்சுற்றி உள்ளவர்கள் எப்படி தங்கள் ஒவ்வொரு அடியையும் திட்டமிட்டு எடுத்து வைக்கிறார்கள்! நான் சரியாகச் சிந்தித்து செயல்படாத காரணத்தால், என்னைச் சார்ந்திருப்பவர்களையும் ஒரு நிச்சயமற்ற வாழ்க்கைமுறையில் தள்ளி விட்டேனா? டாக்டர் இது என்னுடைய தவறா? அன்றாட வாழ்கைமுறையில் நான் கவனம் செலுத்தாமல் இருந்துவிட்டேனா? இறைத்தேடல், ஆன்மிகநாட்டம் என்று மனதை அதில் செலுத்திவிட்டு உலகியல் வாழ்க்கைக்குத் தேவையான அடிப்படைத் தேவைகளில் என் கவனத்தைச் செலுத்தாமல் தவறிழைத்துவிட்டேனா? நான் என்ன செய்வேன்?' என்று மனதுக்குள் என்னை நானே நொந்துகொண்டும், புலம்பிக்கொண்டும் வந்தேன். சில நாட்களில் என் இந்தக் கேள்விக்கும் குழப்பத்துக்கும் பதில் செயல்வடிவில் கிடைத்தது.

**என் மகள் சுமதிக்கு நடந்த விபத்து**

சில தினங்களுக்குப் பிறகு, ஒரு நாள் மாலை சாந்தம்மா வீட்டில் எல்லோரும் அமர்ந்து தியானம் செய்துகொண்டிருந்தோம். தியானம் முடிந்து சிறிதுநேரம் பேசிக்கொண்டிருந்து விட்டு, கலைந்து அவரவர் வீட்டிற்குச் சென்றோம். நானும் வீட்டிற்கு வந்தேன். வீட்டை அடைந்த போது, “பாருங்கள், உங்கள் பெண் என்ன செய்துவிட்டு வந்திருக்கு” என்று என் மனைவி சொன்னார்கள். “என்ன?” என்று வினவினேன். “பஸ்சிலிருந்து விழுந்து அடிபட்டு வந்திருக்கிறாள்” என்று சொன்னார்கள். பயம் அடிவயிற்றில் சுருண்டு எழுந்தது. பஸ்சிலிருந்து விழுந்து அடியென்றால் எப்படி இருக்குமோ என்று பயந்துவிட்டேன். பதறிப்போய், ‘என்னவாயிற்று, எங்கிருக்கிறாள்?’ என்று கேட்டபோது, “ஒன்றும் பயப்படும்படி இல்லை. கையில் லேசாக அடி. வாட்ச் நொறுங்கிப் போய்விட்டது” என்றார்கள். என் இதயத் துடிப்பு சற்று குறைந்தது. அவள் கையைப் பார்த்தேன். லேசாக

வீங்கியிருந்தது. (Tyre mark) டயரில் வளைவு வளைவாக இருக்குமே அந்த அடையாளம் வீங்கிய கையில் தெரிந்தது. என் மகள் சற்று பருமனாக இருப்பதால் சதைபிடிப்பான கையில் இரத்தம் உறைந்ததால் டயர் தடத்தின் அடையாளம் மிக நன்றாகத் தெரிந்தது. பஸ்சில் ஏறும்போது, ஓட்டுனர் இவள் ஏறுவதைக் கவனிக்காமல் பஸ்ஸை எடுத்துவிட்டதால், பிடி நழுவி கீழே விழுந்தபோது இடது கரத்தின் மீது பஸ்சின் பின்சக்கரம் ஏறி இறங்கி விட்டிருக்கிறது. கையில் ஏறி இறங்கியதால் கட்டியிருந்த வாட்ச் நொறுங்கி தூளாகி விட்டது. நாங்கள் சாந்தம்மா வீட்டில் உட்கார்ந்து த்யானம் செய்து கொண்டிருந்த நேரத்தில் இது நடந்திருக்கிறது. விபத்தின் விபரத்தை என் மகள் சுமதியிடம் கேட்டுத் தெரிந்து கொண்ட பின் நான் ஒன்றும் பேசவில்லை. பேச என்ன இருக்கிறது? நேராக என் அறைக்கு சென்று, தியானத்தில் அமர்ந்துவிட்டேன். "நன்றி டாக்டர்" என்று ஒரு வார்த்தையில் சொல்லிவிடலாம். எந்த வார்த்தையும் அவர் எல்லையற்ற கருணைக்கு ஈடாகாது என்பதால் நான் தியானத்தில் அமர்ந்துவிட்டேன்.தியானம் செய்வது ஒன்றுதான் நாம் அவருக்கு செலுத்தும் உண்மையான நன்றியின் அடையாளம் என்பது என் எண்ணம்.

சில நாட்களுக்கு முன்தான் நினைத்துக் கொண்டிருந்தேன் என் உறவினருக்கு நிகழ்ந்தது என் மக்களுக்கு நிகழ்ந்தால் நான் என்ன செய்வேன் என்று. நான் மனதில் கேட்ட கேள்விக்கு பதில் வாய்மொழியாக அல்ல, செயல்வடிவில் கிடைத்துவிட்டது சில நாட்களில். மாட்டு வண்டி என்ன, பேருந்தே ஏறினாலும் ஒரு சிறு எலும்புகூட முறியாது என் குருநாதனின் பாதுகாப்பில் உள்ளவரை என்ற உண்மையை அன்று அனுபவபூர்வமாக உணர்ந்தேன். தெய்வமே குருவாக வந்தபின் எனக்கெதற்கு சந்தேகம், பயம் எல்லாம். என் மனம் முழுவதுமாக நிலைபெற்று டாக்டரிடம் சரணாகதி அடைந்தது மேற்சொன்ன நிகழ்ச்சிக்குப் பிறகுதான் என்று தோன்றுகிறது.

**புனித அன்னையின் செய்தி**

# கண்ணனின் பாதையில் என் பயணம்......

—கேசவன்

அன்று என் மகள் காப்பாற்றப்பட்டது எதேச்சையாக நடந்தது அல்ல என்பதை உறுதிபடுத்தும் விதமாக, சில மாதங்களுக்குப் பிறகு, ஒரு நாள் திருநின்றவூரில் இரவு 'கூட்டு அமர்வு' (session) ஏற்பாடாகியிருந்தது. அப்போது (Mother) மதர் என்று நாங்கள் அன்புடன் அழைக்கும் புனித அன்னை ஊடகமாகச் (medium) செயல்படும் ஒரு சீடர் மூலம் பேசிக் கொண்டிருந்தார்கள். அன்னை என்னைப் பார்த்து, "கென்னி, உன் மகளுக்கு நடந்ததை எல்லோருக்கும் சொல்" என்றார்கள். நான் நடந்ததை விவரித்தபின் அங்கு குழுமியிருந்த அனைவருக்கும் ஒரு செய்தி சொன்னார்கள். "கென்னியின் மகளை மட்டும்தான் டாக்டர் காப்பாற்றுவார் என்பதல்ல. இதேபோல் உங்கள் ஒவ்வொரு குடும்பத்தையும், உறவினர்களையும் காப்பாற்றுவார் என்பதை நீங்கள் உணரவேண்டும். இந்த நிகழ்ச்சியிலிருக்கும் செய்தி அதுதான்" என்றார்.

கென்னி என்பது அன்னை எனக்கு இட்ட பெயர். என்னை அப்படித்தான் அழைப்பார்கள். "The key is in your name - உன் பெயர்தான் நீ யார் என்பதை அறிந்து கொள்ள உதவும் திறவுகோல்" என்பார்கள். ஆனந்த்ஜோதி குடும்பத்தில் பல பேருக்கு அன்னை பெயர் சூட்டியிருக்கிறார்கள். அவை அனைத்துமே, அந்த உடலில் உறையும் உயிர் இதற்கு முன் என்ன அடையாளத்துடன் இருந்தது, இந்த உடலை விட்டபின் எங்கே செல்லும், என்பதை உணர்த்தும் ஒரு குறிப்புதான். தொடர் தியானமும், சரியான தருணமும் வாய்க்கும்போது நமக்கு நாம் யார் என்று தெரியும்; உணர்த்துவார்கள்.

ஒவ்வொருமுறையும் இறைவன் கீழே வரும்போது, தன்னுடைய பரிவாரங்களுடன்தான் வருகிறார். அப்படி வரும் அவருடைய பரிவாரங்கள் அனைவரும் உடல் எடுத்து அவருடன் சம்மந்தப்பட்டு தனக்கிட்ட பணியைச் செய்துகொண்டிருக்கிறார்கள். சிலர் தன்நிலை உணர்ந்து செயல்படுகிறார்கள். சிலர் மாயையில் சிக்கித் தன் பரநிலையை உணராமலே வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். 'அந்த' நான் யார் என்பதைத் தெரிந்துகொள்ளும் வாய்ப்பு அன்னை சூட்டிய

பெயரில் இருக்கிறது என்பதுதான் பொருள்.

ஒரு முக்கியமான செய்தியைச் சொல்லாமல் விட்டால், அது தவறான எண்ணத்திற்கு வித்திட்டுவிடும். எனவே, ஒன்றைச் சொல்லிவிடுகிறேன். இன்று டாக்டருடன் இருக்கும் அத்தனை சீடர்களும் அவருடன் வந்தவர்கள்தானா என்ற கேள்வி எழும். இல்லை என்பதுதான் சரியான பதிலாக இருக்கமுடியும். பல பிறவிகளில் யோகாப்யாசம் செய்து ஒரு குறிப்பிட்ட நிலையை எய்தியிருக்கும் பலர் டாக்டரின் கருணையால் தன் ஆன்மிகப் பயணத்தை அவர் அரவணைப்பில் தொடர்வதும் சாத்தியமே. இதில் முக்கியமாக ஒன்றை கவனிக்க வேண்டும். அவருடன் வந்தவர்கள் நிச்சயமாக திரும்பிப் போய்விடுவார்கள் என்பதற்கு எந்த உத்திரவாதமும் இல்லை. அதுபோலவே இங்கிருந்து அவர் பாதுகாப்பில் யோகத்தைத் தொடருபவர்கள் இங்கே மீண்டும் பிறவி எடுத்து இங்கேயே தொடர்வார்கள் என்றும் எண்ணிவிடக்கூடாது. மாயையில் சிக்கினால், எதுவும் நடக்கும். சிறிதளவும் கவனம் சிதறாமல், விழிப்புணர்வுடன் செயல்பட்டால் அவருடன் சென்றுவிடலாம். இதில் எந்த மாற்றுக் கருத்தும் இருக்க முடியாது.

சரி, மீண்டும் விட்ட இடத்தில் இருந்து தொடர்கிறேன். என் மகளுக்கு நடந்த விபத்து, அதற்குமுன் என்னுள் எழுந்த பயம், அன்னையின் செஷன் செய்தி, அனைத்தையும் ஒரு சேரப் பார்த்தால், இவை யாவும் கோவையாக இருப்பது விளங்கும். என் இயலாமையை எண்ணி நான் வருந்தியது முதல் கட்டம். அப்படி வருந்தத் தேவையில்லை என்பதை உறுதிப்படுத்தும் வகையிலும், எந்த ஆபத்தான சூழ்நிலையாக இருப்பினும் அதிலிருந்து காப்பாற்றப்படுவோம், டாக்டர் நம்மை இடையறாது கவனித்து வழிநடத்திக் கொண்டிருக்கிறார் என்பதை விளக்கும் வகையில் நடந்த விபத்து நிகழ்ச்சி இரண்டாம் கட்டம். இது எதேச்சையாக நிகழ்ந்ததா அல்லது டாக்டரால் காப்பாற்றப் பட்டோமா என்று மனதில் எழும் சந்தேகத்தைக்களையும் பொருட்டு அன்னை செஷனில் வந்து இதை விளக்கியது மூன்றாவது கட்டம். நாம் இரவு பகலாக ஒவ்வொரு வினாடியும் கண்காணிக்கப்

படுகிறோம்; நம் எண்ணம், செயல் அனைத்தும் மிக நுணுக்கமான பரிசீலனைக்கு உள்ளாக்கப்படுகின்றன என்பதும் இந்நிகழ்ச்சிகளின் மூலம் தெளிவாகிறது. நமக்கு நல்லது நேர்ந்தாலும், தீது நேர்ந்தாலும், அது டாக்டருக்குத் தெரியாமல் நடப்பதில்லை என்ற உண்மையை நமக்கு உணர்த்தும் பொருட்டும், ஒவ்வொன்றையும் நாம் ஏதோ எதேச்சையாக நடந்தது என்று எண்ணிவிடக் கூடாது என்ற காரணத்திற்காகவும் எப்போதாவது ஒருமுறை வெளிப்படையாகச் சொல்லி உணரவைக்கிறார்கள்- நம் நம்பிக்கை வளர்வதற்காக. ஏனெனில் மனித மனம் குரங்குக்கு ஒப்பானது என்று எத்தனையோ பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அன்னை சொல்லி நான் கேட்ட ஒரு செய்தியை இதன் மூலம் அனைவருக்கும் சொல்ல விரும்புகிறேன். “உங்களுக்கு தீட்சை கொடுத்தால், அதுமுதற்கொண்டு உங்களோடு ஒருவர் எப்போதும் இருப்பார். தொடர்ந்து உங்களைப் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறோம்” என்று அன்னை சொன்னார். இதே செய்தியை வேறு வார்த்தைகளில் (“உங்களை விட்டுட மாட்டோம்பா. நாங்க பாத்துகிட்டுதான் இருக்கோம்” என்பது போல்) டாக்டரும் சொன்னதாக நினைவு. இதிலிருந்து ஒன்று விளங்குகிறது. நாம் தொடர்ந்து கண்காணிக்கப்படுகிறோம், பாதுகாக்கப்படுகிறோம் என்பதுதான் உண்மை.

எண்ணங்களின் தொகுப்பே மனம். எண்ணங்களே இல்லை என்றால், மனமே அங்கு இல்லை. மாறி மாறி வரும் எண்ணங்களே மன இயக்கம். மனத்தின் இயல்பு இயக்கம் என்பதால், காலப்போக்கில் உண்மையாக நடந்ததைக்கூட இந்த மனமானது, பிரமையாக, கற்பனைக் காட்சியாக உருவகப்படுத்திக் காட்டக்கூடும். நடக்காத ஒன்றை நடந்ததாக நம்பத் தலைப்படும் ஆபத்தும் இருக்கிறது. இந்த மனம் மாயையின் வெளிப்பாடுதானே! எனவே ஒரு சில நேரங்களில் நடந்தது உண்மை என்பதை டாக்டர் உறுதி செய்கிறார். டாக்டர் நம் மனதில் ஓடும் எண்ணத்தை மட்டும் படிப்பவரில்லை. அவருடைய சீடர்களின் வீட்டில், அவர்கள் ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் அன்றாடம் நடப்பவை அனைத்தையும் பார்த்துக் கொண்டிருப்பவர். அந்த நிகழ்வுகளைத் தன்

கட்டுப்பாட்டில் வைத்திருப்பவர். தன் கட்டுப்பாட்டில் வைத்திருப்பவர் என்பதால் நம் செயல்கள் ஒவ்வொன்றிலும் அவர் குறுக்கிடுவதுமில்லை. அவர் அறியாமல் நாம் ஒரு துரும்பைக்கூட அசைக்க முடியாது என்பதுதான் உண்மை. அவர் அனுமதியில்லாமல் நமக்கு எதுவும் நடந்துவிட முடியாது. அவருக்குத் தெரியாது என்று எண்ணி நாம் எந்த ஒரு செயலையும் செய்ய முடியாது. அப்படி எண்ணினால், அது நம் அறியாமை. அவருக்குத் தெரியாது என்று எண்ணி நாம் செய்த காரியங்களை அவரும் தெரிந்ததாகக் காட்டிக் கொள்வதில்லை. நமக்கு ஆறுதல் அளிக்கவோ அல்லது நம்மைத் திருத்தும் நோக்கிலோ, எப்போதாவது நமக்கு ஒரு குறிப்பைத் தரலாம். நான் மேற்சொன்ன நிகழ்ச்சிகள் மூலம், இவரிடமிருந்து எதையும் மறைக்க முடியாது என்ற உண்மையை உணர்ந்து கொண்டேன். அப்படி ஒரு சில குறிப்புகளை சரியாக புரிந்து கொண்டு, நாமாகத் திருந்தினால், நம் முன்னேற்றம் துரிதமடையும். அவருக்குத் தெரியாமல் செய்யவேண்டிய விஷயங்களே நம் வாழ்க்கையில் இல்லாமல் போய்விட்டால், நாம் சரியான பாதையில் நடந்துகொண்டிருக்கிறோம் என்று புரிந்துகொள்ளலாம்.

**என் வாடிக்கையாளர் டாக்டரைப் பார்த்தார்**

இந்தவகையில், இந்தவரிசையில் மற்றொரு அனுபவம் எனக்குக் கிடைத்தது. விபத்து என்ற நாடகத்தின் மூலம் டாக்டர் நம்மிடமிருந்து பிரிந்து சென்ற பிறகு, அவரைப் பார்க்க முடியவில்லையே என்ற ஏக்கத்தில் தவித்துக் கொண்டிருந்த நேரம். ஒருநாள் பக்திப் பாடல்களைக் கேட்டுக் கொண்டிருந்தேன். அந்த பாடல்களை பிரபலப் பாடகி நித்யஸ்ரீ மஹாதேவன் பாடியிருந்தார். நித்யஸ்ரீ பிரபலமாகாத ஆரம்ப காலத்திலேயே, “இந்தப் பெண் பிரபலமாக வருவாள்” என டாக்டர் சொன்னதாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். அவர் பாடிய பாடல்கள் டாக்டருக்கு பிடிக்கும் என்றும் கேள்விப்பட்டிருக்கிறேன். எனக்கும் மிகவும் பிடிக்கும். அவர் பாடி புதிதாக வந்திருந்த கேசட்டைப் போட்டுக் கேட்டுக்கொண்டிருந்தேன்.

காலை நேரம், வாடிக்கையாளர்கள் அதிகம் இல்லை. ஒருவர் வந்து பொருளை வாங்கிக் கொண்டு சென்றுவிட்டார். அவர் சென்ற பிறகு ஐந்து நிமிடங்கள் ஆகியிருக்கும். என் கடைக்கு தினமும் வரும் வாடிக்கையாளர் ஒருவர் உள்ளே வந்தார். அவர் பெயர் தினகரன். இடி விழுந்த போது அங்கே இருந்தவரும் இவர்தான். அந்த சந்தர்ப்பத்தில் அவரிடம் டாக்டர் என் குரு என்று சொல்லியிருக்கிறேன். எனவே டாக்டர் என் குருநாதர் என்று இவருக்குத் தெரியும். டாக்டரின் படம் என் மேஜை மீது இருக்கும். ஆனால் அவரிடம் அது பற்றிப் பேசியதில்லை. கடைக்கு வரும் வாடிக்கையாளர்களில் பலர் டாக்டரின் படத்தைப் பார்த்து “இவர் உங்கள் தந்தையா?” என்று கேட்பார்கள். நானும் “ஆம்!” என்று சொல்வேன். உண்மை அதுதானே! என் ஆன்மிகத் தந்தை இவர்தானே! இந்த வாடிக்கையாளர் உள்ளே வந்தால், நேராக என் மேஜை முன் போட்டிருக்கும் இருக்கையில் வந்து அமர்வது அவர் பழக்கம். சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்துவிட்டு அவர் பொருள் தயாராகி வந்ததும் வாங்கிக்கொண்டு போய்விடுவார். அன்று உள்ளே வந்தவர் நேராக என் மேஜைக்கருகே வராமல், பக்கவாட்டில் போட்டிருந்த பெஞ்சில் சென்று அமர்ந்தார். அங்கிருந்த பேப்பரை எடுத்துப் படிக்க ஆரம்பித்தார். பேப்பர் படிப்பதற்கு அங்கு சென்று அமர்கிறார் என நான் நினைத்தேன். ஓரிரு நிமிடங்களுக்குப் பிறகு திரும்பி நான் அமர்ந்திருக்கும் இடத்தைப் பார்த்தவர், “சார், இப்போ இங்கிருந்தாரே அவர் போய்விட்டாரா? எப்படிப் போனார்?” என என்னிடம் வினவினார். எனக்குப் புரியவில்லை. காரணம், அவர் வந்த நேரத்தில், அவரையும், கடையில் வேலை செய்யும் ஆளையும், என்னையும் தவிர வேறு யாரும் இல்லை. கடந்த பத்து நிமிடங்களாக, அவர் வரும்வரை யாரும் வரவும் இல்லை. “இங்கே யாரும் இல்லையே. நீங்க மட்டும்தானே உள்ளே வந்தீர்கள்?” என்றேன். அவர் முகத்தில் குழப்பமும் ஆச்சரியமும் நிலவ, “இப்ப நான் உள்ளே வரும்போது, உங்கள் எதிரே இருக்கும் நாற்காலியில் ஒருவர் அமர்ந்திருந்தார். அவரைப் பார்த்துவிட்டுத்தான் நான் இங்கே வந்து அமர்ந்தேன். பேப்பரை கையில் எடுத்துக் கொண்டுத் திரும்பிப்பார்த்தால் அவரைக் காணவில்லை. அதற்குள் எங்கே போனார் என்று

ஆச்சரியமாக இருந்தது. அதனால்தான் கேட்டேன்." என்றார். நடந்ததை நம்ப முடியாமல், என்னையும், எதிரே இருந்த நாற்காலியையும், உள்ளே வரும் வழியையும் மாறி, மாறிப் பார்த்துக் கொண்டிருந்தார் வியப்போடு. பின் குழப்பத்துடன் என் எதிரே வந்து அமர்ந்தார். "அவர் எப்படி இருந்தார்?" எனக் கேட்டேன். "கருப்பா இருந்தார். முகம் சரியா நினைவில்லை. வேட்டி கட்டியிருந்தார். மேலே துண்டு போட்டிருந்ததாக நினைவு. சரியா சொல்லமுடியலை. நான் உன்னிப்பா கவனிக்கவில்லை." என்றார். இதற்கு மேல் என்ன விளக்கம் தேவை, இவர் பார்த்ததும், நான் பார்க்க முடியாமல் போனதும் டாக்டர்தான் என்பதற்கு? என் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த முடியவில்லை. கண்கள் குளமாயின. பார்வையைக் கண்ணீர் மறைத்தது. "யோசிச்சுச் சொல்லுங்க பார்வைக்கு எப்படி இருந்தார்" என மீண்டும் வினவினேன். "அசப்பில் இந்தப் படத்தில் இருப்பவரைப் போல் இருந்தார்" என்று நான் மேஜை மீது வைத்திருந்த டாக்டரின் புகைப்படத்தைக் காட்டினார். அந்த புகைப்படம் டாக்டர் கண்மூடியவாறு சாய்ந்திருக்கும் நிலையில் எடுத்தது. அந்த படம் 1994 ல் நாங்கள் சோளிங்கர் சென்ற போது எடுத்த படம் என்று நினைவு. என் கண்ணீரை அடக்க முடியாமல் அழுது தீர்த்தேன். அந்த நண்பரும் இந்த நிகழ்வால் மிகவும் பாதிப்படைந்திருந்ததைக் காணமுடிந்தது. என்னுடைய நிலை எப்படி இருந்திருக்கும், யோசித்துப் பாருங்கள். என்னைப் பொருத்தவரை அந்த நண்பர் டாக்டரின் சீடர் இல்லை. என் மனதில், அந்த நண்பரைவிட, நான் டாக்டருக்கு நெருக்கமானவன் என்ற அகம்பாவம். அவரைக் காட்டிலும் டாக்டரை நன்கு அறிந்தவன் என்ற மேதாவித்தனம். முன்பின் அறிமுகமில்லாத அவர் பார்க்கிறார். பார்க்க வேண்டும் என்ற ஆவலில், ஏக்கத்தில் ஊர் ஊராக அலைந்து திரிந்து அழுது புரண்டு கொண்டிருக்கும் என் எதிரே உட்கார்ந்து கொண்டிருக்கிறார். ஆனால் நான் பார்க்க முடியவில்லையே. இது என்ன கொடுமை. என் கண்ணில் காட்சி தரக்கூடாதா? என்று என் மனதுக்குள் நான் மிகவும் ஏங்கிப் போனேன். உணர்ச்சியைக் கட்டுப்படுதத முடியாமல், கண்ணீர் பெருகியது. வேறு என்ன செய்ய இயலும்? இயலாமை! இயலாமையின் வடிகால் கண்ணீர்தானே!

—கேசவன்

இந்த சித்து விளையாட்டு டாக்டருக்கு மிகச் சாதாரணம் என்பதை ஆரம்பகாலத்தில் நான் உணராவிட்டாலும், சில அனுபவங்களுக்குப் பிறகு அறிந்து கொண்டேன். ஆரம்பத்தில் ஆச்சரியமாக இருந்த செயல்கள் காலப்போக்கில் எனக்கு சாதாரணமாகத் தோன்றின. எப்படி சூரியன் காலையில் கிழக்கில் உதித்து, மாலையில் மேற்கில் மறைவது சாதாரண நிகழ்வோ அது போல், இவருடைய அற்புதச் செயல்கள் யாவும் எனக்கு சாதாரண நிகழ்வுகளாக மாறிவிட்டன. வேறு வார்த்தைகளில் சொல்லவேண்டுமானால் இச் செயல்கள் என்னைப் பொருத்த வரையில் அன்றாட நிகழ்ச்சிகளாக மாறிவிட்டன. அவருடைய சீடர்களாக இருக்கும் அனைவருக்கும் ஏதாவதொரு சந்தர்ப்பத்தில் ஓர் அற்புதமாவது நிகழ்ந்திருக்கும். நம்பிக்கையை ஊட்டுவதற்கு, இதைத் தவிர வேறு சிறந்தமுறை இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. ஒருமுறை புனித அன்னை அமர்வில் வந்து உரையாடும்போது சொன்னார்கள்; “நாங்கள் எதை வேண்டுமானாலும் கொடுக்கலாம், ஆனால் நம்பிக்கையை மட்டும் தரமுடியாது. அது உங்களிடமிருந்துதான் வரவேண்டும்” என்று. உள்ளிருந்து வரும் நம்பிக்கை என்னும் அந்த நாற்றுக்கு, தண்ணீர் ஊற்றி, உரமிட்டு, களையெடுத்து, பல வகையில் பாதுகாப்பாகப் பார்த்துப், பார்த்து வளர்ப்பது அவர்கள். அந்த முயற்சிக்கு இடையூறு செய்யாமலிருப்பதே நாம் செய்யக்கூடிய அதிகபட்ச உதவி. நம்பிக்கை மனதில் ஆழமாக வேரூன்றி வளர்ந்தால்தானே இந்த ஆன்மிகப்பாதையில் முன்னேற முடியும்! நம்பிக்கையைத் தொடர்ந்து வருவதுதான் வைராக்கியம். நம்பிக்கை குறைந்தால் இந்தப்பாதையில் பயணம் தொடர்வதற்கு அவசியமான மனஉறுதி நீர்த்துப் போகும்.

**இந்தப் பயணத்தில் என் துணை**

ஒருமுறை இன்னொரு அதிசயம் நிகழ்ந்தது. அதை நிகழ்த்தியது திருமதி ஷோபனா ரவி. இந்தப் பதிவில் நான் சொல்ல விழைவது, என் குருநாதனைப் பற்றி. அவர் யார் என்பதைப் பற்றி. இவ்வுலகம் நல்வழிப்பட, அவரை விட்டால் வேறு கதி (வழி) யில்லை என்பதைப் பற்றி. அவர் என் வாழ்க்கையைத் தலைகீழாகப்

புரட்டிப் போட்ட விந்தையைப் பற்றி. களிமண்ணாக இருந்த என்னை உபயோகமான மனிதனாக மாற்றிய அற்புதத்தைப் பற்றி.

இந்த சொல்லோவியம் தீட்டும்போது களத்தில் அவருடனும், என்னுடனுமிருக்கும் அத்துணைப் பாத்திரங்களும் இதில் இடம்பெற முடியாவிட்டாலும், ஒரு சிலரைப் பற்றியாவது குறிப்பிட வேண்டுமல்லவா. ஒவ்வொருவரும் டாக்டருடைய செயல்பாடுகளில் ஓரளவிற்காவது பங்கேற்றிருக்கின்றனர். அவரைப்பற்றிச் சொல்லும்போது அவருடைய முக்கியமான சீடர்கள் சிலரைப் பற்றிச் சொல்லாமல் என் முயற்சி முழுமை பெறாது. அவரையும் மிஞ்சி வேறு எந்தப் பாத்திரத்தையும் முன்னிலைப்படுத்துவது என் நோக்கமல்ல. அதே நேரத்தில் டாக்டருடனான என் பயணத்தில் உடன் வந்தவர்களை ஒதுக்குவதும் நியாயமல்ல. அவர்களுக்கு உரிய முக்கியத்துவம் கொடுக்கப்படவேண்டும் என்ற முடிவில் சக பயணிகளைப்பற்றியும் சில இடங்களில் தேவைக்கேற்றவாறு கொஞ்சம் விரிவாகச் சொல்லவேண்டியுள்ளது. திருமதி ஷோபனாரவி பற்றி சொல்லும்போது, எந்த அளவு சொல்லலாம் என்ற கேள்வியும் தயக்கமும் ஏற்பட்டது. எனக்கு உணர்த்தப்பட்டது எனக்கு மட்டும்தானா? மற்றவர்களும் அறிய வேண்டாமா? என்ற கேள்விக்கு சரியான பதில் என்னிடம் இல்லை. ஆழ்ந்த சிந்தனைக்குப் பிறகு ஒரு முடிவுக்கு வந்தேன். எனக்கு உணர்த்தப்பட்டது எனக்கு மட்டுமே என்று எடுத்துக் கொள்வதே சரி என்று தோன்றுகிறது. காலமும் சந்தர்ப்பமும் வாய்க்கும்போது பேசுகிறேன்.

இந்தப் பயணத்தில் என் உள்ளும்புறமும் நிகழ்ந்த, நிகழும் பெரும்பாலான மாற்றங்களின் சூத்ரதாரி டாக்டர்தான் என்றாலும், அதில் திருமதி ஷோபனாவின் பங்கு கணிசமான அளவில் உண்டு. இனி இவரை திருமதி ஷோபனாரவி என்று அழைப்பதில் எனக்கு உடன்பாடில்லை. காரணம், அந்தப் பதம் யாரோ பரிச்சயமில்லாத வேற்று மனிதரை குறிப்பிடுவதுபோல் தோன்றுகிறது. என் அனுபவத்தின் காரணமாக, நான் டாக்டரையும், இவரையும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களாகத்தான் பார்க்கிறேன். டாக்டர் பிரிந்து சென்றபோது என்னை பத்திரமாக

இவர் பாதுகாப்பில்தான் விட்டுச்சென்றார். பிரிவதற்கு நேரம் வந்துவிட்டது என்பதாலோ என்னவோ, அவருடைய பிரிவுக்கு சுமார் ஒரு மாதம் முன்புதான் இவரை எனக்கு அறிமுகம் செய்து வைத்தார். ஆலந்தூர் நகராட்சி அலுவலகத்தின் வாயிலருகில், டாக்டருடன் நான் நின்றிருந்தபோது, காரின் கதவைத் திறந்து "நான் உங்கள் வீட்டிற்கு போன் பண்ணியிருந்தேனே" என்று சொன்ன வார்த்தைகளும், காட்சியும் இன்றும் என் நினைவில் பசுமையாக உள்ளன. அன்றுதான் நான் அவரை இரண்டாம்முறை பார்த்ததும், முதல் முறையாகப் பேசியதும். அதற்குமுன் அவரை தூர்தர்ஷன் அலுவலகத்தில் பல ஆண்டுகளுக்கு முன் அவர் படியிறங்கி வரும்போது பார்த்திருக்கிறேன். ஆனால் பேசியதில்லை. அவர் பாதுகாப்பும், வழிகாட்டுதலும் இல்லையென்றால் இன்று நான் இருக்கும் இடத்தில் இருப்பேனா என்பது கேள்விக்குறிதான். தாயின் அரவணைப்பில் குழந்தை உணரும் பாதுகாப்புணர்ச்சியும் பயமின்மையும் எனக்குக் கவசங்களாக இன்றுவரையும் இருப்பது இவரால்தான். டாக்டர் பிரிந்து சென்ற சில நாட்களில் டாக்டரிடமிருந்து மீடியத்தின் மூலம் பெறப்பட்ட செய்தியை ஹரி தில்லியிலிருந்து அனுப்பினார். டாக்டர் அந்தச் செய்தியில் தம் சீடர்கள் அனைவருக்கும் மிகத் தெளிவாக ஒரு செய்தியைச் சொல்லியிருக்கிறார். ஆங்கிலத்தில் வந்த அந்தச் செய்தி இது தான். "in my absence Shobana ravi will guide you " . "நான் இல்லாத நேரத்தில் ஷோபனாரவி உங்களை வழி நடத்துவார்". டாக்டர் சொன்னதைப் பின்பற்றி இதுநாள் வரை எந்த ஒரு செயலையும் அவர் வழிகாட்டுதலுடன்தான் செய்துவருகிறேன். அவர் சொன்னால் அதை டாக்டர் சொன்னதாகத்தான் நினைத்துச் செயல்படுகிறேன். டாக்டரைப் பிரிந்த நாள்முதல் இவருடைய வழிகாட்டுதல்தான் என்னை நான் இன்றிருக்கும் நிலைக்குக் கொண்டு வந்திருக்கிறது. இவர் என்னை மட்டுமல்ல, மொத்த ஆனந்த்ஜோதி குடும்பத்தையும் செவ்வனே வழிநடத்தி வருகிறார். வெகு விரைவில் அந்தப் பொறுப்பை டாக்டரிடம் ஒப்படைக்கும் நாள் வரும் என்று என் உள்ளுணர்வு சொல்கிறது. அது உண்மையாக வேண்டும் என்பதும் என் பிரார்த்தனை. இப்படிப்பட்ட காரணங்கள் ஒரு புறம் இருக்க, இயல்பாகவே இவரையும் டாக்டரின் சீடர்களான மற்றும் சில பெண்மணிகளையும் அன்பினால் நான் 'அம்மா' என்று

அழைக்கும் பழக்கமுடையவன். சாதாரணமாகப் பேசிக்கொண்டிருக்கும்போது அம்மா என்றுதான் அவரை அழைப்பேன். அவ்வாறே இந்தத் தொடரிலும் அவரை அம்மா என்று குறிப்பிட்டால் அது இயல்பாக இருக்கும் என்று நினைப்பதால், இனி அவரைக் குறிப்பிட வேண்டிய இடத்திலெல்லாம் 'அம்மா' என்ற பதத்தையே உபயோகப் படுத்துவேன். அவர் நிகழ்த்திய அற்புதத்தை முதலில் சொல்லிவிடுகிறேன்.

மிரக்கிள்ஸ் (Miracles) என்று சொல்லும் அற்புதங்களை அதுவரை இவர் நிகழ்த்தி நான் பார்த்ததும் இல்லை, கேள்விப்பட்டதும் இல்லை. நான் சொல்லப் புகும் நிகழ்ச்சிக்குப் பிறகும் நானறிந்து இவர் ஏதும் செய்ததாக நினைவில்லை. நானறிந்த வகையில் அந்த இரு நிகழ்ச்சிகள் மட்டுமே என் நினைவில் தங்கியுள்ளன. இன்னும் நுட்பமான, அதிசயப்படத்தக்க, பிரமிக்க வைக்கும் பல அற்புதங்கள் நிகழ்ந்துள்ளன. அவை என்னளவில் நிகழ்ந்துள்ளன. அவற்றுக்கு புறச்சான்றுகள் இல்லை என்பதால், அவற்றை இங்கு குறிப்பிடவில்லை. மேலும் சில உண்மைகளை வெளிப்படுத்தாமல் மௌனத்தில் புதைக்க வேண்டியதும் காலத்தின் கட்டாயம்.

நாங்கள் ஒரு குழுவாக சென்னையிலிருந்து குறடுமலைக்கு சென்றோம். சாந்தம்மா, சாந்தி, ஜானி, ரமேஷ், அனந்து, எஞ்சினியர் சுப்ரமணியம் மற்றும் ஒருசிலர் இருந்ததாக நினைவு. இங்கிருந்து கிளம்பும் போதே, தயிர் சாதம், புளியோதரை, மற்றும் பிரட், ஜாம் போன்ற உணவுப்பண்டங்களை எடுத்துச் சென்றோம். நேராக அந்தர்கங்கா சென்றோம். அங்கே மதியஉணவை, எடுத்துச் சென்ற பொருட்களைக்கொண்டு முடித்துக்கொண்டோம். அங்கிருந்து குறடுமலைக்குப் பயணமானோம். அப்போது ஆனந்த்ஜோதி ஆஸ்ரமம் நிறுவப் படவில்லை. எனவே அன்று இரவு வினாயகர் கோவிலில் தங்குவதாக ஏற்பாடு.

**டாக்டரின் சீடர் நிகழ்த்திய அற்புதம்**

எடுத்துச் சென்ற உணவில் மீதமிருந்ததைக் கொண்டு இரவு உணவை முடித்துக் கொள்ள எண்ணினோம். தயிர் சாதம், பிரட், புளியோதரை ஆகிய

உணவு பொருட்கள் ஒவ்வொன்றிலும் சிறிதளவு மீதமிருந்ததாக நினைவு. பகிர்ந்து உண்டால் அனைவருக்கும் போதுமானதாக இருக்கும். தயிர்சாதம் மதியம் சாப்பிடும்போதே சற்றுப் புளிப்பாக இருந்தது. கோவில் பிரகாரத்தில் வரிசையாக அமர்ந்து சாப்பிடத் தயாரானோம். தயிர்சாதம் கொண்டு வந்திருந்த பாத்திரத்தை அம்மா திறந்தார்கள். அடுத்த கணம் அந்த இடம் முழுவதும் கடும் புளிப்பு மணம் பரவியது. அதிகாலை மூன்று மணியளவில் செய்த தயிர்சாதம் என்பதால், கடும் புளிப்பாகிப் போயிருந்தது. என் பற்கள் எனாமல் பூச்சு தேய்ந்து போயிருந்த காரணத்தால், சிறு புளிப்பு கூட என் பற்களில் கூச்சத்தை ஏற்படுத்துவதோடல்லாமல், அதன் பிறகு சில நாட்களுக்கு வேறு எந்த உணவையும் உண்ண முடியாதபடி பற்கூச்சம் இருக்குமாதலால், நான் புளிப்பான எதையும் உண்பதில்லை. புளிப்பென்றாலே ஒவ்வாமை எனக்கு. எனவே, புளிப்பு மணம் வீசியதுமே என் பற்கள் கூசுவது போன்ற உணர்வு. "என்னம்மா இப்படி புளிக்கிறதே – எனக்கு வேண்டாம். வேறு ஏதாவது கொடுங்கள்" என்றேன். "ரொம்ப புளிக்குதா? சரி, சாந்தம்மா, ஒரு கரண்டி கொடுங்கள்" என்று கேட்டு வாங்கி, அதை அந்த சாதத்தில் இட்டு நன்றாகக் கலக்கினார்கள். பிறகு வரிசையில் சற்று தள்ளி அமர்ந்திருந்த என்னிடம் வந்து, "இப்போ சாப்பிட்டு பாருங்கள் புளிக்காது" என்றார்கள். "ஐயோ! வேண்டாம்மா. நான் பிரட் சாப்பிட்டுக் கொள்கிறேன். பல் கூசும் என்றேன். "இப்ப கொஞ்சம் சாப்பிட்டு பாருங்கள், புளிக்காது" என்று சொல்லிக் கொண்டே சிறிதளவு என் இலையில் இட்டார்கள். அவர்கள் சொல்லை மறுக்க முடியாமல், தயக்கத்துடனே ஒரு விள்ளல் எடுத்து வாயில் இட்டேன். பல்லில் படாமல் அதை வாயில் புரட்டிய போது, என்ன ஆச்சரியம்! புளிப்பு போன இடம் தெரியவில்லை. அமுதம் போல் சுவைத்தது. என்னால் இதை நம்ப முடியவில்லை. அங்கிருந்த அனைவரும் இதற்கு சாட்சி. அன்று தயிர்சாதம் சாப்பிட்ட அனைவருக்கும் இதே நிலைதான். முதலில் தீர்ந்துபோனது தயிர்சாதம் தான் என நினைக்கிறேன். எல்லோரும் கேட்டுக் கேட்டு வாங்கிச் சாப்பிட்டோம். "கலக்கிட்டீங்கம்மா" என்று விளையாட்டாகச் சொன்னேன். சிரித்துக்

கொண்டார்கள். நீங்களும் முயன்று பார்க்கலாம். புளிப்பில்லாத தயிர்சாதம் செய்து, பிறகு புளிக்கவைத்து, பின் கரண்டியிட்டு நன்கு கலக்கிய பிறகு சாப்பிட்டு பாருங்கள். புளிப்பு நீங்கியிருந்தால், நீங்களும் சித்தர் அல்லது சித்தி என நம்பலாம்!

சிறிய விஷயம்தான், ஆனால் எவ்வளவு ஆழமான பாதிப்பை ஏற்படுத்துகிறது! டாக்டர் நிகழ்த்திய அற்புதங்களுக்கு நான் பழகிவிட்டிருந்ததால், இந்த அதிசயம் என்னிடம் பெரும் பாதிப்பை ஏற்படுத்தவில்லை. அதற்கு இரண்டு காரணங்களைச் சொல்லலாம். டாக்டரால், அற்புதங்கள் என்னளவில் தினசரி நிகழ்வுக்கு இணையாகிவிட்டன. இரண்டாவது காரணம் இவரும் ஆன்மிகத்தில் ஓர் உயர்ந்த இடத்தில் இருப்பவர். பரலோகத்தில் இவர் நிலை என்ன என்பதை அறிந்ததால் அந்த நிகழ்வு ஒன்றும் பெரிய விஷயமாகத் தோன்றவில்லை எனக்கு. அற்புதங்கள் செய்வதில்லை என்பதால் இவரைக் குறைத்து மதித்துவிட முடியாது. ஒருவரின் நிலை அல்லது சக்தி அவர் நிகழ்த்தும் அற்புதங்களால் நிர்ணயிக்கப்படுவதில்லை. அவர்கள் அடுத்தவர்களிடம் ஏற்படுத்தும் மாற்றங்களால் அளவிடலாம். டாக்டர் இவர் மூலம் என்னிடம் ஏற்படுத்திய மாற்றங்கள் ஏராளம். இவருக்கு அற்புதங்கள் நிகழ்த்துவதில் ஈடுபாடு இல்லை என்பதுதான் உண்மை. கேட்டலிஸ்டில் அதுபற்றி அவர்களே சொல்லியிருக்கிறார்கள்.

அன்றைய இரவு அங்கு உறங்கி, காலையில் எழுந்து தியானம் செய்து பின்னர் சென்னைக்குப் பயணமானோம். பயண நேரத்தில் இந்த நிகழ்ச்சி மனதில் மீண்டும் மீண்டும் புரண்டு கொண்டிருந்தது. டாக்டரிடம் இப்படிப்பட்ட அதிசயங்களை நிறையப் பார்த்தவன் நான். ஆனால், டாக்டரின் சீடர்களில் ஒருவர் அற்புதத்தை நிகழ்த்தியதை அதுவரை நான் பார்த்ததில்லை. இவர்கள் செய்ய நான் கண்ட முதல் அதிசயம் அதுதான். இப்படிப்பட்ட நேரங்களில் என்னுள் அந்தப் பழைய கேள்வி எழும். "நான் யார்? என்னைச் சுற்றியுள்ள இவர்கள் யார்? சக சீடர்கள் என்பதைத் தவிர எனக்கும் இவர்களுக்கும் என்ன உறவு?" என்னைச் சுற்றி இருப்பவர்களுடைய உண்மையான அடையாளங்களைத் தெரிந்து கொள்ள ஆவலாயிருக்கும். ஆனால்

—கேசவன்

அதிக தீவிரமில்லாத ஆர்வமாதலால், அது தொடர்பான எந்த முயற்சியும் இருக்காது. நான் யாராக வேண்டுமானாலும் இருந்துவிட்டுப் போகிறேன். இனி பிறவி இல்லாமலிருந்தால் சரி என்ற எண்ணம் மட்டும் வலுப்பெறும். மீண்டும் பிறவி வேண்டாம் என்ற விருப்பத்தில் கூட ஒரு (sub class) உட்பிரிவு உண்டு. டாக்டர் விருப்பம் அதுவானால், எத்தனை பிறவியானாலும் எடுக்கத் தடையில்லை. ஏனென்றால், எனக்கென்று ஒரு விருப்பத்தை வைத்திருக்க நினைக்கவில்லை. சரணாகதியில் எப்படி அடிமைக்குத் தனியொரு விருப்பமிருக்க முடியும்? பழக்கதோஷத்தால், மனதில் அவ்வப்போது சில விருப்பங்கள் தோன்றும். மனம் ஓரளவு விழிப்புடனிருப்பதால், விருப்பங்கள் நல்லவையானாலும் தீயவையானாலும், அவற்றை ஒதுக்கித் தள்ளப் பழகி வருகிறேன். அதுதான் தற்போதைய நிலை.

வண்டி ஓரிடத்தில் நின்றது. என் சிந்தனை தடைப்பட்டது. வண்டி நின்ற இடம் சித்தூர் என நினைவு. தண்ணீருக்கோ அல்லது தேனீருக்கோ அங்கே நிறுத்தினோம். அப்போது நண்பர் ரமேஷ் திடீரெனச் சொன்னார்."என் கைக் கடிகாரத்தை குறடு மலையிலேயே விட்டு விட்டேன்" என்று. "நன்றாக யோசித்துப் பாருங்கள். வேறு எங்காவது விட்டீர்களா?" அம்மா வினவினார்கள். ரமேஷ் சிறிது நேரம் யோசித்து, தெளிவு பெற்றவராகச் சொன்னார், "கோவிலில் முகம் கழுவும்போது கழற்றி வைத்தேன். பிறகு எடுக்கவில்லை. நன்றாக நினைவிருக்கு" என்றார். நான் யோசித்தேன். காரணம், அவர் முகம் கழுவ நான்தான் குழாயில் தண்ணீர் அடித்துக்கொண்டிருந்தேன். கையிலிருந்த வாட்சை கழற்றி அருகில் நாங்கள் அமர்ந்திருந்த கருங்கல் திண்ணையில் வைத்துவிட்டு முகம் கழுவினார். மீண்டும் எடுத்தாரா என்பது எனக்கும் நினைவில்லை. இதை கேட்டுக் கொண்டிருந்த அம்மா, மௌனமாக இருந்தார்கள். அந்த இடத்திலிருந்து மீண்டும் குறடுமலைவரை சென்றுவர ஆகும் செலவுக்கு வேறு வாட்சே வாங்கிவிடலாம் என்று எனக்குத் தோன்றியது. "போகட்டும் விடுங்கள். வேறு வாங்கிக் கொள்ளலாம்" என ரமேஷும் சொன்னார். திரும்பிப் போனாலும் அது அதே இடத்தில் இருக்கும் என்று உறுதியாகச் சொல்லமுடியாது. காரணம், அது மிகுந்த ஜன நடமாட்டம் உள்ள இடம்.

எனவே எல்லோருடைய கவனமும் வேறு பேச்சில் திரும்பியது. சுமார் ஐந்து நிமிடம் கழித்து அவர்கள், “ரமேஷ் இதோ பாருங்கள். இது உங்கள் வாட்சா? இந்த இருக்கைக்குப் பின் இங்கே இருந்தது” என்று சொல்லி வாட்சைக் கொடுத்தார். அது அங்கிருக்க வாய்ப்பில்லை. சந்தேகத்துடனே, “என்னம்மா இது?” என்று நம்பாமல் கேட்டேன். “இல்லப்பா, இங்க பார்த்தேன், சீட்டுக்குப் பக்கத்தில் இருந்தது” என்று சொன்னார். உண்மை எனக்கு விளங்கி விட்டது. “இருந்தாலும் உங்கள் கை ரொம்ப நீளம் தான். கொறடு மலை வரை நீள்கிறதே!” என்று, என் வழக்கமான குறும்புத்தனத்துடன் சொல்லி அந்த பேச்சுக்கு முற்றுப் புள்ளி வைத்தேன். எப்படி அந்த வாட்சை ஆஸ்ட்ரலாக (astral) கொண்டுவர முடிந்தது? அதிசயம் தான். இப்படி இரண்டு நாட்களுக்குள் இரண்டு அதிசயங்களை நிகழ்த்தினார்கள். அதற்குப் பிறகு இப்படி ஏதும் செய்ததாக எனக்குத் தெரியவில்லை. சமீபத்தில் இந்த அனுபவத் தொகுப்பைப் படித்துவிட்டு *(*வெளியீட்டுக்கு முன்பாக*)* *“*நான் எதுவும் செய்யவில்லை. அது அங்கே இருந்திருக்கும், அல்லது டாக்டர் ஏதாவது செய்திருப்பார்*”* என்று சொன்னார்கள். அவர்கள் உண்மையைத்தான் சொல்வார்கள். ஆக அந்த அற்புதத்தை செய்தது டாக்டராகத்தான் இருக்கும் என்பது என் எண்ணம். தயிர்சாத அனுபவத்தை அவர்கள் மறுக்கவில்லை என்பதை இங்கே குறிப்பிடவேண்டும்*.* இப்படிப்பட்ட அதிசயங்களை எல்லோராலும் நிகழ்த்த முடியுமா என்றால், முடியாது என்பதுதான் உண்மை. குருவின் விருப்பத்தினால் மட்டுமே இது நிகழ்கிறது என்பது தெளிவு.

**செஷன்ஸ்**

நான் சொன்ன சம்பவங்களில் ஆங்காங்கே ‘செஷன்ஸ்’ பற்றிக் குறிப்பிட்டிருப்பேன். செஷன்ஸ் என்றால் இப்போதிருக்கும் ஆனந்த்ஜோதி அன்பர்களுக்குத் தெரியும். இந்த சீடர் கூட்டம் பல்கிப் பெருகி விரிவடையும்போது புதியவர்களும் புரிந்து கொள்ளவேண்டும் என்ற எண்ணத்தில் செஷன்ஸ் பற்றி ஒரு

சில வார்த்தைகள் சொல்லவேண்டியது அவசியம் என எண்ணுகிறேன். அதுமட்டுமின்றி செஷன்ஸ் என்றால் என்னவென்று தெரிந்தால்தான் மேற்கொண்டு நான் சொல்லப்போகும் விஷயங்கள் புரியும். எனவே இந்த விளக்கம் அவசியமாகிறது.

திட்ப உடலில் இருந்து கொண்டு நாம் காணும் இந்த உலகைத்தவிர வேறு பல உலகங்களும் உள்ளன. உலக வாழ்க்கைச் சூழலை விடுத்து, இதனின்று வெளியேறி, இறவா வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கும் மஹான்கள், யோகியர், தபஸ்விகள், சித்தர்கள் மற்றும் பல்வேறு நிலையில் இருக்கும் பல பெரியவர்களுடன் தொடர்புகொண்டு பேச ஒரு வழி இருக்கிறது. தகுதி வாய்ந்த, அடங்கிய மனமும், அதற்கு தக்க உடல் பாங்கும் கொண்ட ஒருவரை ஊடகமாகக் கொண்டு, நுட்ப உடலில் வாழும் பெரியவர்கள், அந்த ஊடகத்தின் மூலமாக பேசுவதைத்தான் நாம் செஷன்ஸ் (sessions) என சொல்கிறோம். இனி இந்தப் பதத்தைக் ‘கூட்டு அமர்வு’ அல்லது ‘அமர்வு’எனக் குறிப்பிட விரும்புகிறேன். இந்தச் செயலை கூடுவிட்டுக் கூடு பாய்தல் என்று சொல்ல முடியாது எனினும், சற்றேறக் குறைய அத்தகைய செயல்பாடுதான் ‘கூட்டு அமர்வு’ என்பது.

கூடு விட்டுக் கூடு பாய்வதென்பது, ஆன்மா பிரிந்துவிட்ட ஓர் உடலுக்குள் தன் ஆன்மாவை புகுத்தி அந்த உடல் மூலம் இயங்குவது என்று அறிவோம். இது சித்தர்களுக்கு சாத்தியமான செயல்தான். தான் வேறு ஒரு உடலுக்குள் இருக்கும்போதே கூட அதை விட்டு உயிர் பிரிந்த மற்ற உடலுக்குள் புகுந்து இயங்குவார்கள். ஆதிசங்கரர், திருமூலர் போன்றவர்கள் இவ்வாறு செய்ததாக வரலாறு கூறுகிறது. இதை அடிப்படையாகக் கொண்டு பல டிவி தொடர்கள் வருவதைப் பெரும்பாலோர் அறிவர். ஆனால், ‘கூட்டு அமர்வு’ என்பது சற்று வித்தியாசமானது. மேலே சொன்னதுபோல் மஹான்கள், சித்தர்கள் நம்முடன் உரையாட நினைக்கும் போது தகுதியான ஒரு ஊடகத்தின் மூலம், அந்த நபர் வாழ்ந்து கொண்டிருக்கும் போதே, அவர் உயிருடன் இருக்கும் போதே, அவர் உடலுக்குள் இறங்கி, நம்முடன் உரையாடும் முறையைத்தான் இங்கே “கூட்டு

அமர்வு' என்று குறிப்பிடுகிறோம். கூடுவிட்டுக் கூடு பாய்வதில் அந்த உடலில் ஒரு ஆன்மாதான் இருக்கும். 'கூட்டு அமர்வு' சமயத்தில் அந்த உடலில் இரண்டு ஆன்மாக்களும் இருக்கும். ஒன்று முன்னிலைப்படுத்தப்பட்டு, மற்றது ஒடுங்கிய நிலைக்குத் தள்ளப்படுவதே வித்தியாசம் என்று உணர்கிறேன். எந்த சித்தர் இறங்கி உரையாடுகிறாரோ அவர் முன்னிலைப்படுகிறார். அந்த உடலுக்குச் சொந்தமான ஆன்மா சில நேரம் இந்தச் செயல்பாடுகளை உணர முடிகிறது. சில நேரங்களில் உணர முடியாது. இது குருவின் விருப்பத்தால் நிகழ்கிறது. இந்தச் செய்தியை அப்போது ஊடகமாக செயல்பட்டுக் கொண்டிருந்தவரிடமிருந்து அறிந்தேன். இது என் முதல் நிலை அனுபவமில்லை. இப்போது மீண்டும் 'கூட்டு அமர்வைத்' தொடர்வோம்.

அளவிட முடியாத சக்தி வாய்ந்த சித்தர்களும், ரிஷிகளும், முனிவர்களும் இறங்கிப் பேசக்கூடிய தகுதி படைத்தவரைத் தெரிவு செய்து, அந்த நபருக்கு அதற்கான சக்தியைக் கொடுத்து, அந்த நடைமுறைக்கு அவரை மெல்ல மெல்லப் பழக்கி, இயல்பாக அதைத் தாங்கும் நிலைக்கு அவர் வந்ததும், அவர் மூலமாக டாக்டரின் கருணையால், நாம் பல மஹான்களுடன் பேச ஏற்பாடு செய்து தந்தார்கள். இந்த ஏற்பாட்டை 'கூட்டு அமர்வு' என்று நாம் குறிப்பிடுகிறோம். ஊடகம் எப்போதும் டாக்டரின் முழுக் கட்டுப்பாட்டில்தான் இருக்கும். ஆண் பெண் என்ற வித்தியாசம் இந்த மீடியத்துக்குக் கிடையாது.

முதல் குரூப்பிலிருந்த அந்த மீடியத்தின் மூலம் இறங்கிப்பேசுபவர் யாரோ அவருடைய குரல்தான் மீடியத்தின் மூலம் வெளிவரும். அந்தக் 'கூட்டு அமர்வு'களை ஒலி நாடாவில் பதிவு செய்து வைத்திருக்கிறார்கள். அவற்றில் சிலவற்றை கேட்கும் பேறு எனக்குக் கிடைத்தது. நான் கவனித்த வரையில் ஆண்கள் இறங்கிப் பேசினால் ஆண் குரலும், பெண் இறங்கி பேசினால் பெண் குரலும், அது மட்டுமின்றி, பேசும் நபருடைய தனித்தன்மையும், பேச்சு வழக்கும் அவருடைய இயல்பான பேச்சு நடையும் நபருக்கு நபர் மாறுகிறது. இருப்பது ஒரே ஊடகம். ஆனால் அதன்

கண்டத்திலிருந்து வெளிப்படும் குரலோ பல தரப்பட்டது. மெல்லிய குரல், திடமான, கம்பீரமான குரல், மென்மையான பெண்மைக் குரல் எனப் பலவிதமாக அந்த கண்டத்திலிருந்து வெளிப்படுவதை முதலில் கவனித்த போது வியப்பக இருந்தது. கூடவே சந்தேகமும் தோன்றியது. ஆனால் ஒரு பல் குரல் கலைஞனுக்கு இது ஒன்றும் சிரமமான காரியமில்லை. பல குரலில் பேசும் கலைஞர்கள் பலர் நம்மிடையே இன்றும் உள்ளனர். ஆனால், உண்மையில் வியக்கத்தக்க விஷயம் அவர்கள் பேசிய விஷயங்கள்தாம். அவை பல்வேறு துறையைச் சார்ந்தவை. முற்றிலும் வேறுபட்ட விஷயங்களைப் பற்றி மிக நுணுக்கமான செய்திகளையும் விவரங்களையும் சொன்னார்கள். விரிவாகப் பேசினார்கள்.

இன்று ஆனந்ஜோதியின் வெளியீடுகளான, ஆத்மதரிசனம், ஹோலிவாய்ஸ், அன்னையின் அருள்வழி, ஹோலிபேசேஜ், ஹோலிஜெம்ஸ் போன்ற புத்தகங்கள் சொல்லும் அத்தனை விஷயங்களும் ஊடகம் மூலமாக ரிஷிகளாலும், சித்தர்களாலும், ஞானிகளாலும், புனித அன்னையாலும் மற்றும் பல புனிதர்களாலும் சொல்லப்பட்ட செய்திகள் தான். கேட்டலிஸ்ட் (Catalyst), ஸ்பிரிச்சுவல் எக்ஸ்பீரியன்ஸஸ் வித் மை மாஸ்டர் (Spiritual experiences with my Master) த ஜர்னி,(The Journey) போன்ற ஒரு சில புத்தகங்களே டாக்டரின் சீடர்கள் அவர்களுடைய அனுபவத்தை, அவர்களுடைய கோணத்திலிருந்து எழுதியவை.

டாக்டரிடம் பூரணமாக சரணாகதியடைவதற்குமுன் நான் இந்த ‘கூட்டு அமர்வு’ கேசட்டுகளை கேட்டிருக்கிறேன். அப்போதெல்லாம், என் மனதின் ஒரு ஓரத்தில் சிறு சந்தேகம் இருந்து கொண்டிருந்தது உண்மை. குரல் வித்தியாசம், த்வனி போன்றவற்றை ஒதுக்கிவிட்டு பேசப்பட்ட விஷயங்களை அலசினால், அவையும் வியப்புக்குரியவையே. உதாரணத்துக்குச் சொல்லவேண்டுமானால், பட்டினத்தடிகளின் ‘கூட்டு அமர்வு’ கேசட்டைக் கேட்டிருக்கிறேன். அவருடைய பேச்சே பாட்டாக அழகிய தமிழில் சந்தத்துடன் துள்ளி வரும். பட்டினத்தாரின் குரல் சற்று சன்னமாக இருக்கும். பாரதி பேசினால், அந்தக் குரலின் கம்பீரத்தில், அழகிய

தமிழில், நடையழகில் மயங்கிப் போவோம். பரத்வாஜர் வந்தால் ஆங்கிலத்தில் பேசுவார். உயர்ந்த வேதாந்தவிஷயங்களும், இராமாயணகாலத்துப் போர் விபரங்களும் நம்மை ஆச்சர்யத்தில் மௌனியாக்கிவிடும். இடையில் புனித அன்னை வருவார்கள். எத்தனை இனிய குரல்! கேட்டுக் கொண்டே இருக்கலாம் போலிருக்கும் இதமான பேச்சு. பூண்டி சித்தர் வந்தால்- வேடிக்கையான பேச்சு. பேச்சுதான் பாமரத்தனம். ஆனால், விஷயம் வேதாந்தத்தின் உச்சம். பாமரனின் பாஷையில் பேசுவார். ஆனால் அவர் பேச்சு ஒவ்வொன்றும் பசுமரத்தாணி போல் மனதில் பதியும் வண்ணம் பேசுவார். இப்படிப் பேசிக்கொண்டே போகலாம். இவையெல்லாம் கேட்டபின் இவை யாவும் புனையப்பட்டவை என்று என்னால் ஒதுக்க முடியவில்லை. ஆனால் உடனே ஏற்றுக்கொள்ளவும் முடியவில்லை. இவை உண்மையாக இருக்க வேண்டும் என்ற விருப்பம். பொய்யாகிப் போய்விடக்கூடாதே என்ற ஆதங்கம் தான் மிஞ்சியது. என் தர்க்கரீதியான மனம் வாதம் புரிந்து கொண்டிருந்தது. முற்றிலும் மாறுபட்ட பல விஷயங்களைப் பற்றி மிகத் துல்லியமாக, ஆதார பூர்வமாக, அறிவு பூர்வமாக, ஒரே நபரால் விரிவாக விவாதித்து விளக்க முடியுமா என்ற கேள்விக்கு 'முடியும்' என்ற பதில் உறுதியாக வரவில்லை. தயக்கத்துடன் தான் வந்தது. ஒரு பகுதி மனம், இத்தகைய நிகழ்வுகளை பரிச்சயமில்லா காரணத்தால் நம்பத் தயங்குகிறது. மறுபாதி மனம், இதைத் தவறு என்று ஒதுக்கித்தள்ள முடியாது - இதில் ஏதோ இருக்கிறது, எனக்குத் தெரியவில்லை என்ற காரணத்தாலோ, முன் அனுபவம் இல்லை என்ற காரணத்தாலோ, முற்றிலும் இந்த அனுபவங்கள் பொய் என்று ஒதுக்கித் தள்ளக்கூடாது என வாதிடுகிறது. இப்படிப்பட்ட வாதப் பிரதிவாதங்களில் சிக்கி மனம் தவித்துக்கொண்டிருந்த நேரம் அது. வெளியில் சொல்லவும் முடியவில்லை. யாரிடமும் விவாதிக்கும் துணிவும் இல்லை. டாக்டரிடம் கேட்கும் தைரியமும் இல்லை. இது 'கூட்டு அமர்வு' பற்றி ஆரம்பநாட்களில் நான் கொண்டிருந்த மனநிலை.

அன்று மீடியமாக இருந்தவர் இப்போது நம்மிடமிருந்து விலகியிருக்கிறார்.

இப்படிப் பட்ட அனுபவங்களைப் பெற்ற பின்பும் எப்படி ஒருவர் நம்பிக்கையிழந்து விலகமுடியும் என்ற கேள்வி இயல்பாக எழும். இப்போதெல்லாம், யாருக்காவது நடந்ததை எப்படி நடந்தது என்று நான் கேட்பதே இல்லை. காரணம், நம் குருநாதர் இத்தகைய கேள்விகளை கேட்டால்,விளக்கம் வாய்மொழியாகச் சொல்வதைத் தவிர்த்து, நம்மையும் அத்தகைய சூழலில் தள்ளி, அதே அனுபவத்தை நமக்கும் தந்து நடைமுறை செயல்விளக்கம் தந்துவிடுவார் என்பதை உணர்ந்த பின்பு அடுத்தவருக்கு நிகழ்ந்ததை, எப்படி எனக் கேட்பதே இல்லை. உதாரணத்துக்கு என் மக்களுக்கு நடந்த விபத்தை நினைவுகூர்ந்தாலே போதும்.

த்யான நேரமும், அதன் ஆழமும் அதிகரிக்க, அதிகரிக்க, என் சந்தேகங்கள் பழுத்த இலை போல் சருகாக உதிரத் தொடங்கின. மெல்ல நிகழ்ந்தாலும் ஒருநாள் அது முழுமை அடைந்துவிட்டது. கேள்வி கேட்காமல் டாக்டர் பார்வை சுட்டிய பாதையில் நடக்கும் மனநிலை வாய்க்கப் பெற்றேன். முதலில் நம்ப மறுத்ததற்கு எது காரணம்? பின்பு நம்பத் தலைப்பட்டதற்கு எது காரணம்? மனம்தான்! எத்தனை மாற்றங்களுக்கு உட்படுகிறது, எப்படியெல்லாம் அலைக்கழிக்கிறது! ஆத்மதரிசனம் புத்தகத்தில் ஓர் இடத்தில் சொல்வார்கள்: “முதலில் குரு சொல்வதை கேள்வி கேட்காமல் பின்பற்று. உன் கேள்விகளுக்கு பின்னால் நேரமிருக்கிறது” என்று. அப்படி ஆரம்பத்திலேயே செய்பவர்கள் பாக்கியசாலிகள். என்னைப் போலல்லாமல் பாக்கியசாலியாயிருங்கள் என்பது என் வேண்டுகோள்.

அமர்வு’ என்று குறிப்பிடுகிறோம். கூடுவிட்டுக் கூடு பாய்வதில் அந்த உடலில் ஒரு ஆன்மாதான் இருக்கும். ‘கூட்டு அமர்வு’ சமயத்தில் அந்த உடலில் இரண்டு ஆன்மாக்களும் இருக்கும். ஒன்று முன்னிலைப்படுத்தப்பட்டு, மற்றது ஒடுங்கிய நிலைக்குத் தள்ளப்படுவதே வித்தியாசம் என்று உணர்கிறேன். எந்த சித்தர் இறங்கி உரையாடுகிறாரோ அவர் முன்னிலைப்படுகிறார். அந்த உடலுக்குச் சொந்தமான ஆன்மா சில நேரம் இந்தச் செயல்பாடுகளை உணர முடிகிறது. சில நேரங்களில் உணர முடியாது. இது குருவின் விருப்பத்தால் நிகழ்கிறது. இந்தச் செய்தியை அப்போது ஊடகமாக செயல்பட்டுக் கொண்டிருந்தவரிடமிருந்து அறிந்தேன். இது

என் முதல் நிலை அனுபவமில்லை. இப்போது மீண்டும் ‘கூட்டு அமர்வைத்’ தொடர்வோம்.

அளவிட முடியாத சக்தி வாய்ந்த சித்தர்களும், ரிஷிகளும், முனிவர்களும் இறங்கிப் பேசக்கூடிய தகுதி படைத்தவரைத் தெரிவு செய்து, அந்த நபருக்கு அதற்கான சக்தியைக் கொடுத்து, அந்த நடைமுறைக்கு அவரை மெல்ல மெல்லப் பழக்கி, இயல்பாக அதைத் தாங்கும் நிலைக்கு அவர் வந்ததும், அவர் மூலமாக டாக்டரின் கருணையால், நாம் பல மஹான்களுடன் பேச ஏற்பாடு செய்து தந்தார்கள். இந்த ஏற்பாட்டை ‘கூட்டு அமர்வு’ என்று நாம் குறிப்பிடுகிறோம். ஊடகம் எப்போதும் டாக்டரின் முழுக் கட்டுப்பாட்டில்தான் இருக்கும். ஆண் பெண் என்ற வித்தியாசம் இந்த மீடியத்துக்குக் கிடையாது.

முதல் குரூப்பிலிருந்த அந்த மீடியத்தின் மூலம் இறங்கிப்பேசுபவர் யாரோ அவருடைய குரல்தான் மீடியத்தின் மூலம் வெளிவரும். அந்தக் ‘கூட்டு அமர்வு’களை ஒலி நாடாவில் பதிவு செய்து வைத்திருக்கிறார்கள். அவற்றில் சிலவற்றை கேட்கும் பேறு எனக்குக் கிடைத்தது. நான் கவனித்த வரையில் ஆண்கள் இறங்கிப் பேசினால் ஆண் குரலும், பெண் இறங்கி பேசினால் பெண் குரலும், அது மட்டுமின்றி, பேசும் நபருடைய தனித்தன்மையும், பேச்சு வழக்கும் அவருடைய இயல்பான பேச்சு நடையும் நபருக்கு நபர் மாறுகிறது. இருப்பது ஒரே ஊடகம். ஆனால் அதன் கண்டத்திலிருந்து வெளிப்படும் குரலோ பல தரப்பட்டது. மெல்லிய குரல், திடமான, கம்பீரமான குரல், மென்மையான பெண்மைக் குரல் எனப் பலவிதமாக அந்த கண்டத்திலிருந்து வெளிப்படுவதை முதலில் கவனித்த போது வியப்பக இருந்தது. கூடவே சந்தேகமும் தோன்றியது. ஆனால் ஒரு பல் குரல் கலைஞனுக்கு இது ஒன்றும் சிரமமான காரியமில்லை. பல குரலில் பேசும் கலைஞர்கள் பலர் நம்மிடையே இன்றும் உள்ளனர். ஆனால், உண்மையில் வியக்கத்தக்க விஷயம் அவர்கள் பேசிய விஷயங்கள்தாம். அவை பல்வேறு துறையைச் சார்ந்தவை. முற்றிலும் வேறுபட்ட விஷயங்களைப் பற்றி மிக நுணுக்கமான செய்திகளையும் விவரங்களையும்

சொன்னார்கள். விரிவாகப் பேசினார்கள்.

இன்று ஆனந்ஜோதியின் வெளியீடுகளான, ஆத்மதரிசனம், ஹோலிவாய்ஸ், அன்னையின் அருள்வழி, ஹோலிபேசேஜ், ஹோலிஜெம்ஸ் போன்ற புத்தகங்கள் சொல்லும் அத்தனை விஷயங்களும் ஊடகம் மூலமாக ரிஷிகளாலும், சித்தர்களாலும், ஞானிகளாலும், புனித அன்னையாலும் மற்றும் பல புனிதர்களாலும் சொல்லப்பட்ட செய்திகள் தான். கேட்டலிஸ்ட் (Catalyst), ஸ்பிரிச்சுவல் எக்ஸ்பீரியன்ஸஸ் வித் மை மாஸ்டர் (Spiritual experiences with my Master) த ஜர்னி,(The Journey) போன்ற ஒரு சில புத்தகங்களே டாக்டரின் சீடர்கள் அவர்களுடைய அனுபவத்தை, அவர்களுடைய கோணத்திலிருந்து எழுதியவை.

டாக்டரிடம் பூரணமாக சரணாகதியடைவதற்குமுன் நான் இந்த ‘கூட்டு அமர்வு’ கேசட்டுகளை கேட்டிருக்கிறேன். அப்போதெல்லாம், என் மனதின் ஒரு ஓரத்தில் சிறு சந்தேகம் இருந்து கொண்டிருந்தது உண்மை. குரல் வித்தியாசம், த்வனி போன்றவற்றை ஒதுக்கிவிட்டு பேசப்பட்ட விஷயங்களை அலசினால், அவையும் வியப்புக்குரியவையே. உதாரணத்துக்குச் சொல்லவேண்டுமானால், பட்டினத்தடிகளின் ‘கூட்டு அமர்வு’ கேசட்டைக் கேட்டிருக்கிறேன். அவருடைய பேச்சே பாட்டாக அழகிய தமிழில் சந்தத்துடன் துள்ளி வரும். பட்டினத்தாரின் குரல் சற்று சன்னமாக இருக்கும். பாரதி பேசினால், அந்தக் குரலின் கம்பீரத்தில், அழகிய தமிழில், நடையழகில் மயங்கிப் போவோம். பரத்வாஜர் வந்தால் ஆங்கிலத்தில் பேசுவார். உயர்ந்த வேதாந்தவிஷயங்களும், இராமாயணகாலத்துப் போர் விபரங்களும் நம்மை ஆச்சர்யத்தில் மௌனியாக்கிவிடும். இடையில் புனித அன்னை வருவார்கள். எத்தனை இனிய குரல்! கேட்டுக் கொண்டே இருக்கலாம் போலிருக்கும் இதமான பேச்சு. பூண்டி சித்தர் வந்தால்- வேடிக்கையான பேச்சு. பேச்சுதான் பாமரத்தனம். ஆனால், விஷயம் வேதாந்தத்தின் உச்சம். பாமரனின் பாஷையில் பேசுவார். ஆனால் அவர் பேச்சு ஒவ்வொன்றும் பசுமரத்தாணி போல் மனதில் பதியும் வண்ணம் பேசுவார். இப்படிப் பேசிக்கொண்டே போகலாம். இவையெல்லாம்

கேட்டபின் இவை யாவும் புனையப்பட்டவை என்று என்னால் ஒதுக்க முடியவில்லை. ஆனால் உடனே ஏற்றுக்கொள்ளவும் முடியவில்லை. இவை உண்மையாக இருக்க வேண்டும் என்ற விருப்பம். பொய்யாகிப் போய்விடக்கூடாதே என்ற ஆதங்கம் தான் மிஞ்சியது. என் தர்க்கரீதியான மனம் வாதம் புரிந்து கொண்டிருந்தது. முற்றிலும் மாறுபட்ட பல விஷயங்களைப் பற்றி மிகத் துல்லியமாக, ஆதார பூர்வமாக, அறிவு பூர்வமாக, ஒரே நபரால் விரிவாக விவாதித்து விளக்க முடியுமா என்ற கேள்விக்கு 'முடியும்' என்ற பதில் உறுதியாக வரவில்லை. தயக்கத்துடன் தான் வந்தது. ஒரு பகுதி மனம், இத்தகைய நிகழ்வுகளை பரிச்சயமில்லா காரணத்தால் நம்பத் தயங்குகிறது. மறுபாதி மனம், இதைத் தவறு என்று ஒதுக்கித்தள்ள முடியாது - இதில் ஏதோ இருக்கிறது, எனக்குத் தெரியவில்லை என்ற காரணத்தாலோ, முன் அனுபவம் இல்லை என்ற காரணத்தாலோ, முற்றிலும் இந்த அனுபவங்கள் பொய் என்று ஒதுக்கித் தள்ளக்கூடாது என வாதிடுகிறது. இப்படிப்பட்ட வாதப் பிரதிவாதங்களில் சிக்கி மனம் தவித்துக்கொண்டிருந்த நேரம் அது. வெளியில் சொல்லவும் முடியவில்லை. யாரிடமும் விவாதிக்கும் துணிவும் இல்லை. டாக்டரிடம் கேட்கும் தைரியமும் இல்லை. இது 'கூட்டு அமர்வு' பற்றி ஆரம்பநாட்களில் நான் கொண்டிருந்த மனநிலை.

அன்று மீடியமாக இருந்தவர் இப்போது நம்மிடமிருந்து விலகியிருக்கிறார். இப்படிப் பட்ட அனுபவங்களைப் பெற்ற பின்பும் எப்படி ஒருவர் நம்பிக்கையிழந்து விலகமுடியும் என்ற கேள்வி இயல்பாக எழும். இப்போதெல்லாம், யாருக்காவது நடந்ததை எப்படி நடந்தது என்று நான் கேட்பதே இல்லை. காரணம், நம் குருநாதர் இத்தகைய கேள்விகளை கேட்டால்,விளக்கம் வாய்மொழியாகச் சொல்வதைத் தவிர்த்து, நம்மையும் அத்தகைய சூழலில் தள்ளி, அதே அனுபவத்தை நமக்கும் தந்து நடைமுறை செயல்விளக்கம் தந்துவிடுவார் என்பதை உணர்ந்த பின்பு அடுத்தவருக்கு நிகழ்ந்ததை, எப்படி எனக் கேட்பதே இல்லை. உதாரணத்துக்கு என் மக்களுக்கு நடந்த விபத்தை நினைவுகூர்ந்தாலே போதும்.

த்யான நேரமும், அதன் ஆழமும் அதிகரிக்க, அதிகரிக்க, என் சந்தேகங்கள் பழுத்த இலை போல் சருகாக உதிரத் தொடங்கின. மெல்ல நிகழ்ந்தாலும் ஒருநாள் அது முழுமை அடைந்துவிட்டது. கேள்வி கேட்காமல் டாக்டர் பார்வை சுட்டிய பாதையில் நடக்கும் மனநிலை வாய்க்கப் பெற்றேன். முதலில் நம்ப மறுத்ததற்கு எது காரணம்? பின்பு நம்பத் தலைப்பட்டதற்கு எது காரணம்? மனம்தான்! எத்தனை மாற்றங்களுக்கு உட்படுகிறது, எப்படியெல்லாம் அலைக்கழிக்கிறது! ஆத்மதரிசனம் புத்தகத்தில் ஓர் இடத்தில் சொல்வார்கள்: “முதலில் குரு சொல்வதை கேள்வி கேட்காமல் பின்பற்று. உன் கேள்விகளுக்கு பின்னால் நேரமிருக்கிறது” என்று. அப்படி ஆரம்பத்திலேயே செய்பவர்கள் பாக்கியசாலிகள். என்னைப் போலல்லாமல் பாக்கியசாலியாயிருங்கள் என்பது என் வேண்டுகோள்.

அமர்வு’ என்று குறிப்பிடுகிறோம். கூடுவிட்டுக் கூடு பாய்வதில் அந்த உடலில் ஒரு ஆன்மாதான் இருக்கும். ‘கூட்டு அமர்வு’ சமயத்தில் அந்த உடலில் இரண்டு ஆன்மாக்களும் இருக்கும். ஒன்று முன்னிலைப்படுத்தப்பட்டு, மற்றது ஒடுங்கிய நிலைக்குத் தள்ளப்படுவதே வித்தியாசம் என்று உணர்கிறேன். எந்த சித்தர் இறங்கி உரையாடுகிறாரோ அவர் முன்னிலைப்படுகிறார். அந்த உடலுக்குச் சொந்தமான ஆன்மா சில நேரம் இந்தச் செயல்பாடுகளை உணர முடிகிறது. சில நேரங்களில் உணர முடியாது. இது குருவின் விருப்பத்தால் நிகழ்கிறது. இந்தச் செய்தியை அப்போது ஊடகமாக செயல்பட்டுக் கொண்டிருந்தவரிடமிருந்து அறிந்தேன். இது என் முதல் நிலை அனுபவமில்லை. இப்போது மீண்டும் ‘கூட்டு அமர்வைத்’ தொடர்வோம்.

அளவிட முடியாத சக்தி வாய்ந்த சித்தர்களும், ரிஷிகளும், முனிவர்களும் இறங்கிப் பேசக்கூடிய தகுதி படைத்தவரைத் தெரிவு செய்து, அந்த நபருக்கு அதற்கான சக்தியைக் கொடுத்து, அந்த நடைமுறைக்கு அவரை மெல்ல மெல்லப் பழக்கி, இயல்பாக அதைத் தாங்கும் நிலைக்கு அவர் வந்ததும், அவர் மூலமாக டாக்டரின் கருணையால், நாம் பல மஹான்களுடன் பேச ஏற்பாடு செய்து தந்தார்கள். இந்த ஏற்பாட்டை ‘கூட்டு அமர்வு’ என்று நாம் குறிப்பிடுகிறோம். ஊடகம் எப்போதும்

டாக்டரின் முழுக் கட்டுப்பாட்டில்தான் இருக்கும். ஆண் பெண் என்ற வித்தியாசம் இந்த மீடியத்துக்குக் கிடையாது.

முதல் குரூப்பிலிருந்த அந்த மீடியத்தின் மூலம் இறங்கிப்பேசுபவர் யாரோ அவருடைய குரல்தான் மீடியத்தின் மூலம் வெளிவரும். அந்தக் 'கூட்டு அமர்வு'களை ஒலி நாடாவில் பதிவு செய்து வைத்திருக்கிறார்கள். அவற்றில் சிலவற்றை கேட்கும் பேறு எனக்குக் கிடைத்தது. நான் கவனித்த வரையில் ஆண்கள் இறங்கிப் பேசினால் ஆண் குரலும், பெண் இறங்கி பேசினால் பெண் குரலும், அது மட்டுமின்றி, பேசும் நபருடைய தனித்தன்மையும், பேச்சு வழக்கும் அவருடைய இயல்பான பேச்சு நடையும் நபருக்கு நபர் மாறுகிறது. இருப்பது ஒரே ஊடகம். ஆனால் அதன் கண்டத்திலிருந்து வெளிப்படும் குரலோ பல தரப்பட்டது. மெல்லிய குரல், திடமான, கம்பீரமான குரல், மென்மையான பெண்மைக் குரல் எனப் பலவிதமாக அந்த கண்டத்திலிருந்து வெளிப்படுவதை முதலில் கவனித்த போது வியப்பக இருந்தது. கூடவே சந்தேகமும் தோன்றியது. ஆனால் ஒரு பல் குரல் கலைஞனுக்கு இது ஒன்றும் சிரமமான காரியமில்லை. பல குரலில் பேசும் கலைஞர்கள் பலர் நம்மிடையே இன்றும் உள்ளனர். ஆனால், உண்மையில் வியக்கத்தக்க விஷயம் அவர்கள் பேசிய விஷயங்கள்தாம். அவை பல்வேறு துறையைச் சார்ந்தவை. முற்றிலும் வேறுபட்ட விஷயங்களைப் பற்றி மிக நுணுக்கமான செய்திகளையும் விவரங்களையும் சொன்னார்கள். விரிவாகப் பேசினார்கள்.

இன்று ஆனந்ஜோதியின் வெளியீடுகளான, ஆத்மதரிசனம், ஹோலிவாய்ஸ், அன்னையின் அருள்வழி, ஹோலிபேசேஜ், ஹோலிஜெம்ஸ் போன்ற புத்தகங்கள் சொல்லும் அத்தனை விஷயங்களும் ஊடகம் மூலமாக ரிஷிகளாலும், சித்தர்களாலும், ஞானிகளாலும், புனித அன்னையாலும் மற்றும் பல புனிதர்களாலும் சொல்லப்பட்ட செய்திகள் தான். கேட்டலிஸ்ட் (Catalyst), ஸ்பிரிச்சுவல் எக்ஸ்பீரியன்ஸஸ் வித் மை மாஸ்டர் (Spiritual experiences with my Master) த ஜர்னி,(The Journey) போன்ற ஒரு சில புத்தகங்களே டாக்டரின் சீடர்கள் அவர்களுடைய அனுபவத்தை, அவர்களுடைய

பார்வைக் கோணத்திலிருந்து எழுதியவை.

டாக்டரிடம் பூரணமாக சரணாகதியடைவதற்குமுன் நான் இந்த ‘கூட்டு அமர்வு’ கேசட்டுகளை கேட்டிருக்கிறேன். அப்போதெல்லாம், என் மனதின் ஒரு ஓரத்தில் சிறு சந்தேகம் இருந்து கொண்டிருந்தது உண்மை. குரல் வித்தியாசம், த்வனி போன்றவற்றை ஒதுக்கிவிட்டு பேசப்பட்ட விஷயங்களை அலசினால், அவையும் வியப்புக்குரியவையே. உதாரணத்துக்குச் சொல்லவேண்டுமானால், பட்டினத்தடிகளின் ‘கூட்டு அமர்வு’ கேசட்டைக் கேட்டிருக்கிறேன். அவருடைய பேச்சே பாட்டாக அழகிய தமிழில் சந்தத்துடன் துள்ளி வரும். பட்டினத்தாரின் குரல் சற்று சன்னமாக இருக்கும். பாரதி பேசினால், அந்தக் குரலின் கம்பீரத்தில், அழகிய தமிழில், நடையழகில் மயங்கிப் போவோம். பரத்வாஜர் வந்தால் ஆங்கிலத்தில் பேசுவார். உயர்ந்த வேதாந்தவிஷயங்களும், இராமாயணகாலத்துப் போர் விபரங்களும் நம்மை ஆச்சர்யத்தில் மௌனியாக்கிவிடும். இடையில் புனித அன்னை வருவார்கள். எத்தனை இனிய குரல்! கேட்டுக் கொண்டே இருக்கலாம் போலிருக்கும் இதமான பேச்சு. பூண்டி சித்தர் வந்தால்- வேடிக்கையான பேச்சு. பேச்சுதான் பாமரத்தனம். ஆனால், விஷயம் வேதாந்தத்தின் உச்சம். பாமரனின் பாஷையில் பேசுவார். ஆனால் அவர் பேச்சு ஒவ்வொன்றும் பசுமரத்தாணி போல் மனதில் பதியும் வண்ணம் பேசுவார். இப்படிப் பேசிக்கொண்டே போகலாம். இவையெல்லாம் கேட்டபின் இவை யாவும் புனையப்பட்டவை என்று என்னால் ஒதுக்க முடியவில்லை. ஆனால் உடனே ஏற்றுக்கொள்ளவும் முடியவில்லை. இவை உண்மையாக இருக்க வேண்டும் என்ற விருப்பம். பொய்யாகிப் போய்விடக்கூடாதே என்ற ஆதங்கம் தான் மிஞ்சியது. என் தர்க்கரீதியான மனம் வாதம் புரிந்து கொண்டிருந்தது. முற்றிலும் மாறுபட்ட பல விஷயங்களைப் பற்றி மிகத் துல்லியமாக, ஆதார பூர்வமாக, அறிவு பூர்வமாக, ஒரே நபரால் விரிவாக விவாதித்து விளக்க முடியுமா என்ற கேள்விக்கு ‘முடியும்’ என்ற பதில் உறுதியாக வரவில்லை. தயக்கத்துடன் தான் வந்தது. ஒரு பகுதி மனம், இத்தகைய நிகழ்வுகளை பரிச்சயமில்லா காரணத்தால் நம்பத் தயங்குகிறது.

மறுபாதி மனம், இதைத் தவறு என்று ஒதுக்கித்தள்ள முடியாது - இதில் ஏதோ இருக்கிறது, எனக்குத் தெரியவில்லை என்ற காரணத்தாலோ, முன் அனுபவம் இல்லை என்ற காரணத்தாலோ, முற்றிலும் இந்த அனுபவங்கள் பொய் என்று ஒதுக்கித் தள்ளக்கூடாது என வாதிடுகிறது. இப்படிப்பட்ட வாதப் பிரதிவாதங்களில் சிக்கி மனம் தவித்துக்கொண்டிருந்த நேரம் அது. வெளியில் சொல்லவும் முடியவில்லை. யாரிடமும் விவாதிக்கும் துணிவும் இல்லை. டாக்டரிடம் கேட்கும் தைரியமும் இல்லை. இது 'கூட்டு அமர்வு' பற்றி ஆரம்பநாட்களில் நான் கொண்டிருந்த மனநிலை.

அன்று மீடியமாக இருந்தவர் இப்போது நம்மிடமிருந்து விலகியிருக்கிறார். இப்படிப் பட்ட அனுபவங்களைப் பெற்ற பின்பும் எப்படி ஒருவர் நம்பிக்கையிழந்து விலகமுடியும் என்ற கேள்வி இயல்பாக எழும். இப்போதெல்லாம், யாருக்காவது நடந்ததை எப்படி நடந்தது என்று நான் கேட்பதே இல்லை. காரணம், நம் குருநாதர் இத்தகைய கேள்விகளை கேட்டால்,விளக்கம் வாய்மொழியாகச் சொல்வதைத் தவிர்த்து, நம்மையும் அத்தகைய சூழலில் தள்ளி, அதே அனுபவத்தை நமக்கும் தந்து நடைமுறை செயல்விளக்கம் தந்துவிடுவார் என்பதை உணர்ந்த பின்பு அடுத்தவருக்கு நிகழ்ந்ததை, எப்படி எனக் கேட்பதே இல்லை. உதாரணத்துக்கு என் மக்களுக்கு நடந்த விபத்தை நினைவுகூர்ந்தாலே போதும்.

த்யான நேரமும், அதன் ஆழமும் அதிகரிக்க, அதிகரிக்க, என் சந்தேகங்கள் பழுத்த இலை போல் சருகாக உதிரத் தொடங்கின. மெல்ல நிகழ்ந்தாலும் ஒருநாள் அது முழுமை அடைந்துவிட்டது. கேள்வி கேட்காமல் டாக்டர் பார்வை சுட்டிய பாதையில் நடக்கும் மனநிலை வாய்க்கப் பெற்றேன். முதலில் நம்ப மறுத்ததற்கு எது காரணம்? பின்பு நம்பத் தலைப்பட்டதற்கு எது காரணம்? மனம்தான்! எத்தனை மாற்றங்களுக்கு உட்படுகிறது, எப்படியெல்லாம் அலைக்கழிக்கிறது! ஆத்மதரிசனம் புத்தகத்தில் ஓர் இடத்தில் சொல்வார்கள்: "முதலில் குரு சொல்வதை கேள்வி கேட்காமல் பின்பற்று. உன் கேள்விகளுக்கு பின்னால் நேரமிருக்கிறது" என்று.

அப்படி ஆரம்பத்திலேயேசெய்பவர்கள் பாக்கியசாலிகள். என்னைப் போலல்லாமல் பாக்கியசாலியாயிருங்கள் என்பது என் வேண்டுகோள்.

**ஹரி வீட்டில் முதல் 'கூட்டு அமர்வு'**

மீண்டும் 'கூட்டு அமர்வை' விட்ட இடத்தில் தொடருவோம். ஒருசமயம் டில்லியிலிருந்து ஹரி வந்திருந்தார். அவருடன் டாக்டரின் சிஷ்யை ஒருவரும் வந்திருந்தார். இருவரும் ஒரே அலுவலகத்தில் வேலை செய்பவர்கள். அப்போதுதான் கேள்விப் பட்டேன் அந்த பெண்மணி டாக்டரால் மீடியமாக உருவாக்கப்பட்டு அதற்குத் தேவையான சக்தியும் பெற்றிருக்கிறார் என்று. சக்தி வழங்கப்பட்டிருந்தாலும், இந்த நடைமுறைக்குப் பழகி, சக்திவாய்ந்த மஹான்கள் இறங்கும்போது, அவர்களுடைய சக்தியைத் தாங்க அவருடைய உடல் பழகவேண்டும். இது மெல்ல மெல்ல நடக்கும். இந்த ஊடகம் அப்போது ஹரியின் உதவியுடன் கூட்டு அமர்வுக்குத் தன்னை பழக்கிக் கொண்டிருந்தார்கள் என்று அறிந்தேன். உடலில் இறங்கும் மஹான்களின் சக்தியை எவ்வளவு நேரம் உடல் தாங்க முடிகிறது என்பதற்கு பயிற்சி நடந்து கொண்டிருந்தது என்பதைப் பின்னாளில் தெரிந்து கொண்டேன். ஓரளவு தகுதியை அந்த ஊடகம் பெற்றபோது, ஒரு நாள் ஹரி வீட்டில் முதல் முறையாக கூட்டு அமர்வு நடந்தது. முதல் முறையாக நான் கலந்து கொண்டு, அங்கு நடப்பவற்றை கவனிக்கவும், பார்க்கவும், உணரவும் கிடைத்த முதல் வாய்ப்பாகவும் அது அமைந்தது. அதை வழங்கிய டாக்டருக்கு நன்றி சொல்ல வேண்டும்.

**"குழலூதும் கண்ணன்" பாடல்**

ஒருநாள் கிளினிக்கில் டாக்டரும் நண்பர் சந்திரசேகரும் இருந்தார்கள். அப்போது டாக்டர் ஒரு பாட்டு சொல்ல, அதை சந்திரசேகர் எழுதிக்கொண்டிருந்தார். அந்தப் பாடலை ராகத்துடன் மெல்லிய குரலில்

இனிமையாக பாடிக்கொண்டிருந்தார் டாக்டர். அந்த பாடல் "குழலூதும் கண்ணனுக்கு என்ன சொந்தமோ நான் என்ன பந்தமோ" என்று தொடங்கும். கடைசியாக ஒரு வரி சரியாக வரவில்லை யென்று யோசித்துக் கொண்டிருந்தவர், பின்பு அதையும் சொல்லிப் பாடலை முடித்தார்.

'குழலூதும் கண்ணனுக்கு என்ன சொந்தமோ, என்ன பந்தமோ என்று பாடுகிறாரே! இவர் யாராக இருப்பார்? இவர்தான் கண்ணனோ! அப்படியும் இருக்குமா? அப்படி யிருந்துவிட்டால், நான் எவ்வளவு பாக்கியவானாக இருக்கவேண்டும்! கேட்டு விடலாமா? கேட்டால் பதில் சொல்வாரா?', இப்படி மனதில் எண்ணங்கள் அலைபாய அவரையே பார்த்துக்கொண்டிருந்தேன். கண்ணன் பெயரைக் கேட்டதுமே மனம் உருக ஆரம்பித்தது. கண்கள் பனிக்கத் துவங்கின. கண்களில் கண்ணீர் ததும்ப அவரையே பார்த்துக்கொண்டிருந்தேன். அவரும் என்னைப் பார்த்துக் கொண்டிருந்தார். அந்தப் பார்வையில் எதை உணர்த்துகிறார் என்று எனக்குப் புரியவில்லை. "நீங்கள் என் இதய தெய்வம் ஸ்ரீகிருஷ்ணர் தானா?" என்று மனத்துக்குள் கேட்டுக் கொண்டிருந்தேன். டாக்டரின் பாஷையில் சொல்ல வேண்டுமானால், "கிந்த உன்ன க்ருஷ்ணடு பயின உன்னாடு. பயின உன்ன க்ருஷ்ணடு கிந்த உன்னாடு" என்று சொல்லவேண்டும். ஆனால் அவர் ஏதும் சொல்லவில்லை.

சிறு வயதில் மாங்காய் திருடியதற்குக் காவலாளி இவரைத் தோட்டத்தில் கட்டிப்போட்டுவிட்டு அவர் தந்தையிடம் புகார் சொல்லவந்த போது, அறியாப் பிள்ளையாக வீட்டின் உள்ளிருந்து வெளியே வந்த மாயக் கண்ணன்தானே இவர்! அந்த நிகழ்ச்சிக்குப் பிறகு அந்தத் தோட்டக்காரர், சிறுவயது நித்தியை, மாயக்கண்ணன் என்றுதான் கூப்பிடுவாராம். தினமும் மாங்காயை வீட்டுக்கே கொண்டுவந்து கொடுத்துவிட்டுச் செல்வாராம். இதை அம்மா கேட்டலிஸ்டில் எழுதியிருக்கிறார்கள். டாக்டர் வேறு, கண்ணன் வேறு அல்ல. அதைத்தான் அன்று அந்த குழலூதும் கண்ணன் பாட்டில் சொன்னார். அன்று சரியாகப் புரியவில்லை.

பின்னாளில் உணர்த்தப்பட்ட போது இந்தச் சம்பவம் நினைவுக்கு வந்தது.

இப்போது ஒரு முக்கியமான செய்தியை இங்கே பதிவு செய்வது, டாக்டர் யார் என்று நான் புரிந்து கொண்டிருப்பதை சரியான கோணத்தில் வெளிப்படுத்தும் என்று நம்புகிறேன். என்னைப் பொருத்தவரை, நான் பிறந்தது, வளர்ந்தது, அனைத்தும் வைணவச் சூழலில் என்பதால், கிருஷ்ண பக்தி என்னுள் ஊறிப் போன விஷயம். நான் என் வழிகாட்டியாக, குருவாக, தெய்வமாக எதிர்பார்த்தது கிருஷ்ணரைத்தான். ஆகவே என்னளவில் டாக்டர் வேறு கிருஷ்ணர் வேறு அல்ல. ஆனால் உண்மை என்னவென்றால், ராமன், கிருஷ்ணன், புத்தன், ஏசு என்று மண்ணில் இறங்கி லீலைகள் புரிந்த அத்தனை அவதார புருஷர்களின் மூலமும் ஒன்று தான். எது அன்று கிருஷ்ணராக வந்ததோ அது தான் ஏசுவாகவும் வந்தது. கிருஷ்ணருடன் இருந்த பரிவாரங்களின் மூலமும், பிறகு ஏசுவுடன் இருந்த பரிவாரங்களின் மூலமும்கூட ஒன்றுதான். அன்று ஏசுபிரானுடன் வந்தவர்களில் ஓரிருவரை இப்போது இங்கிருப்பவர்களில் என்னால் அடையாளம் காணமுடிகிறது. ஆனால் வேஷங்கள்தான் வெவ்வேறு. எனவே எந்த அவதாரத்தின்மீதும் எந்த வண்ணத்தை பூசினாலும் மூலம் மாறப்போவதில்லை. மூலம் வேடம் பூண்டு கீழிறங்கும்போது, ஆடையும். அதன் வண்ணமும், அலங்காரங்களும், குணாதிசயங்களும் மாறலாம். ஆனால் மூலம் ஒன்றுதானே! எனவே வழிகாட்ட வந்தவரை உங்கள் பார்வையிலேயே பார்த்துப் பயணத்தைத் தொடருங்கள். டாக்டரை நீங்கள் ஏசுபிரானாக பார்க்கத்தான் விருப்பமென்றால், அவர் அப்படியே உங்களுக்குத் தோன்றுவார். இதற்கு ஒரு சமீபத்திய உதாரணத்தை உங்களுக்குச் சொல்ல முடியும். தற்சமயம் கானா, ஆப்ரிக்காவிலிருக்கும் நண்பர் சுப்ரமணியத்தின் அனுபவம் இதற்கு ஒரு விளக்கமாக அமையும். அவர் ஒரு இந்துக் குடும்பத்தில் பிறந்திருந்தாலும், அவர் மணந்தது கிருத்துவமதம் சார்ந்த பெண்மணியை. வாசியோகத்தில் தீட்சை பெற்றுப் பயிற்சி செய்துவருகிறார். டாக்டரிடம் ஈடுபாடு கொண்டுள்ள அவர் நெஞ்சில் நிறைந்திருப்பதும், வழிபடுவதும் ஏசுநாதரைத்தான். அவர் மனம் ஏசுநாதரை விரும்புகிறது. டாக்டரும் இதை அவருக்கு விளக்கும் வண்ணம், ஒரு சிறு நிகழ்ச்சியை

நடத்தினார். சமீபத்தில் ஒருநாள் சுப்ரமணியம் அலுவலகம் செல்லும் பொருட்டு, தன் வீட்டிலிருந்து காரில் சாலைக்கு வந்தார். அவர் மனதில் ஓடிக்கொண்டிருந்த எண்ணத்திற்கு ஏற்ற பதில் மற்றொரு காரில் இருந்தது. இவருடைய காரை முந்திக்கொண்டு மற்றொரு கார் முன் சென்றது. அந்த காரின் பின் பக்கக் கண்ணாடியில், 'டாக்டர்', 'ஏசுநாதர்' என்ற இரண்டு வார்த்தைகள் மட்டுமே எழுதப்பட்டிருந்தன. இதைக் கண்ணுற்ற சுப்ரமணியம் ஆனந்தம் அடைந்தார். டாக்டரும் ஜீஸசும் வெவ்வேரல்ல என்ற எண்ணம் அவர் மனதில் தோன்றியது. இப்போது டாக்டர்தான் அவருக்கு ஜீஸஸ், ஜீஸஸ்தான் அவருக்கு டாக்டர். அவர் மகிழ்ச்சியாக இருக்கிறார். அவருடைய அனுபவங்கள் நம்முடைய வலைத்தளங்களில் வெளியாகியிருக்கின்றன. எனவே, நான் டாக்டரை யாராகப் பார்க்கிறேன், மற்றொரு சீடரின் பார்வையில் டாக்டர் எப்படித் தோற்றமளிக்கிறார் என்பதெல்லாம் அவரவர் விருப்பத்திற்கேற்ப என்று எடுத்துக்கொண்டு, பயணத்தைத் தொடருங்கள். ஆரம்பப் பத்தியில் எழுதியிருப்பேன், "ஆதியும் அந்தமுமற்ற பரம்பொருள்" என்று. அதுதான் முழுமையான உண்மை. அதனுடைய பல நிலையிலான வெளிப்பாடுகள்தாம் எல்லா தெய்வங்களும். 'Call it by any name, rose smells the same' என்று ஓர் ஆங்கிலச் சொற்றொடர் உண்டு. 'ரோஜாவை எந்தப் பெயரிட்டு அழைத்தாலும் அதன் மணம் மாறாது' என்பது அதன் பொருள். எனவே, இதில் அதிக கவனத்தைச் செலுத்தாமல், சொல்லிக்கொடுத்த வித்தையைச் செய்துகொண்டு வந்தால், எது எப்போது புரியவேண்டுமோ அப்போது புரியும். ஆன்மிகத்தில் அவசரம் உதவாது.

இந்த நிகழ்ச்சிக்கு அடுத்து டெல்லிப்பயணத்தைப் பற்றி எழுதலாம் என்று நினைக்கிறேன். டாக்டர் தற்காலிகமாக எங்களைப் பிரிந்து சென்றபிறகு, நாங்கள் சிலர், (பதினொரு பேர் என்று நினைவு) டில்லி சென்று, அங்கிருந்து ஹரிதுவார், ரிஷிகேஷ், மதுரா, தாஜ்மெகல், பிருந்தாவன் போன்ற இடங்களைச் சுற்றிப் பார்த்துவிட்டு வந்தோம். இந்தப் பயணத்தின் துவக்கத்தில்தான் நான் பட்டினத்தடிகளை சென்ட்ரல் ஸ்டேஷன் செல்லும் வழியில் மூர் மார்கெட்டருகில் பார்த்தது. இந்தப் பயணத்தின்போது, டில்லியில் ஜமுனா வீட்டில் தங்கியிருந்த போது

ஒரு செஷன் நடந்தது. அதில் புனித அன்னை இறங்கிப் பேசினார்கள். அந்த நேரத்தில் டாக்டர் நம்மிடையே இல்லை. விபத்து என்ற நாடகத்தின் மூலம் நம்மிடமிருந்து விலகியிருந்த நேரத்தில் இந்த அமர்வு டில்லியில் நடந்தது. அந்த அமர்வில்தான் புனித அன்னை ஒரு விஷயத்தை வெளிப்படையாக சொன்னார்கள். என்னுள் இருந்த சந்தேகத்துக்கு விடை கிடைத்தது அன்றுதான். மதர் பேசிக்கொண்டிருக்கும் போது, இடையில், "நித்தியை யாரென்று நினைத்தீர்கள்? நித்தி இறைவன் (Nithi is God!)" என்று சொன்னார்கள். அனைவரும் ஒரு நிமிடம் பேச்சிழந்து மௌனமாகிவிட்டோம். அன்னை டாக்டரை நித்தி என்று அழைப்பது வழக்கம். நித்தி கடவுள் என்று அன்னை சொன்னபோது, 'அப்படியா!' என்று ஆச்சரியம்! சந்தோஷம்! ஆஹா! இறைவனே நமது குருவா! என்று பூரிப்பு. அந்த உணர்ச்சிகளை விவரிக்க வார்த்தைகள் போதா. மனதில் ஒரு நிறைவு. குதூகலம். அவரைப் பிரிந்திருக்கும் இந்த நேரத்தில் சொல்கிறார்களே. அவர் உடன் இருக்கும்போது தெரியாமல் போய்விட்டதே என்ற ஆதங்கம், தவிப்பு. அவரை மீண்டும் எப்போது பார்ப்போமோ என்ற ஏக்கம். உடன் இருந்த போது தன்னை வெளிப்படுத்திக் கொள்ளாமல் இருந்து விட்டாரே என்ற வருத்தம். உணர்ச்சிகள் மாறி மாறி என்னைத் தாக்கின. மதர் 'நித்தி கடவுள்' என்றுதான் சொன்னார்கள். ஆனால் எந்த கடவுளின் அவதாரம் என்று சொல்லவில்லை. கேட்கவும் தோன்றவில்லை. நாம் என்ன கேட்கவேண்டும் என்பதைக்கூட அவர்கள்தான் தீர்மானிக்கிறார்கள் போலும்! நான் மேலே குறிப்பிட்டதுபோல், ஒவ்வொருமுறை கீழிறங்கும் போதும், வேடமும் பெயரும் மாறுகிறது. அதனால், எந்த பெயரானால் என்ன? கோடானுகோடி மனிதர்களும் ஜீவராசிகளும் வாழும் இந்த உலகத்தில் நான் எங்கோ ஒரு மூலையில் கிடக்கும் ஒரு சிறு துரும்பு போல. கடற்கரை மணலில் ஒரு துகள் போல. அப்படிப்பட்ட அற்பமான மனிதனிடம் (insignificant person) கருணை காட்டி இறைவனே குருவாக வந்திருக்கிறார் என்றால் நான் எவ்வளவு புண்ணியம் செய்திருக்க வேண்டும்! யோசித்துப் பார்த்தால், இந்த ஜென்மத்தில் நான் அப்படி சொல்லிக் கொள்ளுமளவு ஏதும் புண்ணியம் செய்ததாகவோ அல்லது சாதனைகள்

செய்ததாகவோ நினைவில்லை. ஏதோ பிறந்தேன், வளர்ந்தேன், இருக்கிறேன் என்பதுதான் என் நிலை. என்னுடைய காலத்தில் வாழும் சக மனிதர்களைப் பர்க்கிறேன். அவர்களில் எத்தனையோ சாதனையாளர்கள் இருக்கிறார்கள். அவர்கள் செய்ததுபோல் இல்லாவிட்டாலும், மெச்சிக் கொள்ளுமளவு ஏதாவது சிறு காரியமாவது ஆற்றியிருக்கிறேனா என்றால் என் பதில் இல்லை என்பதாகத்தான் இருக்கும்! கொஞ்சகாலம் விஷ்ணு ஸகஸ்ரநாமம் சொல்லிக்கொண்டிருந்தேன். பகவத்கீதை த்யான ஸ்லோகத்தைப் பாராயணமாகச் சொல்ல முடியவில்லை என்றாலும், ஒலி நாடாவை போட்டு தினமும் ஆர்வத்தோடும் ஈடுபாட்டுடன் கேட்டு வந்திருக்கிறேன். அடிக்கடி திருப்பதி சென்று கோவிந்தராஜப் பெருமாளை தரிசித்து வந்திருந்தேன். இரண்டு அல்லது மூன்று வருடம் சென்னையிலிருந்து நடந்தே திருப்பதி சென்று அவரை தரிசித்து வந்தேன். திருப்பதி போய் என்ன கேட்பேன்? நான் அந்த சன்னிதானத்தில் நுழையும்போதே பெரிய நாமமும், பளிச்சென்ற சிரிப்புமாக ஆஜானுபாகுவாக நிற்கும் அவரைப்பார்த்ததும் மனதில் எழும் பாவம், அன்பான தந்தையைப் பார்க்கும் மகனுடைய உணர்வுதான். மனம் நெகிழ்ந்து போகும், உள்ளம் உருகும். உள்ளுக்குள் ஏதோ உடைந்து உருகி ஓடும். கண்கள் பனிக்கும். கண்ணீர் பெருகும். ஐயனே! ஐயனே! என உருகுவேன். பழைய சினிமா பாடல் ஒன்று உண்டு. “கண்ணன் வந்தான்” என்று ஆரம்பிக்கும் அந்தப் பாடலில், ‘அடையாத கதவிருக்கும் சன்னிதானம், அஞ்சாத சொல்லிருக்கும் சன்னிதானம்’ என்னும் வரிகள் அந்த நுழை வாயிலை அடையும் போதே மனதில் ஓடும். அங்கே போகும் போதெல்லாம் என் தெய்வத்தந்தையிடம் ஒரு வேண்டுகோளை ஆத்மார்த்தமாக வைப்பேன். அது, ”ஐயா, அடுத்த முறை உன்னைப் பார்க்க வரும்போது, உன்னிடம் எனக்குள்ள அன்பும், பக்தியும் இப்போதிருப்பதைவிடப் பன்மடங்காகப் பெருகவேண்டும். எத்தனைப் பிறவிகள் எடுத்தாலும் உன்னை மறவாத மனம் வேண்டும்” என்பதுதான். என்னை இப்பிறவியில் ஆட்கொண்டதற்கான காரணத்தை என் மனித மூளை கொண்டு அறியமுடியாது. எனினும், மனதில் தோன்றுவதைச் சொல்கிறேன். எல்லையிலாக் கருணையுள்ள

அண்ணல், தன் பக்தனுக்கு உதவவேண்டும் என்று நினைத்துவிட்டால் துரும்பளவு காரணம் போதாதா? குசேலரை நினைத்துப் பாருங்கள். ஒரு பிடி அவலுக்கு என்ன கொடுத்தான் என்று. என் வேண்டுதலை ஒரு காரணமாகக் கொண்டு, அவன் பெருங்கருணையால் என்னை ஆட்கொண்டான் என்றுதான் என் மனம் சொல்கிறது. மற்றெந்தத் தகுதியும் எனக்கிருப்பதாகத் தோன்றவில்லை. சராசரி மனிதனாக ஒரு வாழ்க்கை நடத்திய எனக்கு இப்படி ஒரு பெரும் பேறா? இதை நம்ப முடியவில்லையே, இதில் இருக்கும் நியாயம் புரியவில்லையே என யோசித்ததுண்டு. என்னுடைய தகுதிக்கு மேற்கொண்டு எனக்கிதைத் தந்திருக்கிறான் இறைவன் என்று மட்டும் தோன்றுகிறது. இந்தக் கருணையை நினைத்து நினைத்து மனம் நெகிழ்ந்து, உருகிப்போகிறேன்.

**கோவிந்தராஜருடன் தனிமையில் 15 நிமிடங்கள்!**

இறைவனின் பெருங்கருணையைப் பற்றிப் பேசும்போது, ஒன்றுக்கொன்று தொடர்புடைய மற்றுமொரு நிகழ்ச்சி நினைவு வருகிறது. அதைச் சொல்கிறேன். திருப்பதி கோவிலில், கூட்டம் காரணமாக, வரும் பக்தர்களை தெலுங்கு மொழியில் “ஜரகண்டி, ஜரகண்டி” என்று சொல்லித் தள்ளிவிடுவார்கள். அவர்கள் நோக்கம் நியாயமானதே. வரிசையில் காத்திருப்பவர்கள் அனைவரும் துரிதமாக தரிசனம் முடித்துத் திரும்பவேண்டும் என்ற நல்ல நோக்கம்தான். ஆனால் எனக்கோ, சிறிது நேரம் என் தந்தையை நின்று நிதானமாகப் பார்த்து அனுபவிக்க வேண்டுமென்ற அவா! இந்திய ஜனாதிபதியானாலும் அவரைச் சுற்றிலும் ஒரு கூட்டம்! தனித்து தரிசனம் என்பது கனவில்தான் நடக்கும் என்று எண்ணுவேன். ஒருநாள் வரிசையில் நகர்ந்து கொண்டிருக்கிறேன். இன்னும் பத்தடி சென்றால் அவர் எதிரே நிற்பேன். அந்த நேரத்தில், திபு திபுவென மூன்று நான்கு தேவஸ்தானக் காவலாளிகள் சில மூட்டைகளைத் தூக்கிக் கொண்டு என்னைத் தாண்டிப் போனார்கள். எனக்கு சற்று

முன்னே வலதுபுறமுள்ள ஒரு சிறிய அறையின் கதவைத் திறந்து அதனுள் ஒன்றோ அல்லது இரண்டோ மூட்டைகளை வைக்க நின்றார்கள். அந்த வரிசையில் நின்றதில் கடைசி ஆள் நான் தான் என்பதை பிறகு தான் உணர்ந்தேன். எனக்குப் பின்னால் யாரும் இல்லை. நான் அவர்களைத் தாண்டி சென்றதும், அந்த அறையின் கதவைத் திறக்க ஆரம்பித்தார்கள். பெருமாளுக்கு முன்னே வந்ததும் ஒரு சில நிமிடங்கள் நின்றேன். கண்களால் அவர் மொத்த உருவத்தையும் பருக முயன்றேன். சுதாரித்துத் திரும்பிப் பார்த்தால், எனக்கு முன்னே இருந்தவர்களும் சென்றுவிட்டார்கள். அர்ச்சகர்கள் பெருமாளின் கருவறை வாயிலில் அமர்ந்துவிட்டார்கள். நான் அவர்களைப் பார்த்தேன். வழக்கமாக “ஜரகண்டி” என்று சொல்பவர்கள், “நின்னு தரிசனம் செஞ்சிக்கோ“ என்பது போல் கையால் சைகை செய்தார்கள். அங்கே நானும் என் தந்தையும் மட்டும்தான்! உலக அதிசயம். என் தந்தையை கண்களால் பருகினேன். ஆனந்தக் கண்ணீரில் நனைந்தேன். அவரை அணு அணுவாக ரசித்தேன். அவர் அலங்காரங்களைப் பார்த்து மகிழ்ந்தேன். நன்றி! நன்றி! என்று மனம் உருகியது. இந்த பாக்கியம் எத்தனை மனிதர்களுக்குக் கிடைத்திருக்கும், அர்ச்சகர்களைத் தவிர?! மனம் ஆனந்தக் கூத்தாடியது. எவ்வளவு நேரமாயிற்றென்று தெரியாது. ஆன்மாவைத்தவிர மற்ற எல்லாவற்றிற்கும் ஆரம்பமும் முடிவும் உண்டல்லவா. இந்த அனுபவமும் முடிவுக்கு வந்தது. கோவில் அலுவலர்கள் வேலை முடிந்து சென்றதும், எனக்குப் பின்னால் நிறுத்தி வைக்கப் பட்டிருந்த வரிசை நகர்ந்து உள்ளே வந்தது. சுமார் பதினைந்து நிமிடங்கள் அவருடன் தனித்திருந் திருப்பேன். அர்ச்சகர் என்னை நகரும்படி சொன்னார். நான் அவருக்கு நன்றி கூறிவிட்டு மகிழ்வோடு வெளியே வந்தேன். அவரை நான் பூவுலகில் சந்திப்பதற்கு இது ஒரு முன்னோடியாக (curtain raiser) இருந்திருக்குமோ என்று இப்போது எண்ணுகிறேன். அன்று கிடைத்த பதினைந்து நிமிடச் சிறப்பு தரிசனம் நான் டாக்டரை நேரில் காண்பதற்கு முன்பு நிகழ்ந்தது.

சரி, மீண்டும் விட்ட இடத்திலிருந்து தொடர்வோம். டாக்டர், கண்ணன் பாடலைப் பாடிய பிறகு அன்று வீடு திரும்பினேன்.அதன் பிறகு ஓரிருமுறைதான் டாக்டரைப் பார்த்ததாக நினைவு. அவரைப் பிரிவதற்கு முன் கடைசியாகப் பார்த்தது ஆலந்தூர் மருத்துவமனையில் தான். சாதாரணமாக வேலை முடிந்ததும் கிளம்பும் போது ஏதும் சொல்லாமல்தான் கிளம்புவார். சில சமயம் "போகலாம்" என்று பொதுவாகச் சொல்லிவிட்டுக் கிளம்புவார். ஆனால் அன்று கிளம்பும்போது, நேராக என்னைப் பார்த்தார். "போகலாமாப்பா?" என்று கேட்டார். "சரி டாக்டர்" என்று அவர் கூடவே வெளியே வந்தேன். அன்று அவரைப் பார்த்தது தான் தற்காலிகமாகக் கடைசி. சாதாரணமாகக் கிளம்பும் போது போகலாமா என்று கேட்பது யாரும் கேட்பதுதான். ஆனால் அன்று அவர் கேட்டபோது அதில் ஏதோ வித்தியாசமிருந்தது என்று என் மனதில் தோன்றுகிறது. ஆனால் என்னவென்று குறிப்பிட்டுச் சொல்ல முடியவில்லை. நாளை சந்திப்போம் என்ற நம்பிக்கையுடன் விடை பெறுவதற்கும், சில காலம் சந்திக்க முடியாது என்ற எண்ணத்துடன் விடை பெறுவதற்கும் இடையிலான வித்தியாசமாக இருந்திருக்கலாம். எனக்குப் புரியவில்லை. புரிதலுக்கெல்லாம் அப்பாற்பட்ட அந்த பூஜ்யத்தைப் புரிந்துகொள்வது என்றும் சாத்தியமில்லை.

**டாக்டரின் கண்களில் கண்ணீர்**

கண்ணன் பாடலை எழுதியபிறகு, ஆலந்தூர் மருத்துவமனையில் அவரைச் சந்தித்ததற்கு முன்பு சிலமுறை டாக்டரை சர்க்கரைச்செட்டித்தெரு கிளினிக்கில் சந்தித்திருக்கிறேன். அதில் ஒரு சந்திப்பு மிக முக்கியமானது. தேதி கிழமை சரியாக நினைவில்லை. நான் கிளினிக்கை அடைந்தபோது, சாந்தம்மாவும் வேறு யாரோ ஒரு பெண்மணியும் இருந்தார்கள். சாந்தம்மா டாக்டரின் காலைப் பிடித்துக் கொண்டிருந்தார்கள். இது தினமும் நடக்கும். அவர் காலைப் பிடிக்கப் போட்டியே நடக்கும். நான் அந்தப் போட்டியில் கலந்து கொள்வதில்லை. சந்தர்ப்பம்

கிடைக்கும்போது அவர் பாதங்களை பற்றிக்கொள்வதில் எனக்கு விருப்பமுண்டு. அன்று யாருமில்லாமல் கிளினிக் காலியாக இருந்ததால், நானும் அமர்ந்து அவருடைய இடது காலைப் பிடித்துக் கொண்டிருந்தேன். சாந்தம்மா வலது காலைப் பிடித்துக் கொண்டிருந்தார்கள். நண்பர் சம்பந்தம் சமீபகாலத்தில் ஒரு விஷயத்தை அடிக்கடி என்னிடம் சொல்லிக் கொண்டிருந்தார். டாக்டர் மிகவும் சலிப்புற்று அவரிடம் சொல்வாராம். "யாருமே என் சொல்பேச்சு கேக்கறதில்லை. இப்படியே இருந்தா விட்டுட்டுப் போயிடுவேன்" என்று. இது நம்புவதற்கு சற்றுக் கடினமாக இருந்தாலும், அவர் ஏன் பொய் சொல்ல வேண்டும்? இந்த விஷயம் என் மனதை அரித்துக் கொண்டிருந்தது. என்ன செய்வதென்று தெரியவில்லை. வேறு யாரிடமும் பேசுவதை விட, டாக்டரிடமே கேட்டுவிட்டால் என்ன என்று நினைத்தேன். அன்று சூழ்நிலை சரியாக அமைந்ததால். தயக்கமின்றி கேட்டுவிட்டேன். "டாக்டர் சம்பந்தத்திடம் சொன்னீங்களாம் விட்டுட்டுப் போயிடுவேன் என்று. உண்மையா? நிஜமா விட்டுட்டுப் போயிடுவீங்களா?" என்று. என்னை நேராகப் பார்த்தார். வார்த்தைகளால் பதில் வரவில்லை. ஆனால், தலையை மட்டும் அசைத்து 'ஆம்' என்று பதில் சொன்னார். அந்த பதிலை நான் எதிர்பார்க்கவில்லை. என்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளமுடியாமல் அழத்துவங்கி விட்டேன். அவர் காலைப் பற்றியவாறே நான் அழுது கொண்டிருந்தேன். அவர் என் முகத்திலிருந்து கண்களை அகற்றவில்லை. அவர் கண்களும் குளமாகிக் கண்ணீர் கன்னங்களில் வழிந்தோடியது. அருகிலிருந்த சாந்தம்மா, "என்னங்க நீங்க, எதை எதையோ கேட்டு டாக்டரை அழவைக்கிறீங்க?" என்று என்னைக் கடிந்துகொண்டார். எனக்கு நினைவில்லை எவ்வளவு நேரம் அழுது கொண்டிருந்தேன் என்று. அதற்குப் பிறகு அன்றைய நிகழ்ச்சிகள் எதுவும் எனக்கு நினைவில்லை. அவர் சொன்னதைச் செய்வார் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை. ஆனால் அந்தப் பிரிவு அடுத்து சில நாட்களுக்குள்ளேயே நிகழப்போகிறது என்பதை அப்போது நான் உணரவில்லை. அடுத்து வந்த நாட்களிலெல்லாம், "ஐயோ! இவரைப் பிரிந்து எப்படி வாழ்வேன்? இப்போதுதானே

எனக்கொரு சத்குரு கிடைத்துவிட்டார் எனத்திருப்திப் பட்டேன்? இவரும் விட்டுப் போய்விட்டால் என் வாழ்க்கை எந்தப் பாதையில் போகும்?" என்று பலவாறு கேள்விகளும், ஆழ்ந்த வருத்தமும் நெஞ்சைக் கசக்கிப்பிழிய, என்ன செய்வதென்றறியாது வருத்தத்திலிருந்தேன். எனக்கு ஆறுதல் சொல்ல யாருமில்லை. அப்போது அம்மாவிடம் அத்தனைப் பழக்கமில்லை. இந்த வேதனை வெகுநாள் நீடிக்கவில்லை. இருகோடு தத்துவம்தான். இதைவிடப் பெரிய வேதனை வந்து இதைக் காணாமல் செய்துவிட்டது.

**விபத்து நாடகம்**

ஆம்! அன்றிலிருந்து சில நாட்களில் விபத்து என்ற அந்த நாடகம் அரங்கேறியது. அதைச் சுருக்கமாகச் சொல்கிறேன். அவர் வீட்டிலிருந்து கிளம்பி, தினத்தந்தி அலுவலகம் வழியாக வந்துகொண்டிருந்த போது, ஒரு கார் அவரை மோதிச் சற்றுதூரம் இழுத்துச்சென்று நின்றது. அவருக்கு சிராய்ப்புகளும், தலையில் பலத்த அடியும் ஏற்பட்டு மயங்கினார். மருத்துவமனைக்கு எடுத்துச்செல்லப்பட்டு, தீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டு, தலையில் அறுவை சிகிச்சைசெய்து பயனின்றி, நான் பதிவுசெய்ய விரும்பாத முடிவை சோகம், நம்பிக்கை, மகிழ்ச்சி, சோகம் என மாறி மாறி வந்த உணர்ச்சிகளூடே நகர்ந்த மூன்று நாட்களுக்குப் பிறகு அவர் இந்த உடலைப் பிரிந்துவிட்டார் என்று டாக்டர்கள் தெரிவித்தபோது எனக்குள் ஓர் உணர்ச்சியும் இல்லை. கொஞ்சநேரத்துக்கு வெறுமைதான் மிஞ்சியது. அப்போது சென்னைப் பொது மருத்துவமனை வளாகத்தில் நானும் சாந்தம்மாவும் இருந்தோம். உடனிருந்த சாந்தம்மா, "இந்தச் செய்தியை அம்மாவிடம் சொல்லணும், என்னால் முடியாது. நீங்கள் சொல்லுங்கள்" என்றார். அவரும் அதீத சோகத்திலிருந்தார். மருத்துவமனை வளாகத்திலிருந்த பொதுத் தொலைபேசியிலிருந்து போன்செய்து அம்மாவிடம் சொன்னேன். சொல்லும்போது என்குரல் உடைந்து தொண்டை அடைக்க அழுதேன். எதிர் முனையில் அமைதி.

**டாக்டர் மரிக்கவில்லை**

டாக்டரின் உடலை எடுத்துக்கொண்டு கிளம்பிய வேனுடன் நான் என் ஜீப்பில், சம்பந்தம் மற்றும் சிலருடன் அவருடைய இல்லத்துக்குச் சென்றேன். அவர் இல்லத்திலும், பிறகு இடுகாட்டிலும் நிகழ்ந்த இரு நிகழ்வுகள், அனுபவங்கள் இங்கு அவசியம் பதிவு செய்யப்படவேண்டியவை. முதல் அனுபவம் அவர் இல்லத்தில் நடந்தது.

நியாய விதிகளுக்கும், தர்க்க வாதங்களுக்கும் ஒவ்வாதவகையில் நடந்து முடிந்து விட்டதாக நான் நினைத்த டாக்டரின் மறைவு என்ற நாடகம், எனக்குக் குழப்பத்தையே விளைவித்தது. இது எப்படி நடக்கமுடியும், இவரால் இதைத் தவிர்த்திருக்க முடியாதா? நானறிந்த வரையில் இயற்கையையே தன் விருப்பத்திற்குப் பணியவைக்கும் சக்தி கொண்ட இவரால் எப்படி ஒரு சாதாரண மனிதனைப்போல் விபத்தில் மரணமடைய முடிந்தது? லட்சக்கணக்கான வோல்ட் மின்சக்தியுடன் இடி என் கைமூலம் இறங்கியதை நான் மறக்கவில்லை. அன்று அவராலல்லவா எனக்கு ஏதும் அசம்பாவிதம் நேராமல் காப்பாற்றப் பட்டேன். அது அவராலல்லவா நிகழ்ந்தது? அப்படிப்பட்ட அவரை, அவருடைய அனுமதியின்றி மரணம் தீண்டமுடியுமா? எனக்கேற்பட்ட அனுபவங்களின் அடிப்படையில் பார்த்தால், இவர் விருப்பமில்லாமல் இது நடந்திருக்க வாய்ப்பில்லை. அவர் விரும்பி இந்த முடிவுக்கு வந்தாரா? சம்பந்தத்திடம் சொன்னதைச் செய்துவிட்டாரா?........கேள்விகள் ஆயிரம்.....பதில்தான் இல்லை! ஆனால் இது இயற்கையாக நடந்தஒன்று என்று ஏற்றுக்கொள்ள மனம் மறுத்தது. லாஜிக் இடிக்கிறது. குழப்பங்களுக்கிடையில், நான் ஒரு பூ மாலையைக் கொண்டு சென்று அவர் உடலில் சாத்திவிட்டு, துக்கம் தாளாமல், அவர் பாதங்களைப் பற்றிக்கொண்டு என்னை விட்டுப் போய்விட்டீர்களே இது நியாயமா? இனி நான் எந்தப் பாதையில் போவேன்? யார் எனக்கு வழி

காட்டுவார்கள்? திக்குத்தெரியாமல், கதியின்றி நிற்கிறேனே,ஏன் டாக்டர் இப்படிச்செய்தீர்கள்? என்று மனதுக்குள் புலம்பிக் கொண்டிருந்தேன்.

அவர் பாதங்களைப் பற்றிக்கொண்டிருந்த என் கைகளின் ஒரு விரலை அவருடைய பாதத்தின் ஒரு விரல் தள்ளியது. நான் திடுக்கிட்டுக் கைகளை எடுத்துவிட்டேன். பயந்துவிட்டேன். எத்தனையோ அற்புதங்களைப் பார்த்திருந்தாலும், இதை நான் எதிர்பார்க்கவில்லை. இறந்துவிட்டார் என்று நம்பப்படும் ஒருவரின் கால் விரல் எப்படி அசையும்? எப்படி என் கை விரலைத் தள்ளிவிட முடியும்? அப்படியானால் உயிரோடு இருக்கிறாரா? உடனே முகத்தைப் பார்த்தேன். அங்கே எந்த சலனமும் இல்லை. கேள்விக்கு மேல் கேள்வி. குழப்பத்துக்கு மேல் குழப்பம். பயமும் சேர்ந்துகொண்டது. என்ன செய்வதென்றறியாமல், அப்போது என் அருகில் இருந்த மற்றொரு சீடரிடம், எனக்கேற்பட்ட அனுபவத்தை விளக்கினேன். வந்து பாருங்கள் என்று அழைத்தேன். அவர் ஒன்றும் சொல்லவும் இல்லை. இதைப் பொருட்படுத்தியதாகவும் தெரியவில்லை. நான் விளக்க முற்படும் நம்பமுடியாத விஷயத்தை யார்தான் பொருட்படுத்துவார்கள்? எனக்குள் ஒரு சந்தேகமும் முளைவிட்டது. ஒருவேளை நான் அப்போதிருந்த மனநிலையில் கற்பனை செய்துகொண்டேனோ என்று எண்ணத்தலைப்பட்டேன். குழப்பத்தில் பேசாதிருந்துவிட்டேன்.

அடுத்த நிகழ்வு இடுகாட்டில் நடந்தது. “குழியில் இறக்கும் முன் கடைசியில் ஒரு முறை பார்த்துக்கொள்ளுங்கள்” என்று இடுகாட்டு வேலையாள் சொல்ல, நான் மீண்டும் டாக்டரின் காலைப் பற்றிக்கொண்டேன். என்னை விட்டுப் போகாதீர்கள் என்று உள்ளுக்குள் புலம்பிக்கொண்டிருந்தேன். அந்த நேரம் ஒரு அதிசயம் மீண்டும் நிகழ்ந்தது. அவர் கால்களைப் பற்றியிருந்த என் விரல்களில் அவருடைய பாதத்தில் நாடித் துடிப்பை உணர்ந்தேன். இந்த முறை நான் பயத்தை உதறிவிட்டு கவனித்தேன். மிகத்துல்லியமாக அவர் பாதத்தில் ரத்த ஓட்டத்தை, நாடி துடிப்பதை என்னால் உணர முடிந்தது. எனக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. நான் சொல்வதை யார்

நம்பப்போகிறார்கள்? யாரிடம் சொல்வேன்? யோசித்தேன். அப்போதும் என் அருகில் நின்றுகொண்டிருந்தவர் அதே நண்பர்தான். அவரிடம் சொன்னேன். அவரிடம் எந்த உணர்ச்சிப் பிரதிபலிப்பும் தெரியவில்லை. “அப்படியா?” என்பது போல் ஏதோ சொன்னார் என்று நினைவு. நான் மீண்டும் சொன்னேன் “காலைத் தொட்டுப்பாருங்கள் தெரியும்” என்று. ஆனால் அவர் பேசாதிருந்துவிட்டார். அவர் நம்பவில்லை போலும்! நான் யாரிடம் சொன்னாலும் இதுதான் நிகழும் என்று எனக்கு தோன்றியது. டாக்டரின் முகத்தைப் பார்த்தேன். என் சந்தேகத்தை ஊர்ஜிதப்படுத்தும் வகையில் எந்த அசைவுமின்றி அப்படியே இருந்தது. ஒன்று என் சித்தம் கலங்கியிருக்க வேண்டும். அல்லது நடப்பது அவர் விருப்பப்படி நடக்கிறது என்று பொருள். அதற்குமேல் அங்கு நிற்கமுடியாமல் அங்கிருந்து நகர்ந்துவிட்டேன். என் ஜீப்பில் சென்று அமர்ந்தேன். இயலாமையின் சுமை என்னை அழுத்தியது. அப்போது சம்பந்தம் வந்து என் பக்கம் அமர்ந்தார். “அவர் போய்விட்டாலும், அவர் சொல்லிக்கொடுத்த வித்தை இருக்கிறது. அதைத் தொடர்ந்து பயிற்சி செய்ய வேண்டியது தான்” என்று சொன்னார். அதைத்தவிர வேறுவழி தெரியாததால், நானும் ஆமோதித்தேன்.

இந்தப் பிறவியில் இதைவிட அதிகமான குழப்பத்தில் நான் வேறெப்போதும் இருந்ததில்லை. நாட்கள் நகர்ந்தன. குழப்பம் தீர்ந்தபாடில்லை. சில நாட்களுக்குப் பிறகு என நினைக்கிறேன். அம்மாவிடம் பேசினேன். அப்போது அவர் சொன்னார், “டாக்டர் இறந்து போகவில்லை. அவர் வந்த வேலை முடியவில்லை. “I can not come and go like a mushroom” என்று ஒரு முறை என்னிடம் சொல்லியிருக்கிறார். இப்படிப் போகமாட்டார். இது ஏதோ நாடகம் போல் தெரிகிறது. முழு விளக்கம் என்னிடம் இல்லை. ஆனால், அவர் இறந்துவிட்டார் என்பது உண்மையில்லை.” என்றார். “எப்படிச் சொல்கிறீர்கள்?” என்று கேட்டேன். (அதற்கு அவர் கொடுத்த விளக்கத்தைத் தெரிந்துகொள்ள ‘The Catalyst’ புத்தகத்தைப் படியுங்கள்.) அவர் விளக்கத்தைக் கேட்டதும், மனதில் குழப்பம் மறைந்து நம்பிக்கை துளிர்விடத் துவங்கியது. கொஞ்ச

கொஞ்சமாக மனம் தெளிவடைந்தது. இமயம் போல் அழுத்திக்கொண்டிருந்த சுமை என் மனதை விட்டகன்றது. தொடர்ச்சியாக நிகழத்துவங்கிய சம்பவங்களும், அனுபவங்களும், வழிகாட்டுதல்களும், எங்கள் நம்பிக்கைக்கு உரமேற்றுவதாகஅமைந்தன. அவர் இவ்வுடலை நீத்துச் செல்லவில்லை, அவர் திறம்பட அரங்கேற்றிய நாடகம் என்பது சிறிதளவும் சந்தேகமின்றி விளங்கும் வகையில் பல ஆதாரங்கள் எங்களுக்குத் தரப்பட்டு வந்தன. அவர் இருக்கிறார் என்ற செய்தியும் உணர்வும் இன்றளவும் என்இதயம் துடிப்பதற்கான காரணங்கள்.

**சில கேள்விகள் சில பதில்கள்**

இங்கே ஒரு விஷயத்தைப் பேசவேண்டும் என்று நினைக்கிறேன். எங்களுடைய இந்த நம்பிக்கையை அறிந்த பலரும், டாக்டரின் சீடர்களிலேயே சிலரும்கூட கேட்கும் ஒரு கேள்வி: “டாக்டர் நம்மை விட்டுப் பிரிந்துவிட்டாலும், அவர் நம்முடன் அருவமாக இருந்து நமக்குத் தேவையான அனைத்தையும் செய்துவருகிறாரே, பின் எதற்காக அவர் மனித உடலோடு வருவார்; வரவேண்டும் என்று நினைக்கிறீர்கள்? இறந்து போன ஒருவர் எப்படி உயிருடன் வர முடியும், அது இறைவனாகவே இருந்தாலும் கூட?” நியாயமான கேள்வி. இறந்து புதைக்கப்பட்ட ஏசுபிரான் மீண்டும் உயிர்த்தெழுந்து வந்து இரண்டாயிரம் ஆண்டுகள் கடந்துவிட்ட காரணத்தால், அதைப்பற்றி இன்றும் அவரைப் பின்பற்றுவோர் பேசிக்கொண்டிருந்தாலும், நம்பிக்கொண்டிருந்தாலும் கூட, அவர் மீது மதம் என்னும் வண்ணம் பூசப்பட்டு விட்டதால், மாறுபட்ட நம்பிக்கையுள்ளவர்கள் அந்த ‘யுகங்கள் தடுமாறிய’ நிகழ்வை ஏற்க மறுக்கின்றனர். இறைவன் ஒருமுறை நிகழ்த்திக் காட்டியுள்ளான். இது என்ன இசைக் கச்சேரியா நேயர் விருப்பத்துக்காக மறுபடியும் மறுபடியும் பாடுவதுபோல், மீண்டும் மீண்டும் செய்து காட்ட? ஆனால் இங்கே விஷயமே வேறுபடுகிறது. அவர் இறந்துவிட்டார் என்பதையே ஏற்க மறுக்கிறேன் நான். என்னளவில் அன்று நடந்தது ஒரு நாடகமே! அவர் அவராகவே இன்றும்

இங்கே வாழ்கிறார். பார்த்ததற்கான ஆதாரங்கள் நிறையஉண்டு. ஒரு வாதத்துக்காக அவர்கள் நம்புவதுபோல் நடந்தது என்று ஏற்றுக்கொண்டாலும், ஏசுநாதர் செய்ததை டாக்டர் மீண்டும் செய்வதில் எந்தச் சிரமமும் அவருக்கில்லை என்பது என் அசைக்கமுடியாத நம்பிக்கை.

**"வானிலிருந்தால் வாவென்றழைப்பதும்,**

**வையகம் வந்தால் இனம்காண மறுப்பதும்**

**மானுடமையா, மாறுதலில்லை"**

சத்தியவார்த்தைகள்!

நமக்குத் தேவையானவை மட்டும் கிடைத்துவிட்டால் போதுமா? அப்படி நினைப்பது சுய நலமில்லையா? நம்முடைய தேவைகளை நிறைவேற்றும் பொருட்டுதான் இங்கு அவதரித்தாரா? பல்லாயிரக்கணக்கான வருடங்களுக்கு ஒருமுறை மண்ணில் அவதரிக்கும் இறைவன் அவனுடைய ஒரு சில சீடர்களுக்காக, அவர்களுடைய நலன் பேணமட்டுமே அவதரித்தார் என்று எண்ணுவது அறியாமையல்லாவா? ஏசு அவருடைய 12 சீடர்களுக்காக மட்டுமே அவதரித்தாரா? இந்தக் கேள்விகள்தாம் அவர்கள் கேள்விகளுக்கு என் பதில்.

எல்லா சீடர்களும் ஒன்றுபோல் இருப்பதில்லை. ஐந்து விரல்களும் மாறுபட்டிருப்பதைப் போல் சீடர்கள் குணாதிசயங்களும், நம்பிக்கைகளும், செயல்பாடுகளும் வேறுபட்டிருப்பது இயல்புதான். ஏசுவிடம் 'தொட்டுப் பார்த்துத்தான் நம்புவேன்' என்று சொன்ன தாமசும் இருந்தார். "இங்கே வா" என்று ஆதிசங்கரர் அழைத்ததும் எதிரில் இருப்பது ஆறு என்ற நினைவு கூட இல்லாமல் தண்ணீரின்மேல் நடந்த பத்மபாதரும் சீடர்தான்.

அவர் பிரிவால் பலநாட்கள், ஏன், இன்றுகூட கண்ணீர் சிந்திக் கொண்டிருக்கிறேன். அன்று சிந்திய கண்ணீருக்கும் இன்று சிந்தும் கண்ணீருக்கும்

பின்னணியில் ஒரு வித்யாசமிருக்கிறது. அன்று அவர் நம்மிடமிருந்து நிரந்தரமாகப் பிரிந்துவிட்டார் என்ற தாளாத துயரத்தில் கண்ணீர் பெருகியது. இன்றோ, அவர் இன்னும் வரவில்லையே! இன்னும் எத்தனை நாட்கள் இந்த பிரிவைத்தாங்க வேண்டுமோ என்ற பிரிவாற்றாமையால் பொங்கும் வென்னீர் கன்னங்களை நனைக்கிறது. அன்று நான் இருந்தநிலை மிக மோசமானது. தாய் தந்தையரை இழந்து தன்னந்தனியே திக்கு திசை தெரியாமல் திண்டாடும் சிறு பாலகனின் நிலை. அந்த நிர்கதியான நிலையிலிருந்து இந்த நாள்வரை என் நம்பிக்கை மிக மோசமான சோதனைகளைச் சந்தித்து விட்டது. அவை அனைத்தையும் வென்று இன்றுவரை உறுதியாக என் பாதையில் நான் பயணிக்கிறேன் என்றால் அதற்கு முழுமுதல் காரணம் டாக்டரும், அம்மாவும்தான். இந்த நேரத்தில் ஒரு உண்மையை வெளிப்படையாகச் சொல்லத்தான் வேண்டும். டாக்டர் பிரிந்து சென்றநாள் முதல் இன்றுவரை நான் எடுத்து வைத்த ஒவ்வொரு அடியிலும் என்னை நெறிப்படுத்தி, துணை நின்று, பாதுகாத்து வரும் ஒரு மாபெரும் ‘சக்தி’ என் தாய்தான். நுட்ப உடலிலும், திட்ப உடலிலும், அருவமாகவும் என் உடனிருந்து என்னை வழி நடத்தும் அவள் இல்லை என்றால், நான் இல்லை. என் தாய் யாரென்று நான் சொல்லித்தான் தெரிய வேண்டுமா! யாரென்பதை உங்கள் ஊகத்துக்கே விட்டுவிடுகிறேன்.

**டெல்லி பயணம்**

மீண்டும் டெல்லிபயணத்தைத் தொடரலாம் என்று எண்ணுகிறேன். பயணம் தொடங்கும்போது பட்டினத்தடிகள் வந்து தரிசனம் தந்தார். அதைப் பின்னால் விவரமாகச் சொல்கிறேன். அம்மா, சாந்தம்மா, இஞ்சினியர்-சுப்ரமணியம், வித்யா, ஜானகிராமன், நிர்மலா, சாம்ராட், சாந்தி, நரசிம்மன், சம்பந்தத்துடன் என்னையும் சேர்த்து பதினொருபேர் பயணமானோம்.

பயணம் செய்த இரண்டு இரவு, ஒரு பகல் முழுதும் எங்கள் பேச்சிலும், மூச்சிலும், நினைவிலும், கனவிலும் நிறைந்திருந்தது டாக்டர் மட்டும்தான். அந்த

ரயில் பெட்டியிலிருந்த மற்றவர்களுக்கு எங்கள் பேச்சு பெரும் குழப்பமாக இருந்திருக்கும். எங்கள் பேச்சில் 'டாக்டர்' என்ற ஒரு சொல் இடைவிடாமல் ஒலித்துக் கொண்டிருந்தது. அத்தனைப் பேரும் சிகிச்சைக்காக யாரோ டாக்டரைத் தேடிப் போகிறார்கள் போலும் என எண்ணியிருக்கலாம்.

ஒருவழியாக டில்லி ரயில் நிலையத்தை வண்டி அடைந்தது. அங்கே, ஹரியும், ஜமுனாவும் எங்களை வரவேற்கக் காத்திருந்தார்கள். ஜமுனாவின் வீட்டைச் சென்றடைந்தோம். பயணக் களைப்பு தீரக் குளித்து ஆடை மாற்றி வந்ததும் சிற்றுண்டி தயாராக இருந்தது. அன்று மாலைவரை ஓய்வெடுத்ததாக நினைவு. அன்றிரவு ஹரிதுவாருக்குப் பயணமானோம்.

**என் அன்னையைக் கண்டுகொண்டேன்**

பயணப்படுவதற்குமுன், நாங்கள் தங்கியிருந்த இடத்தில் எனக்கு ஓர் அனுபவம் கிடைத்தது. அந்த அனுபவத்தை விரிவாக விளக்க எனக்கு அனுமதி இல்லை. எனவே விவரங்களைத் தவிர்த்து, உண்மையை மட்டும் சொல்கிறேன். என் எப்பிறவிக்கும் தாயான அன்னை இங்கே மனித உடலில் எங்களுடன் இருப்பதைப் பார்த்தேன். உணர்ந்தேன். மகிழ்ச்சியிலும் ஆனந்தத்திலும் உறைந்தேன். அம்மா என்று கால்களைக் கட்டிக்கொண்டு கண்ணீர் சொரிய மனம் தவித்தது. உலகில் வாழ்வியல் வரைமுறைகளைப் புறம் தள்ள முடியாதே! 'அம்மா, நீங்களா? நீங்கள் உடன் இருக்கிறீர்களா? நான் தனித்து விடப்படவில்லையா? என்ன பாக்கியம்?!' மனம் கசிந்தேன். "கண்டுபிடித்துவிட்டீர்களா?" என்று அவர் என்னிடம் கேட்டது நான் பார்த்தது உண்மை என்பதற்கு ப்ரமாணம். அப்படியானால், டாக்டர் யார்? அவர் மூலமே அதற்கும் பதில் கிடைத்தது.

அன்று இரவு, ரயிலில் பயணிக்கும்போது, மீண்டும் ஓர் அனுபவம். அந்த திவ்ய ரூபத்தை, கண்கூசும் ஒளியைக் கண்டு, அனுபவித்து ஆனந்தத்தில் மிதந்தேன். இதற்குக் காரணம் டாக்டர் தான் என்பது அப்போது எனக்குத் தெரியாது. அவருக்கு

எப்படி நன்றி சொல்வேன்? அந்த நாளை இந்தப் பிறவியின் பயனை அடைந்தநாள் என்று சொல்வதுதான் பொருத்தமாக இருக்கும். டாக்டரை இப்படி நேரடியாகப் பார்க்கும் அனுபவம் கிடைக்கவில்லை. குறிப்புகள் மற்றும் அனுமானத்தின் மூலம்தான் அடையாளம் கண்டேன். ஆனால் என் அன்னையை நேரடியாகவே காட்டிவிட்டார் டாக்டர். காலையில் ஹரிதுவாரை அடைந்து, அப்போதே இரு வாடகை வண்டியில் ரிஷிகேஷ் பயணமானோம்.

ரிஷிகேஷில், சிவானந்த ஆஸ்ரமத்தின் உதவியுடன், வேறொரு ஆஸ்ரமத்தில் தங்க அறை ஒதுக்கியிருந்தார்கள். அந்த இடம் மிகவும் தூய்மையாகவும், வசதியாகவும் இருந்தது. அந்த ஆஸ்ரமம் கங்கைக்கரை ஓரம் அமைந்திருந்தது. கங்கையில் குளிக்கவேண்டுமென நினைத்தோம், நடுக்கும் குளிர். தண்ணீர் பனிக்கட்டியிலிருந்து உருகி வருவதால், மிகவும் குளிர்ச்சியாக இருந்தது. கை கால்கள் விரைத்துவிடும்போல் தோன்றியது. கங்கையைப்பற்றிக் கேள்விப்பட்டதும், படித்ததும்தான் நினைவில் இருந்தது.

அன்றுதான் நேரில் பார்த்தேன். நாங்கள் தங்கியிருந்த இடத்தில் கங்கையின் ஆழமும் அகலமும் அதிகம் என்று சொன்னார்கள். இதுதான் கங்கையா? இதைத்தான் முனிவர்கள், ரிஷிகள், யோகிகள், சித்தர்கள், ஆன்மிகப் பெரியோர்கள் அனைவரும் தேடி ஓடிவருகிரார்களா? மனித நாகரிகமும், ஆன்மிகமும் ஒருசேர வளர்வது இதன் கரையில்தானா? என்றெல்லாம் யோசித்துக்கொண்டிருந்தேன். நொடிகள் யுகங்களாக, வார்த்தைகளால் வடிவம்தர இயலாத உணர்வுகளால் ஆட்கொள்ளப்பட்டு நேரம் சென்றது. இந்த நதியில் நிச்சயம் குளிக்க வேண்டும் என விரும்பினேன். கங்கையில் குளித்தால் பாவங்கள் தொலையும் என்று சொல்வார்களே! எத்தனை பிறவிகள்! தெரிந்தும், தெரியாமலும் எவ்வளவு பாவங்கள் செய்திருப்பேன்! எனவே இங்கு தலை முழுகுவோம். கங்கை அன்னை என் பாவங்களை கரைக்கட்டும். பாவங்கள் நீங்கினால் என் குருநாதன் விரைவில் வந்துவிடமாட்டாரா? சீக்கிரம் வரவேண்டும் என்ற எண்ணத்துடன் குளிக்கச்

சென்றோம். குளித்தோம் ஆனந்த்ஜோதியில் உள்ள அத்தனை பேர் பெயரையும் சொல்லி அத்தனை பேருக்காகவும் முழுகினோம். அங்கு வந்தவருக்காகவும், வராதவருக்காகவும், தெரிந்தவருக்காகவும், தெரியாதவருக்காகவும், இந்நாட்டு மக்களுக்காகவும், இந்த உலக நன்மைக்காகவும், உலகம் அமைதி பெறுவதற்காகவும் என்று சொல்லி முழுக்குப் போட்டுக் கொண்டிருந்தோம்.

**கரைபுரண்ட கங்கை**

டாக்டரைப் பிரிந்து வருத்தத்தோடு சென்றிருந்தாலும், டாக்டரை இங்கேயோ அல்லது தில்லியிலோ பார்த்துவிடுவோம் என்ற எதிர்பார்ப்புடனும், நம்பிக்கையுடனும் வந்திருந்ததால், மகிழ்ச்சியாக இருந்தோம். அன்று இரவு என்று நினைக்கிறேன் கங்கையில் வெள்ளம் கரைபுரள ஆரம்பித்தது. நாங்கள் இரவு உணவு அருந்திவிட்டு வரும்போது பார்த்தால், இரு கரையையும் தொட்டுக் கொண்டு, ஆக்ரோஷத்துடன் புரள்வதுபோல் தோன்றியது கங்கை. அப்படி பெருமளவு தண்ணீர் அந்த வேகத்தில் ஓடியதை நான் அதுவரை வேறெங்கும் பார்த்ததில்லை. பிரமிப்பாக இருந்தது. இதை நதி என்று சொல்வதைக்காட்டிலும் சாகரம் எனச் சொல்வது பொருத்தமாக இருக்கும் என தோன்றியது. பெரிய மரம் ஒன்று. 60 -70 அடி நீளமிருக்கும். பத்தடிக்கு மேல் சுற்றளவு இருக்கும். அந்த மரம் ஒரு தீக்குச்சியைப் போல் உருண்டு புரண்டுகொண்டு போகிறது அந்தப் பிரவாகத்தில். அந்தக் காட்சி எப்படி இருந்திருக்கும் என்பதை ஓரளவு உங்களால் யூகிக்க முடியுமென்று நினைக்கிறேன். இயற்கையின் சக்தி எத்தகையது என்பதற்கு ஒரு சிறு உதாரணத்தை அன்று நான் கண்கூடாகக் கண்டேன். ஆச்சரியப்பட்டு, பேச்சிழந்து அதை பார்த்துக் கொண்டிருந்தோம். அப்போது போலீசார் ஒலி பெருக்கி மூலம் அறிவித்துக் கொண்டிருந்தார்கள், கரையோரம் இருப்பவர்களை பாதுகாப்பான இடத்துக்கு பெயர்ந்து செல்லும்படி. இரவில் வெள்ளம் கரையைக் கடக்கலாம். எனவே தாழ்வான பகுதியில் உள்ளவர்கள் மேடான பகுதிக்குச் செல்லுமாறு அறிவித்துக்

கொண்டிருந்தார்கள். “யாரும் தூங்காதீர்கள். விழிப்புடனிருங்கள்” என்று அறிவித்துக் கொண்டிருந்தார்கள். அன்று இரவு எங்கள் அறையில் அமந்து கொண்டிருந்தோம். அம்மா எழுதிய சில பாடல்களை தானே பாட ஆரம்பித்தார். அனைத்தும் கண்ணனைப் பற்றி அவர் எழுதிய பாடல்கள்.

இனிமையாகப் பாடக்கூடியவர்கள். அந்தப் பாடல்கள் இதயத்திலிருந்து உண்மையான பாவத்தில் பாடப்பட்டதால், அந்த இசையோடு சேர்ந்து நாங்களும் கரைந்து போனோம். ரிஷிகேஷில் தங்கியிருந்த நான்கு நாட்களில் நாங்கள் அவர் இசை மழையில் நனைந்தது ஏராளம். இசை வழியில் இறைவனை அணுகுவதில் உள்ள சுகானுபவமே தனிதான். மறுநாள் காலை பெருக்கெடுத்தோடும் கங்கைநதியின் அழகில் லயித்துப்போய் பலமணிநேரம் அதையே பார்த்துக் கொண்டிருந்தேன். முதல்நாள் கங்கையில் குளிக்காதிருந்திருந்தால், அந்த பயணத்தில் நாங்கள் கங்கையில் குளிக்கும் வாய்ப்பே கிடைக்காமல் போயிருக்கும். கரையோரத்தில் இருந்த சில கடைகள் சேதமடைந்திருந்தன. வட மாநிலங்களெல்லாம், குறிப்பாக, டில்லியும் அதைச் சுற்றிய பகுதிகளும் யமுனையின் வெள்ளப் பெருக்கால் தத்தளித்துக் கொண்டிருந்ததாகக் கேள்விப்பட்டோம். எல்லா ரயில்வண்டிகளும் ரத்தாகிவிட்டதாக அறிந்தோம். நான்கு நாட்களுக்குப் பிறகு ஹரிதுவார் வந்தபோது, நாங்கள் டில்லி திரும்ப முன்பதிவு செய்திருந்த ஒரு ரயில் மட்டுமே கிளம்பியது. மற்ற ரயில்வண்டிகள் அனைத்தும் ரத்தாகியிருந்தன. பெரு மழையாலும், காற்றாலும், சாலைகளும், இருப்புப் பாதைகளும் பெரிதும் சேதமுற்றிருந்ததால், போக்குவரத்துவசதி முற்றிலும் பாதிக்கப்பட்டு, மிகக்குறைந்த அளவில் செயல் பட்டுக்கொண்டிருந்தன.

இதில் ஆச்சரியமான விஷயம் என்னவென்றால், ஹரிதுவாரிலிருந்து நாங்கள் கிளம்பிய ஒரு வண்டிதான் டில்லி வந்தடைந்தது, அதற்குப்பிறகு எந்தவண்டியும் வரவில்லை என்று அறிந்தோம். எல்லா வண்டிகளும் ரத்தாகிவிட்டன. நாங்கள் தில்லி ரயில் நிலையத்திலிருந்து வேனுடன் எங்களுக்காகக் காத்திருந்த ஹரியுடன்

ஜமுனாவின் வீட்டிற்குப் பயணமானோம். வழியெல்லாம் வெள்ளத்தால், சாலைகளும், மரங்களும் வீடுகளும் சேதமடைந்திருந்தன. நொய்டா என்றழைக்கப்படும் இடத்தில் யமுனை நதி மீதுள்ள ஒரு பாலத்தைக் கடந்து ஜமுனா வீட்டை அடைய வேண்டும். அந்தப் பாலத்தை எங்கள் வேன் கடந்ததும், அந்தப் பாலமும், அதிகமாக வெள்ளம் வந்த காரணத்தால், போக்குவரத்துக்கு மூடப்பட்டுவிட்டது. தில்லியில் ஹரி, ஜமுனாவோடு சென்னையிலிருந்த உறவினர்கள் அனைவரும் எங்களுடைய பத்திரத்தன்மையைப் பற்றி பெரிதும் கவலைப் பட்டுக் கொண்டிருந்தார்கள் என்பது தில்லி திரும்பிய பிறகுதான் எங்களுக்குத் தெரியவந்தது. பேப்பரைப் படித்து, செய்தியைக் கேட்டபிறகு தான் மழை வெள்ளத்தின் கடுமையை முழுமையாக உணர்ந்தோம். நாங்கள் அந்த பாதிப்பை சிறிதும் உணரவில்லை. நாங்கள் வேறு ஏதோ உலகத்தில் இருந்ததாகத்தான் உணர்ந்தோம். நம் குருநாதன் உடன் இருக்கையில் எந்த சக்தியால் நம்மைத் தொடமுடியும்!

அன்றுஇரவு “கூட்டமர்வு” நடந்தது. சென்னையில் நடந்த அமர்வுக்குப் பிறகு நான் கலந்து கொள்ளும் இரண்டாவது அமர்வு இது. இந்த அமர்வில் தான் அன்னை “Nithi is God” (நித்தி கடவுள்) என்று சொன்னது. அடுத்த நாளும் அமர்வு நடந்தது. பின்பு ஊர் திரும்புவதற்கு முன் பல முறை அமர்வு நடந்தது. அப்படி நடந்த ஓர் அமர்வின்போது அன்னை, அங்கிருந்த அனைவருக்கும் பெயர் சூட்டினார்கள். அன்றுதான் ‘புனித அன்னை ‘ எனக்கு ‘Kenny’ கென்னி என்று பெயரிட்டு அழைத்தார்கள். தில்லி திரும்பிய மறுநாள் நாங்கள் ஆக்ரா, மதுரா மற்றும் ப்ருந்தாவனம் ஆகிய இடங்களைப் பார்த்துவருவதற்காக ஒரு வேனை எடுத்துக் கொண்டு சென்றோம். ஹரியும், ஜமுனாவும் உடன் வந்தார்கள். டாக்டர், தாஜ்மெஹல் எதிரே ஒரு பெஞ்சில் அமர்ந்திருக்கும் புகைப்படம் உள்ளது. அந்த பெஞ்சைத் தேடிக் கண்டுபிடித்து சற்று நேரம் அதில் அமர்ந்து சந்தோஷப்பட்டேன். எல்லா பிள்ளைகளும் தந்தை செய்வதை அப்படியே செய்ய ஆசைப்படுவார்கள். நானென்ன விதிவிலக்கா? இன்று இவ்வுலகில் கண்ணீரில் தத்தளித்துக்கொண்டு,

நான் செய்யவேண்டும் என்றுதான் ஆசைப்படுகிறேன். இந்தப் பயணத்தில் எங்கோ, என்றோ அது நடக்கவேண்டும் என்பது என் ப்ரார்த்தனை. அதுவரை என் யாகமும் யோகமும் தொடரும். 'ஐயனே! நீங்கள் ஓய்வெடுங்கள். உங்கள் பணியை நான் செய்கிறேன்' என்று சொல்லும் தகுதி என்று வருமோ, அன்றுதான் என் ப்ரார்த்தனையும் ஓயும். எல்லாக் குழந்தைகளுக்கும் குழந்தைப் பருவத்தில் தன் தந்தைதான் ஹீரோ! என் விஷயத்தில் என்றுமே அவர்தான் எனக்கு ஹீரோ.

**மதுரா பயணம்**

பின்னர் மதுரா சென்று ஶ்ரீகிருஷ்ணர் பிறந்த இடத்தையும், அந்த அறையையும், அந்த சிறை வளாகத்தையும் பார்த்துவிட்டு அங்கிருந்து ப்ருந்தாவனம் சென்றோம். அங்கே மிக வித்யாசமான கிருஷ்ணர் படம் ஒன்று வாங்கினேன். காளிங்க நர்த்தனம் புரிந்த யமுனை நதிக்கரையைப் பார்த்தோம். அங்கே எங்களுக்கு வழி காட்டியாக ஒருவர் வந்தார். அவர் அந்த இடத்தின் விபரங்களைச் சொல்லிக்கொண்டு வந்தார். அவர் ஓர் இடத்துக்கு வந்தபோது "இங்கேதான் கிருஷ்ணர் கோபிகைகளிடம் மூன்று நாட்களில் வருவதாகச் சொல்லிவிட்டுப் போனார்" என்று சொன்னார். நான் சொன்னேன், "அவர் திரும்பி வரவே இல்லை. அவர் ஏமாற்றிவிட்டார் (He is a cheat)" என்று. உடனே அந்த வழிகாட்டி, "(no, no, he is not a cheat) இல்லை, இல்லை அவர் ஏமாற்றவில்லை" என்றார். நான் மூன்று முறை, திரும்பத் திரும்ப அதையே சொல்லவும், அவர் அதை மறுத்து "no he is not a cheat" என உறுதியாகச் சொன்னார். இந்த வழிகாட்டி எப்படி ஐயாயிரம் வருடத்திற்கு முன் நடந்த விஷயத்தைப்பற்றி இப்படி உறுதியாகப் பேசமுடியும் என்று அப்போது நினைக்கவில்லை. பிறகு ப்ருந்தாவனத்துள்ளே சென்ற போது, அங்கிருந்த துளசிச் செடிகளைப் பார்த்து அதிசயித்துப் போனேன். க்ருஷ்ணர் காலத்துச் செடிகள்தாம் அவை என்று சொன்னார்கள். செடிகள் இன்றும் செடிகளாகவே இருந்தாலும், அவற்றின் தண்டுகள் மரத்தின் தண்டுகளைப் போல

(trunk) பருமனாக இருந்தன. துளசி இலைகளும் மிகப் பெரியதாக இருந்தன. கோபிகைகள் பகலில் செடிகளாக இருப்பதாகவும், இரவில் தங்கள் சுயஉருவில் க்ருஷ்ணருடன் ராசலீலை செய்வதாகவும் சொன்னார்கள். இன்றும், இரவில் அங்கே மதில்சுவர் அருகே இருக்கும் வீடுகளில் தங்கினால் வாத்திய முழக்கங்களைக் கேட்கமுடியும் என்று சொல்கிறார்கள் அங்கிருப்பவர்கள். அங்கே தங்குவதற்கான அறைகளையும் வாடகைக்குத் தருகிறார்களாம். அங்கே தங்கி இரவில் அந்த அனுபவத்தைப் பெற விருப்பமிருந்தது. ஆனால் நேரமின்மை காரணமாக அன்றே தில்லி திரும்ப வேண்டியதாயிற்று. இரவில் ப்ருந்தாவனத்துள் யாரையும் அனுமதிப்பதில்லையாம். அங்கிருந்த குரங்கு ஒன்று மரம்போல் வளர்ந்திருந்த துளசிச் செடியருகில் ஒரு காலை மடக்கியமர்ந்து, ஒரு கையால் துளசிச் செடியின் ஒரு கிளையைப் பற்றியவாறு போஸ் கொடுத்தது வினோதமாக இருந்தது. அதை ஹரி புகைப்படமெடுத்தார். குரங்கின் உள்ளே இரங்கி போஸ் கொடுத்தவர் யாரோ! அங்கிருந்து டில்லி திரும்பிய நாங்கள், மறுநாள் தில்லியிலுள்ள ஷீரடி சாயிபாபா கோவிலுக்கும், பஹாய் டெம்பிளுக்கும் சென்று சற்று நேரம் தியானம் செய்துவிட்டு வந்தோம். பின்னர் அன்று இரவு சென்னை திரும்ப ஸ்டேஷனுக்குச் சென்றோம். ஒரு முக்கியமான பயணம் முடிவுக்கு வந்தது.

இதற்கிடையில் நடந்த இரு விஷயங்களைச் சொல்ல வேண்டும். ப்ருந்தாவனத்தைச் சுற்றிவிட்டு, ஓரிடத்தில் அமர்ந்து ஊடகம் மூலம் பேச டாக்டரை அழைத்தோம். டாக்டர் ஊடகம் மூலமாக எங்களுடன் பேசினார். அதற்கு முதல்நாள் ஜமுனா இல்லத்தில் நடந்த அமர்வில் டாக்டர் சிறிது நேரம் வந்து பேசிக்கொண்டிருந்தார். “உங்களைப் பார்த்தே ஆகவேண்டும். நேரில் வாருங்கள்” என்று எல்லோரும் அடம் பிடித்தோம். எங்கள் தொல்லை தாங்காமலோ என்னவோ, “சரி, நாளை மதுரா கிளம்புகிறீர்களே, அங்கே பார்க்கிறேன்” என்றார். எனவே இந்த இடங்களைச் சுற்றி பார்த்துக் கொண்டிருந்த போதெல்லாம், நாங்கள் டாக்டர் எங்காவது தென்படுகிறாரா

என்றுதான் தேடிக்கொண்டிருந்தோம். ப்ருந்தாவனமும் பார்த்தாயிற்று, தில்லிக்குத் திரும்பவேண்டும். இன்னும் டாக்டர் வரவில்லையே. ஏமாற்றி விட்டாரே என்ற ஏக்கம். எனவே ஓரிடத்தில் அமர்ந்து அமர்வில் டாக்டரை வரவேண்டுமென வேண்டினோம். அப்போது டாக்டர் இறங்கிப் பேசினார். அதைத்தான் மேலே குறிப்பிட்டேன். டாக்டர் வந்ததும், “ஏன் டாக்டர் வரவில்லை?” என்று எல்லோரும் கேட்டோம். “நான்தான் வந்தேனே, உங்களுடனே வந்து உங்களுக்கு எல்லா இடத்தையும் நான்தானே காட்டினேன்” என்று சொன்னாரே பார்க்கணும். நான் தலை குனிந்துகொண்டேன். அப்போதுதான் புரிந்தது உடன் வந்த வழிகாட்டி இவர்தான் என்று. அந்த வழிகாட்டியிடம் நான் கவனித்த ‘நடை, உடை, பாவனை’ என்று சொல்வார்களே அங்க அசைவுகள், பார்க்கும் விதம், பேசும் விதம், உடல் அசைவுகள், நிற்கும், நடக்கும் தோரணை இப்படிச் சில விஷயங்கள் எனக்கு நினைவு வந்தன. அவை டாக்டரை நினைவு படுத்துவதாகத் தோன்றியது. அந்த நிமிடமே எனக்கு வெட்கமாகவும் கூச்சமாகவும் இருந்தது. நிமிர்ந்து டாக்டரைப் பார்க்க சிரமமாக இருந்தது. “ஐயோ, இவரிடமே கிருஷ்ணர் ஏமாற்றிவிட்டார் (krishna is a cheat)” என்று சொல்லிவிட்டோமே என்ற சங்கடம். வேறு யாரால் அவ்வளவு தீர்க்கமாக “No he is not a cheat” என்று கூறமுடியும்? நான் சங்கடத்தில் நெளிந்தேன். “சாரி டாக்டர், வந்தது நீங்கள் என்று தெரியாமல் அப்படிச் சொல்லிட்டேன்” என்று மன்னிப்புக் கேட்டேன். “பரவாயில்லப்பா, நீ இப்பதான திட்ட ஆரம்பிச்சிருக்க, சாம்ராட் ரொம்ப நாளா திட்டிகிட்டிருக்காங்க” என்று சொல்லி சாம்ராட்டையும் நெளியவைத்தார். அப்போது சாம்ராட் அங்கிருந்தார்கள். அந்த சமயத்தில் நான் வாங்கியிருந்த கிருஷ்ணர் படத்தை டாக்டரிடம் காட்டினேன். “இங்கே வாங்கினேன். பாருங்கள்” என்று சொன்னேன். அந்தப் படம் சற்று வித்தியாசமானது. வட நாட்டில் நான் பார்த்த எந்த கிருஷ்ணர் படத்திலும் இது போல் முகத்தோற்றம் இல்லை. அங்கு கிடைக்கும் படங்களிலிருந்து முற்றிலும் வித்தியாசமான முகத்தோற்றம் கொண்டிருந்தது. சிறுவயதுக் கண்ணன், கையில் புல்லாங்குழலுடன். கண்கள் மிக அழகு. கண்களுக்குக்

கீழே முகத்தை மறைத்துக்கொண்டு பார்த்தால் அது எங்கள் வீட்டில் வளரும் வித்யா என்ற குழந்தையின் முகத்தை அப்படியே ஒத்திருந்தது. அந்த ஒற்றுமையை அம்மாதான் முதலில் பார்த்துச் சொன்னார்கள். வழக்கமாக, ஊடகத்துள்ளே இறங்கிப் பேசும்போது ஊடகத்தின் கண்கள் மூடித்தான் இருக்கும். யாரையும் கண்களைத் திறந்து பார்க்கமாட்டார்கள். அபூர்வமாக எப்போதோ ஓரிருமுறை கண்களைத் திறந்து பார்த்திருக்கிறார்கள். அந்த அபூர்வ நிகழ்வுகளில் இதுவும் ஒன்று. நான் கொடுத்த படத்தை கையில் வாங்கிக் கண்களைத் திறந்து படத்தைப் பார்த்தார். சிறிது நேரம் பார்த்துக் கொண்டேயிருந்தார். பிறகு கண்களை மூடிக்கொண்டு படத்தை என்னிடம் கொடுத்தார். “ரொம்ப அழகா இருக்குப்பா. வச்சிக்க” என்று சொன்னார். பிறகு சென்னை நோக்கிய பயணத்தின் போது, அந்தப் படம் அளவில் சற்று பெரியதானதால் வண்டியில் ஜன்னல் பக்கத்தில் உள்ள மடக்கி வைக்கும் பலகையில் வைத்திருந்தோம். எங்கள் குழுவில் சாந்தம்மாவுக்கு சாதாரண கண்களுக்குத் தெரியாத அகக்காட்சிகளை (vision) காணும் சக்தி இருக்கிறது. அவர்கள் படத்தை பார்த்துகொண்டிருக்கும்போது ஆச்சரியத்துடன் சொன்னார்கள். “அம்மா டாக்டர் என்ன செய்தார் என்று தெரியவில்லை. படத்திலிருக்கும் கண்ணன் வெளியே வந்து விளையாடுகிறான். மடியில் வந்து உட்கார்ந்திருக்கான்” என்று. என் கண்ணுக்குத் தெரியவில்லை. வேறு யார் யார் பார்த்தார்களோ அதுவும் எனக்குத் தெரியாது.

**வித்யா**

ஆனால் அதன்பிறகு என் வீட்டில் நடந்த நிகழ்ச்சி சாந்தம்மா சொன்னதை ஊர்ஜிதப்படுத்தியது. மேலே சொன்னேன், இந்த படத்திலிருக்கும் கண்ணனுக்கு வித்யாவின் சாயல் இருக்கிறது என்று. வித்யாவுக்கு அப்போது இரண்டரை அல்லது மூன்று வயதிருக்கும். தினம் என் அறையில் என்னுடன்தான் படுப்பாள். அந்த அறையில் என் மேஜைமீது இந்த கண்ணன் படமிருக்கும். ஒரு நாள் படுத்தவுடன் தூங்கிவிட்டேன். வித்யா தன் பிஞ்சுக் கைகளால் என்னை ரகசியமாகத் தட்டி

எழுப்பினாள். மழலைக் குரலில்,"தாத்தா, அங்க பாருங்க. கண்ணன் படத்திலிருந்து இறங்கி வரான்" என்றாள். எனக்கொன்றும் தெரியவில்லை. குழந்தை கண்கள் விரிய மகிழ்ச்சியும் ஆச்சரியமும் கலந்து தான் பார்ப்பதை என்னிடம் விளக்கிக் கொண்டிருந்தாள் மழலைப் பேச்சில். “கீழே இறங்கிட்டான். உங்க பக்கம் வரான். என்ன விளையாட கூப்பிடரான்” என்று என்னைப் பார்த்தாள். நான் என்ன சொல்வேன்? புதிய ஆச்சரியமான ஆனந்தமான அனுபவம். அன்று சாந்தம்மா சொன்னது ஞாபகம் வந்தது. குழந்தைக்குக் கிடைத்த பாக்யம் எனக்கில்லையே என்ற ஆதங்கமும் இருந்தது உண்மைதான்.

ஆனாலும், “கூப்பிட்டால் போய் விளையாடும்மா” என்று சொன்னேன். அவள் எழுந்து போகவில்லை. ஆனால் அவ்வப்போது சிரித்துக்கொண்டிருந்தாள். சிறிது நேரத்திற்குப் பிறகு “தாத்தா, கண்ணா போயிட்டான்” என்று வருத்தமாகச் சொன்னாள். “சரி தூங்கு. நாளைக்கு வந்து விளையாடுவான்” என்று சமாதானம் சொல்லி அவளைத் தூங்கச்செய்தேன். இது பல நாட்கள் தொடர்ந்தது. ஆனால் ஒருநாள்கூட நான் கண்டதில்லை. அந்தப்பேறு எனக்குக் கிட்டவில்லை. பின்னாளில் அவன் ஒரு ‘கண்ணை’ பார்த்ததே பெரும் பேறல்லவா! அறியாப் பருவத்திலிருந்தே அந்தக் குழந்தை தெய்வ விஷயங்களில் காட்டிய ஈடுபாடும், கிருஷ்ணன் படங்களைப் பார்ப்பதில் கொண்டிருந்த ஆர்வமும் இவள் வித்தியாசமான குழந்தை என்பதை எனக்கு உறுதிப்படுத்தின. என்னிடம் ராமாயணம், மஹாபாரதம், பாகவதம், ஆழ்வார்களின் திவ்யப்ப்ரபந்தம் போன்ற பல புத்தகங்கள் இருக்கின்றன. இவற்றில் சின்னஞ்சிறு வயதிலிருந்தே அவளுக்கு ஈடுபாடு. பாகவதத்தில் இருக்கும் கிருஷ்ணனின் லீலைகளை விளக்கும் படங்களை எந்த நேரமும் பார்த்து ரசித்துக்கொண்டிருப்பாள்.

“கண்ணனைப் பற்றி சொல்லு தாத்தா” என்பாள். கிருஷ்ணரின் கதைகளைக் கேட்பதில் இவளுக்கு எல்லையில்லா ஆர்வம். இறைவனின் திருவிளையாடலை யார் அறிவார்? என் சிறிய தந்தை மாசிலாமணியைப் பற்றிச் சொல்லியிருக்கிறேன்.

அவருக்கு இந்தக் குழந்தை மீது அலாதியான பற்று. வெளியே எங்காவது போய் வீடு திரும்பினால், “பாப்பா எங்கே?” என்று கேட்டுக் கொண்டுதான் வீட்டுக்குள் நுழைவார். அவர் அடிக்கடி என்னிடம் சொல்வார். “இந்தக் குழந்தையை நன்றாகப் பாத்துக்க” என்பார். ஒருமுறை அவர் பார்த்த அகக்காட்சியை என்னிடம் சொன்னார். நான் அதில் அதிக கவனம் செலுத்தவில்லை. அந்தக் குழந்தையை வளர்ப்பதில் மட்டும் ஈடுபாடு கொண்டேன். இவை அந்தக் கிருஷ்ணன் படத்துடன் தொடர்புடைய செய்திகள்.

மறுநாள் சென்னைக்குப் பயணமானோம். போகும்போதிருந்த உற்சாகம் திரும்பும்போதில்லை. போகும்போது டாக்டரைப் பார்த்துவிடுவோம் என்ற நம்பிக்கை தந்த உற்சாகம். வரும்போது பார்க்க முடியவில்லையே என்ற சோர்வு. அவ்வளவே. வழிகாட்டி ரூபத்தில் வெற்றிலைக் காவி படிந்த பல்லும், பைஜாமா, குர்த்தாவும், கையில் ஒரு குச்சியும் கொச்சை ஆங்கிலமுமாக நாங்கள் பார்த்தவர் டாக்டர்தான் என ஒப்புக்கொண்டாலும், அந்த உருவத்தில் திருப்தியடைய நான் தயாராக இல்லை. ஆனால், டாக்டருடனும், அன்னையுடனும் பேசக்கிடைத்த வாய்ப்பு மனதுக்குத் தெம்பூட்டியது உண்மை. ஒரு விஷயத்தைக் குறிப்பிடாமல் இந்தப் பயண அனுபவத்தை நிறைவு செய்யவே இயலாது.

தில்லியில் திருமதி ஜமுனா வீட்டில் தங்கியிருந்தோம். அவர் வீட்டுக்குப் பக்கத்தில் இன்னும் முழுமை பெறாத ஒரு பகுதியை அதன் உரிமையாளரின் அனுமதியோடு நாங்கள் தங்குவதற்கான அனைத்து வசதிகளையும் செய்து தந்திருந்தார். இரண்டு பள்ளி செல்லும் குழந்தைகள், வயதான மாமனார், மாமியார். (இவர் கணவர் ஒரு விபத்தில் காலமாகிவிட்டார்). ஒரு நாத்தனார். இவர் அலுவலகம் வெகுதூரத்தில் இருந்தது. பொறுப்பான பதவியிலிருந்ததால் விருப்பம்போல் விடுமுறை எடுத்துக்கொள்ள முடியாது. எங்களுக்கான காலை, மதிய உணவு வகைகளைச் செய்துவிட்டு, அவசரம் அவசரமாகக் குழந்தைகளைத் தயார்செய்து பள்ளியில் விட்டுத், தானும் குறித்த நேரத்துக்குள் அலுவலகம் சென்று, வேலை

முடிந்ததும், (இதற்கிடையில், தொலை பேசி மூலம் எங்களை விசாரித்து எங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்து) அவசரமாக வீட்டுக்கு வந்து இரவு உணவுக்குத் தேவையானவற்றைத் தயாரித்து, எங்களுக்கெல்லாம் பரிமாறிவிட்டு, வீட்டில் அனைவரையும் கவனித்து அவர்கள் தேவைகளைப் பூர்த்தி செய்து விட்டு, எங்களுடன் அமர்வில் வெகுநேரம் உட்கார்ந்திருந்து, மிகத் தாமதமாக உறங்கி, மீண்டும் காலையில் எழுந்து மறுநாள் வேலையை பம்பரம்போல் சுழன்று கொஞ்சம் கூட முகத்தில் சிரிப்பு மாறாமல் செய்து முடித்த ஜமுனாவை எந்த வார்த்தைகளால் பாராட்டினால் பொருத்தமாக இருக்கும் என்று எனக்குத் தெரியவில்லை. அந்த விருந்தோம்பலுக்குக் கைம்மாறாக என்ன செய்ய முடியும்! அவருக்குப் பிறவா நிலை சித்திக்கப் பிரார்த்திக்கிறேன்.

ஹரி மட்டும் சளைத்தவரா? ஹரியும், ஜமுனாவும் சேர்ந்துதானே அத்தனை ஏற்பாடுகளையும் செய்து எங்கள் பயணம் மிகவும் சுகமாக, எந்தச் சிரமமுமின்றி அமைய உதவினார்கள். ஹரியைப் பற்றி நினைக்கும்போதே பூ மலர்வது போல் மென்மையான உணர்வு மனதில் பரவும். இவரை நண்பராக பெற்ற எவரும் வாழ்க்கையில் தவறான பாதையில் போகமுடியாது என்பது என் உறுதியான எண்ணம். ஆரம்ப நாட்களில் அவர் என்னிடம் சொன்ன ஒரு செய்தியை என்னால் என்றுமே மறக்க முடியாது. ஒருமுறை நான் அவர் தமக்கையுடன் கோபமாக வாக்குவாதம் செய்து கொண்டிருந்ததைக் கவனித்து, பிறகு சொன்னார், “கேசவன் நாம் எதைச் சொன்னாலும், அந்த வார்த்தைகள் பூவின் மேல் பனித்துளி விழுவது போல் மென்மையாக இருக்க வேண்டும்” என்று. அதன் பிறகு நான் எப்போதாவது கோபப்பட்டுப் பேச நேர்ந்தால், இவர் சொன்னது என் நினைவுக்கு வரும். நான் அமைதியாகி விடுவேன். நினைவுகள் தந்த செய்திகளை அப்படியே பதிவு செய்துவிட்டேன். இனி ஆரம்பத்தில் விட்ட இடத்திலிருந்து தொடருகிறேன்.

* * * * * *

**அதிசயங்களின் பின்னணி**

நான் ஆரம்பத்தில் சொன்னதுபோல், அற்புத நிகழ்வுகள் எனக்கு நம்பிக்கையூட்டுவதற்காக டாக்டர் விளையாடும் சித்து விளையாட்டுக்கள். எதையும் ஆய்ந்து பார்க்கும், கேள்வி கேட்கும் குணமுடைய என் மனத்தில் நம்பிக்கையை வளர்ப்பது எளிதல்லவே! எதையும் எளிதில் நம்பிவிடும் நபர்களை நம்ப வைப்பது சுலபம். நம்பாதவர்களின் நம்பிக்கையைப் பெறுவது கடினம். நான் இரண்டாம் வகை. இந்தப் பிள்ளையை எப்படி நெறிப்படுத்துவது, எப்படி நம்பிக்கையைக் கொடுப்பது என்பதை நன்கறிந்த இவர், சிறு சிறு செயல்கள்மூலம் என் மனதில் நம்பிக்கை என்னும் விதைகளை அங்கொன்றும் இங்கொன்றுமாக விதைத்தார். அதற்கு உரமிட்டு, நீரூற்றிக் கவனித்து வளர்த்தார். தலைசிறந்த சிற்பியின் உளிபட்ட கல்போல நான் மெல்ல மெல்ல உருமாறிக் கொண்டிருந்தேன்.

**மெல்ல நிகழும் மாற்றம்**

என்னுள் நிகழும் மாற்றங்கள் எனக்கு ஆச்சரியத்தைத் தந்தன. இந்த ஐம்பது ஆண்டு வாழ்க்கையில், எத்தனையோ ஆன்மிகவாதிகளைப் பற்றிக் கேட்டிருக்கிறேன். இங்கே ஓர் ஆன்மிகப் புரட்சி நிகழ்கிறது. ஆரவாரம் இல்லை, கத்தியும் இல்லை, ஒரு துளி ரத்தமும் இல்லை. சிறு ஓசை கூட இல்லை. யார் இந்த மாயாவி? இவர் சாதாரண மனிதர் அல்ல. என் ஏக்கம் தீரும், தாகம் தணியும், பாதை தெரியும், பயணத்திற்குத் துணை கிடைக்கும், இலக்கை அடைய முடியும் என்ற நம்பிக்கை துளிர் விடலாயிற்று. ஒரு பெரிய மாளிகையின் ஆரம்பமே அதன் அஸ்திவாரத்தில் விழும் முதல் கல்தானே! என் ஆன்மிகப் பயணத்தின் முதல் அடியை, மனதில் முகிழ்ந்து வரும் இந்த நம்பிக்கையைப் பிடித்துக் கொண்டு மெல்ல எடுத்து வைத்தேன். புரிந்தும் புரியாத நிலையில் மனம் இவர்பால் ஈர்க்கப் படலாயிற்று. இவர்

புரியாத புதிராக இருந்த போதிலும் இவரை நம்பலாம் என்ற எண்ணம் எழலாயிற்று. சாதாரணத் தோற்றம் கொண்டிருந்தாலும் மற்றவர்களிடமிருந்து வேறுபட்டவர், ஒப்பிட முடியாதவர் என்பதை உள் மனம் உணரத் தலைப்பட்டது. விளைவு, உண்மையை நான் உணரமுடியாதபடி நான் அணிந்துகொண்டிருந்த சந்தேகக்கவசங்கள் ஒவ்வொன்றாகக் கழன்று போய்க் கொண்டிருந்தன. நம்பிக்கை உறுதிபெறத் துவங்கியதால் அவர் பணி சற்று லகுவானது. சந்தேகமும், தற்காப்புஉணர்வும் மெல்ல மறைந்து போகவும் அவர் சொல்வதை மனம் உள்வாங்க முனைந்தது. ஆக, இங்கிருந்து என் ஆன்மிகப் பயணத்தின் முக்கிய கட்டம் ஆரம்பமானது. போகலாமா என்றதும் நான் ரெடி என்று உடன் கிளம்பும் மனோநிலை மிகவும் உன்னதமானது. என் விஷயத்தில் டாக்டர் என்னைத் தயார்படுத்த வேண்டியிருந்தது. என் அறிவுக்கெட்டியவரை அந்தத் தயார்படுத்தும் பணியில் முக்கியமான நேரம் கொஞ்சம் வீணாகிப் போனதோ என்ற எண்ணம் எனக்கு எப்போதும் உண்டு. டாக்டர் என்னைக் கையாண்ட விதம் மிக நேர்த்தியானது. எதைச் செய்தாலும் அதை மறைமுகமாக மென்மையாகச் செய்தார். என்னவொரு அழகான, நாசூக்கான ஆளுகை! நினைத்து நினைத்து வியந்து போகிறேன். பேச்சில் அத்தனை அன்பு. தன்னை எந்த அளவிற்கு என்னிடம் வெளிப்படுத்திக் கொள்ளவேண்டுமோ அந்த அளவிற்கு மட்டுமே சிறிது சிறிதாக வெளிப்படுத்திக்கொண்டு வந்தார்.

**ஹரி**

கொஞ்ச காலம் கழித்து ஒரு நாள் டாக்டரை சர்க்கரைச் செட்டித் தெருவில் அவருடைய கிளினிக்கில் சந்திக்கச் சென்றிருந்தேன். அங்கே டெல்லியில் 'நெஸ்லே' கம்பெனியில் வேலை செய்யும் டாக்டரின் வெகு நாளைய சீடர் ஹரி (டெல்லி பயண அனுபவத்தில் குறிப்பிட்டிருந்தேனே அவர்) என்பவர் வந்திருந்தார். அவருடைய வீடு அசோக்நகரில் இருந்தது. அவர் புறப்பட ஆயத்தமானார். அப்போது டாக்டர் என்னை

அழைத்து “நீ எந்தப் பக்கமா போறே? ஹரியை வழியில் எங்காவது இறக்கிவிட்டுப் போகிறாயா?”. என்று கேட்டார். “சரி டாக்டர்” எனச் சொல்லிப் புறப்படத் தயாரானேன். “நான் பஸ்ஸிலோ அல்லது ஆட்டோவிலோ போகிறேன். அவரைத் தொந்தரவு செய்யவேண்டாம் டாக்டர்" என்று சொன்னார் ஹரி. “தொந்தரவு ஒன்றும் இல்லை. நீங்கள் எங்கே போகவேண்டுமோ அங்கே விட்டுவிட்டுப் போகிறேன்” என்று சொல்லி அவரை என்னுடன் வருமாறு அழைத்தேன். “சரி நீங்க எப்படிப் போகணுமோ அப்படிப் போங்க. நான் வழியில் இறங்கிக்கறேன்” என்று சொல்லி என்னுடன் ஸ்கூட்டரில் வந்தார். அவர் வீடு நான் போகும் வழியில்தான் இருக்கிறது என்பதை விளக்கி அவரை வீட்டில் இறக்கிவிட்டுப் போவதாகச் சொல்லி கிளம்பினேன். ஹரியை நான் அன்று தான் முதலில் பார்த்தேன். அன்றுவரை அவர் பெயரைக்கூட நான் கேட்டதில்லை. ஆனாலும் பார்த்த மாத்திரத்தில் அவரிடம் ஓர் ஈர்ப்பு. உள்ளுக்குள் ஒரு பரவசம். அவரை எனக்கு மிகவும் பிடித்திருந்தது. வண்டி ஓட ஆரம்பித்ததும், என்னைப் பற்றி ஓரிரு வார்த்தைகள் கேட்டார். பிறகு நான் டாக்டரைப் பற்றி ஒரு சில சந்தேகங்களை அவரிடம் கேட்டேன். அந்தப் பேச்சு நீண்டுகொண்டே சென்றது. அவர் வீட்டை அடையும்வரை டாக்டரைப் பற்றித்தான் சொல்லிக்கொண்டு வந்தார். மேலும் பேசவேண்டும், டாக்டரைப் பற்றி பல விஷயங்களைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற ஆவலும் ஆர்வமும் மிகுந்திருந்தாலும், இரவு வெகு நேரமாகிவிட்டபடியால் மற்றொருநாள் பார்த்துக்கொள்ளலாம் என எண்ணி வீட்டுக்குக் கிளம்பிவிட்டேன். டாக்டரின் கிளினிக்கிலிருந்து ஹரியின் வீட்டிற்குச் செல்ல சுமார் நாற்பத்தைந்து நிமிடங்களாகியிருக்கலாம். அந்தக் குறுகியகால அவகாசத்தில் அவர் சொன்னது அனைத்தும் டாக்டரைப் பற்றித்தான். நான் டாக்டரைப் பற்றித்தான் கேட்டேன். அவர் மூலமாக நான் அதுவரை அறிந்திராத டாக்டரின் மற்றுமொரு பரிமாணத்தைத் தெரிந்து கொண்டேன். ஹரி மூலமாக ஆரம்பமும் முடிவுமற்ற அந்த வேதத்தின் மற்றுமொரு பக்கத்தைப் படித்தேன். இவர் மிகப் பெரியவர் என்பதை உணர்ந்தேன்.

ஆதாரபூர்வமாக ஸ்ரீஹரியைப்பற்றி ஹரி பல விஷயங்களைச் சொல்லச் சொல்ல, சொல்வதில் அவருக்கு ஆனந்தம், கேட்பதில் எனக்குப் பரவசம். அது ஒரு இனிய அனுபவம்.

இவரிடம் இன்னும் நிறைய டாக்டரைப் பற்றிக் கேட்டுத் தெரிந்து கொள்ளவேண்டும் என்ற ஆவல் எனக்கு. பல விஷயங்களைச் சொன்னார். நான் பிரமித்துப் போயிருந்தேன். இவ்வளவு பெரிய மஹானிடம் வந்திருக்கிறோமா! இப்படிப்பட்ட சக்தி வாய்ந்தவர் நம் குருவாக கிடைக்கப் பெற்றது எத்தகைய பாக்கியம் என்று எண்ணி ஆனந்தப்பட்டேன். ஹரியுடன் ஏற்பட்ட முதல் சந்திப்பு என் ஆன்மிகப் பயணத்தில் ஒரு மைல்கல் என்றுதான் சொல்லவேண்டும். மொட்டு இதழ் விரிவது போல அழகாக, டாக்டர் மெல்ல மெல்ல, என் மனப் பக்குவத்திற்குத் தகுந்தாற்போல் சரியான நேரத்தில் தேவையான அளவு தன்னை வெளிப்படுத்திக்கொண்டு வந்தார். அவரைப்பற்றி இன்னும் தெரிந்து கொள்ளவேண்டும் என்ற ஆர்வம் அதிகமானது மட்டுமல்லாது, த்யானம் செய்வதில் ஈடுபாடும் அதிகரித்தது.

**அம்மாவுக்குக் கடிதம்**

ஒருநாள் பேசிக்கொண்டிருந்தபோது, ஆலந்தூர் மருத்துவமனை என்று நினைவு, டாக்டர் தன் சிறு வயது அனுபவங்களை எங்களுடன் பகிர்ந்து கொண்டார். அதில் ஒன்று நினைவு வருகிறது. ஓருநாள் அவர் தாய் உடல் நலம் பாதிக்கப்பட்டுப் படுக்கையில் இருந்தாராம். வீட்டுக்கு வந்த டாக்டர், அம்மாவின் உடல்நிலையைப் பார்த்து, "அம்மா உடம்பு சரியாகிவிடும் கவலைப் படாதீர்கள்" என்று ஆறுதல் சொல்லிவிட்டு, தன் அறைக்கு சென்று தன் தாயின் உடல் நிலை குறித்து அன்னைக்கு (புனித அன்னைக்கு) ஒரு கடிதம் எழுதி பரண் மீது வைத்துவிட்டுத் தூங்கப் போய்விட்டாராம். அன்னை பராசக்தியிடம் பேச (மேரி என்றழைத்தாலும், மாரியென்றழைத்தாலும் தாய் ஒருத்தி தானே!) இப்படிக் கடிதம் எழுதுவதை ஒரு

வழியாக பயன்படுத்தி வந்தாராம். அடுத்த நாள் அம்மா குணமடைந்து விட்டார்களாம். இது ஒருமுறை அல்ல. அவருடைய சிறுவயதில் பலமுறை நடந்திருக்கிறதாம்.

**டாக்டருக்குக் கடிதம்**

டாக்டர் இதைச் சொன்னதும், நான் கேட்டேன்: “டாக்டர் நாங்களும் இப்படிக் கடிதம் எழுதி வைத்தால் நீங்க தெரிஞ்சுப்பிங்களா?” என்று. காரணம், எனக்கு ஒரு பிரச்சினை இருந்தது. அது வெகுவாக என் மனத்தைப் பாதித்துக் கொண்டிருந்த நேரமது. அது தனிப்பட்ட விஷயம். பிரச்னை முக்கியமல்ல. அதை டாக்டர் எப்படிக் கையாண்டார் என்பதுதான் நான் பேச விழையும் செய்தி. எல்லோர் முன்னிலையிலும் அதை அவருடன் விவாதிக்கத் தயக்கமாக இருந்தது. நான் மட்டுமன்றி மற்றவரும் சம்மந்தப்பட்டிருந்ததால், டாக்டர் அனுமதித்தால், கடிதத்தில் எழுதி என் பிரச்சினைக்குத் தீர்வு காணுவது சுலபம் என்பதால், கேட்டேன். “நீ எப்படிச் சொல்லணும் என்று நினைக்கிறாயோ அப்படிச் சொல்லு, நான் தெரிஞ்சுக்கறேன்” என்றார். 'எழுதி என் வீட்டில் வைத்தால் இவர் எப்படிப் படிப்பார்?' என்ற சந்தேகம் என் மனதில் இருந்தது. இது ஆரம்ப காலம். மனதில் இருப்பதைப் படிப்பவருக்கு, கடிதத்தில் இருப்பதைப் படிப்பதா சிரமம்? என் ஆணவம் பீடித்த மனதுக்கு அப்போது அது தெரியவில்லை. ஒரு விஷயத்தை ஊன்றிக் கவனித்தால் புரியும். அவர் பேசுவது எல்லாமே, எப்போதுமே எளிமையாக, நேரிடையாக, தெளிவாகத்தான் இருக்கும். அவர் பேச்சில் எப்போதுமே சிக்கல் ஏதும் இருக்காது. சிக்கல் (complication) அனைத்தும் நம் மனத்தில்தான். உண்மை எப்போதுமே எளிமையானது, குழப்பமில்லாதது. நாம் அதைப் புரிந்து கொள்வதில், அணுகும் விதத்தில்தான் சிக்கல் ஏற்படுகிறது. நம் மனத்தின் இயல்பு அது. ஒரு விஷயத்தைப், புரிந்துகொள்ள முடியவில்லை, அல்லது தவறாகப் புரிந்துகொள்கிறோம் என்றால் அதற்குக் காரணம் நம் சிக்கலான மனம்தான் என்பது வெளிப்படையான உண்மை.

இந்த உண்மை புரிய வேண்டுமென்றாலும், மனமடங்கி ஆணவம் ஒழிந்தாலன்றி நடவாது என்பதை இப்போது தெரிந்துகொண்டேன். அதற்குப் பல காலம் தேவைப்பட்டது. இப்போதுகூட அவரை முழுமையாகப் புரிந்துகொண்டேன் என்று கூற முடியுமா? முடியாது. 'Tip of the iceberg' என்று சொல்வார்களே அதுபோல, சாகரத்தின் ஒருதுளி நீரைத்தான் கையில் எடுத்திருக்கிறேன்.

எனக்கிருந்த பிரச்சினையைக் கடிதத்தில் எழுதினேன். ஆனாலும் டாக்டரிடம் சொல்லத் தயங்கிய செய்தியை மட்டும் எழுதாமல் விட்டுவிட்டேன். எழுதாவிட்டால் அவருக்குத் தெரியாது என்ற எண்ணத்தில்! என் சிறுபிள்ளைத்தனத்தை எண்ணி இப்போது எனக்குச் சிரிப்பு வருகிறது. எழுதிய கடிதத்தை என் அறையில் இருந்த அவர் புகைப்படத்தின் முன் வைத்து அதன்மேல் ஒரு பேப்பர் வெயிட்டை வைத்தேன். அடுத்தநாள் மருத்துவமனைக்குப் போனேன். பதில் சொல்வார் என எதிர்பார்த்தேன். அவர் ஒன்றும் சொல்லவில்லை. அடுத்த நாளும் பதிலில்லை. சிலநாட்கள் சென்றன. அவர் என் கடிதத்தைப் படித்ததற்கான அறிகுறி எதுவுமில்லை. என் பொறுமை கரைந்துபோயிற்று. ஏமாற்றம் அதிகமானது. சில நாட்களுக்குப் பிறகு பொறுமையிழந்து கேட்டுவிட்டேன். "டாக்டர், லெட்டர் எழுதிவைத்தேன். பார்த்தீர்களா?" என்று. என்பக்கம் திரும்பாமலே பதில் சொன்னார். "நீதான் ரொம்ப சிக்கலாக்கி வைத்திருக்கிறாயே. பார்ப்போம், மெல்லத்தான் சரி செய்யணும்." என்றார். அவர் பதிலிலிருந்தே அந்தக் கடிதத்தைப் படித்துவிட்டார் என்பது தெரிந்தது. உடனே, எப்படி படித்தார் என்ற கேள்வி. இந்த மூளையை உபயோகித்து எதைக் கண்டுபிடிக்க முடியாதோ அதைக் கண்டுபிடிக்க முயன்றுகொண்டிருந்தேன்.

ஒரு விஷயத்தைக் கவனித்திருப்பீர்கள். என் குருவிடம் எனக்கேற்பட்ட நம்பிக்கையின்மை, சந்தேகம், சோதித்து பார்ப்பது போன்ற என்னுடைய பல குறைகளை வெளிப்படையாக எழுதுகிறேன். அதற்கு ஒரு முக்கியமான காரணமுண்டு. என்னுடைய இத்தகைய குணங்களால் இந்தப் பாதையில் என் முன்னேற்றம் வேகமாக அமையவில்லை என்பது என் வருத்தம். இதைப் படிக்கும்

புதியவர்கள், இத்தகைய குறைகளை ஆரம்பமுதலே நீக்கிவிட்டால், குருவைப் புரிந்து கொள்வதிலும், அவர் குறிப்பால் உணர்த்தும் விஷயங்களைச் சரியாகப் புரிந்துகொண்டு வேகமாக முன்னேறுவதிலும் சுலபமான அணுகுமுறை அமையும் என்ற காரணத்தால் என் அனுபவங்களை, குறைகளை அப்படியே எழுதுகிறேன்.

**டாக்டரின் தீர்வு**

மீண்டும் விஷயத்துக்கு வருகிறேன். சிக்கலைப்பற்றிச் சொன்னேன். அதைச் சார்ந்த ஒரு செய்தியையும் சொல்லாமல் விட்டால் அனுபவத்தின் பயன் முழுமை பெறாது. ஒரு முடிச்சு அவிழும் போது அதன் முடிவு இருவிதமாக அமைவது இயல்பு. ஒருவருக்குச் சாதகமாகவும் மற்றவருக்கு பாதகமாகவும் இருக்கும். இந்த விஷயத்தில் நான் எதிர்பார்த்ததுபோல் முடிந்தால் என் மனதுக்கு ஏற்புடையதாக இருக்கும் என நினைத்தேன். அதைச் செய்வார் என எதிர்பார்த்தேன். நாட்கள் உருண்டோட, அந்தச் சிக்கல் பெரிதாகி, என் எதிர்பார்ப்புக்கு எதிர்மறையான நிகழ்வுகள் ஏற்படத் தொடங்கின. ஒரு வழியாக ஆரவாரம், ஆர்ப்பரிப்பு, ஓசைகள் அடங்கி அமைதி திரும்பியது. எனக்குப் பெருத்த ஏமாற்றம். 'இவர் ஏதோ செய்வார் என எண்ணினேன். என்ன செய்தார்? என்ன செய்ய முடிந்தது இவரால்? ‘நான் பார்த்துக் கொள்கிறேன் போ’ என்று சொன்னாரே. என்ன பார்த்தார்? என் எதிர்பார்ப்பு வீணாகிப் போனதே'. என மனதுக்குள் குமைந்து கொண்டிருந்தேன். இவரை நம்பி ஏமாந்து விட்டேன் என்றெல்லாம் நினைத்தேன். என் மனநிலை அப்போது அப்படித்தான் இருந்தது. ஆனாலும், ஆன்மிகப் பாதையிலிருந்தோ, டாக்டரிடமிருந்தோ விலகிவிடுவதற்கான போதிய காரணமாக இது அமையவில்லை. அன்றிலிருந்து சற்றேறத்தாழ ஆறு வருடங்களுக்குப் பிறகு அந்த விஷயத்தை ஆராய்ந்து பார்த்தால், எவ்வளவு அழகாக சிக்கலை விடுவித்து, என்னையும் அதிலிருந்து மீட்டு, அதில் சம்மந்தப்பட்ட மற்றவர்களுக்கும் எத்தகைய பாதிப்புமின்றி ஒரு தீர்வைக் கொடுத்து விட்டார் என்பது

புரிந்தபோது, எப்படி நன்றி பாராட்டுவது! வார்த்தைகள் இல்லையே அகராதியில்! என்ன அழகான, நேர்மையான தீர்ப்பு! இந்தக் குழப்பத்திற்கு இதைவிட நேர்த்தியான ஒரு நல்ல தீர்வை வேறுயாரும் கண்டிருக்க இயலாது என்பது என் தீர்மானமான எண்ணம். என் எதிர்பார்ப்புக்கேற்ப ஒரு தீர்வு ஏற்பட்டிருக்குமேயானால், என் ஆன்மிகப் பயணத்தில் பெரும் பின்னடைவு ஏற்பட்டிருக்கும் என்பது மிகத்தெளிவாக இப்போது புரிகிறது. அதில் சம்பந்தப்பட்ட மற்றவர்களும் பாதிக்கப்பட்டிருப்பார்கள். நன்றியுணர்வால் கண்கள் பனிக்கின்றன. நான் எப்படி நன்றி சொல்வேன் டாக்டருக்கு? "Don't thank me" என்பார். இவரிடம் பட்ட நன்றிக்கடனைத் தீர்க்கமுடியாது. முடிந்தாலும் தீர்க்க விருப்பமில்லை. காரணம்: கடனைத் தீர்த்தால் விடுதலை கிடைத்துவிடுமே. எனக்கு விடுதலை வேண்டாம். என்றென்றைக்கும் இவருக்கு நிரந்தர அடிமையாக இவரைப் பிரியாதிருக்கத்தான் விருப்பம்.

இந்த நிகழ்ச்சியை விவரித்ததற்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று, அவருடைய சக்தி எத்தகையது என்பதை நான் உணர்ந்தது எப்படி என்பதை நீங்கள் தெரிந்துகொள்ள. இரண்டாவது காரணம் என்னவென்றால், ஒரு காலகட்டத்தில் எது சரியாக இருக்கிறது அல்லது இருக்கும் என்று நாம் நம்பி எதிர்பார்த்து முயல்கிறோமோ, அதுவே, வேறொரு காலகட்டத்தில் தவறாகத் தெரியும்; தவறாகிவிடும். நாம் சரி என்று நம்பியது சரியான தீர்வாக இல்லாமல் போகலாம். தவறு என்று நம்பியது சரியான தீர்வாக மாறலாம். சரி, தவறு என்பது காலத்தின் பாற்பட்ட விஷயம். காலத்தால் மாறாத ஒரு 'சரி': 'உண்மை' மட்டுமே! நமக்கு எது நல்லது, எது தீயது என்பதை, நம்மை விட குருவே நன்கு அறிவார். எனவே நமக்கென்று ஒரு விருப்பத்தை வைத்திராமல், அவருடைய விருப்பமே நம்முடைய விருப்பமாக வாழ்க்கை அமைந்துவிட்டால், நம் வாழ்க்கையில் தவறுகள் நிகழ வாய்ப்பே இல்லாமல் போய்விடும். தவறுகள் அற்ற சத்ய, தர்மப் பாதையில் நம் வாழ்க்கை சிரமமின்றி முன்னேறும். எது எனக்கு மகிழ்ச்சியைத் தந்திருக்கும் என்று அன்று நான் நம்பினேனோ அதற்கு முற்றிலும் எதிர்மறையான முடிவு இன்று

எனக்குப் பெரு மகிழ்ச்சியையும், மன நிறைவையும், மன அமைதியையும் தருகிறது. எனக்கு மட்டுமல்ல, அந்தப் பிரச்னையில் சம்மந்தப்பட்ட அனைவரும் இன்று மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். ஒரு நல்ல முடிவு என்பது இப்படித்தானே இருக்க வேண்டும்! இத்தகைய தீர்வை, முடிவை கண்ட தலைவனுக்கு நன்றி சொல்ல வார்த்தைகள் போதா! “குருவிடம் சேர். குருவின் சேர்க்கை, மேலும் மேலும் கர்ம வினைகள் சேரவிடாமல் நம் வாழ்க்கையை, தவறுகள் அற்ற ஆன்மிகப் பாதையில் நிலைபெறச் செய்யும்.”

டாக்டர் உடனிருந்த காலத்தில், மற்ற சீடர்களைப்போல் நான் தினமும் அவரை நேரில் சென்று பார்த்ததில்லை. அப்படிச் சந்திக்கவேண்டும் என்ற அவா என்னிடம் இருந்ததில்லை. வேலை, கடமை என்ற சிந்தனை அதிகமிருக்கும். தியானத்துக்கென்று நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் தியானம் செய்வேன். இங்குதானே இருக்கிறார், நாளை பார்த்துக்கொள்ளலாம் என்று நினைப்பேன். வாரத்தில் இரண்டு அல்லது மூன்று நாட்கள் ஆலந்தூர் மருத்துவமனையில் காலை நேரத்தில் சென்று பார்த்து வருவேன். சர்க்கரைச்செட்டித் தெருவிலிருக்கும் அவருடைய கிளினிக்கை நாடிச் செல்வது மிகக்குறைவு. காரணம்; இரவில் வீடுதிரும்ப வெகு நேரமாகிவிடும். காலையில் 6 மணிக்குக் கடையைத் திறந்து வியாபாரத்தை ஆரம்பிக்க வேண்டும். இரவு கடையை மூடுவதற்கு 10 மணிக்கு மேலாகிவிடும். எனவே காலையில் ஆலந்தூரில் பார்த்துக் கொள்ளலாம் என்று சர்க்கரைச் செட்டித் தெரு கிளினிக்கில் அவரை பார்ப்பதைத் தவிர்த்துவிடுவேன்.

என்னைவிட துர்பாக்கியசாலி யாரும் இருக்க முடியாது. அருகிலிருக்கும் போது வேலை மற்றும் சோம்பல் காரணமாக அவரைச் சந்திப்பதைத் தவிர்த்து விட்டேன். நாளை பார்த்துக் கொள்ளலாம் என்று நாளைத் தள்ளிப்போட்டேன். அப்படி எண்ணியதாலோ என்னவோ, அதன் பிறகு இரண்டு மூன்றாண்டுகள் தமிழ்நாடு முழுவதும் ஒரு பட்டி தொட்டி விடாமல், காடு, மலை என்று எங்கெல்லாம் அலைந்திருப்பேன் இவரைத் தேடி! நான் மட்டுமா? நாங்கள் ஆறு பேர், நேரம் காலம்

பார்த்ததில்லை. இரவு பகல் தெரியாது. ஒய்வு ஒழிச்சல் இல்லாது அவரைத் தேடித் தேடிக் களைத்திருக்கிறோம். தோல்வியால் துவண்டிருக்கிறோம். கைக்கெட்டிய தூரத்தில், கண்ணெதிரே இருந்த போது அலட்சியமாக இருந்துவிட்டேன். பிரிந்தபோதுதான் தெரிந்தது இழப்பின் மதிப்பு.

ஒரு பொருளாகட்டும், உறவாகட்டும் அது நம் கண்ணெதிரில் இருக்கும்போது அதன் அருமை நமக்குத் தெரிவதில்லை. தானாகவரும் எதற்கும் அதிக முக்கியத்துவம் நாம் கொடுப்பதில்லை. அது இறைவனாக இருந்தாலும் அப்படித்தான். மனதின் இயல்பு அது. கிடைக்காத ஒன்றின்பின் தேடி ஓடுவதும், தேடிவரும் ஒன்றை அதன் மதிப்பு தெரிந்தாலும் சுலபமாக கிடைப்பதால் உதாசீனம் செய்வதும் மனித இயல்பு. பிரிவில்தான் உறவின் அருமையும் அதன் பெருமையும் தெரிகிறது. தெரிந்தநாள் முதற்கொண்டு என் இழப்பின் பரிமாணத்தை எண்ணி வருந்திக்கொண்டிருக்கிறேன். ஒருவர் பெற்ற தாய் தந்தையைப் பிரிந்து வாழலாம். பெற்றவர் பிள்ளைகளைப் பிரிந்து வாழலாம். காதலன் காதலியைப் பிரிந்து வாழலாம். நல்ல நண்பர்களைப் பிரிந்தும் வாழ்க்கை தொடரலாம். யாரும் யாரையும் பிரிந்து வாழலாம். இந்த உறவுகளைப் பிரியும் துன்பம் தாங்கக் கூடியதே. காலத்தால் மறைந்து போகக் கூடியதே. ஆனால் சத்குருவைப் பிரிந்து தவிக்கும் துயரத்திற்கு வேறு எந்தத் துயரமும் நிகராகாது. ஏனென்றால் குருவை இழந்த ஒருவன் அனைத்தையும் இழந்து விடுகிறான். குரு இருந்தால் அவனுக்கு எல்லாம் இருக்கிறது. குருவிடம் அவன் எல்லா உறவுகளின் பரிமாணங்களையும் காண இயலும். நான் சொல்வதின் பொருள் விளங்க வேண்டுமென்றால், பாரதியின் பாடல்களைப் படியுங்கள். அவர் கண்ணனை எத்தனை பாவங்களில் அனுபவித்துப் பாடல்களை இயற்றியுள்ளார். நண்பனாக, சேவகனாக, காதலியாக, குழந்தையாக, ஆசானாக. நிறமற்ற தண்ணீரில் எந்த வண்ணத்தைக் கலந்தாலும் நீர் அவ்வண்ணமாக மாறிவிடுவது போல, சத்குருவும் தன் பக்தனுக்கு அவன் நினைக்கும் எந்த உறவாகவும் பரிமளிக்க முடியும். ஆனால் மற்ற உறவுகளில் குரு இருக்கவேண்டுமென்பதில்லை. இந்தப் பிறவியின் பெரும்பகுதியை

என் சிறிய தந்தையாரின் அருகாமையில்தான் கழித்தேன். அவர்பால் நான் கொண்டிருந்த அன்பை அளவிட முடியாது. அவர் என்னைப் பிரிந்து பதினைந்து ஆண்டுகளுக்குமேல் ஆகின்றன. ஆரம்பத்தில் அவர் பிரிவு என்னை வெகுவாக பாதித்தது. ஆனால் இப்போதெல்லாம் அவர் நினைவு எப்போதோ ஒரு முறைதான் வருகிறது. இதற்கு முன்பு, குரு என்று எண்ணி நான் அணுகிய ஓரிருவரைப் பிரியும்போது என்னுள் எந்த பாதிப்பும் இல்லை. டாக்டரை பிரிந்தபோது வேதனையைத் தவிர வேறெதுவும் மிஞ்சவில்லை. காலம் செல்லச் செல்ல நினைவலைகள் மிகவும் ஆக்ரோஷமாக ஆக்ரமிக்கின்றனவே தவிர சற்றும் குறைந்தபாடில்லை. சத்குருவால் ஆட்கொள்ளப்பட்ட ஒருவன் அவரைத் தற்காலிகமாகப் பிரியும்போதுகூட , அந்தப் பிரிவின் துன்பத்தைத் தாங்கமுடியாது. இந்தச் சோகத்திலும் ஒரு சுகம் இருப்பது உண்மைதான். ஒருநாள் சேருவோம் என்ற நம்பிக்கை தரும் சுகம் அது. இந்த உறவின் தன்மையை விளக்குவதும், புரிந்துகொள்ள முனைவதும் மிகவும் சிரமம். அனுபவத்தால் மட்டுமே முழுமையாக உணரமுடியும். இந்தக் கோணத்திலிருந்து பார்த்தால் ஓரளவு புரிந்துகொள்ளும் சாத்தியக்கூறு இருக்கிறது.  இந்தப் பிரபஞ்சத்தில் பரம்பொருள் ஒருவன்தான் புருஷன். மற்ற ஜீவர்கள் அனைவரும் ஸ்திரீ ரூபம்/ ஸ்திரீ பாவம் (Bhavam) தான் என்ற தத்துவத்தை உணர்ந்தால், இந்தப் பிரிவின், கூடலின், சோகத்தின், தாபத்தின், உணர்ச்சி பாவங்களின் பொருள் விளங்கும்.

**பட்டினத்தார் தரிசனம்**

மேலே குறிப்பிட்டிருந்த ஒரு நிகழ்ச்சி இப்போது நினைவு வருகிறது. நினைவில் நிற்கும்போதே விஷயத்தை எழுத்தில் பதிவு செய்து விடுதல் நன்று. டாக்டரைப் பிரிந்த சிறிது காலத்தில், நாங்கள் 11 பேர் டில்லி – ரிஷிகேஷ் போகப் பயணமானோம். அதை மேலே விரிவாக எழுதியிருக்கிறேன். பயணத்தைத் தொடங்கிய அன்று சென்ட்ரல் ரயில்நிலைய வளாகத்தில் ஸ்டேஷனை நோக்கி

நானும் சம்பந்தமும் நடந்து போய்க் கொண்டிருந்தோம். அப்போது அந்த இடம் ஆள் நடமாட்டம் இல்லாமல் வெறிச்சோடிக்கிடந்தது. எதிரே சுமார் நூறு – இருநூறு கெஜத்துக்கப்பால், ஒருவர் வந்துகொண்டிருந்தார். தோள்வரை தொங்கும் நீண்ட முடி. நெற்றியில் பட்டைப் பட்டையாக திருநீறு. சற்று நீளமான மீசை. குறுந்தாடி சற்று நீளம்தான். ஆனால் மார்பைத் தொடவில்லை. அசாதாரண ஒளி பொருந்திய கண்கள். தீட்சண்யமான பார்வை. கையில் ஒரு கோல். அரையில் முழங்கால்வரை கட்டிய வேட்டி. வற்றிய ஆனால் வடித்த சிலை போன்ற உறுதியான தோற்றம்தரும் தேகம். கைகளிலும் திருநீற்றுக் கீற்றுகள். அவ்வளவே! அவர் உடம்பில் வேறெதுவும் இல்லை. நேராகப் பார்த்து நடந்து வந்துகொண்டிருக்கிறார். அவர் பார்வையும் நேராகவே இருக்கிறது. ஆனாலும் அவர் என்னைப் பார்க்கிறார் என்று நான் உணர்கிறேன். இவர் யார்? யாரையோ நினைவூட்டுகிறாரே! சித்தராக இருப்பாரோ! மொத்தத்தில் இவர் சாதாரண மனிதர் அல்ல என்பது மட்டும் உறுதியாகத் தெரிந்தது. இவரிடம் பேசிவிட வேண்டும் என்ற முனைப்பு, கூடவே ஒரு தயக்கம். எது தடுத்ததென்று புரியவில்லை. பேச முடியவில்லை. அவர் என்னருகில் வந்தார். சற்றேறக்குறைய ஐந்து அல்லது ஆறு அடி தூரத்தில் வரும் போது, அவர் பார்வை என் மேல் பட்டது. பார்க்காமல் என்னைப் பார்த்தார். என்னைக் கடந்து போய்க் கொண்டிருந்தார். அவரை வணங்க வேண்டும், அவருடன் பேசவேண்டும் என்ற ஆவல் நெஞ்சில். ஆயினும், வாய்ப்பு இருந்தும் என்னால் பேசமுடியவில்லை. பிரமை பிடித்தவன் போல் அவர் போய்க் கொண்டிருப்பதை அப்படியே நின்று பார்த்துக் கொண்டிருக்கிறேன். நான் நின்றுவிட்டதால், என்னுடன் வந்துகொண்டிருந்த நண்பர் சம்பந்தமும் நின்று விட்டார். அவரும் நான் பார்க்கும் திசையைப் பார்த்துக் கொண்டிருந்தார். அவரும் ஏதும் பேசவில்லை. அவர் எப்போதும் அதிகம் பேசாதவர். நாங்கள் பார்த்துக் கொண்டிருக்கும்போதே வெளிப்புற மதில் சுவற்றைக் கடந்து, சாலையில் இடது புறமாகத் திரும்பி கண்ணிலிருந்து மறைந்து விட்டார். அப்போது, தூரத்தில் சம்பந்தத்தின் மனைவியும் மகனும் வந்து கொண்டிருந்தனர். ஓரிரு

நிமிடங்கள் செயலற்று இருந்த நான், சம்பந்தத்திடம் கேட்டேன்,

“அவரைப் பார்த்தீர்களா” என்று.

“யாரை?” என்று வினவினார்.

“இப்போது ஒருவர் இடுப்பில் துண்டு மட்டும் கட்டிக்கொண்டு கையில் ஒரு கோலுடன் நம்மைக் கடந்து போனாரே. நானும் அவரைத்தானே நின்று பார்த்துக் கொண்டிருக்கிறேன்” என்றேன்.

“துண்டு கட்டிக்கொண்டு எதிரே போன யாரையும் நான் பார்க்கவில்லையே. என் மனைவியும் மகனும் வருவதைப்பார்த்து, அவர்கள் அருகே வரட்டுமென்று நிற்கிறீர்கள் என்று நினைத்தேன்” என்றார்.

நான் ஆச்சரியத்தில் உறைந்து போனேன். எப்போதும் மக்கள் நடமாட்டம் அதிகமிருக்கும் பகுதி. அன்று அதிகமாக ஆளரவமின்றி வெறிச்சோடிக் கிடக்கிறது. துண்டு மட்டும் கட்டிக்கொண்டு வித்தியாசமான கோலத்தில் ஒருவர் மூன்று அல்லது நான்கு அடி தூரத்தில் எங்களைக் கடந்து போகிறார். ஆனால் நண்பர் பார்க்கவில்லை. எனக்கு உடனே புரிந்துவிட்டது. இது யாரோ ஒரு சித்தருடைய தரிசனம் என்று. இதில் கவனிக்க வேண்டிய விஷயம் ஒன்று உண்டு. அவரை நான் பார்த்த கணத்தில் என் மனத்தில் பட்டினத்தாரின் நினைவு வந்து போனது. அப்பெருந்தகையின் நினைவு அக்கணத்தில் ஏன் என் மனத்தில் எழவேண்டும்? உருவ ஒற்றுமை ஒரு காரணமாக இருக்கலாம். அந்த எண்ணம் என் மனதில் விதைக்கப்பட்டதா? அவர்தான் என்று எனக்கு உணர்த்தப்பட்டதா? நான் கண்டது அவரைத்தான் என்பதை உறுதி செய்வதற்காக இந்த ஏற்பாடா? ஏதோ ஒன்று. ஆனால் உண்மை அதுதான். எவ்வளவு பெரியவர், அவர் நேரில் வந்து தரிசனம் தரும் அளவு தகுதி வாய்ந்தவனா நான் என்ற சந்தேகமும் கேள்வியும் மனதில் ஓட, அவர் யாராக இருந்தாலும், மனதுக்குள் வணங்கி, அந்த தரிசனம் தந்த ஆனந்தத்தை அனுபவித்துக் கொண்டிருந்தேன். பின்னாளில் இதற்கான விளக்கமும் எனக்குத் தரப்பட்டது.

## கண்ணனின் பாதையில் என் பயணம்......

—கேசவன்

அமர்வு ஒன்றில் பட்டினத்தடிகளும் ஒருமுறை ஊடகத்தின் மூலமாக எங்களுடன் உரையாடிக் கொண்டிருந்தார். நீண்ட நாட்களாக என் மனதில் இருந்த இந்த சந்தேகத்தை அவரிடம் நேரிடையாகவே கேட்டுவிட எண்ணிப் பணிவோடு அவரிடம் கேட்டேன்.

”ஐயா, வெகு நாட்களாக என் மனதில் ஒரு சந்தேகம். முதல் முறையாக நாங்கள் ரிஷிகேஷ் பயணம் கிளம்பிய சமயம், மூர்மார்கெட் வளாகத்தில் ஒரு பெரியவரைக் கண்டேன். அது தாங்களாகத்தான் இருக்கவேண்டும் என்பது என் அனுமானம். அது உண்மைதானா எனத் தெரிந்து கொள்ள ஆவலாக உள்ளேன். கேட்பது தவறில்லை என்றால், சொல்ல முடியுமானால், நான் நினைத்தது சரியென்றால், தாங்கள் அதை உறுதிப்படுத்த வேண்டும்” எனக் கேட்டுக் கொண்டேன். அவர் ஒரு சிறு புன்முறுவலுடன் எனக்கு பதிலளித்தார்.

“குழந்தைங்க எல்லாம் போறாங்க, போய்ப் பார்த்துட்டு வாங்கன்னு சொன்னார். அதனால் வந்தேன்” என்றார்.

சொன்னார் என்று அவர் குறிப்பிட்டது டாக்டரை. எவ்வளவு பெரிய மஹான் அவர். நாமல்லவா பெரியவர்களைத் தேடிச்சென்று வணங்க வேண்டும்! ஆனால் பெரியவர்களே வந்து நம்மை ஆசீர்வதிக்கிறார்கள். “போய்ப் பார்த்துட்டு வாங்கன்னு சொன்னார். அதனால் வந்தேன்” என்றார். இந்த அதிசயம் எதைச் சுட்டுகிறது? இது என் குருநாதன் யார் என்பதைக் குறிக்கிறது. என் குருநாதனின் நிலை என்ன என்பதைக் குறிக்கிறது.. இவர் சொன்னால் பெரிய சித்தர்கள் வருகிறார்கள், யோகிகள் வருகிறார்கள், ரிஷிகள் வந்து பேசுகிறார்கள். வேறு எவராலும் இதை நிகழ்த்த இயலுமா? இவர் மண்ணில் வந்திருப்பது சாதாரண நிகழ்வல்ல. மாதம் ஒருமுறை வரும் பௌர்ணமியைப் போன்றதல்ல. வருடாவருடம் நடக்கக்கூடியதுமல்ல. ஏன், ஆயிரம் வருடங்களுக்கு ஒரு முறை நிகழக்கூடியதுமல்ல. பல்லாயிரக்கணக்கான வருடங்களுக்கு ஒரு முறை நிகழ்வது. இறைவன் மனித உடலெடுத்து மண்ணில் கால் பாவி உலகில் வலம் வருவது என்ன பண்டிகைகள்

போல் வருடா வருடமா நிகழ்ந்து கொண்டிருக்கிறது? அதர்மம் நிமிர்ந்து தலைவிரித்துக் கோரத் தாண்டவமாடும் காலத்தில், இதற்கு மேலும் தாங்கமுடியாது என்று ஆற்றாது அழும் குரல்கள் வானை முட்டும் போது இறைவன் கருணையால் கீழிறங்கி வருகிறான். அவனுக்கு மட்டுமே இத்தகைய செயல்கள் சாத்தியமாகின்றன. சாமானியர்களால் சாதிக்கமுடியாத காரியமிது. இறைவனால் மட்டுமே சிலவற்றை நிகழ்த்த முடியும். நிராயுதபாணியாக, அன்பு, கருணை, தியாகம் என்ற கவசங்களைத் தரித்து அதர்மத்துடன் போராட, வெற்றிகாண அவனால் மட்டுமே முடியும். முட்கிரீடத்தைச் சுமக்கும் சக்தி அவனுக்கு மட்டுமே உண்டு. எனவே, இந்த இறைபணியில், பங்கேற்க நமக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தை நழுவவிடலாமா? எனக்குத் தெரிந்தவை உங்களுக்கும் தெரியவேண்டும். நானறிந்த உண்மையை உலகறிய வெளிப்படுத்த வேண்டும், நான் பெற்ற அனுபவத்தை தகுதி உள்ள அனைவரும் பெறவேண்டும் என்பதையும், உலகியல் விஷயங்களில் அதீத ஈடுபாடு காரணமாக உண்மையை நழுவ விட்டுவிடக்கூடாது, இன்னும் பிறவிகள் பல எடுத்துத் துன்புறக் கூடாது என்ற ஆதங்கம் எனக்கு. இப்படி ஒரு சந்தர்ப்பம் இனி எப்போது வாய்க்கும் என நிச்சயமாக யாராலும் கணிக்க இயலாது. இவர் நம்முடன் இருக்கும் போதே இனம் கண்டு, அவர் காட்டும் பாதையில் நடந்து, அவர் மீளும்போது அவருடனே நாமும் மீண்டுவிடுவது நமக்கு நல்லது. அவர் உடனிருந்து உதவி செய்யும் போதே வாசியால் கர்ம வினைகளை எரித்து, சத்ய தர்மத்தினின்று நழுவாத வாழ்க்கையின் மூலம் நிர்மலமாகிப் பிறவிச் சுழலை அறுத்து அவருடன் செல்ல இயலாதென்றால், தனியொருவனாக மீண்டும் மீண்டும் பிறந்து அதை சாதிப்பதென்ன சுலபமா? அதனால், டாக்டர் அருகிருக்கும்போதே, அவர் கை கொடுக்கும்போதே, அவர் கரம் பற்றிக் கொண்டு மேலே சென்றுவிடுவது சாலச் சிறந்தது. இனியொரு சந்தர்ப்பம் எளிதில் கிடைக்காது.

**“என்பாதை இறைவனை நோக்கிச் செல்கிறது. நம்பிக்கையுடன் என்னோடு வாருங்கள். உங்களையும் அழைத்துச் செல்கிறேன்”** என்று சொல்கிறார் டாக்டர்.

யாரால் இத்தனை உறுதியாக இப்படிச் சொல்ல முடியுமென்று யோசியுங்கள்.புனித அன்னை ஒருமுறை செஷனில் வந்தபோது சொல்லியிருக்கிறார்கள். “நித்தியை நழுவ விட்டீர்களானால், மீண்டும் அவரைக் கண்டுபிடிப்பது மிகவும் கடினம்” என்று.

எனவே இவரை இனம் கண்டுகொள்ளுங்கள். அவர் காட்டும் வழியைப் பின்பற்றுங்கள். உள்ளிருந்து மெல்லிய குரலில் அவர் பேசும்போது கவனமாகக் கேளுங்கள் என்று இதைப் படிக்கும் அனைவரையும் அன்புடன் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். அவர் யார் என்பதற்கு இன்னும் எத்தனையோ சான்றுகள். மற்றொரு நிகழ்ச்சி நினைவு வருகிறது. அதையும் சொல்கிறேன்.

என் சிறிய தந்தையாரின் பெயர் மாசிலாமணி. பெயருக்கேற்ற பெரியவர். பக்தியில் மாசில்லாத மாணிக்கத்தை ஒத்தவர். அவரைப் பற்றி ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். அவரைப் போன்றவர்களை வீர வைணவர்கள் என்று கூறுவர். சிறு வயதில் அவர் என்னை சிதம்பரம் நடராஜர் கோவிலுக்கு அழைத்துச் செல்வார். கோவிலில் கோவிந்தராஜப்பெருமாள் சன்னதி இருந்தாலும், அக்கோவில் நடராஜர் கோவில் என்றுதான் வழங்கப்படுகிறது. கோவிலில் கோவிந்தராஜப்பெருமாள் சன்னதிக்குள் நுழையும் முன்பு, வாயிலில் ஓர் இடத்தில் நின்றால், கோவிந்தராஜப்பெருமாளையும், நடராஜரையும் ஒரு சேரக் காணலாம், சேவிக்கலாம், வணங்கலாம். இவர் என்னை அந்த இடத்தில் நிற்க விடமாட்டார். அங்கிருந்து கும்பிட்டால் அந்த மரியாதை நடராஜருக்கும் போய்ச்சேரும் என்பதால், என்னை பெருமாள் சன்னதியின் உள்ளே அழைத்துச்சென்று அங்கு நின்று பெருமாளை சேவிக்கச் சொல்வார். நடராஜர் சன்னதி பக்கம் திரும்பிப்பார்க்கக்கூட விடமாட்டார். அவருடைய பக்தி, மரியாதை, வணக்கம் அனைத்தும் பெருமாளை மட்டுமே சேரவேண்டுமாம். இப்படிப் பட்டவர்களைத்தான் வீர வைணவர்கள் என்று சொல்வார்கள். நான் இவரை விளையாட்டாக, வைணவத் தீவிரவாதி எனச் சொல்வதுண்டு. அப்படிப்பட்டவர் என் சிறிய தந்தையார். அவருடைய கண்காணிப்பில் வளர்க்கப்பட்டதால், நானும் பெருமாள் பக்தனாகத் தான்

வளர்ந்தேன். என் சிறிய தந்தையின் மறைவுக்குப் பிறகு சமீபத்தில்தான் நடராஜர் சன்னதிக்கு முதல் முறையாக சென்று நடராஜரைத் தரிசித்துவிட்டு வந்தேன் என்பது கவனிக்க வேண்டிய செய்தி. அப்படிப்பட்ட என் சிறிய தந்தையை டாக்டருக்கு அறிமுகப்படுதினேன். ஒரு நாள் ஆலந்தூர் மருத்துவமனைக்கு இவரை அழைத்துச் சென்றேன். சற்றுத் தாமதமாகிவிட்டது. அதற்குள் டாக்டர் புறப்பட்டு விட்டார். நாங்கள் சென்றபோது, டாக்டர் படியிறங்கி வெளியே வந்துகொண்டிருந்தார். என் சிறிய தந்தை எதிரே சென்றார். என் சிறிய தந்தைக்குக் கண்பார்வை சற்று குறைவு. வெள்ளெழுத்து என்று சொல்வார்களே அந்தக் குறை. எதிரே வருவது டாக்டர்தானா என்று உற்று பார்த்துக் கொண்டிருந்தார். டாக்டர் அவரைப் பார்த்ததும் இரு கரங்களையும் கூப்பி, “நமஸ்காரங்கோ” என்றார். டாக்டர் தம் சீடர்களுக்குக் கரம் கூப்பி வணக்கம் செலுத்துவதை என் குறைந்த கால அனுபவத்தில் கண்டதில்லை. ஓரிருமுறை அவர் வெற்று வெளியைப் பார்த்துக் கரம் கூப்பியதைக் கண்டிருக்கிறேன். என் கண்களுக்கு வெற்று வெளியாக தெரிந்த இடத்தில் யாராவது ஆன்மிகப் பெரியவர்கள் அல்லது தெய்வங்களில் யாராவது இருந்திருக்கலாம். என் தந்தைக்கு வணக்கம் செலுத்தினார். இவரும் பதில் வணக்கம் செலுத்தி விட்டு டாக்டரை உற்று உற்றுப் பார்க்கிறார். அது ஒரு விந்தையான காட்சி. அவர் தம் அடியார்களிடம் கொண்டிருக்கும் அன்பைக் குறிப்பிடவே இதை இங்கே குறிப்பிட்டேன். என் சிறிய தந்தைக்கு பரந்தாமனிடம் உள்ள பக்தி, ஈடுபாடு எத்தகையது என்பதை நான் நன்கு அறிவேன். அந்தக் குறைவற்ற பக்திக்கு டாக்டர் செலுத்திய மரியாதை அது என்று நான் நினைக்கிறேன். அடியார்களிடம் அவன் கொண்டிருக்கும் அன்பின் அடையாளம் அது.

இதன் தொடர்புடைய ஒரு செய்தியையும் சொன்னால் அவர்களுடைய உறவின் அடையாளம் முழுமையடையும் என்று நினைக்கிறேன். மேலும் அது எங்கள் பலருடைய அனுபவமும் கூட. டாக்டரின் பிரிவிற்குப் பிறகு, நாங்கள் சிலபேர் டாக்டரின் பெற்றோர்களைப் பார்த்துவர எண்ணி, அவர்கள் வசிக்கும் சோளிங்கர்

அருகிலுள்ள பெருங்காஞ்சி என்ற ஊருக்குச் சென்றோம். டாக்டரின் தாய், தந்தை இருவரிடமும் நலம் விசாரித்துவிட்டு, நானும் என் சிறிய தந்தையாரும் மற்றும் சிலரும் டாக்டரின் அறைக்கு சென்று அமர்ந்து தியானம் செய்யத் தொடங்கினோம். அது சிறிய அறை. அதில் ஒரு கட்டில் மற்றும் சில பொருள்கள் இருந்தன. நான் சில கதிகள் எடுக்கும் முன்னமே, என் சிறிய தந்தை என்னைப் பார்த்து, "இதோ பாருப்பா, பாற்கடல். டாக்டர் பாம்பணையில் சயனிக்கிறார். அம்மா காலடியில் அமர்ந்திருக்கிறார்கள்" என்று சொல்லிவிட்டு, திருப்பாவையிலிருந்து பாசுரங்களைப் பாட ஆரம்பித்துவிட்டார். எழுந்து வெளியே வந்து, டாக்டரின் தாய் தந்தையரைப் பார்த்து, "உங்கள் பிள்ளை அந்த மகாவிஷ்ணுதான்" என்று சொல்லி அவர்களுக்கு வணக்கம் சொல்லிவிட்டு மேலும் பாசுரங்களைப் பாட ஆரம்பித்துவிட்டார். நாங்கள் அனைவரும் பேச்சிழந்து நடப்பதை கவனித்துக்கொண்டிருந்தோம். ஒரு உண்மையான பக்தனுக்கும் இறைவனுக்கும் இடையேயான அன்புப் பரிமாற்றத்தின் வெளிப்பாடாக அது இருந்தது. சதாசர்வகாலமும் மகாவிஷ்ணுவையே தியானித்துக் கொண்டிருக்கும், அவன் நினைவில் லயித்திருக்கும் ஒரு பக்தனால் வெகு எளிதில் வெளியிலும் அவன் ஸ்வாமியை இனம்காண முடிந்தது. புரிந்துகொள்ளவும், உணரவும் மற்றவர் உதவி தேவைப்படவில்லை. இதன் முத்தாய்ப்பாக, ஒரு செய்தியைச் சொல்லவேண்டும்.

"வானிலிருந்தால் வாவென்றழைப்பதும், வையகம் வந்தால் இனம்காண மறுப்பதும் மானுடமய்யா மாறுதலில்லை" என்ற பாடலின் வரிகள் எனக்கு நினைவு வருகிறது. உண்மையான அடியார்கள் அவனைச் சுலபமாக இனம் கண்டுகொள்கிறார்கள். ஆணவத்தில் திளைப்பவர் சங்கு சக்கரதாரியாக எதிரில் வந்தாலும், யாரோ கோடம்பாக்கம் ஸ்டுடியோவிலிருந்து நடிகர் வேஷத்தோடு வந்திருக்கிறார் என்றுதான் சொல்வார்கள்.

| | |
|---|---|
| *"மாயையிது மாயையடி,* | *உன்னையே யாகத்தில் வை!* |
| *மந்திரத்தில் சாயாது! அது* | *உள்மூச்சை யோகத்தில் வை!* |
| *வேய்ந்திருக்கும் ஓடெல்லாம்* | *உனக்கெந்தத் துயர் வரினும்,* |
| *தந்திரத்தில் வீழாது!* | *உடன் என் தோள்களில் வை!"* |

இவை அம்மா எழுதிய பாடலிலிருந்து சில வரிகள்.

**கண்ணழகு**

டாக்டரின் கண்களைப்பற்றிக் குறிப்பிடும்போது பின்னால் அதைப்பற்றி எழுதுகிறேன் என்று சொன்னேன். இதோ அந்த அனுபவம். சமீபத்தில் ஒருநாள் கண்ணன் தன் ஒரு விழியை மட்டும் காட்டினான். ஒருநிமிடம் மட்டுமே நீடித்த அந்தக் காட்சியை என்னால் இன்றுவரை மறக்க முடியவில்லை. என்றும் மறக்க முடியாதென்பதை நான் அறிவேன். அந்தக் கண்ணழகின் மயக்கத்திலிருந்து நான் இன்னும் மீளவில்லை. மீள விரும்பவுமில்லை. நினைவு வரும்போதெல்லாம் அந்தக் கண்களில் நான் கரைந்து போகிறேன். இந்த வயதுவரை நான் பார்த்த எந்தக் கண்ணும் அந்த அழகில் ஒரு சதவீதம் கூட இல்லை. எந்த மனிதரிடையேயும் அந்த அழகை விவரிக்க உவமைகளும் இல்லை, வார்த்தைகளும் இல்லை. விவரிக்க முயல்வது மனிதயத்தனத்துக்கு மீறிய முயற்சி என எண்ணுகிறேன். இருந்தாலும் நான் கண்டதை ஓரளவிற்காவது வெளிப்படுத்தி எல்லோருடனும் பகிர்ந்து கொள்ள விழைகிறேன். டாக்டரின் துணையோடு முயல்கிறேன்.

ஒருநாள் மாலை நேரம். டாக்டரின் சீடர்கள் சுமார் முப்பது பேர் 'பேட்ஸ்' (Pats) என்று நாங்கள் சுருக்கமாக அழைக்கும் நண்பர் பாத்ருடு வீட்டில் குழுமியிருந்தோம். சனிக்கிழமை என்று நினைவு. எதிரே அம்மா அமர்ந்திருந்தார்கள். அவர்களுடன் பேசிக் கொண்டிருந்தேன். அப்போது சட்டென்று என்னைச் சுற்றி

ஏதோ மாறியது. அவர்கள் முகத்தைத் தவிர மற்ற யாவும் மறைந்து, கரைந்து புகைமூட்டம் போல் மாறிவிட்டது. என் பார்வையில் தெளிவாக நின்றது அவர் முகம் மட்டும்தான். முகத்தில் மெல்லிய புன்முறுவல். நான் பார்த்துக் கொண்டிருக்கும் போதே அவர் முகம் மாறி விட்டது. அதே முகம்தான், ஆனால் அபூர்வ ஒளியோடு, விவரிக்க இயலாத அழகாக மாறிவிட்டது. அந்த நேரத்தில் மனதில் தோன்றிய எண்ணம் (பட்டினத்தடிகளைப் பார்த்த போது ஏற்பட்டதைப் போல) இது என் அன்னை சீதாதேவி என்பதுதான். அந்த முகத்தை மெய்ம்மறந்து பரவசத்துடன் பார்த்துக் கொண்டிருந்தேன். மனதுக்குள் அம்மா, அம்மா என்று உருகிக் கொண்டிருந்தேன். அந்த முகத்தில் ஆனந்தம். கண்களில் குறும்புத்தனம். இதழில் சிறு புன்னகை. என்ன அழகு! என்ன அழகு! விளக்க சக்தியில்லை. அந்த அழகான புருவங்கள் மேலெழுந்து “என்ன கேட்டாயே, பார்த்தாயா? போதுமா?”என்று கேட்டது. பரவசத்தில் உறைந்துபோன என்னிடமிருந்து என்ன பதில் வரும்? இது எவ்வளவு நேரம் நீடித்தது என்று என்னால் கூற இயலாது. ஓரிரு நிமிடங்கள் இருக்கலாம், அல்லது ஒரு சில நொடிகளாகக் கூட இருக்கலாம். பார்த்துக் கொண்டிருக்கும் போதே, அந்தக் காட்சியும் மாறி அந்த இரு கண்களில் ஒரு கண் மட்டும் முன்னிலைப் பட்டது. பார்த்துக் கொண்டிருந்த அந்தக் கண் மிக மிகக் கருமையாக, ஆழமாக, பிரபஞ்சத்தின் மொத்த அழகின் வெளிப்பாடாக, வார்த்தைகளைக் கடந்ததாக, விவரிக்க முடியாததாக, அனுபவிக்க மட்டுமே தக்கதாக என் முன் சிரித்துக் கொண்டிருந்தது. அந்தக் கண்கள் சிரித்தன. நான் அந்தக் கண்ணழகில் கரைந்து கொண்டிருந்த வேளையில் திடீரென எல்லாம் மாறி பழையநிலை மீண்டது. அந்த முகத்தைப் பார்க்கும்போது எப்படி இது அன்னை சீதாதேவியினுடையது என்று தோன்றியதோ அவ்வண்ணமே கண்தரிசனம் கிடைத்த நேரம், இது கண்ணனின் கண்கள் என்று தோன்றியது. எந்தத் தாயின் கண்களூடே இந்தக் கண்ணைக் கண்டேனோ அந்தக் கண்களைக்கூட இந்தக் கண்களுடன் ஒப்பிட முடியாது. அந்தக் கண்களில் குடித்த மது மயக்கம் இன்னும் தீரவில்லை. கண்களே

இப்படியென்றால், மொத்த உருவத்தையும் கண்டால் என்னாவேன் நான்?! என்று காண்பேன் மீண்டும்? நான் மேலே சொன்னவற்றை சரியாகப் புரிந்து கொள்ள சில விளக்கங்களைத் தர வேண்டியது அவசியம். ஆரம்பத்தில் நான் டாக்டரை முதலில் பார்த்த அனுபவத்தை விளக்கும்போது, அவர் கண்கள் மட்டும் வித்தியாசமாக இருந்தது என்று சொன்னேன். ஒரு சில நேரங்களில் அவர் கண்களைப் பார்க்கும்போது, மிகக் கருமையாக, ஆழமாக, விவரிக்க இயலாத ஒளியுடன், மிக அழகாக இருக்கும். இது ஆணின் கண்ணா? இவருக்கு மை இட்டுக்கொள்ளும் பழக்கம் உண்டா? மையிட்டது போல் கறுமையாக இத்தனை அழகாக இருக்கிறதே என்று நினைத்ததுண்டு. இந்த நினைவு வரும்போது கூடவே எனக்குக் கண்ணனின் நினைவும் வரும். என் சிறிய தந்தை கண்ணனைப் பற்றி நிறையச் சொல்லியிருக்கிறார். அப்போதெல்லாம் யோசிப்பேன், நான் கண்ணனை நேரில் பார்க்க முடியுமா? என்று. இந்த நினைவு மனதில் அடிக்கடி வந்து போகும். அது ஓர் ஏக்கமாகவே மாறிவிட்டது. அந்த ஏக்கம் நிவர்த்தியானது அன்று பேட்ஸ் வீட்டில். ஒரு கண்ணை மட்டுமே காட்டி என்னைக் கட்டிவிட்டான் உள்ளம் கவர் கள்வன்.

அன்னை சீதாதேவி தன் முகம் காட்டியதன் ரகஸ்யம், இதோ சொல்கிறேன். டாக்டர் ஏற்படுத்திய ஆனந்த்ஜோதி ஆஸ்ரமம் கர்னாடக மாநிலம், முல்பாகல் என்னும் ஊரிலிருந்து சுமார் பதினான்கு மைல் தூரத்தில் குறடுமலை என்றழைக்கப்படும், சிறிய கிராமத்தில் இருக்கிறது. இந்த இடத்தைப் பற்றியும், ஆஸ்ரமத்தைப் பற்றியும் உடனே தெரிந்துகொள்ள இந்த இணைய தளத்திற்கு சென்று முழு விவரம் பெறலாம். http://ourguru.net. இப்போது சுருக்கமாக ஒரு விஷயத்தைச் சொல்லிவிடுகிறேன். இந்த ஆஸ்ரமம் அமைந்திருக்கும் இடமும், அங்கிருந்து சுமார் முப்பது கிலோமீட்டர் தொலைவிலிருக்கும் அந்தர் கங்காவும், அதைவிடச் சற்று அருகாமையிலிருக்கும் ஆவணி என்ற இடமும் ஆன்மிக முக்கியத்துவமும், இதிகாச முக்கியத்துவமும் வாய்ந்த இடங்கள். மேற்குறிப்பிட்ட ஆவணி என்ற இடத்தில் அன்னை சீதா தேவி பூமிக்கடியில் சென்றதாகச்

சொல்லப்படுகிறது. அந்த இடத்துக்கு ஒரு முறை சென்றிருந்தேன். உடன் வந்த (Guide) வழிகாட்டி, மலைமேல் செல்லும்போது ஓர் உயரமான பாறையைக் காட்டி, ராமாயண சம்பவம் ஒன்றைச் சொன்னார். ஸ்ரீராமனும் அவர் குமாரர்கள் லவ, குசர்களும் தங்கள் உறவை அறியாமல், ஒருவரோடு ஒருவர் போர் புரிந்து கொண்டிருந்தார்களாம். அன்னை சீதாதேவி அந்தப் போர்க்காட்சியை (ஒரு உயரமான பாறையைக் காட்டி), இதன் பின்னால் ஒளிந்து கொண்டு தவிப்புடன் எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தார்கள் என்று அந்த வழிகாட்டி சொன்னார். உயரமான பாறை என்று சொன்னேன். எவ்வளவு உயரம் என்று சொல்லவில்லை. அது சுமார் பத்துப்பதினைந்து அடி உயரமிருக்கும். என் சந்தேகத்தை அந்த வழிகாட்டியிடம் வெளிப்படுத்தினேன். அந்த வழிகாட்டி சொன்னார், ராமாயணகாலத்தில் மக்களெல்லாம் மிக உயரமாகத்தான் இருந்தார்கள். புராணங்களில் சொல்லியிருக்கிறார்கள் என்றார். எனக்கு வியப்பாக இருந்தது. வீடு திரும்பியதும் இதிகாசங்களை நன்கறிந்தவராதலால் என் சிறிய தந்தையிடம் கேட்டேன். அவர் உண்மை என்று சொன்னார். என் தாய் பத்தடி உயரமிருந்தாரா? பார்க்க வேண்டும் என்ற ஆர்வம் கட்டுக் கடங்காமல் பொங்கியது. மனதுக்குள்ளேயே ‘டாக்டர் அம்மாவைப் பார்க்கணும்’ என்று ஓயாது நச்சரித்துக் கொண்டிருந்தேன். அதன் விளைவுதான் அந்தக் காட்சி. அவருடைய முழு உருவத்தையும் காட்டவில்லை என்றாலும், அந்த அழகிய முகம் இன்னும் என் மனக் கண்ணிலிருந்து மறையவில்லை. மறைய வேண்டாம். அன்னையின் முகம் என்றென்றும் என் நினைவில் நிரந்தரமாகத் தங்கிவிடவேண்டும் என்பதுதான் என் ப்ரார்த்தனை.

எதைச் சொல்ல புகுந்து என்ன சொல்லிக் கொண்டிருக்கிறேன் நான்? அந்தக் கண்களில் குடித்த மதுமயக்கம். குருநாதனைப்பற்றி என்னவெல்லாம் மனதில் இருக்கிறதோ அதையெல்லாம் சொல்லிவிட வேண்டும் என்ற ஆதங்கத்தின் விளைவு. சாதாரண குருவா? ஜகத்குருவல்லவா! இப்படிப்பட்டவரை அடைந்த பிறகும் எதற்காகக் காத்துக் கொண்டிருக்கிறோம் உடல் எடுத்ததே தியானம் செய்வதற்கும்,

பிறவியை அறுப்பதற்கும்தான். இந்தச் சந்தர்ப்பத்தை விட்டால், இனியொரு சந்தர்ப்பம் வாய்ப்பது எத்தனை ஜென்மங்களுக்குப் பிறகோ! அடுத்த பிறவி மனிதப்பிறவியாக அமையும் என்பதுகூட நிச்சயம் இல்லை. அப்படியே மனிதப்பிறவி கிடைத்தாலும், மாயையிலிருந்து மீண்டு மேலே போவோம் என்பதற்கு எந்த உத்திரவாதமும் இல்லை. அண்ணல் அருகிருக்கும்போதே மாயை நம்மை இந்த அளவு அலைக்கழிக்கும்போது, அவர் அருகிலில்லை என்றால் நம்நிலை என்னாகும் என்று. டாக்டர் சொல்லக் கேட்டவர்கள் சொல்லி, நான் கேட்டிருக்கிறேன். நூறு வருடங்களுக்கு ஒருவர் மேலே வந்தால் அதுவே பெரிய விஷயம் என்று டாக்டர் சொல்வாராம். இதிலிருந்து என்ன விளங்குகிறது? யோகப்பாதையில் நடந்து பிறவியெடுத்து, முக்தியடைவது மணலைக் கயிறாகத் திரிப்பதற்குச் சமம் என்று கூறலாம். எனவே டாக்டர் நம்முடன் இருக்கும்போதே எப்படியாவது இந்தப் பிறவிக்கடலைக் கடந்துவிட வேண்டும் என்ற உத்வேகம் என்னுள் மிக ஆழமாக இருக்கிறது. ஏனென்றால், டாக்டர் யாரென்பதை அறிந்த காரணத்தால் இத்தகைய அரிய சந்தர்ப்பத்தை இழந்துவிட நான் தயாரில்லை. எல்லோருக்குள்ளும் இதே எண்ணம் இருக்கவேண்டும் என்பது என் அவா. அதனால்தான் ‘இவரை அறிந்துகொள்ளுங்கள். இவர் காட்டும் பாதையை பின்பற்றுங்கள், இந்தப் பிறவியுடன் பிறவிச் சங்கிலியை அறுத்துவிடும் முயற்சியில் வெற்றியடையுங்கள்’ என்று இதைப் படிக்கும் அனைவரையும் அன்புடன் வேண்டிக் கொள்கிறேன். நான் நனையும் அந்த அன்பு மழையில் நீங்களும் நனைய வாருங்கள் என்று அழைக்கின்றேன். தவற விடாதீர்கள் கிடைத்த வாய்ப்பை.

**மதுரைப் பயணம்**

மதுரைப் பயணம் என் ஆன்மிக வாழ்க்கையில் ஒரு மைல் கல்லாக அமைந்தது என்று சொன்னால் மிகையாகாது. இந்த மதுரைப் பயணத்திற்கு முன்புவரை என் மனத்தில் பல சந்தேகங்கள் தொடர்ந்து கொண்டுதான் இருந்தன.

கேள்விகள் முளைத்துக் கொண்டுதான் இருந்தன. அந்தப் பயணத்தின்போது எனக்கேற்பட்ட அனுபவங்கள் என் ஆய்வு மனப்பான்மைக்கு விழுந்த மிகப் பெரிய அடி. லாஜிக், இயற்கை விதிகள், பகுத்தறிவு போன்ற விஷயங்களின் அடிப்படையே தகர்ந்துபோன அனுபவங்கள் அவை. என் பகுத்தறிவும், உலகியல் நம்பிக்கைகளும் ஸ்தம்பித்து நின்ற நேரம் அது. அந்தப் பயணத்துக்கு முன்புவரை அவ்வப்போது என் பகுத்தறிவு கேள்வி கேட்டுக் கொண்டுதான் இருந்தது. அந்த அனுபவங்களுக்குப் பிறகு இலக்கை நோக்கிய நேர்கோட்டில் என் பயணம் தொடர்கிறது. இன்றுவரை அதில் எந்த மாற்றமும் இல்லை. இனியும் மாறாது என்பதில் ஐயமில்லை. சந்தேகங்கள் முற்றிலும் தீர்ந்த மனம் அன்று என் வசமானது.

சரி! விஷயத்துக்கு வருகிறேன். டாக்டர் எங்கிருக்கிறார் என்பதற்கான குறிப்புகள் எங்களுக்குப் பலவிதமாகத் தரப்பட்டன. அசரீரியாக, அகக்காட்சியாக, கனவு மூலமாக, தியானத்தைத் தொடர்ந்து வரும் செய்தியாக இப்படி ஏதாவதொரு வகையில் டாக்டர் அப்போதிருக்கும் இடம் பற்றிய செய்தி எங்களுக்குக் கிடைக்கும். அப்படிப்பட்ட செய்தி ஒரு குழுவாகச் செயல்பட்டுக் கொண்டிருந்த எங்கள் ஆறு பேரில் யாருக்கு வந்தாலும் உடனே கிளம்பிவிடுவோம் அந்த இலக்கை நோக்கி. ரயிலிலோ, பஸ்ஸிலோ அல்லது காரிலோ உடனே கிளம்பிவிடுவோம். அது எப்படி நினைத்தவுடன் கிளம்ப முடிந்தது என்று இப்போது எண்ணிப் பார்த்தால் வியப்பாகத்தான் இருக்கிறது. அப்படிக் கிடைத்த ஒரு செய்திக்குப் பிறகு உடனே ரயில் மூலம் அன்று இரவே அம்மா, சாந்தம்மா, சாந்தி, நான் ஆக நால்வர் மதுரைக்குப் புறப்பட்டுவிட்டோம். முன்பதிவு செய்யப்படாத பெட்டியில் இரவு முழுதும் பயணித்து மறுநாள் காலை மதுரை சென்றடைந்தோம்.

அங்கே ஒரு காரை வாடகைக்கு அமர்த்திக் கொண்டு மதுரையிலிருந்து சற்றுத் தொலைவிலிருந்த ஓர் நீர்வீழ்ச்சி இருக்கும் இடம் தேடிச்சென்றோம். எங்களுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் அந்த இடத்தை அனுமானத்தின் பேரில் தேர்ந்தெடுத்துத் தேடிச் சென்றோம். அங்கு பலரையும் விசாரித்தபிறகு,

டாக்டரைப்பற்றிய தகவல் ஏதும் கிடைக்காததால் சோர்வுடன் மதுரை திரும்பினோம். ஆனால் மனம் தளரவில்லை. இந்த இடம் இல்லை. ஆனால் அந்த இடம் இங்கேதான் எங்கோ இருக்கிறது. அது எதுவாக இருக்கும் என்று ஆராயத் தொடங்கினோம். ஒரு சில தேடல் பயணங்களுக்குள்ளேயே நாங்கள் தேர்ந்த துப்பறியும் நிபுணர்கள் போல் எங்கள் செயல்பாடுகளை வரையறுத்துக் கொண்டோம். அந்தத் திட்டங்கள் எங்கள் தகவல் சேகரிப்புக்கும், தேடலுக்கும் பேருதவியாக இருந்தன. இம்முறை எப்படியும் டாக்டரைப் பார்த்துவிடுவோம் என்ற நம்பிக்கையும், அவர் கிடைக்க வேண்டுமே என்ற ஆதங்கமும், எங்கள் மனதில் பெரும் சுமையாக அழுத்திக் கொண்டிருந்தாலும், தேர்ந்த துப்பறிவாளர்களைப் போல் செயல்பட்டுக் கொண்டிருந்ததில் ஒரு ஸ்வாரஸ்யமும் இருந்ததென்பதை மறுக்க முடியாது. அவர் எங்கிருக்கிறார் என்பதை எப்படிக் கண்டு பிடிக்கலாம் என்று நாங்கள் யோசித்துக் கொண்டிருந்தோம். அம்மா ஒரு முடிவுக்கு வந்தார்கள். வானவர்களின் துணையை நாடுவது என்று முடிவு செய்தார்.

எங்கள் வேண்டுதல் நிறைவேற்றப்பட்டு முதலில் கோடிசாமி என்னும் சித்தரை அணுகினோம். அவருக்கு எங்கள் மரியாதையைத் தெரிவித்த பின், டாக்டர் இருக்கும் இடம் பற்றிக் கேட்டோம். “அவரைப் பற்றி நான் எப்படிச் சொல்லமுடியும்?” என்று நாசுக்காக ஒதுங்கிக் கொண்டார். பிறகு மதுரையை ஆளும் மீனாட்சி அன்னையை அணுகினோம். முறைப்படி மரியாதை செலுத்தியபின் எங்கள் கோரிக்கையை வைத்தோம். எங்கள் முயற்சி வெற்றியடைய வாழ்த்து மட்டும் தெரிவித்தார். ஆனால் அவர் இருக்கும் இடம் பற்றிய செய்தி கிடைக்கவில்லை. என்ன செய்யலாம் என யோசித்து, நாரத மகரிஷியை அனுக்கினோம். அவரும் இதே பாணியில் பதில் சொன்னார் என்றாலும், வேறொன்றும் சொன்னார். அதை வெளிப்படையாகப் பேசுவதற்கு எனக்கு அனுமதியும் இல்லை, அது இந்த அனுபவக் கோவைக்கு அவசியமில்லாதது என்பதால் அதைத் தவிர்க்கிறேன். ஒன்றை மட்டும் சொல்லலாம். அந்த நிகழ்வால், தேவர்கள், மற்ற உலகங்கள் மற்றும் அவற்றின் செயல்பாடுகள்

பற்றிய மாபெரும் உண்மை எனக்குத் தெரியவந்தது. அந்தப் பரிமாணத்தின் வெளிப்பாடு என்னை திகைப்படையச் செய்ததென்னவோ உண்மை. பலவித உணர்வுகளால் நான் திக்குமுக்காடிப் போயிருந்தேன்.

நாங்கள் விடுவதாக இல்லை. கைலாயநாதரையே அணுகுவது என்று முடிவுசெய்து அவரை அணுகினோம். உள்ளே போகும்போது நந்திதேவர் “இனி வரும்போது மான சரோவரில் முழுகி, கயிலாயத்தை வலம் வந்து பிறகு உள்ளே வரவேண்டும்” என்று சொன்னார். ஆச்சரியத்துக்கு மேல் ஆச்சரியம். நான் பேச்சிழந்து, செயலிழந்து ஒரு சாட்சியாக அங்கே அமர்ந்திருந்தேன். நடப்பது அனைத்தும் எனக்கு ஒரு கனவுக்காட்சி போலத் தோன்றியது. பிரமிப்புடன் அனைத்தையும் கவனித்துக் கொண்டிருந்தேன். அடுத்து என்ன அதிசயம் நிகழப்போகிறது என்பதை எதிர்பார்த்துக் காத்திருந்தேன்.

முறைப்படி சிவபெருமானுக்கும், பார்வதித்தாய்க்கும் மரியாதை செலுத்தியபின் எங்கள் கோரிக்கையை அவரிடம் தெரிவித்தோம். அவரும் புன்னகையுடன் “நல்லதே நடக்கட்டும்” என்று வாழ்த்த மட்டுமே செய்தார். அவர்களை வணங்கி விடை பெற்ற பின், விநாயகப் பெருமானை அணுகினோம். அவரிடமும் மரியாதையை முறைப்படி செய்துவிட்டு எங்கள் விண்ணப்பத்தை வைத்தோம். அவர் சொன்ன பதிலை இங்கே பதிவு செய்ய எனக்குத் தயக்கமிருக்கிறது. அதைத் தவிர்ப்பதே சரி என்று தோன்றுகிறது. ஆனால் அது மிக மிக ஸ்வாரஸ்யமான பதில் என்பதை மட்டும் சொல்ல விரும்புகிறேன். எப்பொழுது விநாயகர் நினைவு வந்தாலும், அல்லது அவர் சன்னதிக்குச் சென்றாலும், அவருடைய அந்த பதில்தான் நினைவு வரும். அவருடைய பார்வையில் டாக்டரைப் பற்றிய ஸ்வாரஸ்யமான மதிப்பீடு அது. அவரிடமும் விடைபெற்று, வேறு என்ன செய்யலாம் என்று யோசித்தோம். எங்கள் அடுத்த இலக்கு முருகப்பெருமான்தான். முறையான மரியாதைகள் முடிந்தபின், அவரிடமும் எங்கள் விருப்பத்தைச் சொன்னோம். சில நொடிகள் அமைதியாக இருந்த முருகப்பெருமான், “இங்கே தான் இருக்கிறார். நாளை காலை கிளம்பி சுருளி

நீர்வீழ்ச்சிக்கு செல்லுங்கள். நான் வந்து வழி காட்டுகிறேன்" என்றார். திடீரென எங்கள் மகிழ்ச்சி எல்லை மீறியது. நாளை டாக்டரைப் பார்த்துவிடுவோம் என்ற நம்பிக்கை எங்களை மகிழ்ச்சிக்கடலில் ஆழ்த்தியது. தெய்வங்கள், வேறு உலகங்கள், தேவர்கள் ஆகியவை பற்றிய என் சந்தேகங்கள், அனுமானங்கள் ஆகியவற்றை வேருடன் பெயர்த்தெறிந்த அனுபவம் முருகப்பெருமானால் அப்போது நிகழ்ந்தது.

முருகப்பெருமான் கேட்டார், "என்ன இப்போதெல்லாம் ஷஷ்டிகவசம் கேட்க முடிவதில்லை?"என்று. யாரைக் கேட்டார் என்று எனக்குப் புரியவில்லை. யாரையோ கேட்கிறார் என்று பார்த்துக் கொண்டிருந்தேன். அம்மா என்பக்கம் திரும்பி, "உங்களைத்தான் கேட்கிறார்" என்றார்கள். நான் எப்போதும் போல் பேச்சிழந்தேன், செயலிழந்தேன். அதற்குக் காரணமிருக்கிறது. நான் டாக்டரிடம் வருவதற்கு முன், 1983 முதல் சுமார் பத்தாண்டுகாலம் தினமும் தவறாமல் என்னுடைய வணிகவளாகத்தில் காலையில் நான்கு ஸ்தோத்திரங்களை ரெக்கார்ட் பிளேயரில் போட்டுக் கேட்டுக்கொண்டிருப்பது என் பழக்கம். முதலில் வெங்கடேச சுப்ரபாதம், பிறகு விஷ்ணு சகஸ்ரநாமம், பிறகு கந்த சஷ்டி கவசம், பிறகு பகவத்கீதை தியான ஸ்லோகம் பதினெட்டு அத்தியாயங்களையும் (சுமார் நான்கு மணி நேரம் ஆகும்) தொடர்ந்து கேட்பது தினசரி பழக்கம். அது அப்போது என்னுடனிருந்த சாந்தி, சாந்தம்மா, அம்மா ஆகிய யாருக்கும் தெரியாது. அவர்களை நான் சந்தித்ததே 1994ம் வருடத்தில்தான். அப்படியென்றால், நான் சஷ்டி கவசம் போட்டு கேட்டுக்கொண்டிருந்தது முருகபெருமானுக்குத் தெரியும். இந்த உண்மை என் மனதில் பதிந்தபோது நான் உறைந்து போனேன். எனக்குப் பேச்சு வரவில்லை. ஏதோ உளறினேன் என்று நினைக்கிறேன். முருகப்பெருமான் சிரித்துவிட்டு விடைபெற்றுச் சென்றுவிட்டார். இது தொடர்பான மற்றொரு செய்தியைச் சொல்ல மறந்துவிட்டேன். மீனாட்சி அன்னையை அழைத்துப் பேசிக்கொண்டிருக்கும் போது, எங்களிடம் பேசிக்கொண்டிருந்தவர், "கொஞ்சம் இருங்கள், அர்ச்சனைக்கு வந்திருக்கிறார்கள்" என்று சொல்லிவிட்டு ஒரு சில நிமிடங்கள் மௌனமாக இருந்தார். பிறகு எங்களிடம்

பேச ஆரம்பித்தார். அந்த நிமிடம்வரை கோவிலுக்குச் செல்வதும், பூஜை, அர்ச்சனை செய்வதும் என்னைப் பொருத்தவரை ஒரு சடங்காக மட்டுமே மனதில் இருந்தது. அந்தச் சன்னிதானத்தில் இருக்கும் தெய்வம் அந்த பூஜையை அங்கிருந்து ஏற்றுக்கொள்கிறது என்று நான் என்றுமே எண்ணியதில்லை. சொல்லுங்கள், இதற்குப்பிறகும் நான் எப்படி இந்த தெய்வங்களை சந்தேகிக்க முடியும்? அலைபாய்ந்து கொண்டிருந்த மனம் அமைதியுற்றது, நிலைபெற்றது. அதன் பிறகு சந்தேகம் என்ற நிழல்கூட என்மீது பட்டதில்லை. “எனக்கு யோகப்பாதையில் வழிகாட்ட யாருமில்லையா? கண்ணா நீ பொய்யா? தெய்வங்கள் இருக்கிறார்களா?” என்று பலவாறாகப் புலம்பி அழுத அந்த இரவு எனக்கு என்றும் மறக்காது. அதற்கான பதில் இது. டாக்டர் செயல்முறை விளக்கம் தந்துவிட்டார். இரவு சரியான தூக்கமில்லை. எப்பொழுது விடியும், சுருளி நீர்வீழ்ச்சிக்குக் கிளம்புவோம் என்றிருந்தது. விடிந்தது. வாடகைக்கார் ஒன்றை எடுத்துக்கொண்டு சுருளி நீர்வீழ்ச்சி நோக்கிப் புறப்பட்டோம்.

ஆவல் பெருக்கெடுக்க, எப்போது முருகரிடமிருந்து செய்தி வரும் என்று எதிர்பார்த்துக் கொண்டு போய்க்கொண்டிருந்தோம். வழியில் எங்களில் ஒருவருக்கு ஒரு அகக்காக்ஷி தெரிந்தது. விஷயம் இதுதான். அந்த மலைப்பாங்கான இடத்தில் ஏதோ ஒரு இடத்தை அடைய முருகப்பெருமானுடைய வாகனமான மயில் முயல்கிறது. அப்போது, மகாவிஷ்ணுவின் வாகனமான கருடன் அந்த எல்லைக்குள் வருவதற்கு அனுமதி மறுக்கிறது. இருவருக்கும் வாக்குவாதம் நடக்கிறது. அவர்கள் இருவரும் பேசிக்கொள்வது என்ன மொழி என்பது விளங்கவில்லை. இதற்குள் நாங்கள் சுருளி நீர்வீழ்ச்சியை அடைந்தோம். அங்கே ஒரு பெரிய மரம் அதைச்சுற்றி மேடை அமைந்திருந்தது. அந்த இடத்தில் அமர்ந்து நால்வரும் தியானம் செய்ய தொடங்கினோம். சிறிது நேரத்தில் நான் கண் திறந்து பார்த்தேன். மற்ற மூவரும் ஆழ்ந்த தியானத்தில் இருந்தார்கள். அவர்கள் தியானத்தைக் கலைக்க விரும்பாமல் நான் காத்திருந்தேன். அவர்கள் மூவரும் தியானம் செய்யும் காட்சியைப் புகைப்படம்

எடுத்தேன். அது மிக அருமையான காட்சி. புகைப்படப் பகுதியில் இணைத்துள்ளேன். அனைவரும் தியானத்தில் இருந்து வெளிவந்தார்கள். சற்றுநேரம் காத்திருந்தோம். ஒன்றும் நடக்கவில்லை. நாங்கள் மீண்டும் முருகப்பெருமானை அணுகினோம். அவரும் வந்தார். அவர் சொன்னதை அப்படியே பதிவு செய்கிறேன். "அம்மா, அவர் இங்கேதான் பத்து கிலோமீட்டருக்குள் இருக்கிறார். ஆனால் அனுமதிக்க மறுக்கிறார். அவரிடம் மன்றாடிக் கேட்டுப்பார்த்தேன். பார்க்க மறுக்கிறார். என்னால் ஒன்றும் செய்யமுடியவில்லை. என் இயலாமைக்கு வருந்துகிறேன். என்னை மன்னியுங்கள்." என்றார். இதற்குமேல் என் விளக்கம் ஒன்றும் தேவையில்லை என்று நினைக்கிறேன். பிறகு முருகப்பெருமானுக்கு நன்றி சொல்லிவிட்டு அங்கிருந்து கிளம்பினோம்.

மிக அருகில் இருக்கிறார், ஆனால் பார்க்க முடியவில்லை. எங்கள் மன உணர்வுகளை விளக்குவது சுலபமான காரியமல்ல. சோர்ந்துபோன மனத்துடன் நாங்கள் திரும்பிக் கொண்டிருந்தோம். வரும்வழியில் மலையடிவார கிராமமொன்றைக் கடக்கையில், அவர் அருகிலிருந்தால் எப்படி உணர்வோமோ அப்படிப்பட்ட உச்சக்கட்ட அதிர்வலைகளை உணர்ந்தோம். அங்கே மிக அருகில் டாக்டர் இருக்கிறார் என்பது தெரிந்தது. ஆனாலும் அவர் அனுமதிக்காதவரை எங்களால் என்ன செய்ய முடியும்? அந்த ஊரில் டாக்டரின் படத்தைக் காட்டி பலரிடம் விசாரித்தோம். அவரைப் பார்த்ததற்கான ஆதாரங்கள் கிடைத்தன. இயலாமையின் சுமையோடு மதுரை லாட்ஜ் அறைக்குத் திரும்பினோம். அங்கிருந்து சென்னைக்கு ரயிலில் பயணமானோம். ரயிலில் பயணம் செய்யும்போது, டாக்டர் எங்களுடன் ஊடகத்தின் மூலம் பேசினார். "என்னப்பா, எல்லோருக்கும் என் மேல் கோபமா?" என வினவினார். அவர்மேல் எப்படிக் கோபம் வரும். "இல்லை டாக்டர், உங்களைப் பார்ப்போம் என்று நினைத்தோம், முடியவில்லை. அதனால் வருத்தமாகவும் ஏமாற்றமாகவும் இருக்கிறது" என்று சொன்னோம். "வருத்தப்படாதீங்க; வந்தீங்க, நிறைய இடங்களை சுத்திப் பாத்தீங்க சந்தோஷமா வீட்டுக்கு திரும்புங்க" என்றார். அப்போது நான் அவரிடம் குழந்தை அப்பாவிடம் அடம் பிடிக்கும் தொனியில் "டாக்டர், நீங்க வராம இப்படி ரொம்ப லேட் பண்ணினா, நான் கெட்டுக் குட்டிச்சுவரா

பாத்துக்கிறேன்." என்றார் அதே தொனியில். இப்படிப்பட்ட அப்பாவிடம் என்ன செய்ய முடியும்? "சீக்கிரம் வந்துடுங்க டாக்டர்" என்று கெஞ்சும் குரலில் கேட்டுக் கொண்டேன்.. "வரேன்பா, வேலை இருக்கே, முடிச்சுட்டு வரேன்" என்று சொன்னதாக நினைவு. அப்போது எங்களுக்குள் நடந்த சம்பாஷணை, தந்தைக்கும், மகனுக்கும் நடந்த செல்லச் சண்டை போல தோன்றினாலும், அவர் எங்களிடம் விடைபெற்றுச் சென்ற பிறகு அவர் என்னிடம் சொன்ன பதிலின் பொருள் புரிந்தது. அவர் வார்த்தைகளை வீணாக்குவதில்லை என்பது அனைவருக்கும் தெரிந்த ஒன்றுதான். திடீரென ஒன்று புரிந்தது. "நீ கெட்டுப் போ நான் வந்து பாத்துக்கிறேன்" என்றால் என்ன பொருள்? நான் இந்த ஜென்மத்தில் கெட்டுப்போனால் அடுத்த ஜென்மத்திலா வந்து பார்த்துக்க போறார்? இந்த எண்ணம் மனதில் தோன்றியவுடன் குப்பென்று ஒரு மகிழ்ச்சி. நான் வருவேன் என்பதை எவ்வளவு ஆணித்தரமாகச் சொல்லிச் சென்றுள்ளார் என்பது விளங்கியது. வேலை முடிந்து வருவார். நான் காத்திருக்கத்தயார். ஆனால் எத்தனைக் காலம் என்பதுதான் கேள்வி. ஏக்கம்தான் தீயாய் எரிக்கிறதே. என்னசெய்ய?

**முருகப்பெருமானை நேரில் பார்த்தோம்.**

சென்னை திரும்பும்முன் மதுரைக்கருகில் உள்ள அழகர்கோவிலுக்கும், பழமுதிர்சோலைக்கும் சென்றுவர எண்ணி ஒரு ஆட்டோவில் புறப்பட்டோம். எங்கள் தேடல் பயணத்தின் மற்றுமொரு அதிசயம் இங்கே நடந்தது. பழமுதிர்சோலையில் குடிகொண்டிருக்கும் முருகரைப் பார்க்கும் பாக்கியம் கிடைத்தது இந்தப் பயணத்தில்தான்.

சாந்தம்மா கண்ட காட்சி என நினைவு; பெருமாள்கோவில் கோபுரம் ஒன்று அவருக்குத் தெரிகிறது. அதன் பின்னணியில் மலை. மலையின் பின்னணியில் இருக்கும் பெருமாள் கோயிலும் கோபுரமும் எந்த ஊரில் உள்ளன என்று தேடியபோது எங்களுக்கு தெரியவந்தது அழகர்கோவில். எனவே அந்தக் கோவிலுக்கு ஒரு ஆட்டோ

ரிக்ஷாவில் பயணமானோம். எங்களது நோக்கம் அழகர்கோவிலுக்கு மேலே பழமுதிர்ச்சோலையில் உள்ள முருகப்பெருமான் கோவிலுக்கும் சென்று வருவது என்பதுதான். நீர்வீழ்ச்சியுடன் சம்பந்தப்படுத்தி டாக்டரைப்பற்றிய செய்தி எங்களுக்குக் கிடைத்ததால் மலைமேல் சென்று பார்ப்பதென்ற முடிவில் பயணப்பட்டோம்.

மலையடிவாரத்திலுள்ள அழகரை தரிசித்துவிட்டு, மேலே புறப்பட்டோம். ஆட்டோ மலைமேல் கொஞ்சதூரம் ஏறியதும் மேற்கொண்டு ஏறமுடியாமல் நின்றுவிட்டது. இன்னும் கொஞ்சதூரமே இருந்ததால், நடந்தே போய்விடலாம் என எண்ணி நாங்கள் நால்வரும் நடக்க ஆரம்பித்தோம். அந்த இடம் மிக ரம்மியமாக இருந்தது. சாலையில் ஒரு ஓரமாக அமர்ந்து, கொண்டுவந்திருந்த உணவை அருந்திவிட்டு மேற்கொண்டு ஏறலாம் என எண்ணி அமர்ந்தோம். சப்பாத்தி குருமா என்று நினைவு, சாந்தம்மா பரிமாற நாங்கள் நால்வரும் சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது, வெறிச்சோடிக்கிடந்த அந்த சாலையில் மேலிருந்து ஒருவர் நடந்து வந்துகொண்டிருந்தார். எங்கள் அருகில் வந்து நின்றார்.

வாலிப வயது. தோள் வரை நீண்டு தொங்கும் தலை முடி. வஜ்ரம் போன்று உறுதியான உடல்வாகு. பருமனும் இல்லாமல் ஒல்லியாகவும் இல்லாமல் திட்டமான உடல். இடையில் ஒரு பெரிய துண்டு அல்லது அரை வேட்டி மட்டுமே அவர் உடை. தோளருகே ஒரு கையில் தங்கக் காப்பு. கையில் நாலடி உயர வெள்ளி வேல். கணுக்காலுக்கு மேல் ஒரு காலில் தண்டை. ஆறு அடிக்கு சற்றுக் குறைவாக இருந்திருக்கலாம் அவர் உயரம்.

இப்படி ஒரு தோற்றத்தில் இருந்த அவர் கையில் ஒரு குவளைபோல் பாத்திரம் இருந்தது. எங்களைப் பார்த்து, “சாப்பிட ஏதாவது கொடுங்களேன்” என்று கேட்டார். சாந்தம்மா, சாப்பிட்டுக் கொண்டிருந்ததால், சட்டென்று கையைக் கழுவிக்கொண்டு சில சப்பாத்திகளை எடுத்து அவர் கையில் இருந்த குவளையில் இட்டார். அதைப் பார்த்த அவர், “தொட்டுக்க ஏதாவது கொடுங்கம்மா” என்று சாந்தம்மாவைக்

கேட்டார். கேட்காமலே கொடுத்திருக்க வேண்டும், ஆனால் அவர் கேட்டுக் கொடுக்கும்படி ஆயிற்றே என்ற மனஉறுத்தல் சாந்தம்மாவுக்கு. குருமாவில் கொஞ்சம் கொடுத்தபிறகு அமர்ந்து சாப்பிட்டார். “மேலே கோவில் திறந்திருக்கிறதா?” என்று அவரை நாங்கள் கேட்டோம். “அங்கே யார் இருக்கிறார்கள்? முன்பு இருந்தார்கள். அவர்களும் கேரளம் போய்விட்டார்கள்” என்று சொல்லிவிட்டுக் கீழே இறங்கிப் போனார். அவரையே பார்த்துக் கொண்டிருந்த நாங்கள் ஏதோ நினைவு வந்ததுபோல் சட்டென்று ஒருவரை, ஒருவர் பார்த்து, அவர் யார் என்று கேட்டுக்கொண்டோம். உடனே மீண்டும் திரும்பிப் பார்த்தபோது அவரைக் காணவில்லை. சற்று தூரத்தில் அந்த சாலை வளைந்து செல்கிறது. அதற்குள் அவ்வளவு தூரம் சென்றிருக்க முடியுமென்று தோன்றவில்லை. கோவில் திறந்திருக்கிறதா என்று கேட்டால், அங்கே யார் இருக்கிறார்கள் என்று கேட்டுவிட்டு போகிறார். நான் இங்கே இருக்கும்போது அங்கே யார் இருப்பார் என்ற பொருளில் அவர் சொன்னதாகத்தான் எனக்குத் தோன்றியது. இவ்வளவு விலையுயர்ந்த அணிகலங்களுடன் வந்து யாராவது பிட்சை கேட்பார்களா? அந்தத் தோற்றம், அதன் வசீகரம், சந்தேகமில்லாமல் அவர் முருகப்பெருமான்தான் என நான் நினைத்தேன்.

இதன் பிறகு, பல வருடங்களுக்கு முருகப்பெருமானுடனும், புனித அன்னையுடனும், மேலும் அடையாளம் தெரியாத புனிதர்கள் பலருடனும் உள்ளுக்குள் பேசும் பழக்கம் எனக்கு இருந்தது. அவர்கள் பேசியது குரலாகவா அல்லது எண்ணமாகவா என்று என்னால் சொல்ல முடியவில்லை. அது மிக அருமையான அனுபவம். முருகப்பெருமானுடன் பேசும்போது அவர் கேலிப்பேச்சில் பல முறை வாய்விட்டுச் சிரித்திருக்கிறேன், பொது இடம் என்ற நினைவுகூட இல்லாமல். நான் தனியாகச் சிரிப்பதைக்கண்டு என்னை ஒருமாதிரியாகப் பார்த்தவர்களும் உண்டு.

மதுரைப் பயணம் இத்தனை அனுபவங்களுடன் முடிந்தது. சென்னை வந்தடைந்தோம். எங்கள் ஒவ்வொரு பயணத்தின் முடிவிலும் ஏற்படும் ஏமாற்றம்,

சோர்வு இந்தப் பயணத்தின் முடிவிலும் ஏற்பட்டாலும், செய்தி கிடைத்தால் எங்கள் அடுத்த பயணத்துக்குத் தயாராக இருந்தோம். நாங்கள் அப்படித்தான்.

எண்ணிப் பாருங்கள், இத்தனை அனுபவங்களுக்குப் பிறகு, கடந்துவந்த பாதையையும், என் அற்ப சந்தேகங்களையும் திரும்பிப்பார்க்க என்ன அவசியமிருக்கிறது? அன்று நான் மீண்டும் ஜனித்ததாகத்தான் தோன்றுகிறது. என்னிடம் இத்தனை பொறுமையையும், சகிப்புத்தன்மையையும் காட்டிய என் குருநாதனுக்கு நன்றி!

**அம்முவின் அனுபவம்**

நான் பிறந்து வளர்ந்தது சிதம்பரத்தில் என்று மேலே குறிப்பிட்டிருக்கிறேன். சிதம்பரத்தையொட்டிய அண்ணாமலை நகரில் என் தாய்மாமனின் வீடு இருந்தது. என் தாய் மாமன் அப்போது உயிருடன் இருந்தார். அவர்மீது எனக்குத் தனி அன்பு. அவருக்கும் என்மீது ஆழமான அன்பு. அவர் பார்வையை இழந்து தம் ஆயுளின் கடைசி காலத்தில் இருந்ததால், அவரை ஒருமுறை பார்த்துவிட வேண்டும் என்ற அவா எனக்கு. அவரைப் பார்த்துவிட்டு, அவர் பேத்தி அம்மு தன் தாய் தந்தையருடன் வசிக்கும் வீட்டிற்குச் சென்றேன். இரண்டுநாட்கள் தங்கிப் பிறகு சென்னை திரும்பலாம் என்ற எண்ணம். அம்முவிற்கு என்மீது அதிகப் பாசம். நான் இருதய நோயாளி என்பதும், அந்த நேரத்தில் என் உடல்நிலை சற்று பாதிப்படைந்திருந்ததையும் அறிந்ததால், அவள் என்னைப்பற்றி மிகவும் கவலை கொண்டிருந்தாள். "இந்த நிலையில் ஏன் தனியா பயணம் செய்கிறீர்கள், யாரையாவது துணைக்கு அழைத்து வரலாமே" என்று சொன்னாள். "நான் தனியா இல்லை அம்மு, என் தாயும், தந்தையும் எப்போதும் என்னுடன் இருக்கிறார்கள். என்னைப் பற்றி வீணா கவலைப்படாதே. அவங்க என்னைப் பாத்துப்பாங்க." என்று சொன்னேன். அவளுக்குப் புரியவில்லை. நான் வணங்கும் மகாவிஷ்ணுவும், தாய் மகாலக்ஷ்மியும் என்னுடன் எப்போதும் இருக்கிறார்கள் என்று சொன்னேன். இதை

நான் அவளை சமாதானப்படுத்தச் சொல்வதாக எண்ணிவிட்டாள். அவளுக்கு இது புரியும் என்று எதிர்பார்ப்பதும் அதிகம்தான். அன்று இரவு அங்கு தங்கினேன். மறுநாள் மதியம் சென்னை திரும்புவதாக ஏற்பாடு. காலையில் எழுந்து, எல்லா வேலையும் முடித்து, சிற்றுண்டியும் ஆயிற்று. ஓய்வாக அமர்ந்திருந்ததாக நினைவு. அப்போது, அம்மு தயங்கித் தயங்கி என் அருகில் வந்து அமர்ந்தாள். “அப்பா, உங்களை ஒன்று கேட்கணும். எனக்குக் குழப்பமாவும் இருக்கு, புரியவும் இல்லை. கேட்கட்டுமா?” என்றாள். “என்ன வேணும்னாலும் கேளும்மா, தெரிஞ்சா சொல்றேன். என்னிடம் என்ன தயக்கம்.” என்று அவளுக்கு தைரியம் சொன்ன பிறகு முன் நாள் இரவு அவளுக்கு ஏற்பட்ட அனுபவத்தைச் சொன்னாள்.

“தூங்கப் போகும்போது உங்கள் நினைப்பாவே இருந்தது. தனியா துணைக்கு யாருமில்லாமல் வந்திருக்கிங்களே, நடுவில் ஏதாவது ஆனால் என்னாகும்? யார் உதவிக்கு வருவார்கள் என்று நினைத்துக்கொண்டிருந்தேன். அப்படியே தூங்கிவிட்டேன். திடீரென விழிப்பு வந்தது. யாரோ கூப்பிடுவது போல் இருந்தது. சென்று வாயில் கதவைத் திறந்தேன். அங்கே நான் கண்டதை என்னால் நம்பமுடியவில்லை. நான் பயந்துவிட்டேன். கதவுக்கு வெளியே கதவைவிட உயரமாக ஐந்துதலை நாகம் ஒன்று பெரியதாகப் படமெடுத்துக் கொண்டு நிற்கிறது. துணிச்சலை வரவழைத்துக் கொண்டு, கதவை மூடிவிட்டு உங்களிடம் சொல்லவேண்டுமென்று எண்ணி உங்கள் அறைக்கு ஓடிவந்தேன். முதலில் உங்களுக்கு ஏதோ ஆபத்து என்று தான் எனக்குத் தோன்றியது. உங்கள் அறையில் வந்து பார்த்தால், நீங்கள் அயர்ந்து தூங்கிக் கொண்டிருக்கறீர்கள். உங்கள் பக்கவாட்டில் அதேபோல் ஐந்துதலை நாகம் ஒன்று படமெடுத்துக்கொண்டு நிற்கிறது. எதிரே தரையில் ஒருவர் உட்கார்ந்திருந்தார். அவர் பக்கத்திலும் இரண்டு நாகங்கள் படமெடுத்து நின்றன. பயத்தில் என்னால் அங்கிருந்து ஓடக்கூட முடியவில்லை. உங்களுக்கு ஆபத்து என்று நினைத்து பயந்து என்ன செய்வதென்றறியாமல் அப்படியே நின்றுவிட்டேன். அப்போது, எதிரே

உட்கார்ந்திருந்தவர், "நீ பயப்படாதம்மா. அவரைப் பார்த்துக் கொள்ள நாங்க நாலு பேர் இருக்கோம். அவருக்கு ஒன்றும் ஆகாது" என்று சொன்னார். கொஞ்சம் தைரியம் வந்தாலும் என்னால் எதையும் நம்ப முடியவில்லை. அம்மாவிடம் சொல்ல நினைத்து அவள் அறைக்கு ஓடினேன். திடீரென விழிப்பு வந்தது. இவ்வளவு நேரமும் நான் பார்த்தது கனவு என்று புரிந்தது. நிம்மதியாயிருந்தது. ஆனால் அது கனவு போலவே இல்லை. கண்விழித்த போதும் நான் பார்த்தவை அப்படியே கண்முன் நிற்கின்றன. எனக்கு பயமா இருக்குப்பா. இதுக்கெல்லாம் என்ன அர்த்தம்?" என்று என்னைக் கேட்டாள்.

எனக்கு இருவிதமான உணர்ச்சிகள். அங்கே உட்கார்ந்திருந்தது டாக்டர் என்பதில் எனக்கு எந்த சந்தேகமும் இல்லை. அவர் சொன்ன செய்தி என் நம்பிக்கையைப் பிரதிபலித்தது. அவ்வளவே. ஆனால், டாக்டரைப்பற்றி ஒன்றுமே தெரியாத இந்தக் குழந்தை டாக்டரைப் பார்க்கிறாள். ஆனால் என்னால் பார்க்கமுடியவில்லை. என் கண்ணெதிரில் வரமறுக்கிறார் என்ற எண்ணம் தந்த அயர்ச்சி, வருத்தம். அம்முவுக்கு வயது இருபதைத் தாண்டி இருக்கும். இன்னும் திருமணம் நிச்சயமாகவில்லை. சற்றுக் கருப்பாக இருப்பாள். ஆனால் மிகவும் அன்பான பெண். டாக்டரைப் பார்த்த அவள் மீது என் அன்பு இன்னும் அதிகமாகியது. "இந்தப் பெண்ணுக்கு நல்ல இடத்தில் திருமணமாகி, நல்ல வாழ்க்கை அமையணும் டாக்டர். இந்தக் குழந்தையையும் பாத்துக்குங்க." என்று மனதில் டாக்டரிடம் ப்ரார்த்தனை செய்துகொண்டேன். பிறகு அம்முவிடம் கேட்டேன், "அவர் எப்படி இருந்தார் அம்மு?" என்று. "கருப்பா, ஒல்லியா இருந்தார். முகம் சரியா நினைவில்லை. வேட்டி கட்டியிருந்தார். சட்டையா அல்லது துண்டு போட்டிருந்தாரா என்று நினைவில்லை. அதையெல்லாம் கவனிக்க முடியவில்லை. எனக்கு ரொம்ப பயமா இருந்ததுப்பா." என்றாள். எப்போதும் என் பாக்கெட்டில் இருக்கும் டாக்டரின் புகைப்படத்தை எடுத்து அவளிடம் காட்டி, "இவரா பார்" என்றேன். "இவர்மாதிரிதான் இருந்தார். ஆனால் சட்டை இல்லை. இப்போ ஞாபகம் வருது" என்றாள். "இவர்

யாருப்பா?" எனக் கேட்டாள். "இவர் தான் என் குருநாதர். இவர் இறைவனின் அவதாரம். ஒன்று மட்டும் தெரிஞ்சுக்கோ. என் பாதுகாப்பைப் பற்றிக் கவலைப்படாதே. இவரைவிட எனக்கு என்ன பாதுகாப்பு வேண்டும்?" என்று கேட்டேன். அவள் வெகுநேரம் அமைதியாக இருந்தாள். பிறகு "அப்பா,கோவிலுக்கு போய் வரலாமா?" என்றாள். "சரி" என்றேன். இருவரும் சிதம்பரம் கோவிலுக்குச் சென்று சற்றுநேரம் தியானம் செய்துவிட்டு வந்தோம். அந்தக் குழந்தை இப்போது எங்கிருக்கிறாள் என்று தெரியவில்லை. எங்கிருந்தாலும் டாக்டரின் அன்பில் நிச்சயம் நலமாயிருப்பாள் என்பதில் எனக்குத் துளியும் சந்தேகமில்லை. முதலில் அம்மு, "என்னப்பா தனியா வந்திருக்கிங்களே?" என்று கேட்டபோது, "எந்தையும் தாயும் உடனிருக்க எனக்கென்ன மனக்கவலை?" என்று கவிதை நடையில் பதில் சொன்னேன். இதை ஒரு பேச்சுக்காகச் சொல்லவில்லை. உணர்ந்துதான் சொன்னேன். அன்று அவளுக்குக் காட்டிய காட்சி என் நம்பிக்கைக்கு ஒரு விளக்கம்; அம்முவின் அன்புக்கு அரிய காட்சி பரிசாகத் தரப்பட்டது. அவர் கருணைக்கு எல்லையும் உண்டோ!

**டாக்டரை சந்தித்தேன்**

சென்னையிலிருந்து செல்லும்போது, பங்களூருக்கு முன் கிருஷ்ணராஜபுரம் என்ற ஊர் இருக்கிறது. நாங்கள் டாக்டரைத் தேடிச்சென்ற பயணங்களில் இந்த ஊர் ரயில் நிலையத்தில் நடந்த சம்பவங்கள் பல முக்கியமானவை. அந்தச் சம்பவங்களின் தீவிரத்தால் உந்தப்பட்டு, ஒருமுறை, டாக்டரைத்தேடி நான் தனியாக க்ருஷ்ணராஜபுரம் சென்றேன்.

இந்த அனுபவத்துக்கு முன்னோடியாக ஒரு செய்தியைச் சொல்லவேண்டும். டாக்டர் பிரிந்து சென்றபின், சொன்னாராம், யாரிடமென்று நினைவில்லை, ஒவ்வொருவரையும் தனித்தனியாக நேரில் சந்திப்பேன் என்று. அவரை சந்தித்தவர்களின் வரிசை இதுதான். அம்மா ரிஷிகேஷில்; ஜானி சென்னையிலும்,

பங்களூரிலும் பலமுறை; மீனாட்சி, மாலினி மற்றும் இரண்டு பேர் (அவர்கள் பேர் நினைவில்லை) பங்காருப்பேட்டை ரயில் நிலையத்தில்; ஜானியின் சகோதரி மைதிலி அண்ணாநகர் மருத்துவ மனையில்; ரவியின் சகோதரி நந்தினி புரசைவாகம் சரவணா உணவகம் எதிரில்; முத்துக்குமார் திருவான்மியூரில்; நான் க்ருஷ்ணராஜபுரம் ரயில் நிலையத்தில்; சாந்தம்மா மகன் பாலாஜி அடையாறில்; இன்னும் மற்றவர்கள் பற்றிய விவரம் எனக்குத் நினைவில்லை. இந்த வரிசையில் என் அனுபவத்தை இப்போது விவரிக்கிறேன்.

நான் மட்டுமே தனியாகச் சென்றிருந்தேன். கிருஷ்ணராஜபுரம் ரயில் நிலையம் டாக்டரைப் பற்றிய முக்கிய தகவல்களுக்குக் களமாக அமைந்துவிட்டது. எனவே, நான் அங்கு சென்றதிலிருந்து அந்தப் பகுதியிலேயே சுற்றிக்கொண்டிருந்தேன். மாலை நேரம், ரயில் நிலையத்தில் ஒரு பெஞ்சில் அமர்ந்து கொண்டு, ‘ஏதாவது நடக்காதா? டாக்டர் திடீரென என் முன் வந்து நிற்க மாட்டாரா?’ என்ற எண்ணங்களோடு சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டிருந்தேன். என் பார்வை, ரயில் நிலையத்தின் தெற்குக் கோடியில் லயித்தது. ஏனோ அந்தப் பக்கமே பார்த்துக் கொண்டிருந்தேன். தூரத்தில் ஒருவர் ரயில்பாதை ஓரமாக நடந்து வந்துகொண்டிருந்தார். அவர்பால் நான் ஈர்க்கப்பட்டதற்குக் காரணம் அந்த ‘தென்றலைப் போன்ற’ நடைதான். தென்றலைப் போன்ற என்று நான் குறிப்பிடுவது டாக்டரின் நடையைத்தான். அவர் நடக்கும்போது மென்மையாகத் தென்றல் மிதந்து வருவதுபோல இருக்கும். அந்த நடையால் ஈர்க்கப்பட்டு, நான் அவரையே கவனித்துக் கொண்டிருந்தேன். அவர் ரயில் நிலையத்தின் தென்கோடியிலிருந்து வந்துகொண்டிருந்தார். வெள்ளை வேட்டி, வெள்ளை சட்டை. கருப்பாக, ஒல்லியாக, உயரமாக டாக்டரையே ஒத்திருந்தார் பார்வைக்கு. அருகில் வர வர, மொத்தத்தில் பார்ப்பதற்கு டாக்டரைப்போல் இருந்தாலும், அவர் அங்கங்களைத் தனித்தனியாகப் பார்த்தால் வித்தியாசம் தெரிவதுபோல் இருந்தது. இவர் டாக்டர் இல்லையோ எனத் தோன்றியது. அருகில் சென்றேன். கையில் மடித்த பேப்பர் இருந்ததாக லேசாக

நினைவு. அவரிடம் என்னை அறிமுகப்படுத்திக்கொண்டேன். அவரும் சகஜமாகப் பேச ஆரம்பித்தார். அந்த ஊரில் உள்ள அரசாங்கத்துக்குச் சொந்தமான டெலிபோன் உற்பத்தித் தொழிற்சாலையில் வேலை செய்வதாகச் சொன்னார். சொந்த ஊர் திருச்சி என்று சொன்னார். முதலில் நான் அவரிடம், "எங்கள் குருநாதர் டாக்டர் நித்யானந்தத்தைத் தேடிக்கொண்டிருக்கிறோம். அவரைத்தேடித்தான் இங்கு வந்தேன். நீங்கள் அவரைப் போலவே இருக்கிறீர்கள். நீங்கள் டாக்டர்தானே?" என்று கேட்டதாக நினைவு. அதற்கு பதிலாகத்தான் அவர் திருச்சியைச் சேர்ந்தவர் என்றும், இங்கே பல வருடங்களாக வேலை செய்வதாகவும் சொன்னார். அவரிடம் பேசிக்கொண்டிருக்கும்போதே அவருடைய ஒவ்வொரு அங்க அடையாளங்களையும் டாக்டருடன் ஒப்பிட்டுப் பார்ப்பதில்தான் என் மனம் தீவிரமாக இருந்தது. தனித்தனியாகப் பார்த்தால் இவர் டாக்டரில்லை. ஆனால் ஒட்டுமொத்தமாகப் பார்த்தால், டாக்டர்தான். என் மனம் குழம்பிப் போயிருந்தது. குழம்பிய மனத்துடன் அவரோடு பேசிக்கொண்டிருந்தேன். தான் ஒரு கிருத்துவன் என்று சொன்னார். ஜீஸஸ் வரவேண்டிய நேரம் நெருங்கிவிட்டது என்று சொன்னார். இஸ்ரேல் நாட்டின் தலைவர் யாருடைய பெயரையோ சொல்லி, அவர் தலைமைப் பொறுப்புக்கு வரும்போது ஜீஸஸ் வந்துவிடுவார் என்றார். அவர் வருவதற்குச் சில அரசியல் சூழ்நிலைகள் சரியில்லாமலிருப்பதாகச் சொன்னார். இடையில் தாயுமானஸ்வாமிகளின் பாடல் ஒன்றைச் சொல்லி அதற்குப் பொருளையும் சொன்னார். என்னை மொத்தமாகக் குழப்பிவிட்டு, வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தார் என்பது இப்போது புரிகிறது. அன்று அவர் காலில் விழுந்து கட்டிப் பிடித்துக்கொண்டு "என்னை ஏமாற்றாதீர்கள். நீங்கள்தானே டாக்டர்?" என்று கேட்டிருக்க வேண்டுமோ என இப்போது தோன்றுகிறது. அப்போது எது என்னை அவ்விதம் செய்யவிடாமல் தடுத்தது? மனமா? ஈகோவா? அவரா? தெரியவில்லை. ஆனால் தவறு செய்துவிட்டேன் என்றுமட்டும் மனம் சொல்கிறது. சிறிதுநேரம் பேசிக்கொண்டிருந்துவிட்டு அவர் சென்றுவிட்டார்.

அவர் சென்றபின் நடந்தது அத்தனையையும் மனதில் மீண்டும் அசை போட்டுப் பார்த்த போது, வந்தது டாக்டர்தான் என்பது மனதுக்கு விளங்கியது. அவர் பேசிய விஷயங்கள், அங்க அசைவுகள், குரலின் மென்மை, ஜீஸஸ் வருவார் என்று சொன்னது, ஒரு கிருத்துவர் தாயுமான ஸ்வாமிகள் பாடலைச் சொல்லி அதற்கு விளக்கமும் சொன்னது, இப்படிப் பல விஷயங்களை மனதில் அலசியபோது கண்ணெதிரே நின்ற டாக்டரை விட்டுவிட்டேனே என்ற ஆதங்கம் மனதைப் பிழிந்தது. என்ன செய்வது? அவர் விருப்பமில்லாமல் எது நடக்கும்? அவர் விருப்பத்தைமீறி நான் செயல்பட்டுவிட முடியுமா? அதற்குப்பிறகு, டாக்டருடன் இப்படியொரு மிக நெருங்கிய சந்திப்பு (close encounter) எனக்கு ஏற்படவில்லை.

**நறுமணம்**

ஒரு நாள் என் வீட்டு ஹாலில் அமர்ந்திருக்கிறேன். வேலை எதுவும் செய்யாத நேரத்தில் என் நினைவு முழுவதும், இறை நினைவாகத்தான் இருக்கும். வேறுவிஷயங்கள் பற்றிய சிந்தனை அதிகம் வராது. ஏதோ இறை சிந்தனையில் இருந்த நேரம். நான் அமர்ந்திருந்த இடத்தில் குப்பென்று கூடையைக் கொட்டிக் கவிழ்த்ததுபோல் ரோஜாமணம் ஹால் முழுவதும் பரவியது. யாரோ வந்திருக்கிறார்கள் என்று தோன்றியது. இருப்பினும், உறுதிசெய்து கொள்ளும் பொருட்டு, பூஜை அறை, மற்றும் எல்லா அறைகளையும் சென்று பார்த்தேன். அதிசயம் என்னவென்றால், மற்ற அறைகளுக்குப் போனால், அங்கே இந்த மணம் இல்லை. ஹாலுக்கு வந்தால் மூச்சுத் திணறும் அளவுக்கு ரோஜா மணம். ரோஜா மணம் வந்தால், ஜீஸஸ் வந்திருப்பார் என்று சொல்லக் கேட்டிருக்கிறேன். பாண்டிச்சேரி மதர் வந்தாலும் ரோஜா மணம் வீசும் என்றும் கேள்விப்பட்டிருக்கிறேன். யார் வந்தாரோ எனக்குத் தெரியாது. வந்தவர்களுக்கு வணக்கமும் நன்றியும் சொல்லிவிட்டு, அமர்ந்து தியானம் செய்தேன். இது ஒரு மறக்க முடியாத அனுபவம்.

**ஒரு யோகியின் வயிற்றில் சுடர்**

என்னுடைய வாலிப வயதில், அடிக்கடி எனக்கு ஒரு அகக்காட்சி தோன்றும். ஜடாமுடியுடன் கூடிய ஒரு யோகி தியானக்கோலத்தில் அமர்ந்திருப்பார். அவர் அடிவயிற்றில் ஒரு சுடர் (விளக்கின் சுடர் போல) ஆடாது அசையாது காணப்படும். இதற்கான காரணம் எனக்குத் தெரியவில்லை. அதற்கு விளக்கம் தரவும் யாருமில்லை. இதை டாக்டரிடம் கேட்டிருக்கலாம். ஆனால் கேட்கவில்லை. நினைவிருந்திருந்தால் கேட்டிருப்பேன்.

சற்றேறக்குறைய அந்தக் காலகட்டத்தில், ஒருநாள் நானும் என் நண்பர்களும் கூடிப் பேசிக்கொண்டிருக்கும் ஒரு கடை வாயிலில் இருந்த இருக்கையில் நான் தனியே அமர்ந்திருந்த போது, காவி உடையில் ஒரு சாமியார் என் அருகில் வந்து அமர்ந்தார். அவர் இடையில் இருந்த காவி வேட்டியைத்தவிர அவர் தோளில் காவித்துணியால் ஆன பை போல் ஒன்று தொங்கிக்கொண்டிருந்தது. இதைத்தவிர அவரிடம் வேறு எதுவும் இல்லை. அந்தப் பையில் ஒரு மண் சட்டி இருந்தது. அதன் காரணமாகவோ என்னவோ, அவரை மற்றவர்கள் ‘சட்டிச் சாமியார்’ என்று அழைக்க ஆரம்பித்தனர். அவர் கண்கள் மிக தீட்சண்யமாக இருந்தன. அந்தக் கண்கள் சிரிப்பதைப் போன்றே இருக்கும். அவர் என்னிடம் ஓரிரு வார்த்தைகள் பேசுவார். அங்கிருந்த மற்றவர்களைக் காட்டிலும் என்னிடம் சற்று நெருக்கமாக இருப்பதாக எனக்குத் தோன்றியது. இமயத்திலிருந்து வருவதாகச் சொன்னார். என்னுடைய நினைவு சரியென்றால் என்னுடைய சுடருடன் கூடிய யோகியின் உருவம் அகக்காட்சியாக வர ஆரம்பித்தது இவர் வருகைக்கப்புறம்தான் என்று தோன்றுகிறது. எப்படி திடீரென வந்தாரோ, அப்படியே ஒருநாள் காணாமல் போனார். அதன்பிறகு இன்றுவரை அவரைக் காணவில்லை.

* * * * * * *

**தையற்காரர்**

என் நண்பர்கள் வட்டத்தில் ஒருவர் சினிமாவுடன் தொடர்புடையவர். அவருடன் ஒரு நாள் அவருடைய நண்பர் ஒருவர் வந்திருந்தார். அவரை சினிமா நடிகர்களுக்கு உடை தைத்துக் கொடுப்பவர் என்று அறிமுகப்படுத்தி வைத்தார். அவர் அங்கிருந்த நண்பர்கள் அனைவருடைய கைகளையும் பார்த்து ஜோசியம் சொல்லிக்கொண்டிருந்தார். என்னுடைய கையைக் காட்டுமாறு கேட்டார். நானும் ஆர்வத்துடன் காட்டினேன். என் கையை ஒரு நிமிடம் உற்றுப் பார்த்தவர் ஒரே ஒரு விஷயத்தை மட்டுமே சொன்னார். அது, நான் எனது நாற்பத்தைந்தாவது வயதில் சாமியாராகப் போய்விடுவேன் என்ற செய்தி. அந்த நேரத்தில் எனக்கு சிரிப்புத்தான் வந்தது. எனக்கு அதில் நம்பிக்கையில்லை. எனக்கு ஆன்மிக விஷயங்களில் ஈடுபாடு இருந்தாலும், சாமியாராகப்போவது என்ற எண்ணத்தில் எனக்கு உடன்பாடு இல்லை. முதற்கண், சாமியார் என்ற பதத்தின் உண்மையான விளக்கமே எனக்குத் தெரியாது. சாமியார் என்றால், காவியுடை உடுத்துக் கொண்டு, வீட்டைவிட்டு வெளியேறி, தேசாந்தரமாகப் போய்விடுவது, உறவுகளை அறுத்துவிடுவது போன்ற நடைமுறையில் மக்கள் கொண்டிருந்த நம்பிக்கைதான் என் மனதிலும் இருந்தது. அந்தவகைச் சாமியாராகும் எண்ணம் எனக்கு அப்போதும் இல்லை, இப்போதும் இல்லை. அந்தக் கருத்தில் டாக்டருக்கும் உடன்பாடில்லை. ஆனால் ஏறக்குறைய அவர் குறிப்பிட்ட அந்த வயதில்தான் என் ஆன்மிகச் செயல்பாடுகள் தீவிரமடைய ஆரம்பித்தன. அதன் பிறகு சுமார் ஐந்தாண்டு காலத்துக்குள் என் ஐம்பதாவது வயதில் டாக்டர் எனக்கு தீட்சை கொடுத்தார். தையற்காரர் சொன்னபடிதான் நடந்திருக்கிறது.

**அன்பான அண்ணன்**

நான் மேலே விவரித்தவை நடந்த அதே காலம்தான். சற்று முன்பின்னாக நடந்திருக்கலாம். பச்சையப்பன் கல்லூரி மைதானம் எங்கள் வீட்டருகில்தான் இருந்தது. எனவே, தினமும் ஓய்வான நேரத்திலும், விளையாடுவதற்கும் அங்கே செல்வது என் பழக்கம். ஒருநாள் அங்கே ஒருவரைச் சந்தித்தேன். வித்தியாசமான ஆடை அலங்காரம். பேச்சும் சுத்தமான தமிழ் நடையில். தலையில் ஆங்கிலேயர் பாணியில் தொப்பி அணிந்திருந்தார். அந்தக் காலத்து போலீஸ்காரரைப்போல் காக்கி அரைக்கால் சட்டை, காலில் ஷூ, அரைக்கைச் சட்டை. மிகவும் வித்தியாசமான மனிதர். என்னைவிட சற்று வயதானவர். அண்ணன் என்று சொல்லுமளவு சில வருடங்கள் அதிகமிருக்கலாம். அவரிடம் ஏதோ ஒரு வசீகரத்தன்மை இருந்தது. என்னவென்று என்னால் நிர்ணயிக்க இயலவில்லை.

அவர் என்னை ‘அன்பு’ என்றுதான் அழைத்தார். என் பெயர் அவருக்குத் தெரியும். ஆயினும் அவர் என்னை அன்பு என்றுதான் அழைப்பார். முதல்முறை என்னைச் சந்தித்த அன்றே, இவர் என்னை திகைப்பில் ஆழ்த்திவிட்டார். “அன்பு, ஏன் அம்மாவிடம் சண்டை போடுகிறாய்? இட்லி கொஞ்சம் கோணலாக இருந்தால் என்ன? வயிற்றில் போய் செரித்துவிடும் விஷயத்துக்காக அம்மாவிடம் சண்டை போடலாமா?” என்று என்னைக் கேட்டதும், எனக்கு மிகவும் ஆச்சரியம். அன்று காலை என் வீட்டில் நடந்தது இவருக்கு எப்படித் தெரியும்? என்ற கேள்வி என் மனதில். “உங்களுக்கெப்படி தெரியும்?” என்று நான் கேட்டதற்கு அவர் சரியாக பதில் சொல்லவில்லை என்று நினைக்கிறேன். இப்போது சரியாக நினைவில்லை. ஆனால் தூரத்தில் நடப்பதை கேட்கும், பார்க்கும் சக்தி அவரிடம் இருக்கிறது என்று தெரிந்து கொண்டேன். அது என் விஞ்ஞான மூளைக்கு ஜீரணிக்க முடியாத ஒன்றாக இருந்தது. அதனாலேயே அவரிடம் ஒரு மரியாதையும், லேசாக பயம் என்றுகூட சொல்லலாம், இருந்ததென்னவோ உண்மை. அவருடைய அன்பால், பயம் மறைந்துவிட்டது. அவர் கையை மூடிக்கொண்டு, “உனக்கு என்ன வேண்டும் கேள், வரவழைக்கிறேன்” என்பார். சொன்னால், அது அவர் கையை திறந்ததும் கையில் இருக்கும். துளி

மண்ணை எடுத்து அவர் தன் உள்ளங்கையில் வைத்து மூடிக்கொண்டு, “இப்போது குங்குமம் வரும் பார்” என்பார். திறந்தால் குங்குமம் இருக்கும். மீண்டும் மூடிக்கொண்டு “இப்போது விபூதி வரும் பார்” என்பார், விபூதி வரும். “சர்க்கரை வரவையுங்கள் பார்ப்போம்” என்றேன். சர்க்கரை வந்தது. “சாப்பிடலாமா?” என்றேன். “வேண்டாம், பார்ப்பதற்குத்தான் சர்க்கரை. உண்மையில் இது மண்தான்” என்றார். சிறுவயதில் நடந்த இந்த நிகழ்ச்சியின் தாக்கத்தால், பிற்காலத்தில், டாக்டர் செய்த அற்புதங்கள் மீது என் நம்பிக்கையின்மை சற்று வலுவிழந்திருந்தது. டாக்டர் என் எண்ணங்களைப் படித்த போது, சில அற்புதங்களைச் செய்தபோது, சிறுவயதில் நிகழ்ந்த இந்நிகழ்ச்சியின் நினைவு இது சாத்தியமே என்று எண்ணுவதற்குக் காரணமாக அமைந்தன.

அவரை என் தமையனாகத்தான் பார்த்தேன். அவர் என்னிடமிருந்து எதையும் எதிர் பார்க்கவில்லை. எதையும் கேட்டதுமில்லை. “நன்றாகப் படிக்கணும். அப்பா, அம்மாவிடம் சண்டை போடக்கூடாது” போன்ற புத்திமதிகளைத்தான் சொன்னார். எப்படி மின்னல் போல் வந்தாரோ அப்படியே ஒருநாள் சென்றுவிட்டார். அவரைப்பற்றிய எந்தத் தகவலையும் விட்டுச் செல்லவில்லை. அவர் நினைவு மட்டும் என்னுடன் நிரந்தரமாகத் தங்கிவிட்டது. இன்றும் அவர் முகம் நினைவில் இருக்கிறது. அவர் யாராயிருந்தாலும் அந்த அன்புக்கு நன்றி! சிரம் தாழ்த்தி வணங்குகிறேன்.

அந்த நேரத்தில்தான் டாக்டரும் பச்சையப்பன் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்தார் என்று கேள்விப்பட்டேன். அந்த முகம் மறக்காமல் இன்றுவரை நினைவு இருக்க வேண்டுமானால், ஒருவேளை அது டாக்டராக இருக்கக் கூடுமோ என்ற எண்ணம் அவ்வப்போது என்மனதில் வந்துபோகும்.

**சமீபத்தில் நடந்த அற்புதம்**

இந்த அனுபவக் கோவையை எழுத ஆரம்பித்து சில வருடங்கள் ஆகின்றன. அவ்வப்போது, சமயம் கிடைக்கும்போதெல்லாம் தொடர்ந்து எழுதிக்கொண்டு

வருகிறேன். இதற்கிடையில் என் உள்ளும், புறமும் ஏராளமான மாற்றங்கள். இன்னும் ஒருசில செய்திகளைச் சொல்லிவிட்டு இதை இந்த அளவில் நிறைவு செய்துவிட்டு, ஒரு நிலைக்குப் பிறகு என்னில் ஏற்பட்ட மிக நுட்பமான மாற்றங்களை, முன்னேற்றங்களை இரண்டாம் பகுதியாக எழுதலாம் என எண்ணியுள்ளேன். ஏறக்குறைய முதல்பகுதி முடிவுறும் தறுவாயிலிருக்கும் இந்தச் சமயத்தில் சமீபத்தில் டாக்டர் ஒரு அதிசயத்தை நிகழ்த்தினார். ஸ்வாரஸ்யமான விஷயம். படியுங்கள்.

எனக்கு இசையைக் கேட்பதில் ஆர்வம் என்று முன்பே சொல்லியிருக்கிறேன். சமீபத்தில் வந்த ‘ஜோதா அக்பர்’ என்ற ஹிந்தி படத்தின் தமிழாக்கத்தில் “மன்மோகனா, என்னுயிர்க் கண்ணா” என்ற ஒரு பாடல் உண்டு. கதாநாயகி கிருஷ்ண பக்தை. அவள் கிருஷ்ணனை நினைத்து உருகிப் பாடும் ஒரு பாடல். பாடல் வரிகள் ஒவ்வொன்றும் அருமை. சாதனா சர்க்கம் என்னும் பின்னணி பாடகியின் குரல் இனிமையும், பாவமும் கேட்பவர் மனத்தை உருக்கிவிடும். நான் அடிக்கடி இந்தப் பாடலை கேட்டு உருகிக்கொண்டிருப்பேன்.

நான் மௌன விரதத்தை ஆரம்பித்த சில நாட்களுக்குப் பிறகு இந்த பாடலைக் கேட்டுக் கொண்டிருந்தேன். அதில் வரும் சில வரிகள்:

***வாழ்க்கையெனும் கடலில் தினமும் அலையின் மேலே அலையடிக்கும்.***
***இதயமெனும் படகு அதில் தடுமாறி மூழ்கிடுமே;***
***தூயவனே, துடுப்புகள் போட்டுக் கரையினில் ஏற்றி விடுவாயா?***
***நடுக்கடலில் விடுவாயா? வஸீகரா, வனமாலி”.***

எப்பொழுதும் பாடல்களைக் கேட்டுக்கொண்டே கணினியில் வேலை செய்வது எனக்குப் பிடிக்கும். அருகே இருக்கும் சுவற்றில் கையைக் கட்டிக்கொண்டு ‘மோனாலிசா’ புன்னகையுடன் டாக்டரின் இளவயதுப் புகைப்படம் ஒன்று மாட்டப்பட்டிருக்கும். அந்த படம் தான் இப்போது இந்த புத்தகத்தின் அட்டையில் வெளியாகியுள்ளது. அவ்வப்போது திரும்பிப்பார்த்து புகைப்படத்தில் இருக்கும் அவருடன் பேசுவது என் பழக்கம். எங்களுடைய பேச்சின் தன்மைக்கேற்ப அவருடைய ‘மோனாலிசா’ப் புன்னகை பலவிதமாக மாறும். சில சமயம் லேசாகப் பல்

தெரியுமளவு கூடச் சிரிப்பார். அந்தப் படத்துக்குப் பக்கத்தில் ஓர் ஆணியில் (slate) கரும்பலகை ஒன்றை தொங்கவிட்டிருந்தேன். நான் மௌனவிரதம் அனுஷ்டித்துகொண்டிருந்ததால் ஏதாவது சொல்ல வேண்டுமானால் எழுதிக்காட்டவென்று அதை வைத்திருக்கிறேன். மேலே உள்ள பாட்டின் வரிகளைக் கேட்டுக்கொண்டிருந்தபோது டாக்டரைப் பார்த்து மனதுக்குள் அதே கேள்வியை நான் கேட்டேன். கேட்டுவிட்டுத் திரும்பினால் சுவற்றில் மாட்டியிருந்த கரும்பலகை, “மாட்டேன், மாட்டேன்” என்பது போல் கடிகாரத்தின் பெண்டுலம் போல ஆட ஆரம்பித்துவிட்டது. நிற்கவேயில்லை. நான் எழுந்து கையால் அதைப் பிடித்து நிறுத்தினேன். டாக்டர் புகைப்படத்தில் பெரிதாக புன்னகைத்துக் கொண்டிருந்தார். நடுக்கடலில் விடமாட்டேன் என்று சொல்வதுபோல் இருந்தது. யோசித்துப் பார்த்தால், இதைவிட வேறென்ன வேண்டும் வாழ்க்கையில் ஒருவனுக்கு என்று தோன்றவில்லையா? கவலையோ, துக்கமோ, சோகமோ நம்மை அண்டமுடியுமா?

எத்தனை அற்புதங்களைப் பார்த்திருந்தாலும், இந்த அனுபவம் என் கண்களில் கண்ணீரைத் துளிர்க்கச் செய்தது. ஒரு கணமும் எனைப் பிரியாதிருக்கும் உண்மையை உணர்த்தியதோடல்லாமல், என்றும் உன்னைக் கைவிடேன் என்றும் சொல்கிறாரே! டாக்டரின் சீடன் என்பதால் எனக்கு சுயநலமில்லை. அதனால் தான் இதுவரை அவருடைய ஆளுகைக்குள் வராதவர்களையெல்லாம் “வாருங்கள்; இந்த வாய்ப்பை இழந்துவிடாதீர்கள்” என்று கெஞ்சுகிறேன். இப்போது விட்டால், எவ்வளவு காலம் காத்திருக்க வேண்டுமோ? யாரறிவார்?

வெளிப்படையான மாற்றங்கள், செயல்பாடுகள், பின்னடைவுகள், முன்னேற்றங்கள், கற்றுக்கொண்ட பாடங்கள், ஏற்பட்ட அனுபவங்கள் என்று நினைவிலிருந்தவரை பதிவு செய்துவிட்டேன். என் அனுபவத் தொகுப்பு இத்துடன் முடிவடையவில்லை காரணம, அனுபவம் என்பது கடைசி மூச்சுவரை தொடரும் ஒர்நிகழ்வு. இந்தத் தொகுப்பை வலைத்தளத்தில் வெளியிட்டபிறகு இதன் அடுத்த பகுதியை எழுத எண்ணியுள்ளேன். மிகவும் நுட்பமான நிலையில் என் வளர்ச்சியும், மாற்றங்களும் எவ்வாறு நிகழ்ந்தன என்பதுபற்றி எழுத இருக்கிறேன். ஒரு நிலையிலிருந்து அடுத்த நிலைக்கு ஏற்றப்படுவதற்கு முன் எத்தகைய சோதனைகளைச் சந்தித்து மீண்டுவந்தேன் என்பன போன்ற செய்திகள் மற்றவர்களுக்கும் உபயோகப்படும் என்ற எண்ணத்தில் என் அடுத்தத் தொகுப்பில் விவரிக்கவுள்ளேன்.

—கேசவன்

இந்த உரையில் என் அனுபவங்களைப் பதிவு செய்துள்ளேன். சில அனுபவங்களுக்கு புறச்சான்றுகள் இருக்காது. நான் அனுபவித்தவற்றைப் பதிவு செய்துள்ளேன், அவ்வளவே. அனுபவமும் அதன் தாக்கமும் நபருக்கு நபர் மாறலாம். ஒரேவிஷயத்தை இருவருக்குக் கொடுத்தால், அவர்கள் பார்த்ததும், அதை உள்வாங்கிக்கொண்டதும் ஒரேவிதமாக இருக்க வேண்டுமென்பதில்லை. உதாரணத்திற்கு சொல்லவேண்டுமானால், நான் பார்த்த பெரியவர் பட்டினத்தாரை நண்பர் சம்பந்தம் பார்க்கவில்லை. இருவரும் ஒன்றாகத்தான் இருந்தோம். என் பேத்தி வித்யா பார்த்த கண்ணனை நான் பார்க்கவில்லை. அதுபோன்றே, பழமுதிற்சோலையில் நாங்கள் கண்ட, எங்களிடம் உணவு கேட்டு வாங்கி உண்ட நபரை பார்த்த எங்கள் நால்வரில் சில கருத்து வேறுபாடுகள் இருந்தன. இதுபோல் பல விஷயங்களில் சிறு சிறு வித்தியாசங்கள் இருந்ததை நான் உணர்ந்தேன். இவை அனைத்தும் குருவின் விருப்பத்தைப் பொருத்து அமைகிறது. சரி, இந்த அளவில் என் அனுபவக்கோவையை நிறைவு செய்கிறேன்.

பல வருடங்களுக்கு முன் எழுதத் துவங்கி, என் வளர்ச்சி மற்றும் மாற்றங்களினூடே இந்த அனுபவக்கோவையும் வளரத்துவங்கியது. முன்னால் ஏற்பட்ட அனுபவங்கள் பின்னாலும், பின்னால் ஏற்பட்ட அனுபவங்கள் முன்னாலும் மாறிமாறி பதிவாகியிருக்கும். அதற்குக் காரணம், இதை ஒரே நேரத்தில் அமர்ந்து எழுதாததுதான். நேரமும், உள் ஊக்கமும் நேர்ந்த போது எழுதியிருப்பேன். இதை முடித்து வெளியிட நினைக்கும் இந்த நேரத்தில் ஒருமுறை அனைத்தையும் படித்து ஆங்காங்கே சில திருத்தங்களையும், மாற்றங்களையும் செய்து படித்துப்பார்க்கும்போது, எனக்குப் புரிந்தது காலத்தால் சில கருத்துக்களும் அனுபவங்களும் முன்னாலும் பின்னாலும் பதிவாகியிருப்பது. அதை மாற்றி வரிசைப்படுத்த போதியஅளவு உள்ளூக்கம் இல்லாததால் இதை அப்படியே விட்டுவிட்டேன். ஈடுபாட்டுடன் படிப்பவர்க்கு நன்றாக விளங்கும் என்பதும் புரிந்தது எனவே இதை காலகிரமப்படி மாற்ற விழையவில்லை.

இதற்குப்பிறகும் நான் தொடர்ந்து எழுதவிருக்கும் தொடர் நம்முடைய வலைத்தளத்தில் அவ்வப்போது வெளிவரும் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அன்பன்

கேசவன்